# சங்கத்தமிழரின் மனிதநேய மணிநெறிகள்

முனைவர் சாலினி இளந்திரையன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# சங்கத் தமிழரின் மனிதநேய மணிநெறிகள்

முனைவர் சாலினி இளந்திரையன்

மேனாள் முதல்வர்
திருவேங்கடவன் கல்லூரி
புதுதில்லி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாவது முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப்
பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113

டாக்டர் ம.பொ. சிவஞானம்

அறக்கட்டளைச் சொற்பொழிவு – 5

(14, 15–12–1992)

**Dr. M.P. Sivagnanam Endowment Lecture No. 5**

**Endowment Lecture Publication No. 54**

---

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Caṅka-t-tamiḻariṉ Maṉitanēya Maṇineṟikaḷ |
| Author | : | Dr. Salini Ilanthiraiyan (Late) |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.P.T. Campus<br>Chennai - 600 113.<br>Ph: 22542992 |
| Publication No. | : | 524 |
| Language | : | Tamil |
| Edition | : | Second; First Edition 1995 |
| Year of Publication | : | 2004 |
| Paper Used | : | 18.6 Kg. TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | xii + 140 |
| No. of Copies | : | 1000 |
| Price | : | Rs. 45/- (Rupees Forty Five only) |
| Printing | : | Sri Venkateswara Offset<br>36/19, New Street<br>Chennai - 600 006 |
| Subject | : | Humanism in Sangam Literature |


---


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

# அணிந்துரை

சங்கத் தமிழ் இலக்கியங்கள் அவை சார்ந்த காலக்கட்டத் தமிழரின் வாழ்வியலைப் பாடியுள்ளன. இவ்வாழ்வியல் அகவாழ்வியல் புறவாழ்வியல் என இரண்டாகப் பகுத்துக் காணப் பெறும் தகுதி உடையது. இவ்விரு வாழ்வியல்களிலும் சங்கத் தமிழரின் மனிதநேய மாண்புகள் மிகுந்து காணப்படுகின்றன என்பதைப் பல பாடற்சான்றுகள் மூலம் தெரிந்து கொள்ளலாம். தலைவனும் தலைவியும் பெரிதும் பங்குபெறுவது அகவாழ்வியல். அவர்களுடன் ஊரார், உறவினர், தோழியர் மற்றும் பிறரும் காட்டப்படுகின்றனர். மலைகளும், நீர்நிலைகளும், வயல்களும், காடுகளும், மரங்களும், விலங்குகளும், ஊர்வனவும், பறப்பனவுமான இயற்கையின் பிறபடைப்புகளும் தலைவர் - தலைவியரைப் பெரும் பாலும் மையப்படுத்தியே பாடப்பெற்றுள்ளன. இதன்மூலம் குடும்பம் எனும் அமைப்பு, ஒரு சமூகப் பாங்கோடு சங்க காலத்தில் ஏற்பட்டிருந்தது உள்ளங்கை நெல்லிக்கனி. குடும்பங்களும் சமூகங்களும் சேர்ந்த தமிழ்ச் சமுதாயத்தில் மனிதநேய மாண்புகளும் மிகுந்திருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

முல்லைக் கொடி படரக் கொழுக் கொம்பு இல்லாததைக் கண்ட வள்ளல் பாரி, தன் தேரையே அதற்கு ஈந்தான் எனப் படிக்கின்றோம். தலைவியின் உணர்வையும் உடலையும் மதித்துத் தலைவன் குறிப்பிட்ட காலத்திற்குள் ஓடோடி வந்ததை உணர் கின்றோம். வறுமையில் வாடும் தம்மைப் போன்ற புலவர்களையும் பாணர் போன்றோர்களையும் தக்க புரவலர்களிடம் ஆற்றுப் படுத்திய புலவர்களின் மனிதநேயப் பண்புகளைப் பார்க்கின்றோம். தம்மை நாடி வருவோர்க்குத் தம் வள்ளன்மையால் வாரி வழங்கிய வள்ளல்களையும் ஆட்சியாளர்களையும் அறிகின்றோம். போரில் வென்றவர் தோற்ற அரசனையும், அவன் வீரர்களையும், அவர் சார்ந்தோரையும் மனிதநேயத்துடன் நடத்திய சான்றுகளும் உண்டு. மனித உயிர்கள் போரில் மாண்டு விடக்கூடாது எனச் சந்து

செய்வித்த சான்றோர்களும் புலவர் பெருமக்களும் இருந்தனர் என்பதையும் அறியமுடிகின்றது.

நல்லோரான மனிதநேய மாண்பாளர்கள் இருந்ததாலேயே எல்லோர்க்கும் வையகத்தில் மழைபொழிந்ததாகக் காட்டப் பெற்றுள்ளது. எல்லா ஊர்களும் யாவர்க்கும் உரிய ஊர்களா யிருந்தன. தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த பண்பாளர்கள் பலர் இருந்தனர். செய்ந்நன்றி பாராட்டிய சீலர்கள் பலர் சிறந்திருந்தனர். அவர்களில் சிலர் நனி நாகரீகராகவும் இருந்தனர். இவ்வனைத்து மனிதநேயப் பண்பாளர்களும் மிகுந்திருந்த பண்டைத் தமிழகத்தில் உண்டி கொடுத்து உயிர் பாராட்டிய பண்பு பெரிதாகப் போற்றப்பட்டது. அதனாலே 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' எனும் புகழ் வழக்கும் ஏற்பட்டது.

உதியஞ்சேரல் எனும் ஓர் அரசன் போரில் வென்றான். தன் வெற்றியைக் கொண்டாடும் வகையில் ஓர் அட்டிலை உண்டாக்கினான். அது 'உதியன் அட்டில்' எனப் பெயர் பெற்றது. வீரர்க்குப் பெருவிருந்தாக அது அமைந்தது. ஊரார்க்கும், உணவின்றி வாடியோர்க்கும் பசிபோக்கியது. அந்த அட்டிலில் பலரும் உணவு உண்டபோது பேரொலி ஏற்பட்டதாகப் பாடப்பெற்றுள்ளது (அகம். 168). இவற்றால் மனித நேயம் என்பது மனிதர் தம்மைச் சார்ந்த மற்றையோர்க்கும் ஏனை உயிரினங்களுக்கும் உதவுதலாகும் என்பது பெறப்படுகின்றது.

இவ்வாறான மனிதநேய மணி நெறிகளைச் சங்க இலக்கியத்தினின்று முனைவர் சாலினி இளந்திரையன் இச் சொற்பொழிவு நூலில் சிறப்புறக் காட்டியுள்ளார். 1992ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 14, 15 ஆகிய நாள்களில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அச்சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றது. தமிழின் தவப் புதல்வர்களில் ஒருவரான சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் பெயரில் நிறுவனத்தில் ஏற்படுத்தப்பெற்றுள்ள அறக்கட்டளையின் ஐந்தாம் சொற்பொழிவாக அது அமைந்தது. அவ்வமயம் நிறுவன இயக்குநர் பொறுப்பிலிருந்த முனைவர் அன்னி தாமசு அவர்களால் இச்சொற்பொழிவு ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. இச்சொற்பொழிவு நூல் 1995ஆம் ஆண்டில் பதிப்புச் செய்யப்பட்டு நிறுவன வெளியீடாக வெளியிடப்பெற்றது. இந்நூலின் அருமை கருதி மறுபதிப்பாக மீண்டும் இப்போது வெளியிடப்படுகிறது.

முனைவர் சாலினி இளந்திரையன் சங்க இலக்கியம் மற்றும் இக்கால இலக்கியங்களிலும் தோய்ந்த தமிழ்ச் சான்றோர் ஆவர். தரணி முழுதும் தம் கணவர் முனைவர் சாலை இளந்திரையனுடன் தமிழ்த் தொண்டாற்றியவர். பல தமிழ் நூல்களை எழுதிய பெருமையும் படைத்தவர். தமக்கே உரிய மனிதநேயத்துடன் சங்க இலக்கியங்களில் அமைந்துள்ள மனிதநேய மாண்புகளைத் தொகுத்து மற்றவர்களும் தெரிந்து கொள்ளும் மனப்பாங்குடன் இந்நூலைச் சிறப்புற உருவாக்கியுள்ளார். மனிதநேய மணிநெறிகள் என்ற தலைப்பிலும், மனிதநேய இலக்கியம் எனும் தலைப்பிலும் தம் சொற்பொழிவுப் பொருண்மையைப் பகுத்துக் கொண்டு இரு பகுப்புகளிலும் பல உட்தலைப்புகளில் கருத்துகளை முறைப் படுத்தியுள்ளார்.

மனிதநேய மணிநெறி என்றால் என்ன என்பதை நெறிப்படுத்த விழைந்த நூலாசிரியர், அதற்கான தடங்களைத் தமிழின் தொன்மை இலக்கணமான தொல்காப்பியந் தொட்டுத் தொடங்கியுள்ளார். மனிதநேயம் தமிழர்களிடையே வளர்ந்துவந்த நிலைகளைச் சங்க இலக்கியங்களான எட்டுத் தொகை, பத்துப் பாட்டு நூல்களிலிருந்து சான்றுகளை நிரல்பட எடுத்துக் காட்டி யுள்ளார். மனிதனின் மன உணர்ச்சி, அவனுடைய பகுத்து உணரும் மாண்பு, பொருள் முதல் வாதம், பொருளின் பயன் ஈதல், இயலாதார்க்கு ஈதல், அது பெருங்குரலாய் அன்றைய காலக் கட்டத்தில் ஒலித்தமை, அவ்வாறான மாசற்ற மனிதநேயத்தினர் தம்மிடம் இல்லாத போதும் ஈந்தமை, இருப்பதைப் பகிர்ந்து கொண்டமை, நிலைத்துப் புகழ் நிற்பதற்குப் புகழ் தேடியமை, ஈதலே தலையாய அறமெனக் கருதியமை எனப் படிப்படியாக எடுத்துக்கொண்ட பொருண்மையை விளக்கியுள்ளார்.

மனிதநேய இலக்கியம் எனச் சங்க இலக்கியத்தை இனம் காணும் நூலாசிரியர், திட்டமிட்ட கொள்கையினராகத் தொல் தமிழர் வாழ்ந்தனர் எனக் காட்டுகின்றார். வீரமும், கொடையும் வீரக் குடியினர்க்குக் கைவந்த கலையாக விளங்கியமை, அவற்றை வாய்நிறையப் பாடிப்புகழ்ந்த புலவர்கள், அப்புலவர்கள் கூறியபடி நடந்து கொண்ட மன்னர்கள், பழியெனில் உயிரும் கொடுக்கும் பண்பாளர்கள், அறத்தைப் பேணியமை, மறத்தில் சிறந்திருந்தமை போன்ற கருத்துகள் சான்றுகளுடன் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

இந்நூலின் இறுதியில் சிறப்புச் சொல்லகராதி ஒன்று இடம்பெற்றுள்ளது. அதை ஆய்வு மாணவர் பு. பாலாஜி அவர்கள் தொகுத்துள்ளார். எல்லா வகையிலும் சிறப்பாக அமைந்துள்ள இச்சொற்பொழிவு நூல் வெளிவருவதற்குக் காரணமாக இருந்தவர் அறக்கட்டளைப் பொழிவுப் பொறுப்பாளர் முனைவர் ச. சிவகாமி ஆவார். இவர்கள் அனைவரும் பாராட்டுக்கு உரியவர்கள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வி (ம) வணிகவரித் துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம்** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.,** அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

முதற்பதிப்பை வனப்புடன் அச்சிட்ட பாவை அச்சகத் தார்க்கும், இப்போது அழகுற மறுபதிப்புச் செய்துதந்துள்ள வெங்கடேசுவரா ஆப்செட் அச்சகத்தார்க்கும் நன்றி.

சென்னை
*22-11-2004*

இயக்குநர்

# முன்னுரை

நல்ல புத்தகம் எப்படி இருக்கும் என்று யாராவது கேட்டால் தமிழ் படித்த தமிழர் அனைவரும் ''சங்க இலக்கியம் போல இருக்கும்'' என்று தயங்காமல் சொல்ல வேண்டும். அந்த அளவுக்கு, நமக்குப் பெருமையும் இலக்கியம் என்னும் கலைக்கே எழிலும் சேர்ந்திருப்பது நமது சங்க இலக்கியம்...

**புத்தகம் என்பது புத்தகம் புதியகம்**
**போதுதொறும் புதிதாகும்—அதை**
**எத்தனையோ தரம் நீ படித்திட்ட பின்**
**இத்தரமும் புதிதாகும்!**

என்பது நல்ல இலக்கியப் புத்தகத்தைப் பற்றிய இக்காலப் (பூத்தது மானுடம்) பாட்டு. இந்தப் பாட்டுக்கு இலக்கியமாக விளங்கி என் நெஞ்சில் என்றென்றும் புதுமை பிலிற்றிக் கொண்டு இருக்கிறது சங்க இலக்கியம்.

என்னுடைய இடைநிலை (இண்டர்மீடியட்) வகுப்பிலிருந்தே நான் சங்கப் பாடல்களைப் படித்து வந்திருக்கிறேன். தமிழ் முதுகலை வகுப்பில் தெளிவாகப் பொருள் புரிந்து அந்தப் பாடல்களைப் படித்திருக்கிறேன். பின்னர், என்னுடைய ஆசிரிய வாழ்க்கையில், இளங்கலை, முதுகலை ஆகிய பட்ட வகுப்பு மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களுக்கு வழிகாட்டுவதற்காகவும் சங்க இலக்கியத்தைப் படித்திருக்கிறேன். இந்தக் கடமைகளை விட்டு விலகி ஓய்வு பெற்ற பிறகும் சங்க இலக்கியத்தைப் படித்துக் கொண்டு இருக்கிறேன். இந்த நெடிய காலத்தில், உரைநடையிலும் செய்யுளிலும் அமைந்த வேறு பல புத்தகங்களையும் நான் படித்துக் கொண்டுதான் இருக்கிறேன். என்றாலும், நானே ஏற்று எடுத்து எனக்குக் கற்பித்துக் கொண்ட (மேலே குறித்த) புத்தக இலக்கணத்துக்கு இலக்கியமாக விளங்குவது தமிழரின் சங்க இலக்கியம் ஒன்றே.

இதற்குக் காரணம் என்ன? சங்க இலக்கியம் மனிதர்களைப் பாடுகிறது. இயற்கையையும் மற்றப் பொருள்களையும் பாடும்

போதும், மனிதர்களுக்காகவே அவைகளைப் பாடுகிறது. ஆகையினால், இன்றும் என்றும் மனிதக் குலத்துக்கு இன்றி யமையாத தேவையாக உள்ள மனிதநேயப் பேருணர்ச்சியைப் பாடுகிறது சங்க இலக்கியம். 'மனிதக் குலத்துக்குத் தேவை யான அனைத்தையும் சங்க இலக்கியமே பாடி முடித்துவிட்டது' என்று கண்ணை மூடிக்கொண்டு புகழ்ச்சி பாட நான் வரவில்லை. ஆனாலும், மனிதநேயப் பெருங் கதிரவனின் ஆயிரமாயிரம் கதிர்களாகிய நிகழ்ச்சிகளைச் சங்க இலக்கியம் பாடி வருகின்ற அழகு எந்த இதயத்தையும் இனிமையில் நெகிழ்த்தி வைப்ப தாகவும் பெருமிதத்தில் நிமிர்த்தி வைப்பதாகவும் விளங்கு கிறது.

இந்தக் காரணத்தினாலேதான், சங்க இலக்கியத்தைப் பலகாலம் படித்து மகிழ்ந்த பிறகும், பலநிலை மாணவர்களுக்கு அதைப் பாடம் சொல்லி மனம் உவந்த பிறகும், இன்னும் இன்னும் சங்க இலக்கியத்தைப் பற்றிப் பேச வேண்டும், எழுத வேண்டும் என்னும் ஆர்வம் என்னுள் பொங்கிப் பொங்கிப் புறப்பட்ட வண்ணமாக இருக்கிறது. மனிதநேய உணர்வின் காரணமாக என்னுடைய முன்னோர்கள் நிகழ்த்தி வைத்த கனிவு கமழும் அரும்பெரும் நிகழ்ச்சிகளைப் படிக்குந்தோறும் என் உள்ளமே தனித்ததொரு பெருமிதத்தில் திளைக்கிறது.

மனிதநேயப் பேருணர்வே மனிதச் சமுதாயத்திலிருந்து குடியோடிப் போய் விட்டதோ என்று நினைத்து வேதனைப் படக்கூடிய அளவுக்கு மனிதர்கள் கல்நெஞ்சக் கடுஞ்செயல்களில் ஈடுபடுகிற இந்த நாளில், என்னுடைய முன்னோர்கள் நிகழ்த்திய மனிதநேயப் பெருவாழ்வு 'நிழலில் நீளிடைத் தனிமரம் போலவும் பாலைவனத்துப் பசுஞ்சோலை போலவும் என் நெஞ்சுக்கு இதமளிக்கிறது. 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்' என்றும் 'செல்வத்துப் பயனே ஈதல்' என்றும், 'அறனெனப்பட்டது இல்வாழ்க்கையே' என்றும் ஏட்டிலே எழுதி வைத்ததோடு நிற்காமல், அன்றாட வாழ்வில் அவை களை இயல்பாகக் கடைப்பிடித்த நல்லவர்களையும் என் தமிழின வரலாறு கொண்டிருந்தது என்பதை இந்த இலக்கியத் தின் மூலம் அறியும் போது என் உள்ளமே புல்லரிக்கிறது!

இந்தப் பெருமகிழ்ச்சி என் வாழ்வின் பிரிக்க முடியாத ஒரு கூறாக நிகழ்ந்து கொண்டிருக்கிற நேரத்தில், ''எங்கள் நிறுவனத்தின் சார்பில் அறக்கட்டளைச் சொற்பொழிவு ஒன்று நிகழ்த்த வேண்டும்.—தலைப்புத் தாருங்கள்'' என்று உலகத்

தமிழாராய்ச்சி நிறுவனத்தார் கேட்டுக் கொண்டார்கள். சங்க இலக்கியத்தைப் பற்றி ஆயிரமாயிரம் செய்திகள் நெஞ்சத்திலே எழுந்து வந்தாலும், அவை அனைத்தின் அடிநாதமாக விளங்கும் மனிதநேய உணர்வோட்டத்தைப் பற்றி நான் உணர்ந்தவை களை என் தமிழ் மக்களோடு பகிர்ந்து கொள்ளுவது என்று முடிவு செய்தேன். முடிவு செய்து செய்திகளைத் திரட்டி வந்த போதுதான் ''உண்டாலம்ம இவ்வுலகம்...தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே'' என்னும் வாசகம் சங்க இலக்கியம் எடுத்து விவரிக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஊடாடி நிற்பதைக் கண்டேன்.

சங்க இலக்கிய அறிஞர்கள் உற்சாகமாகத் துள்ளிக் குதிக் கிறார்கள்; என்ன என்று பார்த்தால்,—மனிதநேயம் தலை யோங்கிச் செழித்து நிற்பதை அவர்கள் பார்க்கிறார்கள். அந்த அறிஞர்கள் சீற்றத்தின் உச்சியிலே ஏறி நிற்கிறார்கள்; என்ன என்று பார்த்தால்,—மனித நேயத்தை மாய்ப்பதற்கு யாரோ ஒருவன் வாளை உயர்த்திக் கொண்டு நிற்பதை அவர்கள் பார்க்கிறார்கள். அந்த அறிஞர்கள், கலங்கிய நெஞ்சமும் பொங்கி வழியும் கண்ணீருமாகக் கைகளைப் பிசைந்து கொண்டு நிற்கிறார்கள்; என்ன என்று பார்த்தால்,—மனித நேயத்துக்கு எதிரான செயல் ஒன்று தடுக்க முடியாதபடி தலைவிரித்து ஆடுவதை அவர்கள் பார்க்கிறார்கள். இப்படியே எந்தத் திசையில் நம்முடைய காதைத் திருப்பினாலும் சங்க இலக்கிய நறுஞ்சோலையிலிருந்து, ''மனிதநேயம், மனிதநேயம்'' என்னும் மணிக்குரலே எதிரொலிக்கிறது. சிறிது காலத்துக்கு முன்பு இந்தக் குரல் இவ்வளவு தெளிவாக என் இதயச் செவிகளில் கேட்டிருக்குமா என்று சொல்ல முடியவில்லை. ஓரளவு நான் வளர்ந்துள்ள இன்றைய நிலையில் நான் சங்க இலக்கியத்தை நினைத்துக் கொள்ளும்போது இந்தக் குரல் முழுவடிவம் பெற்று என் இதயத்திலே ஏறி வீற்றிருக்கிறது.

இந்தச் சமயத்தில் நான் இந்தப் பொழிவுகளை, ''சங்க காலத் தமிழர்களின் மனிதநேய மணிநெறிகள்'' என்னும் தலைப்பில் நிகழ்த்த அழைப்பு விடுத்ததன் மூலம், நமது சங்க இலக்கியத்தைப் பற்றி மெய்ம்மையான ஒரு குரலை நான் எழுப்புவதற்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தார் வாய்ப்பு ஏற்படுத்தித் தந்துள்ளார்கள். குறிப்பாக நிறுவன இயக்குநர் (பொறுப்பு) **முனைவர் அன்னித் தாமசு** அவர்களும் அறக்கட் டளைச் சொற்பொழிவுப் பொறுப்பாளர் **முனைவர். ச.சிவகாமி** அவர்களும் இந்த வகையில் எனக்குப் பெரிய உதவியைச்

செய்திருக்கிறார்கள். காலத்தினால் செய்த ஞாலத்திலும் பெரிய உதவி இது. அவர்கள் இருவருக்கும் என் மனம் நிறைந்த அன்பையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன். இந்தப் பொழிவுகளைத் தயாரிப்பதில் என் துணைவர் (பேராசிரியர் சாலையார்) அவர்கள் செய்த உதவி மிகப் பெரிது. அவர்களின் மனிதநேயப் பெருவாழ்வைப் பார்த்துப் பார்த்தே சங்க இலக்கியத்தின் ஆழ்பொருளை முழுமையாக உணர்ந்தவளாகையால், அவர்களுக்கு நன்றி சொல்ல நான் அறிந்த எந்த மொழியிலும் வார்த்தை கிடைக்கவில்லை எவ்வளவுதான் தடம் மாறிப் போனாலும்,—என்னுடைய இந்தப் பொழிவுகளைக் கேட்டும் படித்தும், ''ஆகா எங்கள் அருமை முன்னோர்களே!'' என்று வியப்பு மகிழ்ச்சி தொடுக்கப் போகும் தமிழ் மக்களுக்கு முன்கூட்டியே என் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

பேரவை இல்லம்
சென்னை-86

**சாலினி இளந்திரையன்**

# பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| மனிதநேய மணிநெறிகள் | *1 - 64* |
| மனிதநேய இலக்கியம் | *65 - 135* |
| துணைநூற்பட்டியல் | *136* |
| சிறப்புச் சொல்லகராதி | *137 - 139* |

# மனிதநேய மணிநெறிகள்

மனிதநேயம் என்பது மனிதருக்கு மனிதர் இருக்க வேண்டிய தொடர்புறவு பற்றிய ஒருவிதமான மனநிலை; அந்த மனநிலையினால் தூண்டப்பட்டு நடைபெறும் செயல் நிலை; இந்த மனநிலையையும் அதன் விளைவான பல்வேறு செயல் நிலைகளையும் ஆடிப்படையாகக் கொண்டு உருவாகும் வாழ்க்கை நோக்கம்தான் மணிநெறி. அதாவது வாழ்க்கை மணிநெறி. 'எப்பொருள் எச் சொலின் எவ்வாறு உயர்ந்தோர் செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே' என்பது தமிழ் இலக்கணம். ஒரு பொருளைக் குறிக்க வரும் சொல்லை எப்படி ஆளவேண்டும் என்பதைப் பற்றிய இலக்கணம் இது. இதைப் போலவே, மனித வாழ்வு எப்படி நடைபெற வேண்டும் என்பதைப் பெரியவர்கள் தங்கள் வாழ்க்கை நடைமுறைகள் மூலமே வரையறுத்துக் காட்டியுள்ளார்கள். வரையறுத்த அந்த நடைநெறிகள்தான் வாழ்க்கை மணிநெறிகள். ஆங்கிலத்தில் இதை 'வேல்யூஸ் ஆப் லைப்' என்று சொல்லுவார்கள். தமிழ் வாழ்வின் ஒரு முக்கியமான கட்டம் சங்ககாலம். அந்தக் காலம் படைத்துத் தந்த இலக்கியத்தைச் 'செக்குலர் லிட்டரேச்சர்' என்று சொல்லப்படும் சமயச் சார்பற்ற (அறிவு நெறி) இலக்கியம் என்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள். மனித இயல்புகளுக்கு முரணானவைகளையோ மனித சக்திக்கு மேம்பட்டவைகளையோ முதன்மைப் படுத்தாமல் மனிதத்தளத்தையே அடிப்படையாகக் கொண்டு நடைபெறும் வாழ்க்கையைச் சித்திரிப்பது இந்த இலக்கியம் என்பது அதன் பொருள். இந்தப் பின்னணியில்தான் இந்த ஆய்வுப் பொழிவுகளுக்குச் **"சங்ககாலத் தமிழர்களின் மனிதநேய மணிநெறிகள்"** என்று தலைப்புக் கொடுத்தேன். இந்தத் தலைப்பில், சங்ககாலம் என்று சொல்லப்படுகிற பழந்தமிழ்க் காலத்தில் தமிழர்களின் வாழ்வை இயக்கிய மனிதநேயச் சிந்தனைகளையும் செயல்களையும் அடைவுபடுத்தி எடுத்துரைக்கலாம் என்று கருதுகிறேன்.

## மனிதநேய மணிநெறி

அடிப்படையான மனிதஉறவு, உணர்வு சார்ந்த மனித நேயம் என்பது, காலம், இடம் என்னும் பின்னணிகளில் மனிதன் எப்படி எப்படி இயங்க வேண்டும் என்பதற்கான வரையறைகளைக் குறித்தது. அதாவது, தமிழ் வரலாற்றில் சங்ககாலத் தமிழர்கள் எந்த எந்த இலக்குகளை முன்வைத்துத் தங்கள் வாழ்க்கையை நடத்தினார்களோ அவைகளைப் பின்புலமாகக் கொண்டு அவர்கள் நடத்திவைத்த நாகரிகமான செயல்களைக் குறிக்கிறது. பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் என்பது சங்க இலக்கியத்தில் வரும் ஒரு தொடர். 'பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல் என் நாடு இழந்ததனினும் நனி இன்னாது' என்பது அந்தப் பண்பாட்டின் அடிப்படையில் எழுந்து ஒலித்துள்ள ஒருவனுடைய குரல். இந்த இரண்டையும் இணைத்துப் பார்த்தால் கிடைக்கின்ற அடிமூலமான செயல் உணர்ச்சி எதுவோ அதுதான் மனிதநேய மணிநெறி. மேற்குறித்த இரண்டு செய்திகளையும் படிப்பவர்கள் அவைகளிலே இழைந்து நிற்கும் ஒரு பெரிய மனித உணர்வோட்டத்தைக் காண்கிறார்கள்; 'ஓ! நாமும் இப்படி நினைக்கவும் அப்படியே செயல் நிகழ்த்தவும் முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்:' என்று ஒருவகையான ஏக்கத்தோடு நினைக்கிறார்கள். ஏற்றத்துக்கு வழிகாட்டி வழிநடத்தும் ஒரு வகை ஏக்கத்தைத் தருவதனாலேதான் அது மனிதநேய மணிநெறி என்று சொல்லப்படுகிறது.

கொடுக்கப்பட்ட இந்த மேற்கோளைப் பார்த்துவிட்டு, பெரிய துன்பங்களைக் கண்டு இரக்கப்பட்டு அவைகளை நீக்கிட விரைவதுதான் மனிதநேயம் என்கிற முடிவுக்கு வந்துவிடக் கூடாது. மனிதநேயம் என்பது இதைவிட மிகமிகப் பரந்துபட்ட ஒரு மன நெகிழ்ச்சி. ஒரு பெண் தன்னுடைய பெற்றோர் பெரியோருக்குத் தெரியாமல் தான் விரும்பிய காதலனோடு ஊரைவிட்டே போய் விடுகிறாள். பெற்று வளர்த்து ஆளாக்கிய அவளுடைய அன்னையால் இந்தத் திடீர்ப் பிரிவைத் தாங்க முடியவில்லை. 'எங்கிருந்தாலும் அவளைத் தேடிக் கொண்டு வா' என்று தன் தோழியை விரட்டுகிறாள். அந்த அன்னையின் தோழியும், தலைவன் உடன் ஊரை விட்டுப்போன பெண்ணின் வளர்ப்புத் தாயுமாகிய அந்த முதியவள் வழியிலே சில துறவிகளைப் பார்க்கிறாள்; ''வழியிலே பார்த்தீர்களா என் மகளை?'' என்று வாட்டத்தோடு அவர்களைக் கேட்கிறாள். அவர்களோ துறவிகள்; காதல், உடன்போக்கு போன்ற நிகழ்ச்சிகளில் எந்த அக்கறையும் கொள்ள வேண்டாத

வாழ்க்கை உடையவர்கள். ஆனாலும், ''போ போ; வேறு யாரையாவது கேள்'' என்று விரட்டிவிட்டு விலகிச் செல்லாமல் விளக்கம் அளித்து அவளைத் தெளிவுபடுத்த முனைகிறார்கள்.

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதா மென்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே

சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதா மென்செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே

ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே!

தங்களுக்கு அக்கறையே இல்லாத ஒரு செய்தி, மற்றவர்களின் பெரிய அக்கறைக்கு உரியதாக இருக்கும்போது, அந்த அக்கறை ஆர்வத்தின் காரணமாக (வெறும் உணர்ச்சியின் அடிப்படையில்) அவர்கள் தவறான முடிவுகளுக்கு வந்து விடும்போது அவர்களைச் செப்பம் செய்ய வேண்டும் என்று நினைத்துத் தங்கள் அறிவாலும் அனுபவத்தாலும் அதைச் சீராக நடத்துகிறார்களே இதுவும் மனிதநேயமே.

துறவிகளை நின்று நிதானித்துச் செயல்படத் தூண்டியது அந்த முதியவளின் வாட்டமும் சோர்வும் மட்டுமல்ல. அதற்குக் காரணமாக அமைந்த அவள் மகளின் உடன்போக்கு தவறாக உணரப்பட்டிருக்கிறது என்று அந்தத் துறவிகள் உணர்ந்ததே அதற்கு முதன்மையான காரணம்.

யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாயுறை

என்கிறது திருமந்திரம். இது ஏதோ சமய வழிபாட்டைக் குறிக்கிறது என்று எண்ணிவிடக் கூடாது. அடிப்படையில் மனிதவாழ்வு என்னும் பெரிய அமைப்பை உருவாக்கிக் கட்டிக் காப்பதில் மனிதர் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வகையில் உதவ முடியும் என்பதையே இது வலியுறுத்துகிறது. முதியவளை வழியிலே கண்டு அவளைத் தெளிவுப்படுத்தி அவள்

மனத்தை அமைதிப்படுத்திய துறவிகள் இதைத்தான் செய்தார்கள். அதாவது, மனிதவாழ்வில் ஏற்படும் சிறிய சலனங்களை அவை பெரிதாக உருவாகும் முன் தடுத்திட வேண்டும் என்று எழுந்துகொள்ளும் உணர்ச்சியும் மனிதநேயமே.

## மனிதநேய எழுச்சி

புலவரிடம் கலை இருந்தது. பொருள் வளம் இல்லை. அன்றாடத் தேவைகளை நிறைவு செய்யும் அளவுக்குக் கூட அவரிடம் பொருள் இல்லை. குமண வள்ளலிடம் சென்று நிறைந்த பொருள்களைப் பெற்றுவந்த அவர் அவைகளைத் தன் மனைவியிடம் கொடுத்து, ஆர்வம் மீதூர ஓர் அறிவுரையையும் கொடுக்கிறார்.

நின்நயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்
பல்மாண் கற்பின் நின்கிளை முதலோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழ நின்
நெடுங் குறியெதிர்ப்பை நல்கியோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது, என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே!
பழம்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கிய வளனே.

இந்தப் பாடலில் சொல்லப்படும் கருத்துக்களை விட, அவைகள் சொல்லப்படும் வேகமே நம்மை முதன்மையாகக் கவருகிறது. யார் யாருக்குக் கொடுக்கலாம் என்பது பற்றி அவர் கொடுக்கிற பட்டியல் முடிந்த பிறகுதான் இந்தப் பாட்டு வழங்குகிற அடிப்படைச் செய்தியே தொடங்குகிறது. "இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது, எல்லோர்க்கும் நீயும் கொடுமதி மனைகிழவோயே!'' என்று முடிக்கிறார் புலவர். அதாவது வருகிறவர்களுக்கெல்லாம் நானும் கொடுப்பேன், நீயும் கொடுக்க வேண்டும் என்று பரபரக்கிறது புலவரின் உள்ளம். இந்தப் பரபரப்பை அவருக்கு உண்டாக்கிய உணர்வோட்டம் இருக்கிறதே. ''யார் ஒருவரும் என்னிடம் எதுவும் இல்லை என்று இரங்கி நிற்கக் கூடாது—அப்படிப்பட்ட மன ஓட்டத்திற்கு உள்ள சூழ்நிலையே ஒழிக்கப்பட்டிட வேண்டும்'' என்று அந்த அறிஞரின் இதயம் துடிக்கிறதே அந்தத் துடிப்பும் மனிதநேயமே.

இங்கே எடுத்துக் காட்டியவையும் இவைகளைப் போன்ற மற்றவையுமான நிகழ்ச்சிகள் அவைகளைப் படிப்போரின் நெஞ்சில் என்னென்ன உணர்வுகளை எழுப்ப வேண்டும் என்று அந்தப் புலமை அறிஞர்கள் கருதினார்களோ அவைகளே சங்க இலக்கியத்திலிருந்து நாம் பெறுகின்ற மனிதநேய மணிநெறிகள். அவைகளே 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்னும் உணர்ச்சி முதல் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்னும் எண்ணம் வரை அணியணியான பல வாழ்க்கைச் செயல் நோக்குகளை வாரித்தரும் மணிநெறிகள்.

## நெறிப்படுத்த விழைந்தேன்

சங்ககாலத் தமிழர்களின் மனிதநேய மணிநெறிகள் என்னும் தலைப்பை நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட பொழுது வழக்கமாகத் தமிழ் இலக்கியத்தைப் பற்றி நடைபெறும் ஓர் ஆராய்ச்சியை நடத்த வேண்டும் என்று நினைக்கவில்லை. காரணம், கற்பிக்கப்பட்டிருக்கிற ஆராய்ச்சி நெறிமுறை களின்படி நிகழ்த்தப்படும் ஆய்வுகளில் கருத்து வீச்சை விட கட்டுமான அமைப்புக்கே பெரிதும் முதன்மை தரப்படுகிறது. சில பத்திரிகைகளில், இந்தப் பூனைக்கு வழிகாட்டுங்கள். இந்த எலிக்கு அது போய்ச் சேர வேண்டிய இடத்துக்கு வழிகாட்டுங் கள் என்றெல்லாம் புதிர்ப்படம் போடுகிறார்களே அதுபோல, பல ஆய்வாளர்கள் முதன்மை ஆதாரங்கள், துணை ஆதாரங்கள் என்னும் பெயர்களில் இலைதழைகளையே எழுப்பிக் குவித்து விடுகிறார்கள். அவைகளுக்குள்ளே அழகிய மலர் எங்கே இருக்கிறது, இனிய கனி எந்த இடத்தில் பழுத்துத் தொங்கு கிறது என்பதைக் கண்டுபிடிப்பதே பெரும்பாடாகி விடுகிறது. சுருக்கமாகச் சொன்னால் அந்த ஆராய்ச்சியின் அடிமூலமான செய்தி என்ன என்பதைக் கண்டறிவதற்கே நாம் ஓர் ஆய்வு நடத்த வேண்டியதாகி விடுகிறது. படித்த மேல்மட்டத்துச் சிலர்க்கு ஒரு பொழுது போக்காக அமையத்தக்க இத்தகைய, ஆய்வுகளில் நான் என்றைக்குமே ஈடுபட்டதில்லை. ஆயினும் இன்றைக்கு என்னைச்சுற்றி நான் காண்கின்ற வாழ்க்கை நம் முடைய மக்களின் எதிர்காலத்தைப் பற்றி ஆழ்ந்த அக்கறையோ டும் சிறிதளவு வேதனையோடும் எண்ணிப் பார்க்கத் தூண்டியது. சமுதாயத்தில் பலபேர் எந்தவிதமான வாழ்க்கை நோக்குகளும் இல்லாமல் நங்கூரம் இல்லாத கப்பல்களாகத் தடுமாறுவதையும் வாலறுந்த பட்டங்களாக மயங்குவதையும் பார்த்த போது, இந்தத் தமிழினத்தின் வாழ்வு, மணிநெறிகளை மக்களுக்கு

வடித்துத் தந்ததே இல்லையா என்று கவலையோடு சிந்தித்தேன்.

என்னுடைய வேதனையின் ஊடேயே சிரிப்பு கலந்த ஒரு காட்சி சிறகடித்து எழுந்தது. வாழ்க்கைக்கு மணிநெறிகள் வேண்டும் என்று என் போன்றவர்கள் அழுத்தமாக நினைத்துக் கொண்டு இருக்கும்போதே, இங்கே பலபேர் தங்கள் வாழ்க்கை களையே 'மணி' நெறியாக நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அதாவது, 'மணி' (Money) என்னும் ஆங்கிலச் சொல்லை இணைத்துப் பார்த்து வாழ்க்கை என்பதே பணம் தேடுவதற்கு உரிய நிகழ்ச்சிகளின் தொகுப்புத்தான் என்பது போல அதைக் குடை சாய்த்துக் கொண்டு இருக்கிறார்கள். பணத்தைத் தேடிக் கொள்ளுகிற மும்முரத்தில், மனிதனுக்கு மனம் என்ற ஒன்று இருக்கிறது என்னும் உண்மையையே பலபேர் மறந்து திரிகிறார் கள். பணம் ஒன்றிற்காகவே அதன் அடிப்படையில் அமைந்த பச்சைச் சுயநலம் ஒன்றிற்காகவே எல்லாவற்றையும் பலியிட்டு விடத் துடிக்கிற மக்களைப் பார்த்த போது, ''புகழ் எனின் உயிரும் கொடுக்குவர், பழி எனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்'' என்னும் புறநானூற்றுத் தொடர் மிகுந்த நெருக்கடியோடு என் இதயத்தில் நிமிர்ந்தது. உலகம் வாழ வாழுகின்ற மனிதர்களைப் பற்றிய இந்த உயரிய எண்ணம் இந்தத் தமிழினத்தைச் சார்ந்த யாரோ ஒருவர் சொல்லி வைத்ததுதானே என்று நினைத்தேன். நினைக்கவே—அந்நாள் தமிழர்கள் வகுத்துக் கொண்ட மனிதநேய மணிநெறிகளின் நினைவும் இதயத்தில் எழுந்தது. ''கல்வியின்றி, அதனால் உரிமையின்றி, அதனால் கடைத்தேற வழியுமின்றித் தவித்த தமிழ்மக்கள் ஓரளவு கல்வி பெற்று உயர்வுகளை நோக்கி விழி நிமிர்த்தியுள்ள இந்தக் காலக்கட்டத்தில் தங்கள் முன்னோர்கள் கட்டிகாத்த மணிநெறிகளை இழந்துவிட்டால் எத்தனை வளம் பெற்றாலும் ஏற்றமிகுந்த ஒரு வாழ்க்கையைப் படைக்க மாட் டார்களே என்று வாடியது என் உள்ளம். 'நெடிய மொழி தலும் கடிய ஊர்தலும் செல்வமன்று' என்பதை உணரா விட்டால் இந்த மக்கள் எதை எதையோ செல்வம் என்றும் வாழ்க்கை நெறி என்றும் தவறாக எண்ணி ஒடிந்து விழுந்து போவார்களே என்றும் கசிந்தது என் நெஞ்சம். ஆகவே, வாழ்க்கையின் பல கூறுகளிலும் ஒருவிதமான ஆர்ப்பாட்ட அதிர்வு ஊடாடுகின்ற இன்றைய சூழ்நிலையில்;

''நீண்டு பரந்து நிறைந்த உலகத்தில்
மாண்டு மடியும் வழியே வழியாகப்

போவோர் பலர் அவரைப் போகாதீர் என்றுரைத்துச்
சாவாரைச் சாவா நெறிப்படுத்த நான் விழைந்தேன்''

என்று (அன்னை நீ ஆட வேண்டும்) ஒரு கவிஞன்எழுந்து நின்றது போல,—வாழ்க்கை மணிநெறிகளைப் பற்றிய இன்றைய மயக்க இருளைக் கிழித்து, தமிழ் மக்களுக்குப் பழக்கமான மனிதநேய நினைவோட்டங்களை அவர்களின் நெஞ்சிலே பாய்ச்ச வேண்டும் என்று விரும்பினேன். அந்த விருப்பத்தின் விளைவுதான், ''சங்ககாலத் தமிழர்களின் மனிதநேய மணிநெறிகள்'' என்னும் தலைப்பில் அமைந்த பொழிவுகளாக உருவம் கொண்டுள்ளது.

## பொழிவுகளின் தடம்

இந்த அவையடக்கக் குறிப்பை நான் சொல்லிக் கொள்ளுவதற்கு முக்கியமான காரணம் இருக்கிறது. இந்த ஆய்வுப் பொழிவில் ஒரு வகையான பகுப்புமுறை இடம் பெறும் என்றாலும், இந்தப் புத்தகம் முதலில், இந்தப் புத்தகம் இரண்டாவது என்பது போன்ற புத்தக வரன்முறையோ,— அக இலக்கியம் பற்றிய செய்திகள் முதலில், புற இலக்கியம் பற்றிய செய்திகள் அதன் பிறகு என்பது போன்ற வரிசை அமைப்புகளோ இந்தப் பொழிவுகளில் இடம்பெற மாட்டா. ஒரு பூஞ்சோலையில் நுழைந்து கண்ணைப் பறிக்கும் அழகுமலர் களை மட்டும் எடுத்துக்கொண்டு போவது போல நமது சங்க இலக்கியத்தில் தனிநின்று ஒளிர்கின்ற மனிதநேய மணிக் கருத்துக்களை அப்படியப்படியே எடுத்துச் சொல்லுவதாக மட்டுமே இந்தப் பொழிவுகள் அமையும். கேட்பவர்கள் உள் ளத்தில் மனிதநேய மணிநெறிகளைப் பற்றிய ஓர் ஓர்மையை இனிமையாகப் பாய்ச்ச வேண்டும் என்னும் அடிப்படை நோக்கிலிருந்து இப்பொழிவுகள் அகலாமல் நடைபெறும். பன்னிப்பன்னிச் சொன்னாலும், திரும்பத்திரும்பச் சொன் னாலும் இந்தப் பொழிவுகளின் நோக்கம் ஒன்றே ஒன்று தான்: இந்தத் தமிழ் இனத்தவர்கள் ஆழ்ந்த மனிதநேய அருஞ் சிந்தனைகளை வாழ்வாக்கிக் கண்ட மாண்புக்கு உரியவர்கள் என்பதை இன்றையோருக்கு அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்லுவதே, ''சங்ககாலத் தமிழர்களின் மனிதநேய மணி நெறிகள்'' என்னும் இந்தப் பொழிவுகளின் நோக்கம்.

## தொல்காப்பியம் சொல்லுகிறது

சங்ககாலத் தமிழர்களின் மனிதநேய மணிநெறிகளைப் பற்றித் தொல்காப்பியம் பேசுகிறது; சங்க இலக்கியங்கள் பேசு

கின்றன; சங்க மருவிய காலத்ததாகக் கருதப்படும் திருக்குறளும் பேசுகிறது. இலக்கணம், இலக்கியம் என்கிற வேறுபாடு இல்லாமல்,—மணிநெறிகளின் இலக்கணமும் பேசப்படுகிறது. அவைகள் இலக்கியமாகி நடக்கும் இயல்பும் பேசப்படுகிறது. ஆகவே மனிதநேய மணிநெறிகளைப் பற்றிய கருத்தோட்டம் அவைகளைப் பற்றிய இலக்கணம், அவைகளைப் பற்றிய இலக்கியம் என்னும் இரண்டு பகுப்பாக அடைவுபடுத்தத் தக்கதாக நமக்கு கிடைக்கின்றது.

தமிழர்களின் தொன்மை இலக்கணமாகிய தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று பகுதிகளாக இலக்கணத்தைப் பிரித்துப் பேசுகிறது. மூன்றாவதாகிய பொருளதிகாரம் மனித வாழ்க்கை எப்படி இலக்கியமாகப் படைக்கப்பட வேண்டும் என்பதை வரையறுத்துக் காட்டுகிறது. வாழ்வின் அகப்பகுதியும் புறப்பகுதியும் அவை இரண்டும் இணைந்த ஒட்டு மொத்தமான மனித வாழ்க்கையும் எப்படி எப்படி அமைய வேண்டும் என்பதைச் சிலபோது நேரிடையாகவும் பலபோது குறிப்பாகவும் வகுத்துக் காட்டுகிறது தொல்காப்பியம்.

## வளரும் மனிதநேயம்

கற்பியலில் வரும் காமஞ்சான்ற கடைகோட்காலை என்னும் நூற்பா, தமிழ் வாழ்வே மனிதநேய அடிப்படையில் மலர்ந்தது என்பதை அழகாக எடுத்துக் காட்டுகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை முதலான அய்ந்து திணைகளிலும் நடைபெற்ற ஒரு குடும்பத்தின் இன்பவாழ்வை விவரித்து வந்த தொல்காப்பியர், அந்த வாழ்வின் பெறுபயன்என்ன என்பதை இங்கே முடித்துக் காட்டுகிறார்.

காமம் சான்றக் கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
நயம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே

என்னும் இந்த நூற்பாவில், ஒருவர் மீது ஒருவர் ஆராக் காதல் கொண்டு வாழ்வு தொடங்கிய ஓர் ஆணும் பெண்ணும் ஒரு முழுமை வாழ்வை எப்படி எப்படிக் கட்டி எழுப்புகிறார்கள் என்னும் விவரம் முறையாகச் சொல்லப்படுகிறது. இருவரும் காதலிக்கிறார்கள், பொருள் தேடிச் சிறக்கிறார்கள், மக்களைப் பெற்று மகிழ்கிறார்கள்,...அவர்கள் வாழ்ந்த இந்த வாழ்வின்

காரணமாக இரண்டு பேராகத் தொடங்கிய அந்தக் குடும்பம் பல உறுப்பினர்களைக் கொண்ட பெரியதொரு அமைப்பாக் வளர்ச்சி அடைகிறது. காம இன்பத்துக்காகவே ஒருவரை ஒருவர் நெருங்கி இணைந்ததாக நினைத்துக் கொண்டு இருந்த அவர்கள் நாளடைவில் அந்த இன்ப வேட்கை குறைந்து வந்திருப்பதை உணர்கிறார்கள். அதே சமயத்தில் மக்களும் உற்றார் உறவினருமாக அவர்களுடைய வாழ்வு கிளைத்திருப் பதையும் உணருகிறார்கள். காம இன்ப ஈடுபாடு குறைந்துள்ள அந்த நிலையில் தங்களைப் போன்ற முதியவர்கள் அறம் புரிந்து சிறப்பதைக் காணுகிறார்கள். அவர்களுடைய உள்ளம் இழந்து போன இளமை இன்பத்தை ஈடு செய்வதாக அறம்புரிதலாகிய நல்ல செயலின் மூலம் கிடைக்கக் கூடிய பெரிய இன்பம் ஒன்று தங்களுக்கு இயல்பாகவே அமைந்துவிட்டதைக் காண்கிறார்கள். தங்களுக்காகவும் தங்கள் மக்களுக்காகவும் வாழ்ந்து வந்தி ருக்கிற அவர்கள் அந்தப் பற்றுக்களைக் குறைத்துக் கொண்டு உலகத்து மற்றவர்களுக்காக வாழுகின்ற ஒரு புதிய வாழ்க்கை வந்து கிடைத்ததை மகிழ்வோடு நினைவுகூர்கிறார்கள். இந்த நூற்பாவில் வருகிற இறந்தது என்பது அவர்கள் இதுவரை நடத்திவந்த அளவுபட்ட இல்வாழ்க்கை. அறம்புரி சுற்ற மொடு சிறந்தது பயிற்றல் என்னும் தொடர் தங்களுக்கு வழி காட்டிகளாக அமைந்து பொதுநலச் சேவையில் ஈடுபட்டவர் களை முன்மாதிரியாகக் கொண்டு தங்கள் வாழ்க்கையின் எல்லையை விரிவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று குறிப் பிடுகிறது.

காமஞ் சான்ற வாழ்க்கை, அதன் விளைவாகப் பிறந்த மக்கள். உற்றாரும் உறவினருமாகிய நல்லவர்களின் தொடர் புறவு, அதனால் சிறந்தது பயிற்றலாகிய புதிய வினைப்பாடு என்னும் இவைகளில் வளர்த்துக் காட்டப்படுவதுதான் முறை யான மனிதநேயம். இரண்டு பேரின் அன்பு எப்படி இருவ ருக்கே உரியது போலத் தோன்றி ஒரு சிலருக்கு மட்டும் உரியது போல விரிந்து, பிறருக்கு நாம் செய்யும் பெருவாழ்வாக மலர்வதே இந்த நூற்பாவின் அடிப்படைக் கருத்து. இரண்டே இரண்டு பேருக்காக வாழத் தொடங்கியவர்கள் உலகத்து எல்லோருக்குமாக வாழவேண்டும் என்னும் கோட்பாட்டை இதன் மூலம் வாழ்க்கை இலக்கணமாக வகுத்துத் தருகிறது தொல்காப்பியம்.

தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியத்தையும் அடி யொற்றித் தோன்றிய வள்ளுவம் இதை இன்னும் தெளிவாகச்

சொல்லுகிறது. 'அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே' என்று அறுதியிட்டு உறுதிமொழியும் வள்ளுவம், ''இருந்து ஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு'' என்று இல்வாழ்க்கையின் முழுமைப் பயனை மொழிகிறது. இங்கே 'விருந்தோம்பி வேளாண்மை செய்தல்' என்று குறிக்கப்படுவதுதான் தொல்காப்பியத்தில் அறம்புரி சுற்றமொடு சிறந்தது பயிற்றல் என்று குறிக்கப்படுகிறது. இரண்டின் அடிப்படையும் குடும்ப உறுப்பினர்களின் எல்லையைத்தாண்டி உலகத்து மற்றவர்களுக்காகவும் வாழ வேண்டும் என்னும் மனிதநேய மணிநெறிதான். ஆகவே தொல்காப்பியம் மனிதநேயத்தின் அடிப்படையிலேயே இல் வாழ்வுக்கு நோக்கம் கற்பித்துள்ளது என்பது தெளிவு.

## அடிப்படை இலக்கணம்

இல்வாழ்க்கையின் அடிப்படையே மனிதநேயமாக அமைந்து விடுவதால் அந்த வாழ்க்கையின் நடைமுறை ஒவ்வொன்றும் மனிதநேயத்தின் அடிப்படையில் மலர்ந்த கமழும் மணிநெறி யாகவே உயர்கிறது.

நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்று; தன் செய்வினைப் பயனே;
சான்றோர் செல்வம் என்பது, சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் செல்வம் என்பதுவே (நற். 210)

என வரும் நற்றிணைப் பாடல் பகுதி மனிதனின் வாழ்க்கை நோக்குக்கே அரியதோர் அடிப்படை இலக்கணத்தை வகுத்துத் தருகிறது. இதுவும் மனிதநேய அடிப்படையிலேயே அமை கிறது என்பது கவனிக்கத்தக்கது.

உலகம் பல காட்சிகளை வழங்குகிறது. ஆர்ப்பாட்டக் காட்சி அவைகளிலே முக்கியமானது. ஓசையாலும் ஒளியாலும் அவைகளை உண்டாக்குகிற ஆடம்பரப் பொருள்களாலும் நிகழ்த்தப்படுகிற ஆர்ப்பாட்டம் பெரும்பாலோரின் சிந்தனை யையே சிதறடித்து விடுகிறது. சாதாரண பொதுமக்கள் மட்டுமல்லாமல் படித்த பெருமக்களே கூட இந்த ஆர்ப் பாட்டத்தில் மயங்கித் திசை திரும்பிப் போகிறார்கள். புலவர் உலகத்தில் இருந்து வரும் ஆர்ப்பாட்டத் திசைமாற்றல்

ஒன்றைப் பின்வருமாறு சொல்லோவியம் செய்கிறார் நமது அவ்வை.

விரகர் இருவர் புகழ்ந்திடவே வேண்டும்
விரல்நிறைய மோதிரங்கள் வேண்டும்—அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று.

படித்தவர் உலகத்தையே இப்படி ஆட்டிப் படைக்கிற ஆடம்பர ஆர்ப்பாட்டம் சாதாரணமானவர்களை மிகவாகவே குழம்பிப் போடுகிறது. அவர்கள் வாழ்வு தொடர்பான எது ஒன்றைப் பற்றியும் தவறான கணிப்புகளுக்கே விரைந்து விடுகிறார்கள். அவர்களின் மயக்கத்தை ஒழித்து அவர்களுக்குத் தெளிவு ஊட்ட விரும்பிய புலவர், செல்வம் என்பதற்குக் கொள்ளப்படுகிற பொருளையே மனிதநேய அடிப்படையில் இங்கே மாற்றி அமைக்கிறார்.

இந்தப் பாடலில் வரும் செல்வம் என்ற சொல் பொருட் செல்வத்தையோ புகழ்ச் செல்வத்தையோ குறிக்கும் அளவாக ஒடுங்காமல் மனித வாழ்வின் ஒட்டுமொத்தமான பெரிய பெருமை என்னும் அளவுக்கு விரிகிறது. எல்லோருமே வாழ்வில் பெருமை பெற வேண்டும் என்று விரும்புவது இயல்பாகையால், உண்மையான பெருமை என்ன என்பதை வரைந்து காட்டு கிறார் புலவர். நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும் செல்வ மன்று என்னும் ஒரே தொடருக்குள் மிக விரிவான வாழ்க்கை நிகழ்ச்சிகளின் ஒரு பெரிய பன்முகத் தொகுப்பே அடங்கியுள்ளது. பொருட் செல்வத்தைத் தேடிக் கொண்டவனை, அதனால் தன் வாகன வசதிகளைப் பெருக்கிக் கொண்டவனைப் பெரு மைக்கு உரியவனாக உலகம் கருதுகிறது. அதேபோல தன் னுடைய செல்வச் செருக்கால் எதையும் அடித்துப் பேசுகிற வனுக்கும் பெரியவன் என்ற மரியாதை இருக்கிறது. இந்த இரண்டின் மூலமும் ஒருவனுக்குப் பெருமை ஏற்படுவதில்லை என்று அடித்துச் சொல்லுவதன் மூலம் பெருமை என்பதைப் பற்றிய மக்களின் பார்வைக் கோணத்தையே முற்றிலும் புதிய திசைக்குத் திரும்புகிறது இந்தப் பாட்டு.

### இலக்கணத்துக்கு விளக்கம்

பொருட் செல்வத்தைப் பெருக்கிக் கொண்டவன் வீட்டைப் பெரிதாகக் கட்டுகிறான். விரைவாகச் செல்லும் வண்டி

வாகனங்களை வாங்கி வரிசையாக நிறுத்துகிறான். இவைகளால் பருமையான ஒரு பெரிய தோற்றம் அவனுக்கு உண்டாகிறது. ஆனால் இந்தப் பொருள்களால், அவனையும் அவன் குடும்பத்தாரையும் தவிர உலகத்திலே உள்ள வேறு ஒரே ஒருவருக்குக் கூடப் பயனோ மகிழ்ச்சியோ ஏற்படுவதில்லை. அதனாலேதான் இது செல்வம் ஆகாது என்கிறார் புலவர். அதே போல, மேற்படிச் செல்வங்களால் ஏற்பட்ட அகங்காரத்தின் காரணமான அவனுடைய தடித்தனமான பேச்சும் யாருக்கும் இன்பமோ வேறு பயனோ விளைவிப்பதே இல்லை. இப்படி,—தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு, சம்பாத்தியம் என்னும் அளவாகச் சுருக்கி உலகத்து மற்றவர்களைப் புண்படுத்தும் பிழைத்தடத்தில் இறங்கிப் போகும் வாழ்க்கை மனித நேயத்துக்கே புறம்பானது; தமிழர்கள் (தொல்காப்பியம் முதலானவைகளில்) அமைத்துக் கொண்ட மனிதநேய மணிநெறிகளுடன் ஒத்துப் போகாதது. எனவே, பயனற்ற வாழ்வுக்கு மக்களைத் திசைதிருப்பி இழுத்துச் செல்பவை இந்தப் போக்குகள். இதை மாற்றித்திருத்தி இயல்பான மனித உணர்வோட்டத்தை மனிதர்களின் நெஞ்சிலே பாய்ச்சாவிட்டால் அவர்கள் தாங்களும் கெட்டு மற்றவர்களையும் கெடுத்துப் போடுவார்கள். ஆகையினாலேதான் இந்தப் பாட்டு தவற்றைச் சுட்டிக் காட்டுவதோடு அமையாமல் சரியானது எது என்பதையும் கொஞ்சம் அழுத்தமாகவே நினைவூட்டுகிறது.

'சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர் புன்கண் அஞ்சும் பண்பின் மென்கட் செல்வம்' என்கின்ற வாசகம் மேலே குறித்த தவற்று நடைக்கு ஒரு சரியான திருத்தத்தைச் செய்கிறது. அப்படிச் செய்யும் போதே அரும்பெரும் மனிதநேய மணிநெறி ஒன்றையும் வகுத்துத் தருகிறது. தம்மைச் சார்ந்தோருக்கு உண்டாகும் துன்பத்தைத் தவிர்ப்பதே ஒரு மனிதனுக்கு உயர்ந்த பெருமையைத் தருகிறது என்னும் இந்த வாசகம் அடிப்படையில் மனித உறவுகளைப் பற்றியதாக இருப்பதால் அதுவே நாகரிக நடைமுறைக்கு இலக்கணமும் ஆகிவிடுகிறது. பெருமை எது என்பதைப் பற்றிய கோட்பாட்டில் நிலவிய குழப்பம் நீக்கப்படும் போதே மனிதப்பண்பின் ஒரு பெரும் கூறாகிய இதய நெகிழ்வே மனித வாழ்வின் அடிப்படையாக அமைய வேண்டும் என்கிற தெளிவும் தெளிவாகப் பிறந்து விடுகிறது.

### மனஉணர்ச்சி உடையவனே மனிதன்

உயிர்த் தொகுதியை அறிவின் அடிப்படையில் ஓரறிவு முதல் ஆறு அறிவு ஈறாகப் பாகுபடுத்திக் கூறுகிறது தொல்காப்பியம்.

ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே
இரண்டறி வதுவே யதனொடு நாவே
மூன்றறி வதுவே யவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே யவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே யவற்றொடு செவியே
ஆறறி வதுவே யவற்றொடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே
(பொருள் 582)

இந்த வளர்ச்சி வரிசையில் ஒன்று முதல் அய்ந்து அறிவு வரை உள்ள உயிர்கள் பொறி உணர்வுகள் மட்டுமே உடையவை களாக இருக்க மனிதன் மட்டும் ஆறாவதாகிய மன உணர்வு உடையவனாக இருக்கிறான் என்று இந்த நூற்பா விளக்குகிறது. இதையடுத்து ஆறறிவு உடைய உயிர்களுக்கு இலக்கணம் தரும் தொல்காப்பியம்,

மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

என்று வரையறுக்கிறது, மக்கள் ஆறறிவு உயிர்கள் என்ற அளவோடு நிறுத்தாமல் பிறவும் உள ஆறறிவு உயிர்கள் என்று மனித இலக்கணத்தின் அடிப்படையையே விரிவுபடுத்துகிறது தொல்காப்பியம். இதற்கு விளக்கம் தரும் உரையாசிரியர்கள் ''குரங்கு முதலாகிய விலங்கினுள் அறிவுடையன எனப்படும் மன உணர்வுடையன உளவாயின் அவையும் ஈண்டு ஆறறிவு உயிராய் அடங்கும்'' (பேரா) என்று சொல்லுகிறார்கள். ஆறறிவு உடைய உயிர்களுக்கு இலக்கணம் தந்த இந்த (பொருள் 588) நூற்பாவைத் தொடர்ந்து யானைக்கு ஆண்பால், பெண்பால் சொற்கள் குறிப்பிடும் 589 ஆம் நூற்பா வருகிறது. இதற்கு விளக்கம் சொல்லுவோர் ''யானைக்கும் ஆறறிவு உண்டு என்பது சிலர் கருத்து; அதுபற்றி (இந்த நூற் பாவை அடுத்துச் சொன்னதன் மூலம்) யானையை அடுத்து வைத்தார் (தொல். பேராசிரியம் நூற்பா 589 உரை விளக்கம்) என்கிறார்கள். இந்த விளக்கங்களையும் கருத்துக்களையும் வைத்துப் பார்க்கும்போது நம்முடைய தமிழ் முன்னோர்கள் பிறப்பினாலோ வடிவத்தினாலோ உயர்வு கொடுக்காமல் மன உணர்வின் அடிப்படையிலேயே ஓர் உயிரை ஆறறிவு உயிர் என்ற தளத்துக்கு உயர்த்தினார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. இதை உறுதிப்படுத்துவது போல 587

ஆவது நூற்பா (மாவும் மாக்களும் ஐயறிவினவே)வுக்கு 'ஐயறிவுடையன விலங்கும் அவை போல்வன ஒருசார் மானுடங்களுமாம்' என்று உரை தருகிறார் பேராசிரியர். இதைத் தொடர்ந்து வரும் 'மாக்கள் எனப்படுவார் மன உணர்ச்சி இல்லாதார்' என்னும் விளக்கமும், மனிதன் என்பதற்கு மனஉணர்ச்சி உண்மையே அடிப்படை என்பதை அழுத்தம் திருத்தமாக உறுதி செய்கிறது.

## பகுத்து உணரும் மாண்பு

பல்வேறு வகைப்பட்ட இந்த விளக்கங்களை ஒன்றிணைத்துப் பார்க்கும் போது, மனிதர்களில் மட்டுமல்லாமல் விலங்குகளாகப் பிறந்தவற்றிலும் ஆறறிவு உடையவர்கள் இருந்தனர் என்று தமிழ் முன்னோர் கருதியது உறுதியாகத் தெரிகிறது. மக்கள் வடிவம் பெற்றவர்களிலேயே மன உணர்ச்சி இல்லாதவர்களை மாக்கள் என்று தனிப்பிரித்து ஓதியதால் 'தக்கது இன்னது தகாதது இன்னது' என்று பகுத்து உணரும் மன உணர்ச்சி உடையவர்களை மட்டுமே தமிழர்கள் ஆறு அறிவு உடைய மனிதர்களாகக் கொண்டார்கள் என்பதும் தெளிவாகிறது. இவைகளின் தெளிபொருள் என்ன என்றால்,- மனிதப் பண்பு என்று இப்போது நாம் தனித்து எடுத்துக் குறிப்பிடும் சிறந்த இயல்பு உடையவர்கள் மட்டுமே மனிதர்கள் என்று சங்ககாலத்துக்கு முன்பிருந்தே தமிழர்கள் முடிவு கட்டியிருக்கிறார்கள். இதிலிருந்துதான் மனிதன் என்பவன் மனிதப் பிறப்புக்கு உரியனவாகிய பகுத்தறிவு, பகுத்துணர்வு, மன நெகிழ்வு முதலான பெரிய இயல்புகள் உடையவனாக இருத்தல் வேண்டும் என்னும் இலக்கணம் உருவாகிறது. இந்த இலக்கணத்துக்கு விளக்கம் தருவது போலப் புறநானூற்றின் பின் வரும் பாடல் குறிப்பு அமைகிறது.

ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசை
பலரும் வருவர் பரிசின் மாக்கள்;
வரிசை அறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே, மாவண் தோன்றல்!
அது நன்கு அறிந்தனை யாயின்
பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே.

மற்றவர்களுக்குப் பொருளை வாரித்தரும் வள்ளல்தன்மை சிறந்ததுதான் என்றாலும், நாம் யாருக்குக் கொடுக்கிறோம், அதைப் பெற்றுக்கொள்ள அவருக்கு உரிய தகுதி யாது, அந்தத்

தகுதி அறிந்து கொடுக்கிறோமா என்பவைகளை நன்கு ஆராய்ந்து வழங்குவதுதான் தகுதிசான்ற வள்ளல்தனம் என்று வரையறுத்துச் சொல்லுகிறது இந்தப் பாட்டு. இந்தத் தெளிவும் திறமையும் உடையவர்களைத்தான் மனஉணர்ச்சி உடைய மனிதர்கள் என்று இலக்கணம் வகுத்து ஏற்றம் தருகிறது மேலே குறிப்பிட்ட தொல்காப்பியம். இங்கே எடுத்துக் காட்டிய புறநானூற்றுப் பாடல் மூலம் தொல் காப்பியம் மனிதர்களுக்கு வகுத்த இலக்கணத்துக்கே புதிய விளக்கம் கிடைக்கிறது. அந்த இலக்கணம் மனிதநேய அடிப் படையில் வகுக்கப்பட்டது என்பதும் இந்தப் புறப்பாடலாலேயே துல்லியமாக விளங்குகிறது.

இன்னார் இனியார் என்னாமல் வந்தவர்களுக்கெல்லாம் வாரி வழங்கிக் கொண்டிருந்த மன்னவனைப் பார்த்து, ''பொது நோக்கு ஒழிமதி புலவர் மாட்டே'' என்று எச்சரிக் கிறார் புலவர். அப்படிச் செய்ததன் மூலம், வள்ளலாகிய மன்னன் வயிற்றுக்கு இல்லாத ஏழைபாழைகளையும் பொருட் செல்வம் இல்லாவிட்டாலும் அறிவுச்செல்வர்களாக விளங்கும் புலவர்களையும் ஒரேவிதமாகவே நடத்தத் தலைப்பட்டு விட்ட நிகழ்ச்சி கண்டிக்கப்படுகிறது. இந்த நிகழ்ச்சிக்குக் காரணம், வள்ளலாகிய அந்த மன்னவன் மற்றவர்களுக்குப் பொருளைக் கொடுப்பதே அரிய செயல் என்று கருதிவிட்டான். அப்படிச் செய்து வெறும் வறுமையாளிகளையும் பெரும் புகழுக்கு உரிய அறிவாளிகளையும் ஒன்றாகக் குவித்துப் போட்டு விட்டான். எந்த மனிதனும் தன்னுடைய ஆற்றலும் தகுதியும் அவை களுக்கு உரியவாறு மதிக்கப்பட வேண்டும் என்று விரும்புவதும் அவ்வாறு மதிக்கப்படாதபோது வாடிப் போவதும் மனித இயல்புகள் என்னும் மனித உண்மையை அந்த மன்னவன் அறி யாமல் போனான். சீரிய மனஉணர்வு இருந்திருந்தால் இந்தத் தவற்றினை அவன் செய்திருக்க மாட்டான். ஆகவே நேரிடை யாகச் சொல்லாவிட்டாலும்,—தக்கது இன்னது தகாதது இன்னது என்று உணர்ந்து நடக்கும் மனிதநேய நடை அந்த மன்னனிடம் இல்லை. வாரி வழங்குவோரிடம் இந்த உணர்வு கட்டாயம் இருக்க வேண்டும்,—அதுதான் மனிதநேயம் மிளிரும் வள்ளல்தனம் என்பதையே இந்தப் பாடல், தொல்காப்பிய மரபியல் வழி நின்று குறிப்பாக எடுத்து உணர்த்துகிறது.

## மேலும் ஒரு விளக்கம்

இந்த இலக்கணத்துக்கு மேலும் விளக்கம் சொல்லுவது போல புறநானூறு 196 ஆம் பாடல் அமைந்துள்ளது. உதவி

நாடி வருகிறவர்களை, உண்டு அல்லது இல்லை என்று சொல்லி உடனே அனுப்பி வைக்காமல் எந்தப் பதிலும் சொல்லாமல் வீட்டு வாசலில் காக்க வைக்கிறான் ஒரு மன்னன். இந்தச் செய்கை உதவி கோருவோரை வாட்டத்துக்கு உள்ளாக்குவதோடு உதவி செய்யும் வாய்ப்பு உள்ளவர்களின் புகழுக்கும் மாசை உண்டாக்குகிறது என்கிறார் புலவர்.

ஒல்லுவது ஒல்லும் என்றலும், யாவர்க்கும்
ஒல்லாது இல் என மறுத்தலும், இரண்டும்
ஆள்வினை மருங்கின் கேண்மைப்பாலே;
ஒல்லாது ஒல்லும் என்றலும், ஒல்லுவது
இல் என மறுத்தலும், இரண்டும், வல்லே
இரப்போர் வாட்டல் அன்றியும், புரப்போர்
புகழ் குறைபடூஉம் வாயில் அத்தை

ஒரு மனிதன் மற்றொரு மனிதனின் உதவியை நாடுவது தவிர்க்க முடியாதது. ஏதாவது ஒரு வகையில் ஒவ்வொரு மனிதரும் மற்றவர்களின் உதவியை நாட வேண்டிய நிலைமை ஏற்படவே செய்கிறது. வசதியாக வாழ்கிறவர்கள் கூட எதிர்பாராத இன்னல்களால் வளம் குன்றித் தடுமாறுவது உலகில் நடைபெறக் கூடியது. இந்த இயற்கையை "குடை நிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடைமெலிந்து ஒருர் நண்ணினும் நண்ணுவர்" என்றும், "எழுநிலை மாடம் கால் சாய்ந்து உக்குக் கழுதைமேய் பாழ் ஆயினும் ஆகும்" என்றும் சித்திரிக்கிறது நறுந்தொகை.

இந்த உண்மை எல்லோரும் அறியக் கூடிய எளிய உண்மையாக இருப்பதால் ஒருவருக்குத் துன்பம் ஏற்பட்டு அவர் மற்றவருடைய உதவியை நாடிச் செல்லும்போது உதவி புரியும் நிலையில் உள்ளவர் உதவி கோருகிறவரின் மனம் சிறிதும் புண்பட்டு விடாதபடி நடந்து கொள்ளுவதே சீரிய மனிதநேயம். அதை உணர்ந்து நடப்பதே மனிதராகப் பிறந்து மன உணர்ச்சி உடையவர்களாக வளர்ந்திருப்பவர்களின் கடமை. இதை மறந்துவிட்டு, இப்போது வா, அப்போது வா என்று இழுத்தடிப்பது அந்த மனிதப் பண்புக்கே ஒவ்வாத அநாகரிகம். சிறு பிள்ளைக்குச் சொல்லுவது போல இங்கே இதை விளக்குகிற புலவர் மனஉணர்ச்சி உடையவனே மனிதன் என்று தொல்காப்பியம் வகுத்த மேற்சொன்ன இலக்கணத்தைத்தான் வேறு

சொற்களில் எடுத்துச் சொல்லுகிறார். அதாவது, இடம் பொருள், ஏவல் என்பார்களே அது போல,—யாரிடம் எந்தச் சூழ்நிலையில் எப்படி நடக்க வேண்டும் என்பதை ஓர்ந்து உணர்ந்து அதன்படி நடந்து தொடர்புடையவர்களிடம் மகிழ்ச்சியும் மனநிறைவும் உண்டாக்குவதே மனிதநேய உணர்வின் சரியான வெளிப்பாடு என்று தரப்பட்ட இலக்கணத்துக்குச் சரியானதொரு விளக்கம் தருகிறது இந்தப் பாட்டு.

## பொருளின் முதன்மை

மனித குலத்து மற்றவர்களைப் போலவே நமது தமிழர்களும் பொருட் செல்வத்தின் பெருமையை நன்கு அறிந்திருந்தார்கள். பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லவேஇல்லை என்று அடித்துச் சொன்னவர்கள் தமிழர்கள். ‘பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்லது இல்லை பொருள்’ என்று விளக்கமும் சொல்லி வைத்திருக்கிறார்கள். இதனாலேயே ஓர் இளம் பெண்ணை விரும்புகிற ஓர் இளைஞன் தன்னுடைய மணவாழ்வைத் தொடங்கும் முன்பே தங்கள் குடும்ப வாழ்வைச் சீராகத் தொடங்குவதற்குரிய பொருளைத் தேடிக் கொள்ள வேண்டும் என்பதை வாழ்விலக்கணத்தின் ஒரு கூறாகவே தமிழர்கள் அமைத்திருக்கிறார்கள். தமிழ் இலக்கணத்தில் உள்ள ‘வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல்’ என்னும் குறிஞ்சித்திணைத் துறைஇதை அழகாக வலியுறுத்துகிறது.

திருமணத்துக்கு முன்பு அவர்கள் இருவரின் இன்ப வாழ்வுக்கு அடித்தளமான பொருளைத் தேடிக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திய இலக்கணம் திருமணத்திற்குப் பிறகும் (பாலைத் திணையில்) தலைவன் பொருள் தேடிச் செல்ல வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்துகிறது. திருமணத்துக்கு முன்பு ‘பொருள் வேண்டும்’ என்று வாளா கூறிய இலக்கணம் மணவாழ்க்கையில் பொருளைத் தேடிக் கொள்ள வேண்டியதற்கு உரிய காரணத்தையும் விரிவாகவே விளக்குகிறது. இந்த இடத்தில்தான் ‘பொருளைத் தேடிக் கொள்ள வேண்டும்’ என்னும் வாழ்க்கை நெறிக்கு மனித நேயத்தை அடிப்படை ஆக்குகிறது தமிழ்.

அறன் கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும்
பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்
பொருளின் ஆகும்

என்று பொதுப்படக் கூறிய தமிழ் இலக்கியம் 'ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்' (குறுந். 63) என்றும் 'பிறர்க்கென முயலும் பேரருள் நெஞ்சமொடு காமர் பொருள் பிணி போகிய' (நற்றிணை 186) என்று அதற்கு விளக்கம் சொல்லுகிறது. இதற்கு மறுதலையாக,

> தன்நயந்து உறைவோர் தாங்கித் தாம்நயந்து
> இன்னமர் கேளிரொடு ஏமுறக் கெழீஇ
> நகுதல் ஆற்றார் நல்கூர்ந்தோர் (அகம் 157)

என்றும் வரையறுத்து மொழிகிறது தமிழ் இலக்கியம்.

## பொருளின் பயன் ஈதலே

இந்த இடங்களிலெல்லாம் பொருட் செல்வத்தின் இன்றியமையாமை உணர்த்தப்படுகிறது என்பதைவிட, பொருளைத் தேடிக் கொள்ளுவதற்குப் புதுமையானதொரு நோக்கமும் கற்பிக்கப்படுகிறது என்பதே முக்கியம். அந்த நோக்கம் ஒரு பெரிய மனிதநேய அடிப்படையைப் பெற்று, ''செல்வத்துப் பயனே ஈதல், துய்ப்போம் எனினே தப்புந பலவே'' என்னும் உறுதிக் கோட்பாட்டில் முடிகிறது. இங்கே செல்வம் என்று குறிக்கப்படுவது ஒரு குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளுக்கு மேற்பட்ட செல்வம். அந்தச் செல்வம் நண்பர்களைப் பெருக்கிக் கொள்ளவும் உற்றார் உறவினரின் துன்பத்தைத் துடைக்கவும் (அகம் 279) பயன்பட வேண்டும் என்று தமிழர்கள் கருதினார்கள். 'ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்' என்று அடித்துச் சொல்லும் (குறுந். 63 ஆம்) பாடல் கூடப் பொருளைத் தேடியவன் அதைத் துய்ப்பதை விட மற்றவர்களுக்கு அதை ஈந்து மகிழ வேண்டும் என்பதையே முதன்மை அறமாகக் குறிப்பிடுகிறது.

இந்தப் பொருள் வலியுறுத்தலே, பொருள் தேடப் புறப்படும் கணவன், ''பிறர்க்கென முயலும் பேரருள் நெஞ்சமொடு காமர் பொருட்பிணி போகிய நாம்வெங் காதலர்'' (நற். 186) என்று அவனுடைய மனைவியாலேயே மகிழ்ச்சியோடு குறிப்பிடப்படுவது தனித்த கவனத்துக்கு உரியது. உலகம் நிலை பெற்று இருப்பதற்குக் காரணமாகிய சான்றோர்களையே இலக்கியங்கள் பிறர்க்கென முயல்வோர் என்று குறிப்பிடுவது வழக்கம். இங்கே ஒரு குடும்பத்தின் தலைவன் அப்படிக் குறிக்கப்படுகிறான். அதாவது எந்த ஒரு மனிதனும் பொருளைத் தேடலாம். அதைக் கொண்டு பெரிய இலக்குகளை நோக்கித்

தன் வாழ்வை நடத்தலாம் என்று இலக்கியம் குறிப்பிடுகிறது. இதிலே நாம் குறிப்பாக எடுத்துக் கொள்ள வேண்டிய செய்தி என்ன என்றால், பொருளின் இன்றியமையாமையை எடுத்து உணர்த்தும் தமிழ் இலக்கியம்,-பொருள் தேடும் நெறியை வாழ்க்கை நெறிகளில் ஒன்றாக வலியுறுத்தும் தமிழ் இலக்கியம்,- உற்றார் உறவினரையும் பொருட் செல்வம் இல்லாததால் வாடி மெலியும் மற்றவர்களையும் தாங்கி நலம் செய்வதற் காகவே குடும்பத் தலைவன் பொருள் தேடி வரவேண்டும் என்பதைத் தனித்து எடுத்து வலியுறுத்துகிறது. பொருள் தேடப் போன இளம் கணவனின் மனைவி,

> 'அறன் கடைப்படாஅ வாழ்க்கையும், என்றும்
> பிறன்கடைச் செலாஅச் செல்வமும்,-இரண்டும்
> பொருளின் ஆகும் புனையிழை' என்று, நம்
> இருளேர் ஐம்பால் நீவி யோரே,—
> நோய்நாம் உழக்குவம் ஆயினும், தாம், தம்
> செய்வினை முடிக்க தோழி.........

என்று (அகம் 155) சொல்வதிலிருந்து நாம் வேறோர் உண்மை யையும் தெரிந்து கொள்ளுகிறோம். அவளுடைய பிரிவுத் துன்பம் பெரியது என்றாலும், அவன் தேடப் போயிருக்கிற செல்வம் அறன் கடைப்படாஅ வாழ்க்கையை அவர்கள் இரு வருக்கும் வழங்கும் ஆதலால்; பிரிவுத் துன்பத்தையும் தாங்கிக் கொள்ள அவள் ஆயத்தமாக இருக்கிறாள். அதாவது, குடும் பத்துத் தலைமை உறுப்பினர் இரண்டுபேரும் தேடும் பொருளி னால் சிறந்தவைகளை இயற்ற வேண்டும்' என்னும் உயர் நோக்கம் உடையவர்களாகவும் அந்த நோக்கம் தேவையான மற்றவர்களுக்கு உதவி என்னும் மனிதநேய உணர்வு கொண்ட தாக இருக்க வேண்டும் என்பதில் தெளிவும் தீர்க்கமான கடைப்பிடிப்பும் உடையவர்களாக இருக்கிறார்கள். இந்த நோக்குத்தான் பின்னர், "இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" என்னும் மணிநெறியாக வகுத்து உரைக்கப்பட்டுள்ளது.

## இயலாதார்க்கும் மனிதநேயம்

வினைத் திட்பமும் செயற்பாட்டுச் சிறப்பும் உடைய இத் தகையவர்களுக்கு மனிதநேய அடிப்படையில் வாழ்க்கைச் செயல் தடம் வகுத்துத்தரும் தமிழ் இலக்கியம் அவ்வளவு

ஆற்றல் இல்லாதவர்களையும் மறந்துவிடவில்லை; அவர்களுக்கு வாழ்க்கை நெறி சொல்லும் போதும் மனிதநேயத்தை மறந்து விடவில்லை.

நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது: அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே.

தீங்கு தீங்காக இயற்றிக் கொண்டிருக்கும் கொடியவர்களைக் கண்டித்து அவர்களுக்கு வகுத்துக் கொடுக்கப்பட்ட வாழ்க்கை அறம் இது. முதல் இரண்டு அடிகளில், நல்லது செய்தல்தான் மனித மாண்புக்கு ஒத்த நடைமுறை என்னும் செய்தி மறைமுகமாக வலியுறுத்தப்படுகிறது. அதைச் செய்யாமல், தீமையையே செய்து பழகிவிட்டவர்கள் கடைத்தேறவும் வாய்ப்பு இருக்கிறது என்னும் கருத்தும் இந்த அடிகளில் உணர்த்தப்படுகிறது. நல்லவற்றைத் தேர்ந்தெடுத்து உண்டு உடல்நலனைப் பேணிக்கொள்ள வேண்டிய மனிதன் மயக்கம் தந்து உடல்நலத்தைப் பாழாக்கும் மதுவகைகளைக் குடித்துப் பழகிவிடுவது போல, நல்ல செயல்களில் ஈடுபட்டு மனிதநேயனாக வளர வேண்டியவன் தீய செயல்களில் சறுக்கி வீழ்ந்து விடுவதும் ஒரு பழக்கமே. அந்தப் பழக்கத்திலிருந்து அவனை மீட்டுக் கரையேற்ற வேண்டுமானால்,- 'நல்லது செய்யப் பழகு' என்று சொல்லுவதை விட, 'தீயதைக் கொஞ்சம் கொஞ்சமாக விட்டொழி' என்றே சொல்ல வேண்டும். களை பிடுங்கப்பட்ட பயிர் செழித்து வளருவது போல, தீய எண்ணமும் செயலும் அகற்றப்பட்ட அவனுடைய உள்ளத்தில் நல்ல எண்ணத்துக்கும் செயல்களுக்கும் இடம் கிடைக்கிறது. இதைத் தான். 'நல்ல செயல்களில் ஈடுபட முடியாதவர்கள் தீய செயல்களில் ஈடுபடாமலாவது இருங்கள்' என்று இந்தப் பாட்டு அறிவுறுத்துகிறது.

மேலே எடுத்துக் காட்டப்பட்டவைகளுள் பின்னிரண்டு அடிகள் இந்தப் புலவனின் மனிதநேயப் பெருவிழைவையும் தீயவர்களிடம் கூட அதைச் செழிப்பித்து விடவேண்டும் என்று அவன் கொண்ட பேரார்வத்தையும் உணர்த்துகின்றன, 'அது தான் எல்லாரும் உவப்பது' என்று காரணம் காட்டும்போது, ஒரு மனிதனின் செயலோ செயலின்மையோ எதுவானாலும் அது மற்றவர்களுக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்க வேண்டும் என்னும் மனிதநேய உணர்ச்சி வலியுறுத்தப்படுகிறது. மனிதன்

ஒரு சமுதாயப் பிராணி என்பது எல்லாரும் அறிந்த உண்மை போலத் தோன்றினாலும் தீய பண்புகளை வளர்த்துக் கொண்டவர்களின் அறிவிலே இந்த உண்மை புலப்படுவதே இல்லை. அதனால்தான் தங்கள் இன்பத்தைக் கருதும் அதே நேரத்தில் இவர்கள் மற்றவர்களுக்குத் துன்பத்தைத் தந்து விடுகிறார்கள். இதை நன்கு புரிந்து கொண்டிருக்கிற தமிழ் இலக்கியவாணர்கள், அத்தகைய தீயவர்கள் செயல் புரியாமலே இருந்து மனித நேயத்துக்குத் துணை செய்யலாம் என்று நயமாகச் சுட்டிக் காட்டியுள்ளார்கள். உலகில் மனிதநேயம் செழிக்க வேண்டுமானால் நல்லவர்களைச் செயல் புரியத் தூண்ட வேண்டும்; தீயவர்களைச் செயல் புரியாமலிருக்குமாறு அடக்கி வைக்க வேண்டும்.

## மனிதநேயப் பெருங்குரல்

உலக அமைதியையும் அதிலே செழிக்க வேண்டிய ஒருமைப் பாட்டையும் விரும்பி நிற்கிற கவிஞர் ஒருவர்,

உலகம் என்னும் அமைப்புக்குச் செயலாளர் தேவை
ஒன்றல்ல இரண்டல்ல பன்னூறு தேவை
கலகமிடும் உறுப்பினரைக் கண்டிக்க வேண்டும்
கண்மூடி மவுனிகளை எழுப்பிவிட வேண்டும்
நலம் எதுவோ அதைமட்டும் நிலைநாட்ட வேண்டும்
நலந்தாரா செயற்கெல்லாம் தடைவிதிக்க வேண்டும்

என்று கண்டிப்பான ஆணைகள் (இளந்திரையன் கவிதைகள்) பிறப்பிக்கிறார். இந்தக் காலத்தின் இந்தக் கருத்து மேலே குறித்த புறநானூற்று நரிவெரூஉத்தலையாரின் கருத்தோட்டத்தை அடியொற்றியே பிறந்திருக்கிறது. அதாவது, ஒருவன் செயல்புரிய வேண்டும் என்றும் ஒருவன் செயல்புரியவே கூடாது என்றும் வற்புறுத்திய தமிழர்கள் அந்த இரண்டினாலும் மனித நேயத்துக்கு வளம் கிடைக்கும் என்பதாலேயே அப்படிச் செய்திருக்கிறார்கள். ''செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க செய்யாமையானும் கெடும்'' என்னும் வள்ளுவம் இந்த இரட்டை அறத்தையே எடுத்து வலியுறுத்தியுள்ளது.

மேலே குறித்த புறநானூற்றுப் (நரிவெரூஉத் தலையார்) பாடல் வேறொரு பெரிய மனிதநேயக் குரலையும் எழுப்புகிறது. அதாவது, தீயவழியிலே திரும்பி விட்டவர்கள் கைகழுவப்பட வேண்டியவர்கள் அல்லர், கைகொடுத்து நல்ல வழியிலே

நடத்தப்பட வேண்டியவர்களே என்னும் மனிதநேய நன்னோக்கையும் இந்தப் பாட்டு வழங்குகிறது. 'நல்லது செய்தல் ஒம்புமின், அதுதான் எல்லாரும் உவப்பது' என்று வலியுறுத்திய இந்தப் பாடல் அத்துடன் நின்றுவிடாமல் அதற்கு மேம்பட்ட நல்லடி ஒன்றையும் எடுத்து வைக்கிறது. தீ நெறிப்பட்ட அவர்களும் நன்னெறிக்குத் திரும்ப வேண்டும். அதன் மூலம் மனித நேயர்களின் தொகை வளர வேண்டும் என்றே இந்தப் பாட்டின் ஆசிரியர் விரும்புகின்றார். அதனாலேதான், அல்லது செய்தலை ஓம்புதல், அதாவது தீயவைகளைச் செய்யாமல் இருந்து பழகுதல் ஒன்றே அவர்கள் நல்லவர்களாக மாறுவதற்கு உரிய வழி (நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே) என்றும் மொழிகிறார். கால் இடறி விழுந்து விட்டவர்களையும் கடைத்தேற்றும் இந்த அக்கறை மனிதநேயச் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க ஒன்று. நல்லவர்களாக இருப்பவர்களுக்குத் தீய நடைநெறிகளை உணர்த்தி அவர்களை அவர்களின் தீய நடையிலிருந்து மீட்டெடுப்பதன் மூலம் உலகில் உள்ள மனிதநேயர்களின் தொகை அதிகமாகிறது; மனிதநேயத்துக்குக் குழிபறிக்கும் மயக்க நெஞ்சினர்களின் தொகையும் குறைகிறது.

## மாசற்ற மனிதநேயம்

பிறருக்கு உதவுதல் என்பது ஒவ்வொரு மனிதனிடமும் ஏதாவது ஒரு அளவில் இருக்கக் கூடிய இயல்புதான். ஆனாலும் இந்தப் பண்புக்கு நோக்கம் கற்பிக்கும் போது தமிழர்கள் மிக அரியதோர் தெளிவைக் கடைப்பிடித்திருக்கிறார்கள். சங்க காலத்திலேயே 'இம்மையில் ஒருவன் செய்த நன்மை மறுமையில் அவனுக்குப் பெரிய இன்பமாக வந்து விளையும்' என்னும் நோக்கம் தலையெடுக்கத் தொடங்கிவிட்டது. இதை மறுத்து, மனிதாபிமான உணர்வு மட்டுமே உதவிக்கும் ஈகைக்கும் அடிப்படையாக அமைய வேண்டும் என்னும் வாழ்க்கை நெறியை அழுத்தமாக வலியுறுத்தியுள்ளது சங்க இலக்கியம்.

> எத்துணை யாயினும் ஈத்தல் நன்றுஎன,-
> மறுமை நோக்கின்றோ அன்றே,-
> பிறர் வறுமை நோக்கின்று அவன் கைவண்மையே

என்று கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய வையாவிக்கோ பெரும்பேகனை விதந்து பேசுகிறது புறநானூற்று 141 ஆம் பாடல். நாம் ஒருவருக்கு ஓர் உதவி செய்தால் அதனால்

நமக்கு என்ன பயன் கிடைக்கும் என்று பார்ப்பது ஒரு வகை யான வணிக நோக்கு. மனித நேயத்துக்கும் அத்தகைய பார்வைக்கும் எந்த ஒட்டுறவும் கிடையாது. சொல்லப் போனால்,-பயன் கருதிய அந்தப் பார்வை மனித நேயத்தையே வற்றடித்துவிடக் கூடியது. தலைவர்கள் என்பவர்கள் மற்றவர் களுக்கு எடுத்துக்காட்டாக வாழ வேண்டும் என்று மக்கள் கருதிய காலம் சங்ககாலம். மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் என்னும் தொடரில் மன்னன் மக்களுக்கு முன்மாதிரி யாக விளங்க வேண்டும் என்னும் குறிப்பும் தொனிக்கிறது. பொறுப்புணர்ந்த அந்தக் காரியத்தைத்தான் இங்கே பேகன் செய்கிறான் என்று எடுத்துச் சொல்லுகிறது இந்தப் பாட்டு.

வள்ளல்களின் வாழ்க்கை வாரிக் கொடுப்பதையே நடை முறையாகக் கொண்ட வாழ்க்கை. 'எத்துணை யாயினும் ஈத்தல் நன்று' என்பதே தங்கள் நடைக்கு வள்ளல்கள் வகுத்துக் கொண்ட இலக்கணம். அந்த வாழ்க்கை நடையிலிருந்து மற்ற வர்களின் ஒருவாழ்க்கை நெறியை வடித்து எடுக்கும் அறிஞர், 'பேகனின் கைவண்மை மற்றவர்களின் வறுமையைக் களை வதையே நோக்கமாகக் கொண்டது' என்று வரையறுக்கிறார். மறுமை நோக்கிய ஈகை முற்ற முடிய தன்னலத்தை அடிப் படையாகக் கொண்டது. பிறரின் வறுமை போக்க வேண்டும் என்பதை நோக்காகக் கொண்ட ஈகை முழுக்க முழுக்கப் பிறர் நலத்தை அடிப்படையாகக் கொண்டது. இதுதான் மாசற்ற மனிதநேயம். இதைப் பல இடங்களில் வலியுறுத்துகிறது சங்க இலக்கியம். புறம் 134 ஆம் பாடல் இதை மீண்டும் வலியுறுத் துவதோடு இந்த வாழ்க்கை மணிநெறிக்கு மணியான மற்றொரு விளக்கமும் தருகிறது:

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்;
பிறரும் சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்று அவன்கை வண்மையே.

இந்தப் பாடல் சங்ககாலத் தமிழரின் வாழ்வில் ஊடாடியிருந்த மனிதநேய உணர்வுக்கு ஆதாரமான மற்றொரு கோட்பாட்டை யும் புலப்படுத்துகிறது. ஆய் மற்றவர்களுக்கு வாரி வழங்கு கிறான்; வாரி வழங்கி அவர்களின் துயரத்தை மாற்றுகிறான். அப்படி ஏன் செய்கிறான் என்கிற கேள்வியை எழுப்பிக் கொண்டு, மறுதலை முறையிலும் உடன்பாட்டு முறையிலுமாக

இரண்டு விடைகளைத் தருகிறார் புலவர். தனக்கு ஒரு பயனை எதிர்பார்த்து அவன் ஈகை கடைப்பிடிக்கவில்லை; ஏனென்றால் அப்படிச் செய்வது அறத்தையே விலை கூறி விற்கும் வணிக நோக்கு என்பதை அவன் அறிந்திருக்கிறான். பயன் நோக்கும் பான்மையை இப்படி மறுத்து வெறுத்து ஒதுக்கிய இந்த மன்னவன் அறிஞர் பெருமக்களின் நடவடிக்கை என்பதால் மற்றவர்களுக்கு ஈவதை ஒரு வாழ்க்கை நெறியாகக் கடைப்பிடிக்கிறான். 'அறிவினால் ஆகுவது உண்டோ பிறதின் நோய் தந்நோய் போல் போற்றாக் கடை' என்றும் 'பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகல்' என்றும்,- அறிவுக்கும் பண்புக்கும் இலக்கணம் வகுப்பது போலக் காட்டி அறிவார்ந்த சான்றோர்களுக்கே இவைகளை இலக்கணங்களாக்குகிறது சங்க இலக்கியம். மனித வாழ்க்கையைப் பொறுத்தவரை சான்றோர்கள் என்பவர்கள் வீட்டுக்கு உறுதித் தூண்களும் காட்டுக்கு உயர் மரங்களும் போன்றவர்கள். எந்தச் சமூகத்தையும் எட்டிப் பார்த்து அதன் உயர்வைக் கணிக்க முயல்கிறவர்கள் அதிலே உள்ள சான்றோர்களையே மதிப்பிட்டுப் பார்ப்பார்கள். அதன் பிறகு அந்தச் சான்றோர்கள் எந்த அளவு மதிக்கப்படுகிறார்கள் என்பதைப் பார்ப்பார்கள். இந்தப் பாடலிலே இந்த உண்மைதான்; மன்னவன் சான்றோர் கடைப்பிடிக்கும் மனிதநேய மணிநெறியை ஏந்திப் பிடிக்கிறான் என்னும் உண்மைதான், எடுத்து வலியுறுத்தப்படுகிறது. ஆகவே, ஈகை என்பது பிறர் துயரம் துடைக்கும் நோக்கைக் கொண்ட அருட்செயலாக இருக்க வேண்டும் என்னும் நெறியை வலியுறுத்துவதோடு அந்த நெறியைக் கடைப்பிடிக்கும் சான்றோரையே, நாட்டுத் தலைவன் முதல் குடிமக்கள் வரை எல்லோரும் பின்பற்ற வேண்டும் என்னும் மணிநெறியையும் அழகாக எடுத்து ஏந்துகிறது.

## இல்லாத போதும் ஈகை

ஒருவனுடைய பெருமை அல்லது தகுதிப்பாடு என்பது இக்கட்டான சூழ்நிலைகளில் அவன் எப்படி நடந்து கொள்ளுகிறான் என்பதைப் பொறுத்தே மதிப்பிடப்படுகிறது. அந்த மதிப்பீடுதான் வாழ்க்கை மணிநெறிகளில் ஒன்றாக அமைந்து வழிவழித் தலைமுறையினருக்கும் ஒரு சீரிய வழிகாட்டாக அமைகிறது.

ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும் அவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்-ஏற்றவர்க்கு

நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லை எனமாட்டார் இசைந்து

என்று இந்தக் கருத்தை எடுத்துரைக்கிறது பிற்கால நீதிப் பாட்டு. ''கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே, சங்கு சுட்டாலும் வெண்மை தரும்'' என்றும் அப்பாட்டு அழுத்திக் கூறுகிறது. இந்தக் கருத்தைப் பின்வருமாறு சுருக்கமாக, ஆனாலும் மிகமிக வன்மையாக எடுத்துரைக்கிறதுபுறநானூறு

அலத்தற் காலை யாயினும்,
புரத்தல் வல்லன், வாழ்க அவன் தாளே

என்பது அதியமான் நெடுமானஞ்சியை வாழ்த்திப் பாடும் புறம் 103 ஆம் பாட்டு. இதிலே கட்டப்படும் வாழ்க்கை மணிநெறி, அன்று தொடங்கி இன்றுவரை தமிழ் இலக்கியம் முழுவதும் கிளைப்பரப்பி உள்ளது. இதற்குக் காரணம் இதிலே பொதிந்துள்ள மனிதநேய உணர்வுதான் என்பது வெளிப்படை. ஒருவன் நம்மிடம் உதவிகோரி வரும்போது நம்மிடம் பொருள் இருக்கிறதா இல்லையா என்பதை அவன் நினைத்துப் பார்ப்பதில்லை. தன்னுடைய வாட்டத்தை மட்டுமே அவன் நினைக்கிறான். அதைப் போக்குவதற்கு யாராவது உதவ வேண்டும் என்று எதிர்பார்க்கிறான். அப்படி ஒருவன் நம்மிடம் வரும்போது அவனுடைய நடவடிக்கையை நாமும் அவனுடைய நோக்கிலேயே பார்த்தால்தான் அவனுக்கு உதவ முடியும். அந்தப் பார்வை இல்லாதவர்கள், மிக எளிதாகவே, 'இல்லையே' என்று கையை விரித்து விடுவார்கள். அப்படிச் செய்வதன் மூலம், உதவி கோரி வந்த அந்த உடைந்த மனிதனின் நெஞ்சப் பதைப்பை மேலும் அதிகமாக்கி விடுவார்கள். இருந்த துன்பத்தைத் துடைக்காததோடு அது மிகுதிப்படவும் தூண்டுதலாக இருப்பவர்கள் மனிதநேய உணர்வே இல்லாத மரக்கட்டைகள். இப்படிப்பட்ட மரக்கட்டைகள் மனித சமுதாயத்தில் பெருகிவிடக் கூடாது என்று கருதிய சங்கத் தமிழ்ச் சான்றோர்கள்,- ''அலத்தற் காலை ஆயினும் புரத்தல் வல்லன்'' என்று ஒருவனைப் பாராட்டுவதன் மூலம்,-இப்படிச் செய்ய வேண்டும்' என்னும் மனித நேய மணிநெறி ஒன்றையே மனிதக் குலத்துக்கு வகுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

## பகிர்ந்து கொள்ளும் இன்பம்

இதே அதியமானைப் பாராட்டும் மற்றொரு (புறம். 95) பாடலில் கேட்போர் இதயத்தை நெகிழ்விக்கும் மணிநெறி ஒன்று வகுத்துத் தரப்படுகிறது.

உண்டாயின் பதம்கொடுத்து
இல்லாயின் உடன்உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்

என்று அதியமானைச் சிறப்பிக்கிறது இந்தப் பாட்டு. ஒன்றுமே இல்லாத வறிய நிலையில் நம்மிடம் ஒருவன் உதவி கோரி வரும் போது நாம் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும் என்பதை (மேற்பாட்டில்) விளக்கித் தந்த அவ்வையார்தான் இந்தப் பாடலில் பொருள் உள்ள போதும் பொருள் இல்லாத போதும் மனிதநேய நல்லறத்தைக் கடைப்பிடிப்பது எப்படி என்பதை விளக்குகிறார். அதாவது, நம்முடைய வளமையை மட்டு மல்லாமல் நம்முடைய வறுமையையும் உணர்வு பூர்வமாக மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுவதுதான் சிறந்த வாழ்க்கை நெறி என்கிறது இந்தப் பாட்டு. பிற்காலப் பாடல் ஒன்று,

ஒப்புடன் முகமலர்ந்தே உபசரித்து உண்மைபேசி
உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே அமுதமாகும்

என்று இசைக்கிறது. இந்தப் பாடல்களின் கருத்து என்ன வென்றால்,- வாழ்க்கைக்குப் பொருளும் அவைகளின் அடிப் படையாய் அமைந்த சுவைப்பும் மிக முக்கியமானவைதான் என்றாலும் மனிதருக்கு மனிதர் இருக்க வேண்டிய மனிதநேய ஒட்டுறவு உரிமையே பெரிய வாழ்க்கையையும் அதன் பெரிய மகிழ்ச்சியையும் தருகிறது. 'பகுத்து உண்டால் பசி தீரும்' என்னும் எளிய பழமொழியும் இதே கருத்தைத்தான் சொல்லு கிறது. மேலே குறித்த புறப்பாட்டில் வருகிற 'இல்லாயின் உடன் உ.ண்ணும்' என்னும் தொடரும் இதைத்தான் மிக நளின மாக உணர்த்துகிறது.

இன்பத்தைப் பகிர்ந்து கொள்ளுவதிலே மட்டுமல்ல, துன்பத்தை (வறுமையை)ப் பகிர்ந்து கொள்ளுவதிலும் ஓர் இன்பம் கிடைக்கிறது. தன்னிடம் உள்ளதைத் தனக்கென்று ஒதுக்கிக் கொள்ளாமல் அந்தப் பற்றாக்குறையை அவனும் பகிர்ந்து கொண்டானே என்னும் எண்ணம் வறுமையுற்றோரின் இதயத்தையே நெகிழ்வித்து அந்த ஒப்புரவாளனைத் தங்களுக்கு உற்ற நேயனாக ஏற்றுக்கொள்ளச் செய்கிறது. இது அந்த நேரத்து உணர்வோட்டம் மட்டுமல்ல; இப்படி ஒரு நல்லவன் இருக்கிறான் என்கிற பெரிய நம்பிக்கையையும் அவர்களுக்குத் தருகிறது. இல்லாமையால் துயருறுகிறவர்களுக்கு, அவர் களுடைய இல்லாமையை விட, இத்தகையதொரு நம்பிக்கை

இல்லாமையே பெரிய துயரம். அந்தத் துயரத்தை எப்படி யாவது துடைத்திட வேண்டும் என்னும் மனிதநேய நோக்கிலே எழுந்ததுதான் இங்கே குறிக்கப்பட்ட 'உடன் உண்ணும் நடை நெறி' எனவே, மனித வாழ்வுக்கு உகந்ததாகச் சங்க இலக்கி யம் எடுத்துரைக்கும் இந்த நோக்கும் ஒரு மனிதநேய மணி நெறியாகவே மிளிர்கிறது.

## சாவாமைக்கு வழி

உலக வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கின்ற எந்த மனிதக் கூட்டமும் மரணத்துக்குப் பின்னும் மனிதன் இங்கே வாழ்ந் திருக்க வேண்டும் என்றும் சிந்திக்கிறது. அதன் விளைவாகவே, 'உடல் அழியக் கூடியது, ஆன்மா அழிவில்லாதது; மனிதனின் உயிர் ஒரு பிறவியோடு முடிவதில்லை, அது பல பிறவிகள் எடுத்துத் தொடர்கிறது' என்பன போன்ற விருப்பச் சிந்தனை கள் வளர்ந்துள்ளன. சங்ககாலத் தமிழர்களும் இது பற்றிச் சிந்தித்து மரணத்துக்குப் பின்னும் மனிதன் வாழ்ந்திருப்பதற்கு ஏற்ற வழிமுறை ஒன்றை வகுத்துத் தந்திருக்கிறார்கள். அது தான்,-

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே

என்னும் மணிச்சுருக்க வாசகம். புகழைப் பெற்றுக் கொள்ளு கிறவர்கள் அழிவில்லாத வாழ்வைப் பெறுகிறார்கள் என்பது இதன் பொருள். இந்த மணிநெறியும் மனிதநேய அடிப்படை யில் வலியுறுத்தப் பட்டிருக்கிறது என்பது கவனிக்கத் தக்கது. நிலையில்லாத உலகத்தில் நிலையாக இருக்க விரும்புகிறவர்கள் தாங்கள் பெற்ற புகழினால் இறவாமை பெறுகிறார்கள் என்று எடுத்துச் சொல்லும் மேலே குறித்த (புறம் 165 ஆம்) பாடல் புகழைத் தேடிக் கொள்ளுவதற்கு உரிய வழியையும் வகுத்துத் தருகிறது.

துன்னருஞ் சிறப்பின் உயர்ந்த செல்வர்,-
இன்மையின் இரப்போர்க்கு ஈஇயாமையின்
தொன்மை மாக்களின் தொடர்பு அறியலரே

என்று விரிகிறது இந்தப் பாட்டு. அதாவது, மன்னா உலகத்து மன்னுதல் குறித்தவர்கள் இல்லாத எளியோர்களுக்கு அள்ளிக் கொடுத்துப் புகழ் தேடிக் கொண்டார்கள், அந்த நல்ல மரபை இடையறுத்ததன் மூலம் இப்போது வாழும் செல்வர்கள்

மரணத்துக்குப் பிறகும் வாழ்ந்திருக்கும் நல்வாய்ப்பை இழந்து போவார்கள் என்பது இதன் பொருள். மனிதன் சாவாமை பெறுவதற்கு வழி ஒன்று இருக்கிறது, ஈகையினால் அந்த வழியை அடைய வேண்டும் என்பது இந்தப் புறப்பாடலின் அடிப்படையான கருத்து.

மனிதன் புகழ் பெறுவதற்கு எத்தனையோ வழிகள் உண்டு. கல்வியால் சிறந்து புகழ் பெறலாம்; கடுமையான வீரம் காட்டிப் போர்க்களத்தில் வெற்றி குவிப்பதன் மூலம் அதைப் பெறலாம்; நல்ல தொழிலாளியாகவும் நல்ல வணிகனாகவும் விளங்கிக் கூட மனிதன் புகழைப் பெறலாம். இப்படியே மனிதன் புகழ் பெறு வதற்கு எத்தனை எத்தனையோ வழிகள். தமிழ் இலக்கியமே பாடாண்திணை என்னும் புறத்திணை ஒன்றை வகுத்து மனிதர் களின் வகைவகையான வெற்றிகளைப் பாடிப் புகழ்ந்திருக் கிறது. ஆனாலும், அழியாப் புகழ் என்று வரும்போது, அதைத் தேடிக் கொள்ளும் வழியாக ஈகையையே தமிழர்கள் முதன் மைப்படுத்தியிருக்கிறார்கள்.

ஒருவனை வென்று வீழ்த்துவது வெற்றிதான்; புகழுக்கு உரியதுதான். மற்றவனைவிடச் சிறப்பாகக் கல்வி கற்பது வெற்றிதான்; புகழுக்கு உரியதும்தான். சீரிய ஒழுக்கங்களைச் சிந்தாமல் சிதறாமல் கடைப்பிடிப்பது வெற்றிதான்; புகழுக்கு உரியதும்தான். இவைகளைப் போலவே வேறு சில செயல்கள் மூலமாகவும் ஒரு மனிதன் புகழைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அந்தப் புகழ்களைப் பெற்றவர்களும் மரணத் துக்குப் பிறகு மக்களால் நினைக்கப்படுகிறார்கள். ஆனாலும் தமிழர்கள் ஈகையினால் கிடைக்கும் புகழையும் அந்தப் புகழி னால் கிடைக்கும் நிலைபேற்றையுமே தலைமையானவையாகக் கருதியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன என்று சிந்திக்கும் போது, தமிழர்களின் பொது இயல்புகளுள் ஒன்றாகிய மனிதநேய உணர்வே நம் இதயத்தில் முன்வந்து நிற்கிறது.

### தலையாய அறம்

ஈகை என்பது, இல்லாதவர்களுக்கு ஒன்றைக் கொடுத்து இல்லையே என்கிற அவர்களின் ஏக்கத்தை மாற்றுவது. 'வறி யார்க்கு ஒன்று ஈவதே ஈகை' என்னும் குறள் தொடரும் இதைத்தான் சொல்லுகிறது. அங்கொருவரும் இங்கொருவரு மாக உள்ள சில கொடியவர்கள் மற்றவர்களின் பங்கைத் திருடி அவர்களை வாடச் செய்கிறார்கள். என்றாலும், மற்றுள்ள

பெரும்பாலான மனிதர்கள் 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடுகிறவர்'களாகவும் (திரு அருட்பா) எல்லோருக்கும் இன்பம் கிடைக்க வேண்டும் என்று எண்ணுகிறவர்களாகவுமே இருக்கிறார்கள். அந்தப் பெரும்பான்மைக் கோட்பாட்டில் இருந்துதான், பிறர்க்கு ஈந்து அவர்களின் வாட்டத்தைத் தீர்ப்பது என்னும் நடைமுறையே பிறந்திருக்கிறது. அந்த நடைமுறை, எல்லோராலும் ஏதாவது ஓர் அளவில் இயற்றக் கூடியதாகவும் அதன் விளைவு நல்லார் தீயார் என்னும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதாலும் மனிதநேய மணிநெறியினால் கிடைக்கக் கூடிய ஈகைப்புகழையே அழியாப் புகழாக்கி அதற்குத் தலைமை கொடுத்திருக்கிறார்கள், தமிழர்கள். பின்வந்த குறளும், 'உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கு ஒன்று ஈவார் மேல் நிற்கும் புகழ்' என்று இந்தக் கோட்பாட்டையே வழிமொழிகிறது.

மனிதனுக்கு ஏற்படக் கூடிய துன்பங்கள் பல. அவைகளில் பசித் துன்பமே பெரிய துன்பம். ஆதலால் அதை நீக்க மேற்கொள்ளப்படும் நடைமுறையே மனிதன் மேற்கொள்ளக் கூடிய அறங்களில் தலைமையானதாக உள்ளது. பசியின் விளைவான அழிவுகளையும் சரிவுகளையும் தனியே விளக்க வேண்டியது இல்லையென்றாலும், அதைக் குறித்து நம்முடைய இலக்கியத்தார் பதிந்து வைத்துள்ள ஒரு சில குறிப்புகளையாவது பார்க்க வேண்டும்.

குடிப்பிறப்பு அழிக்கும் விருப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாண்அணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி......

என்பது மணிமேகலை (11:1236-1239). சங்க காலத்திற்கும் அதற்குப் பிறகும் கிடைத்த வாழ்க்கை அனுபவத்தை இந்த வரிகளில் வன்மையாக வரைந்து வைத்திருக்கிறது மணிமேகலை. இந்த உணர்வோட்டம் தமிழ் நெஞ்சின் தடைபடா ஓட்டமாக இருந்திருக்கிறது என்பதைப் பிற்கால அவ்வையாரின் (நல்வழி) பாடல் ஒன்று உறுதி செய்கிறது.

மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்

கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்து போம்.

இந்த உணர்வோட்டந்தான், இக்காலக் கவிஞர் பலரைக் கூடப் பசித் துன்பத்தைப் பாடிப் பாடி வாடச் செய்கிறது. ''தேவையினால் ஒரு மனிதன் திருடனானால் சிறைக்குள் நான் இருப்பதுபோல் உணருகின்றேன்'' (அன்னை நீ ஆடவேண்டும். என்றும், ''எளிமையினால் ஒரு தமிழன் கல்வி இல்லை என்றால் இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்'' என்றும், ''ஏழ்மையில் மக்களைத் தள்ளுவதோ, அதை இன்பமெனச் சிலர் கொள்ளுவதோ?'' (புரட்சிக்கவிஞர்) என்றும் பிறவாறும் இவர்கள் தங்கள் மனிதநேய உணர்வைப் புலப்படுத்துகிறார்கள் இந்த மனிதநேய உணர்வு தமிழினத்தின் அடிப்படை உணர் வோட்டமாக இருப்பதாலேதான் அவர்கள் ''மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே'' என்றும், ''உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கு ஒன்று ஈவார் மேல் நிற்கும் புகழ்'' என்றும் வரையறுத்துச் சொல்லி வைத்திருக்கிறார்கள். மனிதநேய அடிப்படையில் மலர்ந்த இதுவே வாழ்க்கை மணிநெறி என்று சொல்லி முடிவு கூறுவது போல, ''ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர் மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை'' என்று திட்டவட்ட மாகத் தெரிவிக்கிறது மணிமேகலை.

## மனிதநேயச் செம்மாப்பு

ஒரு காலத்தில் ஒரு சமுதாயம் படைத்து அளிக்கின்ற மணி நெறியின் நோக்கம் மற்றொரு காலத்தில் மாறிப் போய்விடக் கூடும். ஆனாலும் அந்த மணிநெறியின் வேறு பயன்பாடுகளைக் கருதி மக்கள் தொடர்ந்து அதனை ஏற்றுக் கடைப்பிடித்து வருவார்கள். இத்தகைய மணிநெறிகளுள் ஒன்று, பொருள் உள்ளவர்களும் சொந்தமாகப் பொருள் தேடிக் கொள்ளுவதைப் பற்றியது. வழக்கமாக ஒரு தலைமுறை செல்வச் செழிப்போடு வாழ்ந்தால் அடுத்த தலைமுறை செல்வச் செழிப்போடு கரைத்துத் தன்னை வறியநிலைக்கு ஆளாக்கி விடுகிறது. 'குந்தித் தின்றால் குன்றும் மாளும்' என்றும் 'தகப்பன் தேடக் கர்த்தன், பிள்ளை அழிக்கக் கர்த்தன்' என்றும் இந்த இயல் பான நடைமுறையை எடுத்துரைக்கிறது தமிழ்ப் பழமொழி குடியும் குடித்தனமுமாக வாழ்ந்து வரும் மக்கள் கூட்டத்தில்

இத்தகைய சரிவு ஏற்பட்டிடக் கூடாது என்று சங்ககாலத்துத் தமிழ்மக்கள் கருதினார்கள். அதனாலேயே, செல்வத்தின் சிறப்பைப் பலபட வலியுறுத்தியதோடு, ''உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்'' என்றும் (குறுந் 283) அடித்துச் சொன் னார்கள். இந்தக் கட்டளை ஒரு மணிநெறியாக ஏற்றுப் பின் பற்றப்பட வேண்டும் என்று கருதிய அவர்கள், முன்னோர் தேடிய பொருளை அழிக்காமல் புதிய பொருளைத் தேடி, அதைக் கொண்டே ஒவ்வொருவரும் வாழ்வு நடத்த வேண்டும் என்பதை அடிக்கோடிட்டு வலியுறுத்தும் முகமாக, ''இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு'' என்றும் அதே பாடலில் அரண் செய்துள்ளார்கள்.

ஒரு குடும்பத் தலைவன் பொருள் தேடுவதற்காகப் பிரிய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் இந்தக் குறுந் தொகைப் பாடல், 'முன்னோரால் சேர்த்து வைக்கப்பட்ட பொருளைக் கொண்டு ஒருவன் குடும்பம் நடத்துவது முறை யல்ல' என்பதை வலியுறுத்துவதோடு அதிலே ஒரு மனிதநேயச் செம்மாப்பையும் இணைத்து வைத்திருக்கிறது. இதைக் குறித்துப் பேசுகின்ற இறையனார் களவியல் (35) உரை பின் வருமாறு இந்தக் கோட்பாட்டுக்கு விளக்கம் தருகிறது.

''பொருட்பிணி என்பது பொருளிலனாய்ப் பிரியும் என்பது அன்று; தன் முதுகுரவராற் படைக்கப்பட்ட பல்வேறு வகைப் பட்ட பொருளெலாம் கிடந்ததுமன்; அதுகொடு துய்ப்பது ஆண்மைத் தன்மை அன்று எனத் தனது தாளாற்றலால் படைத்த பொருள் கொண்டு வழங்கி வாழ்வதற்குப் பிரியும் என்பது......''

இந்த விளக்கத்தில் வருகிற 'வழங்கி வாழ்தல்' என்னும் தொடர் மிக முக்கியமானது. அதிலேதான் தமிழர்களின் வாழ்க்கை மணிநெறிகள் மனிதநேய அடிப்படையில் வகுத்துத் தரப்பட்டன என்னும் உண்மை பொதிந்து வைக்கப்பட்டுள்ளது. ''இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு'' என்னும் குறுந் தொகை அடி அந்நாள் தமிழர் வாழ்வின் முக்கியமான அடிப் படை நோக்கு ஒன்றை நோக்கி நம்மை இட்டுச் செல்லுகிறது.

தம்நயந்து உறைவோர்த் தாங்கி, தாம்நயந்து
இன்னமர்க் கேளிரொடு ஏமுறக் கெழீஇ
நகுதல் ஆற்றார் நல்கூர்ந்தோர்,

என்கிறது அகம் 151 ஆம் பாட்டு. ஒருவன் வறுமை அடைவது மிகப் பெரிய துன்பம் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அந்தத் துன்பத்தைப் பற்றி நினைப்பவர்கள் தங்கள் தேவைக்குப் பொருள் கிடைக்கவில்லையே என்பதைத்தான் முதன்மைப் படுத்துவார்கள். ஆனால் சங்ககாலத் தமிழரின் இலக்கியம் வறுமையுடையவர்கள் அடைய முடியாத ஒரு பெரிய மனித நேய நிகழ்ச்சியையே வரைந்து காட்டுகிறது. உற்றார் உறவின ரோடும் உவப்பான நண்பர்களோடும் கூடியிருந்து தம் இன்பத்தைத் தானே தேடிய பொருளைக் கொண்டு அடைவதே பெருமை என்றும் சங்க இலக்கியம் வலியுறுத்திப் பேசுகிறது. மற்றவர்களின் துயர் துடைப்பதற்கும் அவர்களுக்கு இன்பம் குவிப்பதற்காகவுமே ஒருவன் புதிய பொருளைத் தேடித் திரட்ட வேண்டும் என்பது சற்று வேடிக்கையாகத் தோன்றினாலும் அதன் அடிநாதமாக எழுந்து ஒலிக்கும் மனிதநேய உணர்வை நாம் மறந்துவிட முடியாது.

### வாழையடி வாழை

'உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்' (முன்னோர் தேடிவைத்த செல்வத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்து வோர் சிறந்தவர்களாக மதிக்கப்பட மாட்டார்கள்) என்னும் இந்த வாழ்க்கை நெறி இன்றுவரை தமிழர்களால் மதித்துப் பின்பற்றப்பட்டு வருகிறது.தேடிய புதிய பொருளால் இக்காலத் தார் சங்க இலக்கியம் சொன்ன 'ஈத்துவக்கும் இன்பத்தை' அடைகிறார்களோ இல்லையோ, –முன்னோர் தேடி வைத்த பொருளோடு மனநிறைவு அடைந்துவிடக் கூடாது என்பதில் இக்காலத்தாரும் மிக உறுதியாகவே இருக்கிறார்கள். இக் காலத்துத் தலைமை இலக்கியமான புரட்சிக் கவிஞரின் இலக்கிய மும் இந்த மணிநெறியை எடுத்து வலியுறுத்துகிறது. புரட்சிக் கவிஞரின் குடும்பவிளக்கில் மேற்சொன்ன குறுந்தொகை 286 ஆம் பாடலின் கருத்து அப்படியே வழிமொழியப்படு கிறது.

> பெற்றவர் தேடிவைத்த பெருஞ்செல்வம் உண்டென்
> றாலும்
> மற்றும்தான் தேடவேண்டும்,- மாந்தன்சீர் அதுவே
> யன்றோ?

குறுந்தொகையில் புதிதாகப் பொருள் தேடுவது மற்றவர் களுக்குக் கொடுத்து அவர்களுடன் கூடி மகிழ்வதற்கே என்று

சொல்லப்பட்ட செய்தி குடும்பவிளக்கில் நேரிடையாகச் சொல்லப்படாவிட்டாலும், அந்தப் பழைய மனிதநேய வலியுறுத்தல் சற்றே குறைந்திருப்பதாகத் தோன்றினாலும், பொருளீட்டிப் புதிய செல்வம் சேர்த்தல்தான் மனிதனுக்குப் பெருமை என்னும் கருத்து இங்கே வெளிப்படையாகவும் தெளிவாகவும் வலியுறுத்தப்படுகிறது. எப்படியானாலும் சங்ககாலத் தமிழர்கள் வகுத்தளித்த மனிதநேய மணிநெறி அன்று ஈத்துவக்கும் இன்பத்தின் அடிப்படையிலும் இன்றைக்கு மனிதனின் ஏற்றத்துக்கு ஒரு காரணம் என்ற அடிப்படையிலும் வலியுறுத்தப்பட்டு வருவது கவனிக்கத் தக்கது. சங்ககாலத் தமிழர்கள் வகுத்தளித்த மணிநெறிகள் காலப் போக்கில் கரைந்து ஒழிந்து போகாத வளமும் வலிவும் பெற்றுத் திகழ்கின்றன என்பதும் ஓர்ந்து உணரத்தக்கது.

## நற்குண நன்னடைகளின் பட்டியல்

பாட்டோடு பாட்டாகப் பள்ளிக் குழந்தைகளுக்கு நல்ல ஒழுக்க நெறிகளை எடுத்து வழங்குவது போல வாய்ப்பு நேரும் போதெல்லாம் நமது பழைய இலக்கிய வாணர்கள் வாழ்க்கை மணி நெறிகளை எடுத்து விளக்கியுள்ளார்கள். ஒரு தலைவனால் அவனுடைய தலைவிக்கு ஏற்பட்ட பிரிவுத் துன்பத்தை எடுத்துச் சொல்லும் போது இத்தகைய மணிநெறிகளுக்கு ஒரு நீண்ட பட்டியலே தருகிறது கலித்தொகை. அந்தப் பட்டியலில் வரிசைப்படுத்தப்படும் நற்குண, நன்னடைகளைப் பார்க்கும் போது, அக்காலத் தமிழர்கள் தங்கள் மணிநெறிகளாகிய வயிரங்களை மனிதநேயம் என்னும் ஆணிப் பொன்னிலேயே பதித்து வழங்கினார்கள் என்பது தெற்றெனப் புலப்படுகிறது.

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்;
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை;
பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்;
அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை;
அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்;
செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை;
நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை;

முறை எனப்படுவது கண்ணோடாது உயிர்வெளவல்:
பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்.

மனிதர்கள் நங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்பது வெவ்வேறு நடைநெறிகளை எடுத்துச் சொல்லுகிறது இந்தப் (கலி 133 ஆம்) பாட்டு. இதற்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர் அவை ஒவ்வொன்றுக்கும் பின்வருமாறு விளக்கங்கள் தருகிறார். நலிந்து போனவருக்கு, அதாவது வறுமையுற்ற பேர்க்கு உதவுவதையே இல்லறம் என்று சொல்ல வேண்டும், தம்மோடு இணைந்த ஒருவரைப் பிரியாமல் இருக்கின்ற நடைமுறையையே போற்றுதல் அல்லது பாதுகாத்தல் என்று சொல்ல வேண்டும். உலக நடைமுறையை நன்கு அறிந்து (எல்லோருக்கும் இன்பம் ஏற்படும்படியாக) நடந்து கொள்ளுவதையே மக்கட் பண்பு என்று சொல்ல வேண்டும். உற்றார் உறவினரை வெறுத்து ஒதுக்காத இயல்பையே அன்பு என்று சொல்ல வேண்டும். அறிவுத் தெளிவு இல்லாதவர்கள் அந்தத் தெளிவின்மை காரணமாக நம் மீது அள்ளி வீசிவிடும் கடுஞ் சொற்களைப் பொறுத்துக் கொள்ளும் திண்மையையே அறிவு என்று சொல்ல வேண்டும். ஒருவருக்குக் கொடுத்த வாக்கை மீறாமல் இருக்கின்ற பெரிய குணத்தையே உறவு என்று சொல்ல வேண்டும். ஒருவர் பேணிப் பாதுகாப்பதற்காகக் கொடுத்த செய்தியை (இரகசியத்தை) வெளிப்படுத்தாமல் இருக்கின்ற திறமையையே நிறை என்று சொல்ல வேண்டும். கண்ணோட்டம் காரணமாக நிலை தடுமாறாமல் நீதி வழங்குவதையே முறை செய்தல் என்று சொல்ல வேண்டும். அழிக்கப்பட வேண்டியவர்களை, அவர்களை அழிப்பதற்குரிய சரியான தருணம் வரும் வரை பொறுத்துக் கொள்ளுதலையே பொறுமை என்று சொல்ல வேண்டும்.

இந்த ஒன்பது நோக்குகளும் இதற்குப் பின் வந்த தமிழ் இலக்கியங்களில் அப்படியப்படியே எடுத்து ஓதப்பட்டு வந்துள்ளன. வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை என்று இங்கே ஆற்றுதல் என்று கூறப்படும் பண்பை விளக்குகிறது குறள். அதேபோல அறிவெனப்படுவது பேதையார் சொல் நோன்றல் என்பதை

உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்

என்று மீட்டெடுத்துச் சொல்லுகிறது குறள். இவைகளைப் போலவே மற்றுள்ள மணிநெறிகளையும் உள்ளடக்கியதாகக்

கலித்தொகையிலேயே (139) மற்றொரு பாட்டு வருகிறது. ''பிறர் நோயும் தம்நோய் போல் போற்றி அறன் அறிதல் சான்றவர்க்கெல்லாம் கடன்'' என்னும் அந்தப் பாடல் பகுதி இங்கே எடுத்துச் சொன்ன ஒன்பது மணிநெறிகளுக்கும் உள்ளோட்டமாக உள்ள மனிதநேய உணர்வை மணிச்சுருக்க மாக எடுத்துரைக்கிறது. 'எத்தவத்தைச் செய்தாலும் ஏது அவத்தைப் பட்டாலும் முத்தர் மனம் இருக்கும் மோனத்தே' என்பது போல, தமிழ் மக்கள் எந்த நல்ல பண்பை எடுத்து விளக்கினாலும் மனிதநேய உணர்வே அதன் அடியூற்றாக அமையுமாறு பார்த்துக் கொண்டார்கள் என்பதையும் இந்தப் பட்டியல் உறுதி செய்கிறது. இங்குக் கொடுக்கப்பட்ட ஒன்பது பண்புகளில் எது ஒன்றை எடுத்து நுணுகி ஆராய்ந்தாலும் இந்த உண்மையே துலங்குகிறது.

சான்றாக, 'அறிவெனப்படுவது பேதையார் சொல் நோன்றல்' என்றும் 'செறிவெனப்படுவது கூறியது மறாஅமை' என்றும் விளக்கம் தருகிறது கலித்தொகை. சாதாரணமாகக் கல்வி கேள்விகளால் வளர்த்து வளப்படுத்தப்படுவதே அறிவு என்று கருதிக் கொண்டிருக்கிற ஒரு இடத்தில் 'பேதையார் சொல் நோன்றல்' என்னும் விளக்கம் முற்றிலும் புதுமையாகப் படுகிறது. ஆனாலும், இந்த நடைமுறை நலிந்த உள்ளத்து ஒருவனுக்கு அருள் செய்தலையும் அந்த அருள் செய்தல் நடவடிக்கைக்காகத் தமக்கு ஏற்பட்ட துன்பத்தையே பொறுத்துக் கொள்ளுதலையும் குறிக்கோளாகக் கொண்டிருப்பதையும் காணும்போது அவர்களே வியந்து மலைத்து நிற்கிறார்கள். 'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திலே கண்' என்பது போல' வாழ்க்கையின் எந்தப் பக்கத்தை நோக்கினாலும் தமிழர்களின் பார்வை மனிதநேயத்தை விட்டு மாறவே இல்லையே என்று நாமும் வியந்து நிற்கிறோம்.

செறிவு (மனத்திண்மை) என்பது நெஞ்ச உறுதியினால் ஏற்படுகின்ற ஓர் அழுத்தக் குணம். சாதாரணப் பேச்சு வழக் கிலேயே, இத்தகைய போக்கு உடையவனை 'அழுத்தக்காரன்' என்று மக்கள் குறிப்பிடுகிறார்கள். இதைச் சற்றே விரித்து, தாம் சொன்ன சொல்லிலிருந்து மாறாதிருத்தலே செறிவு என்று இலக்கணம் தருகிறது கலித்தொகை. தகுதி உடைய எவனும் தான் சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும் என்பது பொதுவாக வலியுறுத்தப்படும் ஒரு கோட்பாடுதான். ஆனால் அதையே உறவு உரிமை என்று வரையறுக்கிறது கலித்தொகை.

சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதே உறவு உரிமை என்று விளக்கம் தந்த பழந்தமிழர்கள் மிக ஆழமாக நினைந்தே இதைச் செய்திருக்கிறார்கள். ஒருவருக்கு நாம் ஒரு வாக்குறுதியை வழங்கும் போது அந்த வாக்குறுதியின் மீதே அவர் பல செயல் திட்டங்களை வகுத்துக் கொள்கிறார். நாம் அவருக்கு மிக நெருக்கமானவர், எந்த நிலையிலும் அவரைக் கைவிட மாட்டோம் என்று அவர் உறுதியாக நம்புவதே அதற்குக் காரணம். இந்த நம்பிக்கை உடைந்து போனால் அந்த மனிதரின் உள்ளமும் உடைந்து போகிறது. நல்லவர்கள்—அறிவு உடையவர்கள் என்பவர்கள் தங்கள் அழிவிலே கூட மற்றவர்களுக்கு ஆக்கம் தேடுகிறார்கள். அவர்களின் சொல்லாலோ செயலாலோ மற்றவர்களுக்கு இன்னல் ஏற்பட்டிடக் கூடாது என்பதே மனித நேயம். ஆகையினால்தான் உறவு உரிமை என்பது தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றி அதனால் பிறருக்கு நம்பிக்கையும் நலனும் செய்வதே என்று இலக்கணம் காட்டுகிறது சங்க இலக்கியம்.

## தழிஞ்சி நல்கும் சொல்லின்பம்

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பது தொல்காப்பியம். அப்படி என்றால், ஒவ்வொரு சொல்லும், தான் கருதிய பொருளைச் சரியாக விளக்குவதால், கேட்போனிடம் சரியானதொரு விளைவை ஏற்படுத்த வேண்டும் என்பது பொருள். 'சொல்லிலே இருக்குதைய சுந்தரக் கனல்-அதன் துள்ளிலே தெறிக்குதைய சிந்தனைப் புனல்' என்று (பூத்தது மானுடம்) சொல்லின் பொருளைக் கிளத்தும் இக்காலக் கவிஞர் ஒருவர், 'சொல்லிலே இரும்பெடுத்து நான் கொடுக்கிறேன்-மனம் சோனியான பேர்கள் உண்டு சூரராகவே' என்று உறுதி மொழிகிறார். சொல்லினால் விளையும் பெருமைகளைக் கருதியே, விவிலியத்தாரும், "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை இறைவனோடு இருந்தது. அந்த வார்த்தை இறைவனாகவே இருந்தது" என்று புகழ்ந்து சொல்லிப் பெருமை கொள்ளுகிறார்கள். உரிய சமயத்தில் உரியவாறு நிகழ்த்தப்படும் சொல் பெரிய இனிய விளைவுகளை உண்டாக்கிவிடும் என்பது இவைகளின் திரண்ட பொருள்.

சொல்லின் விளைவுப் பெருமையை அடிப்படையாகக் கொண்டு ஒரு மணிநெறியை மன்னர்களுக்கு—ஆட்சித் தலைமையில் உள்ளவர்களுக்கு வகுத்துத் தந்திருக்கிறது தமிழ். அது தான் பதின்மூன்று துறைகளைக் கொண்ட வஞ்சி என்னும்

புறத்திணையின் கடைசித் துறையாகிய 'அழிபடை தட்டோர் தழிஞ்சி' என்னும் துறை. வஞ்சித் திணைக்கு இலக்கணம் கூறும் தொல்காப்பியர், "எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன் அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித்தன்று" என்று விளக்கம் தருகிறது. எனவே, இந்தத் திணையின் முந்திய பன்னிரண்டு துறைகளும் மும்முரமான போர் நிகழ்ச்சிகளாக விரிகின்றன. போர் முடிந்து அவரவர் பாசறைகளுக்குத் திரும்பும் மன்னர்கள் போர்க்களத்திலே விழுப்புண்பட்ட வீரர்கள்பால் அன்பு செலுத்துவதைக் கடைசித் துறையாகிய தழிஞ்சி மூலம் சொல்லுகிறது தொல்காப்பியம்.

தழிஞ்சி என்னும் துறைக்கு விளக்கம் தர வரும் நச்சினார்க்கினியர், 'வென்றும் தோற்றும் மீண்ட வேந்தர், தம் படையாளர், முன்பு போர் செய்துழி, கணையும் வேலும் முதலிய படைகளைத் தம்மிடத்தே தடுத்துக் கொண்டு அழிந்தவர்களைத் தாம் சென்றும் பொருள் கொடுத்தும் வினாவியும் தழுவிக் கோடல்" என்று விரிவாகப் பேசுகிறார். அந்தக் காலத்தில் மன்னர்களுக்கு இருந்துவந்த தனி உயர் மதிப்பையும் பெருமையையும் இணைத்துப் பார்க்கும் போதுதான் இந்தச் செயலில் உள்ள மணிநெறித் தன்மை புலப்படும்.

சங்க இலக்கியத்தின் புறப்பகுதியில் பல இடங்களில் நாம் பார்க்கிறோம் - இரவலரும் அறிஞர்களும் தங்களை நேரில்கண்டு அளவளாவி இன்சொற்கள் சொல்லி அரசர்கள் எது கொடுத்தாலும் மகிழ்ந்து பெற்றுக் கொண்டார்கள்; அதைப் பாராட்டியும் மகிழ்ச்சி தெரிவித்தார்கள். அந்த ஆர்வ நன்மொழிகளுக்கு உள்ள பெரிய ஆற்றலைத்தான் 'அழிபடை தட்டோர் தழிஞ்சி' என்னும் இந்தத்துறை, மன்னர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறது. சிறந்த மன்னன் என்பவன் பெருஞ்சோறு கொடுத்தும் ஏனைய வாய்ப்பு வசதிகளைச் செய்தும் தன்படைவீரர்களைப் போருக்கு அழைத்துச் சென்றால் மட்டும் போதாது; பொன்னும் பொருளும் மண்ணுமாகிய தண்ணடை கொடுப்பதும் போதாது. தனக்காகப் போரிட்டுப் புண்பட்டு மீண்ட அந்த மறவர்களை நேரில் சென்று நலம் வினாவி இவனும் அவர்களில் ஒருவனே என்பதை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும்.

ஊக்குவிக்கும் வன்மை மட்டுமன்றி ஆற்றுவிக்கும் அரிய ஆற்றலும், வேறு எதையும் விடச் சொற்களுக்கே மிகுதியாக உண்டு என்னும் உண்மையைத் தெரிந்து வகுத்தளிக்கப்பட்ட நடைநெறி இது. பெரும்பொருள் விளக்கம் என்னும் நூலில்

கொடுக்கப்பட்டுள்ள (புறத்திரட்டு 793) ஒரு நிகழ்ச்சி இந்த மணிநெறிக்கு மணியான விளக்கமாக அமைந்துள்ளது.

தழிச்சிய வாட்புண்ணோர் தம்மில்லந் தோறும்
பழிச்சியசீர்ப் பாசறை வேந்தன்—விழுச்சிறப்பிற்
சொல்லிய சொல்லே மருந்தாகத் தூர்ந்தன
புல்லணலார் வெய்துயிர்க்கும் புண்

போர் முடிந்து வீரர்கள் தத்தம் பாசறைக் குடில்களில் விழுந்து கிடக்கும்போது அவர்களின் வேந்தன் அவர்கள் ஒவ்வொருவரையும் கண்டு இனியன சொல்லி ஆற்றுவிக்க வேண்டும் என்று வகுக்கப்பட்ட இலக்கணத்துக்கும் இனிதானதோர் விளக்கம் தருகிறது இந்தப் பாட்டு. 'விழுச்சிறப்பில் சொல்லிய சொல்லே மருந்து' என்றுவரும் தொடர், அந்தச் சமயத்தில் வேந்தன் எப்படி நடந்துகொள்ள வேண்டும், என்னென்ன பேசவேண்டும் என்பவைகளை வரையறுத்து அவனுக்கு வழிகாட்டுகிறது. புண்பட்டவனுக்கு ஆறுதல் தேவை என்றாலும், அவன் நோயினாலோ உற்றார் உறவினர் இழப்பினாலோ பொருள் இழப்பினாலோ நொந்து போனவன் அல்லன். தன் மன்னவனுக்காகப் போரிட்டு விழுப்புண்பட்ட வீரன் அவன். போருக்குப் புறப்படும் போது வஞ்சினம் கூறி எழுந்து சென்று அந்த வஞ்சினத்தை நிறைவேற்றி அந்த நிறைவேற்றத்தின் போது விழுப்புண் பட்ட மறவன் அவன். அவனுக்கு ஆறுதலாகச் சொல்லும் சொற்கள் பொதுவான ஆறுதல் மொழியாக இருக்க முடியாது; இருக்கக் கூடாது. அவனுடைய ஆற்றல் சான்ற வீரத்தின் விளைவான போர்க்களத்து வீர நிகழ்ச்சிகளை மீட்டு எடுத்துச் சொல்லிப் பாராட்டும் சொற்களாக அவை விளங்க வேண்டும். இதைத் தான் 'விழுச்சிறப்பில் சொல்லிய சொல்' என்று குறிப்பிடுகிறது பெரும் பொருள் விளக்கம். சொல்லின் இனிமைகளையும் அருமைகளையும் அறிந்திருக்கிறவர்களும் அதன் தருணத் தன்மையை, எந்த நேரத்தில் எதைப் பேச வேண்டும் என்னும் தெளிவைப் பெற்றிருப்பதில்லை. அதனாலேயே சீனத்து அறிஞன் கன்ப்யூஷியஸ்' உன்னுடைய மொழியாட்சியை முதலில் தெளிவும் திட்பமும் உடையதாக ஆக்கிக்கொள் - நீ விரும்பிய செயல்கள் தடையின்றிநடைபெறும்' என்று சொல்லியுள்ளான். பெரும்பொருள், விளக்கப் பாட்டும் அதைத்தான் சொல்லி வைத்திருக்கிறது. 'வேந்தன் சொல்லிய சொல்லே மருந்தாகப் புண்பட்ட வீரர்களின் புண்கள் ஆறிவிட்டன' என்கிறது பாட்டு. போர்க்களத்திலே புண்பட்டவனுக்குப் பச்சிலை மருந்தையும் அரிய அறுவை

மருத்துவத்தையும் விட அவனைப் பற்றிய புகழ்ச்சிகளைச் சொல்லும் சொல்லே சிறந்த மருந்து என்னும் மனஇயல் உண்மையை அடிப்படையாகக் கொண்டுள்ளது மன்னனுக்கு வகுத்தளிக்கப்பட்ட இந்த மணிநெறி. இந்த மணிநெறியில் உள்ள மனஇயல் உணர்வோடு இதற்குப் பின்னணியாக உள்ள மனிதநேய உணர்வும் தனித்து எடுத்துக் காட்டுவதற்கு உரியது. சங்ககாலத்து மன்னர்களில் பலர், தங்கள் படை மறவர் களோடு இரண்டறக் கலந்து பழகி, மன்னர்களும் மறவர்களும் வெவ்வேறானவர்கள் அல்லர் என்பதை நடைமுறையில் வெளிப் படுத்திக் கொண்டவர்கள்.

தான் மாடமாளிகையிலே வீற்றிருக்க வேண்டும், தன்னு டைய படைமறவர்கள் தனக்காகப் போர்க்களத்திலே உயிர் கொடுக்க வேண்டும் என்று சங்ககாலத் தமிழ் மன்னன் என்றும் நினைத்ததே இல்லை. "என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கு ஈயும் மன்னே, அம்பொடு வேல்நுழை வழியெல்லாம் தான் நிற்கும் மன்னே" என்று அதியமானை அவ்வையார் சித்திரித்திருப்பது இங்கு நோக்கத்தக்கது. எதிரி தனது கோட் டையை முற்றுகை இட்டிருந்தபோது வெளியேறி அவனுடன் போர் புரியாமலும் தோல்வியை ஒப்புக்கொண்டு கோட்டையை அவனிடம் ஒப்படைக்காமலும் தன் நாட்டு மக்களை நினை யாமல் தனக்கு வேண்டிய பொருள்களை மட்டும் பதுக்கிக் கொண்டு கோட்டைக்குள் முடங்கிக் கிடந்த நெடுங்கிள்ளியைக் கோவூர்கிழார் கடுமையாகச் சாடிக் கண்டனம் புரிந்த (புறம் 44) நிகழ்ச்சியும் இங்கே ஒப்புநோக்கத் தக்கது.

தனக்காகவும் தன்னுடைய வெற்றிக்காகவும் போரிட்டுப் புண்பட்ட மறவர்களைத் தன்னுடைய உடம்பின் ஓர் உறுப் பாகவே கருத வேண்டும் என்னும் மனிதாபிமான உணர்வும் அவர்களை எந்த நிலையிலும் தளரவிடக் கூடாது என்னும் ஆதரவு உணர்வுமே இந்த மணிநெறியின் அடிப்படைகள். தன் படைவீரர்கள் தனக்கு யாதினும் இனியவர்கள் என்று கொள்ளும் பெரிய உள்ளம் ஆகிய மனித உள்ளத்தையே தருணத்துக்கு ஏற்ற தன்னுடைய ஆற்றும் சொற்களால் இங்கே வெளிப் படுத்துகிறான் மன்னவன். தான் உயர்ந்தவன், தன் படைவீரர் கள் தாழ்ந்தவர்கள் என்று எண்ணாத மனிதநேயப் பேருணர்வின் வெளிப்பாடாக இருப்பதால், பாசறையில் மன்னனுக்கு உரிய தாக வகுக்கப்பட்ட இந்த மணிநெறி மனிதநேய நெறியாகத் துவங்குகிறது.

## தமிழரின் நனிநாகரிகம்

'நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல் கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பது பிற்கால நீதிப் பாட்டு. கல்வியின் பயன் அறிவும் பண்பும் பெறுதலே என்னும் உண்மையை உணர்ந்து கல்வி கற்றவர்கள் அத்தகைய நன்மக்களையே விரும்புவார்கள் என்பது இதன் பொருள். இதே போலத்தான் வாழ்வின் பல தளங்களில் உயர் சிந்தனைகளைப் பரப்பி வந்துள்ள தமிழர்கள், அதன் ஒரு கட்டத்தில்,

முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்

என்று சொல்லியுள்ளார்கள். அன்பினால் பிணைக்கப்பட்ட இரண்டு பேர் ஈருடலும் ஒருயிருமாக இணைந்து போனார்கள்; அவர்கள் இருவருக்கும், ஒருவரிலிருந்து ஒருவர் வேறுபட்ட தனிநிலை என்பது கிடையாது என்று தமிழர்கள் உறுதியாக நம்பினார்கள். இந்த அடிப்படையிலேயே அவர்கள் காதலையும் நட்பையும் கணித்தார்கள். இதன் விளைவாக எழுந்ததுதான் இங்கே குறிப்பிடப்பட்ட 'நனிநாகரிகர்' பற்றிய கருத்து.

மேலே எடுத்துக்காட்டிய (முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநாகரிகர் என்னும்) கருத்தைக் கொண்ட பாடல் நற்றிணையில் (355) வருகிறது. ஒருத்தியைக் காதலித்து அவளைத் திருமணம் செய்து கொள்ளாமலே காலம் கடத்தும் ஒரு தலைவனைப் பார்த்து அவளால் காதலிக்கப்பட்ட அவளின் தோழி இப்படிச் சொல்லுகிறாள். அதாவது, 'திருமணத்தை விரைவில் முடித்துக் கொள்ள வேண்டும் என்று நான் சொல்லுவது, அந்த நினைவே இல்லாமல் வந்து போய்க் கொண்டிருக்கிற உனக்கு நஞ்சு போலக் கொடுமையானதாகத் தோன்றினாலும் நீ அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அது தான் நாகரிகம்' என்று சொல்லுகிறாள் தோழி. இதன் மூலம் ஒரு பெரிய வாழ்க்கை மணிநெறி மக்கட் குலத்துக்கு அள்ளி வழங்கப்பட்டுள்ளது. நட்பினாலோ காதலினாலோ ஈருடலும் ஒருயிருமாகக் கலந்து விட்டவர்கள் தங்கள் தனி உடலுக்குத் துன்பம் வருவது போலத் தோன்றுகிற மற்றவரின் செயலை அல்லது சிந்தனையை அப்படியே ஏற்றுக் கொள்ளுவதுதான் அந்தத் தொடர்புறவுக்கு அழகு என்பது இந்த வாழ்க்கைக் கோட்பாட்டின் திரண்ட கருத்து.

வாழ்க்கையில் கடைப் பிடிக்கத்தக்கதாக எடுத்துச் சொல்லப் படும் மணிநெறி என்பது சாதாரணமானவர்களுக்கு எட்ட முடியாத இலக்காகத் தோன்றுகிறது. ஓரளவு பண்பட்டு அத்தகைய நடைகளில் பழக்கப்பட்டவர்களுக்கு அது எளிதான நடைமுறையாகத் தோன்றுகிறது. காதலியை அடிக்கடி சந்தித்து அளவளாவிச் செல்லுவது தலைவனுக்கு எளிதாகவும் உவப்பா கவும் இருக்கிறது. அந்த எளிய நடைமுறைக்கு மாறாகத் திருமணம் செய்துகொண்டு வாழவேண்டும் என்று (தலைவியின் சார்பில்) தோழி வற்புறுத்துவது எளிய நடையில் இன்பம் கண்டு பழகிவிட்ட அவனுக்கு மிகவும் கசப்பாக இருக்கிறது. இந்த உணர்வோட்டத்தைப் புரிந்து கொண்டுதான் தோழி இந்த மணிநெறியை அவனுக்கு நினைவூட்டுகிறாள். காதல் என்பதும் நட்பு என்பதும் மிகப் பெரிய வாழ்க்கைச் செய்திகள். அந்த வாழ்க்கையை மேற்கொள்ளுபவர்கள் இன்பத்துக்குத் தயாராக இருப்பது போலவே, துன்பம் வந்தால் அதை ஏற்றுக் கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும் என்னும் வாழ்க்கை நெறியை, தலைவனுக்கும் அதன் மூலம் உலகத்து எல்லோருக்கும் எடுத்து வழங்குகிறாள் தோழி.

நட்பிலும் காதலிலும் தியாகம் என்ற பண்புக்கு முதன்மை யான இடம் உண்டு. தியாகம் என்றதும் உயிர்த் தியாகம் போன்ற பெரிய தியாகங்களை நினைத்துக் கொள்ள வேண்டிய தில்லை. சிறிய உணர்வுகளைத் தியாகம் செய்வதும் நட்பில் மிகமிகத் தேவையே. இதைத்தான் 'ஒருவர் பொறை இருவர் நட்பு' என்று சொல்லுகிறது பழமொழி. 'அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல் உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக் குளத்தில் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே ஒட்டி உறுவார் உறவு' என்னும் பிற்காலப் பாட்டும், வறுமை முதலான துன்பங்கள் வரும்போது தங்கள் இன்பத்தைத் தியாகம் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறது. நற்றிணைப் பாடலையும் இந்தப் பிற்காலப் பாடலையும் அருகருகே வைத்துப் பார்க்கும் போது, முந்திய பாடலில் எடுத்துச் சொல்லப்பட்ட பெரிய வாழ்க்கை நெறியின் கடைப்பிடிப்புக்குப் பிந்திய பாட்டு மக்களைத் தயார் செய்தது என்றே நினைக்கத் தோன்றுகிறது. அந்த அளவுக்கு, பிற்காலப் பாட்டு வாழ்வின் எளிய துன்பங் களை எடுத்துச் சொல்லி மக்களை அவைகளுக்குத் தயார் செய்கிற போது, நற்றிணைப் பாட்டு, அதன் அரிய உச்ச நிலையைச் சுட்டிக் காட்டுகிறது.

இதே கருத்தைக் கண்ணோட்டம் என்னும் பகுதியில், 'பெயக் கண்டும் நஞ்சு உண்டு அமைவர் நயத்தக்க நாகரிகம், வேண்டுபவர்'' என்று எடுத்துரைக்கிறது திருக்குறள். நற்றிணைப் பாடலில் 'நனிநாகரிகர்' என்று வலியுறுத்தப்பட்ட கருத்து இங்கே 'நயத்தக்க நாகரிகம்' என்ற பெயரில் வலியுறுத் தப்படுகிறது.

கண்ணோட்டம் உடையவர்கள்,—அதாவது தொடர்புடைய மற்றவர்களின் துன்பத்தில் கசிந்து உருகும் மன இயல்பைப் பெற்றவர்கள்,-நயத்தக்க நாகரிகம் உடையவர்களாக விளங்கு வார்கள், விளங்க வேண்டும் என்பது இந்தப் பாடலின் கருத்து. நற்றிணைப் பாடலைத் தனியே படிப்பதை விட இந்தக் குறட்பாவையும் இணைத்துப் பார்க்கும் போது இந்த மணி நெறிக்கு அடிப்படையாக இருப்பது மனிதநேயமே என்பது பளிச்செனப் புலப்பட்டு விடுகிறது. அறிவு, பண்பு முதலான இயல்புகளுக்கு மனிதநேய அடிப்படையிலேயே விளக்கம் கண்ட வர்கள் தமிழர்கள். அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்' என்றும் 'அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின் நோய் தம் நோய் போல் போற்றாக் கடை' என்றும் அந்தக் கருத்து விளக்கங்களைச் சொற்சிறப் மாகச் செதுக்கி வைத்தது பின்னால் வந்த திருக்குறள் இந்த அடித்தளத்தில் நின்று கொண்டுதான் 'நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்' என்னும் மணிநெறியைக் கணிக்க வேண்டும்.

அறிவும் பண்பாடும் உள்ள வாழ்க்கை என்பதே அடிப் படையில் தியாக வாழ்க்கைதான். பண்புடைய எந்த மனித னாலும் மற்றோர் உயிரின் துன்பத்தைப் பார்த்துக் கொண்டு வாளா இருக்க முடியாது; தன்னுடைய இன்பங்களையும் இன்னுயிரையும் பணயம் வைத்துக் கூட அந்தத் துன்பத்தை அகற்றிடவே அவன் எழுந்து பாய்வான். அதே போல அறிவு உடைய ஒருவனாலும் பிற உயிரின் துன்பத்தைக் கண்டு கொண்டே உயிர் சுமந்து உவகையோடு திரிய முடியாது. இந்த அடிப்படைகளில் நின்று கொண்டுதான் இரண்டு பேருக்கு இடையிலே உள்ள நட்பையும் காதலையும் மதிப்பீடு செய்கிறது நற்றிணை. அப்படி மதிப்பீடு செய்யும் போது, அறிவும் பண்பும் உடையவர்களாக வளர்ந்திருப்பவர்கள் தங்கள் காதல ரின் அல்லது நண்பரின் துன்பத்தைத் துடைப்பதற்காக நஞ்சை உண்டு தங்களை இழந்து போகவும் ஆயத்தமாக இருப்பார்கள் என்பது மிக இயல்பான உண்மையாகக் கிடைக்கிறது.

தன் நாடு முழுவதையும் இரவலர்களுக்குக் கொடுத்துவிட்ட பாரியையும் புலவனின் வறுமையை நீக்கத் தன் தலையையே கொடுக்க முன்வந்த குமணனையும் மக்களின் பசித் துன்பத்தை நீக்கிய சிறுகுடி கிழான் பண்ணனுக்குத் தன் வாழ்நாளையே கொடுக்க முன்வந்த கிள்ளிவளவனையும் சங்க இலக்கியத்திலே சந்தித்திருக்கிற நமக்கு அவர்களின் வழிக்கன்றாக வளர்ந்திடக் கூடிய நனிநாகரிகரைப் பற்றிய இந்தக் கருத்து வியப்பான ஒன்றாகத் தோன்ற நியாயமில்லை. பல துளி பெரு வெள்ளம் என்பது போல, வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் தனித்தனி மணிநெறிகளை வகுத்தும் கடைப்பிடித்தும் வந்துள்ள சங்க காலத் தமிழர்கள், மனித நேயத்தின் ஒரு கொடுமுடியாக, ‘‘முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்’’ என்னும் மணிநெறியையும் வகுத்து வழங்கி யுள்ளார்கள் என்பதே உண்மை.

## ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை

வாழ்க்கை என்பது குடும்ப வாழ்க்கையே (அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை) என்று வரையறுத்துக் கொண்ட தமிழர்கள், அந்த வாழ்க்கை செப்பமும் சீர்மையும் உடைய தாக அமைவதற்குரிய மணிநெறிகளையும் வகுத்து வலியு றுத்தியுள்ளார்கள். ‘இருந்து ஓம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்து ஓம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு’ என்பது மனிதநேய அடிப்படையை விரிந்து பரப்பித் தமிழர்கள் கட்டி எழுப்பிய வாழ்க்கை வழி. இந்த மாளிகை வலிவும் பொலிவும் உடையதாகத் திகழ வேண்டுமானால் அதன் அடிப் படை உறுப்பினர்களிடையே முழுமையான ஒற்றுமை நிலை பெற்றிருக்க வேண்டும். இந்த ஒற்றுமையைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் வலியுறுத்துகிறது தமிழரின் பழைய இலக்கியம்.

ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை

என்பது கலித்தொகை 17ஆம் பாடல்.

காதலர்களின், அதாவது கணவன் மனைவியரின் ஒன்று பட்ட வாழ்க்கை உயர்வுபட்டுச் செழிக்க வேண்டுமானால் அந்த வாழ்வில் பொருள் வளம் போதிய அளவு இருக்க வேண்டும் என்பதைச் சங்க இலக்கியம் பல இடங்களில் வலியுறுத்துகிறது.

இருவருக்கும் வேதனை தரும் பிரிவை மேற்கொண்டு கூடத் தலைவன் பொருள் தேடி வரவேண்டும் என்பது குடும்ப வாழ்க்கையின் ஓர் இன்றியமையாத நடைமுறையாக வலியுறுத்தப்படுகிறது. ஆயினும்,வறுமைத் துன்பம் வாட்டும் போது கூடக் கணவனும் மனைவியும் ஒன்றுபட்ட உள்ளத்தினராக இருக்க வேண்டும் என்னும் கடினமான வாழ்க்கை நெறியை வலியுறுத்துகிறது மேற்குறித்த கலித்தொகைப் பாட்டு. இந்தக் கோட்பாட்டை வலியுறுத்துவதாக, ஈருடலும் ஒருயிரும் போல என்னும் தொடராட்சி தமிழர்களிடம் பரவலாக இருந்து வருகிறது. பிற்காலத்து நீதிநூல் வரை இந்தக் கருத்து வலியுறுத்தப் பட்டு வந்துள்ளது என்பது ''காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே இன்பம்'' என்னும் பாட்டடிகளால் உறுதியாகிறது.

கணவன் மனைவி ஒன்றுபட்ட இல்லறம், மிக அரிதாகவே வாய்க்கிறது என்பதை, ''மலரினும் மெல்லிய காமம், சிலர் அதன் செவ்வி தலைப்படுவார்'' என்னும் வள்ளுவம் ஐயத்துக்கு இடமின்றி அடித்துச் சொல்லுகிறது. அப்படிச் சொல்லுவதன் மூலம், எல்லாக் காதலர்களின் நெஞ்சிலும், 'இந்த உயர் நிலையை எட்டிவிட வேண்டும்' என்னும் இலட்சிய வேகத்தையும் ஏற்றிவிடுகிறது.

இது போலத்தான் காதலித்துக் கடிமணம் செய்து கொண்ட கணவர்கள் பரத்தையரைத் தேடிப் போனார்கள் என்னும் வரலாற்றை மீறிக் கொண்டு, இரண்டு பேரும் ஒருவராக வாழ வேண்டும் என்னும் மணிநெறியை முன்வைக்கிறது கலித்தொகை. பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் என்பது இயற்கையான உண்மையாக இருப்பதால் (ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும், ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை) வறுமை வந்து புயலாகத் தாக்கும் போதும் இருவரும் ஒன்றுபட்டு நின்று அதைப் புறங்காண வேண்டும் என்று நெறி வகுத்துத் தருகிறது இந்தக் கருத்து. செயற்கரிய செய்வார் பெரியர் என்னும் அடிப்படையில் அமைந்த மணிநெறி இது.

## இனிய எடுத்துக்காட்டுகள்

இந்த மணிநெறியைக் கருத்து வகையால் (மேற்கண்டவாறு) எடுத்துணர்த்திய சங்க இலக்கியம் நேரிடை நிகழ்ச்சி வகையாலும் உள்ளுறை உவமம் என்னும் பொருட்குறிப்பு வகையாலும் எடுத்து உணர்த்துகிறது. செல்வக் குடியில் பிறந்த

ஒரு பெண் தங்களை விட வறிய நிலையில் உள்ள ஒருவனை விரும்பி மணந்து கொண்டாள். அவளுடைய பெற்றோர் அந்தத் திருமணத்தை ஏற்கவில்லை. நாளடைவில் அவளுடைய கணவன் மேலும் வறுமைக்கு உள்ளானான். தன் மகள் பசியும் பட்டினியுமாக வாழுவதைக் கேள்விப்பட்ட அவள் தந்தை அவ்ளுக்குப் போதிய உணவுப் பொருளை அனுப்பி வைத்தான். அந்தப் பெண், தந்தையின் வளத்தை உண்டு பசி தீர்வதை விடத் தன் கணவனின் வறுமையைப் பகிர்ந்து கொண்டு பசித்துக் கிடப்பதே மேல் என்று முடிவு செய்து அவ்வாறே வாழ்ந்தாள். நேற்று வரை ஒரு வீட்டின் சிறுமியாக இருந்தவள் இன்று கணவனுக்காக வாழும் தியாக உள்ளத்தை எப்படிப் பெற்றாளோ என்று ஒரு புலவர் வியப்படைவதாக வரும் நற்றிணை 110ஆம் பாட்டு இந்தத் தியாகச் செல்வியை நமக்கு அறிமுகம் செய்கிறது:

அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள்கொல்?
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றென
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்,
ஒழுகு நீர் நுணங்கு அறல் போல,
பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே

வேளாவேளைக்கு உணவு உண்ணாமல் தன்னை வருத்திக் கொள்ளும் இந்தக் குடும்பத் தலைவி 'ஒன்றன் கூறாடை உடுப்பவரே யாயினும் ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை' என்னும் மணிநெறிக்கு மணியான இலக்கியமாகத் திகழ்கிறாள் என்பது தெளிவு.

கணவன் ஒருவன் தன் மனைவியின் மீது பெரிய அன்புடையவனாக இருந்து அவளுக்குக் காதற் பணிவிடைகள் செய்யும் மனஒருமை உடையவனாக விளங்கினான் என்பதைக் குறுந்தொகை 85ஆம் பாட்டில் வரும் உள்ளுறை உவமம் எடுத்து விளக்குகிறது:

உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூன்முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்
யாணர் ஊரன்

என்று குறிப்பிடப்படுகிறான் தலைவன். அதாவது, அவனுடைய நாட்டுச் சிட்டுக்குருவியும் மகப்பேற்றுக் காலத்தில் தன் பேடைக்கு உற்ற துணையாக இருக்கிறது என்று சொல்வதன் மூலம் தலைவன் தலைவியிடம் இரண்டறக் கலந்த பேரன்பு உடையவனாக இருக்கிறான் என்னும் கருத்து விளக்கப்படுகிறது.

ஏற்கனவே சுட்டிக் காட்டியது போல மனித நேயத்தை குறிக்கோளாகக் கொண்டே குடும்பத் தலைவனுக்கும் தலைவிக்கும் இந்த ஒற்றுமை நெறி வற்புறுத்தப்பட்டது. இத்தகைய ஒற்றுமை இல்லாத குடும்பத்தில், இல்வாழ்வின் இன்றியமையாத கடமையாகிய விருந்தோம்பல் எப்படித் தடுமாறும் என்பதைப் பிற்கால அவ்வையின் பாட்டு ஒன்று கொஞ்சம் கடுமையாகவே உணர்த்துகிறது.

> இருந்து முகம்திருத்தி ஈரோடு பேன்வாரி
> விருந்து வந்ததென்று விளம்ப—வருந்திமிக
> பாடினாள் ஆடினாள், பாடிப் பழமுறத்தால்
> சாடினாள் ஓடோடத் தான்

இத்தகைய கொடிய காட்சிகள் நிகழ்ந்து குடும்ப வாழ்க்கையே இருண்ட வாழ்க்கையாகிப் போய்விடக் கூடாது என்னும் மனித நேயக் கருத்திலேதான் எல்லாவற்றையும் இடித்துத் தள்ளும் வறுமையினால் கூட இடித்துத் தள்ள முடியாத அளவுக்குக் கணவன் மனைவியர் ஒன்றுபட்ட உள்ளத்தினராக இருக்க வேண்டும் என்னும் மணிநெறி எடுத்தோதப் பட்டுள்ளது. எல்லாப் பெரிய அறங்களும் ஒன்றுக்கு மேற்பட்ட பயன்களை விளைப்பதுபோல-ஒல்றினார் வாழ்க்கையே வாழ்க்கை என்னும் இந்த மணிநெறி குறிப்பு வகையால் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் உயர் அறத்தை உணர்த்துவதும் கருதத் தக்கது.

## அறன்நிலை திரியா அவையம்

''அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை'' என்னும் அழகான கருத்துத் தொடர் குறுந்தொகையில் **(184)** உள்ளது. அறிவுடைய நன்மக்கள் எந்த நிலையிலும் பொய்ச்சான்று புகலப் போகமாட்டார்கள் என்பது இதன் பொருள். நீதி வழங்குவதைப் பற்றி மிகப் பொறுப்பான கருத்துக்களை வைத்திருந்தவர்கள் சங்ககாலத் தமிழர்கள். வஞ்சினம் மொழி

கின்றபோது கூட, தாங்கள் சொன்ன வீர வஞ்சினத்தை நிறை வேற்றாவிட்டால் நீதிமன்றத்தில் திறமை இல்லாத ஒருவனை நியமித்து அதனால் நீதியைக் குலைத்த கொடுங்கோலன் என்ற பழி தங்களுக்கு ஏற்படுவதாக என்று உறுதி மொழிகிறவர்கள் அக்காலத் தமிழ் மன்னர்கள்.

> அறன் நிலை திரியா அன்பின் அவையத்து
> திறன்இல் ஒருவனை நாட்டி, முறை திரிந்து
> மெலிகோல் செய்தேன் ஆகுக

என்று ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் வஞ்சினம் மொழிவ தாகப் புறநானூறு (71) பேசுகிறது. நீதியின் மேல் இவ்வளவு பெரிய ஈடுபாடு வைத்திருந்த அவர்கள், 'அறன் நிலை திரியா அன்பின் அவையத்தில் முறைகேடு எதுவும் நடந்துவிடக் கூடாது என்பதிலும் அத்தகைய முறைகேடுகளுக்கு அடிமூலமான பொய்ச்சாட்சி சொல்லுதல் என்னும் நிகழ்ச்சியே நடைபெற்று விடக் கூடாது என்பதிலும் முதன்மையான அக்கறை காட்டி னார்கள். அதனாலேதான், பொய்ச் சான்று புகல யாரும் போகக் கூடாது என்று எதிர்மறுத்துச் சொல்லாமல், அறிஞர் பெருமக்கள் அந்தத் தீய காரியத்தில் ஈடுபட மாட்டார்கள் என்று உருக்கமாக எடுத்துச் சொல்லியுள்ளார்கள். அப்படிச் சொன்னதன் மூலம் இந்த மணிநெறிக்கு உரிய மாண்புக்கு அவர்கள் மேலும் மாண்பு சேர்த்துள்ளார்கள்.

அறமன்றம் என்பது பெரும்பாலும் அங்கே வழங்கப்பெறும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டே நடைபெறுகிறது. சொல்வன்மையாலோ சூழ்ச்சித் திறமையினாலோ அந்த மன்றத் தில் பொய்ச் சான்று ஒன்று உண்மை போலத் தோன்றி விடுமாயி னும்அதுவே ஒருவனுடைய அல்லது பல பேருடைய வாழ்வு பட்டுப் போகக் காரணமாகி விடுகிறது. 'அறன் நிலை திரியா அன்பின் அவையம்' என்று தொடர்புடைய பலராலும் ஏற்றுக் கணிக்கப் பட்ட அந்த நன்மக்களின் அவையில் இத்தகைய கேடு நிகழ்ந்து விடுமானால் அது, தொடர்புடையவர்களை மட்டுமல்லாமல் நாட்டு மக்கள் அனைவருக்கும் பாதுகாப்பாக இருந்துவரும் ஆட்சியின் பெயரையும் கெடுத்து விடுகிறது. இந்தக் காரணங் களாலேயே பொய்ச்சாட்சி சொல்லப் போகவே வேண்டாம், அப்படிப் போனால் நீங்கள் அறிவுடைய நன்மக்களாக மதிக்கப் பட மாட்டீர்கள் என்று மணிநெறி காட்டி எச்சரித்துள்ளது தமிழ் இலக்கியம்.

## 'பொய்ச் சான்று ஒழிக!'

பொய்ச் சாட்சி சொல்வதன் தீய விளைவுகளைத் தமிழ்ச் சமுதாயம் எத்தனை அச்சத்தோடும் அருவருப்போடும் நோக்கியது என்பதை, அந்தக் கெட்ட பழக்கத்தை ஒழிப்பதற்கு அவர்கள் கடைப்பிடித்த ஒரு நடைமுறையும் தெளிவாக விளக்குகிறது. அப்பட்டமான கற்பனை போலத் தோன்றுகிற இந்தச் செய்தி சிலப்பதிகாரத்தில் வருகிறது. காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த பல பகுதிகளில் பூதசதுக்கம் என்னும் இடமும் ஒன்று. அதைப் பின்வருமாறு வருணிக்கிறது சிலப்பதிகாரம்.

'தவம் மறைந்து ஒழுகும் தன்மையிலாளர்
அவம் மறைந்து ஒழுகும் அலவற் பெண்டிர்
அறை போகு அமைச்சர், பிறன்மனை நயப்போர்
பொய்க்கரியாளர், புறங்கூற்றாளர் என்
கைக்கொள் பாசத்துக் கைப்படுவோர்' என
காதம் நான்கும் கடுங்குரல் எழுப்பி
பூதம் புடைத்து உண்ணும் பூத சதுக்கம்

என்கிற (5:128-134) இந்த வருணனையே படிப்போரை நடுங்க வைப்பதாக இருக்கிறது. இதில் பட்டியல் போடப் பட்டுள்ள குற்றங்கள் மிகமிகக் கொடுமையானவை என்று அந்நாள் தமிழ்மக்கள் கருதினார்கள். அதனாலேயே அவைகளுக்குக் கொடுக்கப்படும் தண்டனை பெரிதாக விளம்பரப் படுத்தப்பட வேண்டும் என்று நினைத்தவர்களாக, பொய்க் கரியாளர் முதலான குற்றவாளிகளைக் கட்டிப்பிடித்து உண்ணுவதற்கு முன் அந்தப் பூதம் 'காதம் நான்கும் கடுங்குரல் எழுப்பியது' என்று சொல்லி வைத்திருக்கிறார்கள்.

சதுக்கப் பூதத்தை இவ்வாறு அறிமுகப்படுத்திய சிலப்பதிகாரம், பொய்ச்சாட்சி சொன்ன ஒருவன் அந்தப் பூதத்தால் தண்டிக்கப்பட்ட நிகழ்ச்சி ஒன்றையும் மிக அழுத்தமாக விவரிக்கிறது:

பத்தினி ஒருத்தி படிற்றுரை எய்த
மற்றுஅவள் கணவற்கு வறியோன் ஒருவன்
அறியாக் கரி பொய்த்து அறைந்துண்ணும் பூதத்துக்
கறைகெழு பாசத்துக் கையகப் படலும்,

பட்டோன் தவ்வை படுதுயர் கண்டு,
கட்டிய பாசத்துக் கடிதுசென்று எய்தி,
'என்உயிர் கொண்டு ஈங்கு இவன் உயிர் தா' என,
நன்னெடும் பூதம் நல்கா தாகி,
'நரகனுயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி இழக்கும் பண்பு ஈங்கு இல்லை—
ஒழிக நின்கருத்து' என உயிர்முன் புடைப்ப...

பொய்ச்சாட்சி சொல்லிப் பூதத்திடம் அகப்பட்ட வறியவனுக்காகத் தன் உயிரையே கொடுக்க முன்வருகிறான் கோவலன். அதை ஏற்காத சதுக்கப்பூதம் பொய்ச்சாட்சி சொன்னவனைக் கடைமகனாகிய கயவன் (நரகன்) என்று தீர்ப்புரைக்கிறது. பொய்ச் சான்றுகளால் மெய்ம்மைகள் பொய்மைகளாகிப் போவதால் அதைப் பெரிய கொடிய குற்றங்களுள் ஒன்றாகக் கருதியது தமிழ்ச் சமுதாயம். அதைச் செய்தவர்களைத் தாழ் நிலை மனிதர்கள் என்றும் தரம் பிரித்துக் காட்டியது...

பொய்ச்சான்று புகல்வதைத் தீயொழுக்கங்களின் நெடிய பட்டியலுள் சேர்த்து அதற்குத் தண்டனையும் வழங்கிய சிலப்பதிகார ஆசிரியர் கதையை முடித்து வைக்கின்ற போது கதை கேட்டவர்களுக்குச் சில அறிவுரைகளைத் தருகிறார். அந்த அறிவுரைகளில், 'பொய்க்கரி போகன்மின்' (30:192) என்பதும் ஒன்றாக அமைகிறது. கதை நிகழ்ச்சியோடு வந்த பொய்க்கரி பற்றிய செய்தியோடு அமையாமல் கதையின் முடிவிலும் ஆசிரியர் அதை நினைவுகூர்ந்து வலியுறுத்தியதிலிருந்து பொய்ச் சாட்சி சொல்வதன் புன்மையைத் தமிழர்கள் எவ்வளவு கடுமையானதாகக் கருதினார்கள் என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

பொய்ச் சாட்சி சொல்லும் மனநிகழ்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும், அதன் மூலம் ஒவ்வொருவரும் நல்லறிவு நன்மக்களாக வாழ வேண்டும் என்னும் மணிநெறியில் தமிழ்ச் சமுதாயம் எத்துணை பெரிய அக்கறை கொண்டிருந்தது என்பது தமிழ் இலக்கியம் நெடுகப் புலப்பட்டுத் தெரிகிறது. 'ஓரஞ் சொல்லேல்' என்று ஆத்திசூடியில் ஒழுக்க நெறிகளில் ஒன்றாக இதை வலியுறுத்திய அவ்வையார் இதன் தீமையை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்த விரும்பியவர் போல வேகம் மிக்க வெண்பா ஒன்றையே படைத்தளித்துள்ளார்:

வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரம் சொன்னார் மனை

பொய்ச்சாட்சி சொன்னவர்களின் வாழ்க்கையே அழிந்து போகும் என்பது இதன் கருத்து. அவர்கள் வாழ்ந்த இல்லம் கட்ட மண்ணும் குட்டிச் சுவருமாக இடிந்து அங்கே புல்லும் புதரும் முள்ளும் படர, மூதேவியுடன் பாம்பும் சென்று குடியிருக்கும் என்று சொல்லும் போதே இந்த அழிவுகளுக்கு இணையான பெரிய அழிவைப் பொய்ச் சாட்சி சொன்னதன் மூலம் மற்றவர்களுக்கு இவர்கள் உண்டாக்கினார்கள் என்பது எடுத்து வலியுறுத்தப்படுகிறது.

மனித நேயத்தை வாழ்வின் அடித்தளமாக அமைத்துக் கொண்டவர்கள் பழைய தமிழர்கள். சமயம் வாய்க்கும் போதெல்லாம் பெரிய பெரிய எண்ணங்களைப் பரப்பி அந்த வாழ்வுக்கான அடித்தளத்தை உறுதி செய்தவர்கள் அவர்கள். அல்லவை தேய்ந்து அறங்கள் செழிக்க வேண்டும் என்று விரும்பிய அவர்கள், — பல நிலை அறங்களை, வாழ்வியல் மணி நெறிகளை வகுத்து வழங்கியதோடு, 'நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்' என்றும் அறிவுறுத்தியிருக்கிறார்கள். அத்தகைய அறிவுரை மணிநெறிகளில் ஒன்றுதான் பொய்ச்சாட்சி சொல்லப் போக வேண்டாம் என்னும் பொன்னுரை. அந்தப் பொன்னுரையை, ''வேண்டாம்'' என்று மறுதலை முகமாகச் சொல்லாமல் அறிவுடைய நன்மக்கள் பொய்ச் சான்று புகலப் போக மாட்டார்கள் (அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை) என்று அவர்கள் எடுத்துரைத்த நய நளினம் இன்றைக்கும் எண்ணி எண்ணிப் போற்றத் தக்கதாக உள்ளது.

## ஒரு கரும்புள்ளி

பெரிய வாழ்க்கைச் சிந்தனைகளையும் அரிய செயல்நடைகளையும் நடைநெறியாகக் கொண்ட சங்க காலத் தமிழர்களின் வாழ்க்கையில் ஆண்களின் பரத்தமை ஒழுக்கம் என்பது ஒரு பெரிய கரும்புள்ளியாகவே பதிந்துள்ளது. இடையறாத போர்க்களங்கள் நடைபெறும் சமுதாயத்தில், ஆண்கள் தொகை குறைந்து பெண்கள் தொகை மிகுதியாவதால், ஆடவர்கள் பல மனைவியரை மணந்து கொள்ளுதலும் பரத்தமை ஒழுக்கத்தில் ஈடுபடுதலும் தவிர்க்க முடியாத நெருக்கடிகளாகி விடுகின்றன.

என்று இதற்கு விளக்கம் சொல்லப்படுகிறது. சமுதாய வளர்ச்சியில் நிலவுடைமைச் சமுதாயம் என்னும் அமைப்பு உருவாகும் போது இத்தகைய சீர்கேடுகள் தலைதூக்குவதைத் தவிர்க்க முடியாது என்றும் இதற்கு விளக்கம் சொல்லப்படுகிறது.

கற்பிக்கப்படும் நியாயம் எதுவாக இருந்தாலும் சங்க காலத் தமிழர்களின் வாழ்வில் ஆடவர்களின் பரத்தமை ஒழுக்கமும் அதன் விளைவான பெண்ணுரிமைச் சிதைப்பும் இருந்தே வந்தன என்னும் உண்மையை மறைக்க முடியாது. நமக்குக் கிடைக்கிற பழைய இலக்கணமாகிய தொல்காப்பியமே, தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தில் தொடர்புபட்ட பெண்களை இற்பரத்தை, சேரிப் பரத்தை, காமக் கிழத்தி, பின்முறை வதுவைப் பெதும்பை என்றெல்லாம் பட்டியல் போட்டுக் காட்டு கிறது. குடும்ப நிகழ்ச்சிகளில் கல்வியிற் பிரிதல், பொருள்வயின் பிரிதல், போருக்காகப் பிரிதல் என்பவை போலப் பரத்தையிற் பிரிதல் என்பதையும் ஒரு நிகழ்ச்சியாகக் குறித்திருப்பதிலிருந்து அன்றைய வாழ்க்கை நடைமுறைகளில் பரத்தமையும் ஒன்றாக இருந்தது என்பது தெளிவாகவே தெரிகிறது. சமுதாயத்து ஆண்கள் அனைவரும் பரத்தமை ஒழுக்கம் உடையவர்களாக இல்லாவிட்டாலும் நமது இலக்கியங்களும் இலக்கணங்களும் எடுத்துப் பேசும் தலைமக்களின் வாழ்வில் இந்தப் பெரிய குறை பாடு இருந்திருக்கிறது என்பது தெளிவு. இதன் விளைவான பெண் மக்களின் வேதனை சற்றுக் கூடுதலாகவே இருந்தது என்பதையும் சங்க அக இலக்கியம் தெளிவாகவே கோடிட்டுக் காட்டுகிறது.

எப்போதுமே திங்களில் ஒளிப்பக்கம் மிகுதியாகவும் இருட் பக்கம் மிகக் குறைவாகவும் இருந்தாலும் அந்த இருட்டே பெரிய கறையாகத் தெரிவதுபோல, சமுதாய வாழ்வில் உள்ள பெரிய பெருமைகளை மீறிக் கொண்டு அதில் படர்ந்த சிறிய சிறுமைகளே பெரிதாகத் தோன்றுவது இயல்பு. 'யாரினும் இனியன் பேரன் பினனே' என்று நேரிடையாகவும்,

''உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்,
சூன்முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர்
தேம்பொதி கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும் யாணர் ஊரன்''

என்று குறிப்பாகவும் பல தலைவர்களின் மாறாத அன்பொழுக் கம் சங்க இலக்கியத்தில் பலபடப் பேசப்படத்தான் செய்கிறது.

எனவே, எல்லோரும் பரத்தை ஒழுக்கத்தினரே என்று முடிவு கட்ட இயலாது. ஆகவே, 'நெல்லுக்கு உமியும் நீருக்கு நுரையும் பூவுக்குப் புல்லிதழும் போல' இந்த ஒழுக்கச் சிதைவு அந்நாட் சமுதாயத்தில் ஒட்டிக் கிடந்தது என்றே கொள்ள வேண்டும். ஆயினும், இருந்துவந்த கேட்டை விளக்குவதற்கு இலக்கணம் அமைத்துக் கொடுத்த சான்றோர்கள், தவிர்க்க முடியாத இந்தக் கேட்டினைத் தடுத்து அளவுபடுத்தும் விதமாக வாழ்க்கை மணி நெறி ஒன்றையும் அதற்குத் துணையான நடைமுறைகளையும் வகுத்துக் கடைப்பிடித்தார்கள் என்பதே சங்ககாலத் தமிழர் களின் மனிதநேய மாண்புக்கு மற்றொரு சான்றாக விளங்கு கிறது.

## திருத்தும் மணிநெறி

கணவனுடைய பரத்தையிற் பிரிவு காரணமாகக் கண்ணீர் கண்ணீராக வடிக்கும் மனைவிக்கு ஊடல் உரிமை உண்டு. அதிலே கட்டுப்படாவிட்டால் கணவனைச் சாடும் உரிமையும் மனைவிக்கு உண்டு என்று மணிநெறி வகுத்திருந்தது தமிழ்ச் சமுதாயம். பரத்தையிற் பிரிவு காரணமான தலைவியின் ஊடலைச் சொல்லும் பல பாடல்களில் கணவன்மார் தங்கள் தவற்று ஒழுக்கத்தைக் கருதி நாணிக் கோணிக் கொண்டு நிற்பதையும், தலைவியை நேரில் எதிர்கொள்ள முடியாமல் பாணரையும் பாங்கரையும் தூதுவிட்டுக் கெஞ்சுவதையும், அனைத்தையும் மீறித் தங்கள் குழந்தையை வாரி எடுத்துக் கொண்டு வந்து நிற்பதையும் பார்க்கிற போது, மனைவிக்கு இருந்த ஊடல் உரிமையே கணவன்மாரின் தவற்றொழுக்கத்தைத் தட்டிக் கொட்டிச் சரிசெய்து விட்டது என்றே நினைக்கத் தோன்றுகிறது. குறுந்தொகை 252 ஆம் பாடலில் வருணிக்கப் படும் நிகழ்ச்சி, தலைவனின் பரிதாப நிலை கண்டு தலைவியே ஊடல் தீர்ந்ததாகச் சொல்லுகிறது. சாதாரணமாகச் சொல்ல வில்லை, தலைவியின் விட்டுக்கொடுப்பை அவளுடைய தோழி இடித்துக் காட்டுவதாகவும் அதற்குத் தலைவி நாகரிகமாக விடை சொல்லுவதாகவும் அமைகிறது அந்தப் பாட்டு.

'நெடிய திரண்ட தோள்வளை நெகிழ்ந்த
கொடிய னாகிய குன்றுகெழு நாடன்
வருவதோர் காலை இன்முகம் திரியாது
கடவுட் கற்பின் அவனெதிர் பேணி

மடவை மன்ற நீ' எனக் கடவுப
துணியல் வாழி தோழி; சான்றோர்
புகழு முன்னர் நாணுப
பழியாங்கு ஒல்பவோ காணுங் காலே.

இந்தப் பாட்டு தலைவியின் நாகரிகப் பண்பாட்டைச் சொல்லுவதை விட அவளுடைய ஊடலின் வெற்றியைச் சொல்லுகிறது என்றே கொள்ள வேண்டும். அவளுடைய ஊடலை எதிர் கொள்ள முடியாமல் நாணி நின்ற அவனை, மரம் ஏறி விழுந்தவனை மாடு ஏறி மிதித்ததுபோல, மேலும் தள்ளி மிதிக்க விரும்பாததாலேயே அவள் ஏற்றுக் கொள்ளுகிறாள்.

இந்த ஊடல் உரிமையைப் பயன்படுத்தாததாலேயே, கண்ணகியை விட்டுக் கோவலன் பிரிந்து வாழ்ந்தான் என்கிற எண்ணம் சிலப்பதிகாரத்தைப் படிப்பவர்களிலே பல பேருக்கு ஏற்படுவது வழக்கம். இந்தக் கருத்தை உள்வாங்கிக் கொண்ட இந்த நூற்றாண்டின் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்,

கண்ணகியைப் போலே
சின்னப் பிள்ளைத் தனமாய்க்
கணவனை விட்டுவிட மாட்டோம்

என்று ஒரு பெண் சொல்லுவதாகப் பாடியுள்ளார். ஊடல் உரிமை இருந்து விட்டதாலேயே எல்லா மனைவியரும் தடம் பிறழ்ந்த கணவன்மாரைத் திருத்திவிட முடியும் என்று சொல்ல முடியாது.

'சீனிக்கிழங்கு தின்ற பன்றி செவியை அறுத்தாலும் நிற்காது' என்பது பழமொழி. ஆயினும், முயற்சி திருவினை ஆக்கும் என்ற நம்பிக்கையும், ''நயம்பட நீ உரைக்கு மட்டும் திருந்தமாட்டான், நறுக்காக நான்கு சொற்கள் நவில வேண்டும்'' என்னும் செயல்முறைத் தெளிவும் உடைய பெண்கள் சங்க காலத்தில் இருந்திருக்கிறார்கள். அவர்களைப் பற்றிய செய்தி அன்பின் ஐந்திணை என்னும் வட்டத்துக்குள்ளேயே வருவதால், தங்கள் சாடல் முறை ஊடலில் வெற்றி பெற்றார்கள் என்றும் ஊகிக்க இடம் இருக்கிறது.

பொய்கைப் பள்ளி புலவுநாறு நீர்நாய்
வாளை நாள்இரை பெறூஉம் ஊர!
எம்நலம் தொலைவது ஆயினும்
துன்னலம் பெரும, பிறர் தோய்ந்த மார்பே

என்று ஐங்குறுநூற்றுத் தலைவி ஒருத்தி (63), ஊடலையே சாடலின் எல்லைக்கு உயர்த்துகிறாள். இந்த உரிமையை மனைவியரின் வாழ்க்கை நடைமுறைகளுள் ஒன்றாக வகுத்து வழங்கியிருந்த சங்ககாலத் தமிழர்கள் இந்த நடைமுறையையே ஒரு மணிநெறியின் தரத்துக்கு உயர்த்தி விட்டார்கள் என்பது தெளிவு.

## நம்பிக்கை தரும் நடைநெறி

தமிழர்கள் ஊக்கம் மிக்கவர்கள்; உழைப்பு மிக்கவர்கள்; தங்கள் உழைப்பிலே நம்பிக்கை மிக்கவர்கள். 'எறும்பு ஊரக் கல்லும் தேயும்' என்றும் 'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்றும் அவர்கள் பழமொழி சொல்லி வைத்திருப்பதே அவர்களின் விடாமுயற்சிக்கும் நம்பிக்கைக்கும் சான்றாக உள்ளது. இந்த நம்பிக்கையாலும் விடாமுயற்சியாலும் தமிழ் மக்கள் வாழ்வின் பல முனைகளிலும் வெற்றி பெற்றார்கள் என்பதற்குச் சங்க காலத்தை அடுத்து வந்த திருக்குறள் சான்று பகர்கிறது. ''குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம் மடி தற்றுத்தான் முந்துறும்'' என்கிறது குறள். ஆடவர்களின் பரத்தமை ஒழுக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்குச் சங்ககாலத்தார் வகுத்துக் கடைப்பிடித்த வாழ்க்கை மணிநெறி ஒன்று இந்த நம்பிக்கையைத் தமிழர்களுக்குத் தந்திருக்கிறது.

சங்க காலத்து இலக்கியங்களில் பாணன் என்பவன் தலைவன் தலைவியரிடையே ஏற்படும் ஊடலைத் தீர்க்கும் வாயில்களில் ஒருவனாகக் குறிக்கப்படுகிறான். இதைப் படிக்கின்றவர்கள், தலைவன் தருகின்ற பொன்னையும் பொருளையும் வாங்கிக் கொண்டு அவன் சார்பில் தலைவியிடம் போய்ப் பொய்யும் புளுகும் சொல்லித் தலைவியின் ஊடலைத் தீர்ப்பவன் இவன் என்றே நினைப்பார்கள். ஆனால், சங்க இலக்கியம் பாணனுக்கும் ஒரு மணி நெறியை வ்குத்துத் தந்துள்ளது. பொதுவான நிலைகளில்,—'ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை நடத்தி வைக்க வேண்டும்' என்கிற தோரணையில்,—தலைவியின் ஊடல் தீர்க்க ஏதேதோ உத்திகளைக் கையாளுகிறவன்தான் பாணன். ஆயினும், ஊடல் எல்லை தாண்டி ஒரு மனைவி தன் கணவனைச் சாட வேண்டிய அளவுக்கு அந்தக் கணவனின் புறக் கணிப்பு முற்றி விடும் போது, 'மடிதற்றுத்தான் முந்துறும் தெய்வம்' போல, தலைவியின் பக்கம் நின்று ஓங்கிக் குரல் எடுக்கத் தொடங்கி விடுகிறான் பாணன்.

நினக்கு யாம் பாணரேம் அல்லேம்; எமக்கு
நீயும் குருசிலை அல்லை மாதோ—
நின்வெங் காதலி தன்மனைப் புலம்பி,
ஈர்இதழ் உண்கண் உகுத்த
பூசல் கேட்டும் அருளா தோயே

என்பது ஐங்குறுநூறு 480ஆம் பாட்டு. பாணனின் இந்தக் கலகக் குரல் நமக்குப் பெரிய வியப்பைத் தருகிறது. தலைவர்களின் தவற்று நடைகளுக்கு முழுக்க முழுக்க உடந்தையாக இருக்கும் படிப்பாளிகளான அதிகாரிகளைப் பற்றிய பேச்சு பரவலாக அடிபடுகின்ற இந்த நாளில், தனக்கு எல்லா உதவியும் உயர்வும் செய்து வருகிற தலைவனுக்கு எதிராகவே குரல் எழுப்புகிற பாணனின் போக்கும் அதற்கு அவன் சொல்லுகிற காரணமும் பெரிய வியப்பைத் தருகின்றன. வாழ்க்கை மணிநெறி என்பது துண்டு துணுக்குகளாகக் கிடப்பது அல்ல, ஒருவருக்கு வகுத்த மணிநெறி மற்றொருவரின் வாழ்க்கை நெறியோடு ஒத்து இயங்கும்போதுதான் எந்த மணிநெறிக்கும் வெற்றி கிட்டுகிறது என்னும் உண்மையும் நமக்குப் புலப்படுகிறது.

## சான்றோர் எழுச்சி

அக இலக்கியத்தில் கிடைக்கின்ற ஒழுக்கச் செப்பம் கருதிய இந்த மணிநெறிகளின் தொடர்ச்சி புற இலக்கியத்திலும் ஊடுருவிக் கிடக்கிறது. வையாவிக்கோ பெரும் பேகன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். ஆயினும் நடை பிறழ்ந்து, தன் மனைவி கண்ணகி இருக்க, வேறொருத்தியை நாடி அவளிடமே இருந்து விட்டான் அவன். கண்ணகியின் ஊடலும் சாடலும் பேகன்பால் செம்மையை உண்டாக்கவில்லை. ஊடல் உரிமையும் தனக்கே உரிய கணவனைத் தனக்கே ஆக்கிக் கொள்ளும் உரிமையும் ஒரு மனைவிக்கு உண்டு என்னும் மணிநெறி தோற்றுப் போவதை, ஐங்குறுநூற்றுப் பாணனைப் போலவே, அந்நாள் புலவர் பெருமக்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. பேகனைச் சந்தித்து எடுத்துரைத்து இடித்துரைக்க அவர்கள் அனைவரும் புறப்பட்டு விட்டார்கள் அவனிடம் சென்ற கபிலர்,

இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
முலையகம் நனைப்ப விம்மி
குழல் இனைவது போல் அழுதனள் பெரிதே

என்று கண்ணகிக்காக உருகினார். அவனிடம் சென்ற பரணர்,

அருளாய் ஆகலோ கொடிதே...
யாம் அவன் கிளைஞரேம் அல்லேம்;
கேள் இனி—
எம்போல் ஒருத்தி நலன்நயந்து என்றும்
வரூஉம் என்ப

என்று கண்ணகியே கதறலோடு சொன்னதாகக் கசிந்து சொன்னார். அவரே,

அறம் செய்தீமோ அருள்வெய் யோய்என
இஃது யாம் இரந்த பரிசில்: அஃது அருளின்
இனமணி நெடுந்தேர் ஏறி
இன்னாது உறைவி அரும்படர் களைமே

என்றும் வேண்டிக் கொண்டார்.

அடுத்துச் சென்ற பெருங்குன்றூர்க் கிழார்,

அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை
நெய்யொடு துறந்த மையிரும் கூந்தல்
மண்ணுறு மணியின் மாசுஅற மண்ணி
புதுமலர் கஞல இன்றுநீ பெயரின்
அதுமன் எம்பரிசில்—ஆவியர் கோவே

என்று விளக்கி வலியுறுத்தினார். இத்தனை பேரின் அறிவுரைகளுக்கும் அசையாத பேகனைக் காணச் சென்றார் அரசில் கிழார். பேகன் வழக்கம் போல, பரிசுப் பொருட்களை அள்ளி அவர் முன்னே வைத்தான். தம்முடைய கடமையைச் செய்வதற்கு அவன் தடை விதிப்பதாகவும் தன் தவற்றை மறைக்கப் பரிசில் வழங்குகிறான் என்றும் சினம் கொண்ட அரிசில்கிழார்,

அன்னஆக நின் அருங்கல வெறுக்கை
அவைபெறல் வேண்டேம்

என்று அள்ளி எறிந்தார். 'அருந்துயர் உழக்கும் நின் திருந்திழை அரிவை ஒலிமென் கூந்தல் கமழ்புகை கொளீஇ, தண்கமழ் கோதை புனைய வண்பரி நெடுந்தேர் பூண்க நின் மாவே'

என்றும் கட்டளையிட்டார். இவ்வாறாக, ஒரு மனைவியின் ஊடல் கண்ணீர் அந்நாள் புலவர் பெருமக்கள் அனைவரையுமே அவன் சார்பில் போர்க் கோலம் புனையச் செய்து விட்டது.

உயர் நடைகளுக்கு வழித்தடம் அமைத்துக் கொடுப்பது மட்டுமே வாழ்க்கை மணிநெறி ஆகிவிடாது என்பதைச் சங்க காலத் தமிழர்கள் நன்றாகவே அறிந்திருந்தார்கள். அதனாலே தான் அன்புக்கும் அறிவுக்கும் இன்பத்துக்கும் ஈகைக்கும் பண்புக்கும் மணிநெறிகளை வகுத்துத் தந்த அவர்கள், ஏதோ வரலாற்றுக் காரணத்தால் சமுதாயத்தில் ஊடுருவிக் கிடந்த ஆடவர்களின் பரத்தைமை ஒழுக்கத்தைத் தடுத்திடவும் மனைவியருக்கு ஊடல் உரிமை, மற்றவர்களுக்கு அதை அரண் செய்யும் கடமை என்பவைகளையும் மணிநெறிகளாக வகுத்து வழங்கியிருக்கிறார்கள். சமுதாய நல்லியக்கத்தில் சான்றோர்கள் கொண்ட பெரிய நேயமே இத்தகைய பரந்துபட்ட வாழ்க்கை மணிநெறிகளை அவர்கள் வகுத்துக் கொடுத்ததற்கும், அன்று வாழ்ந்தவர்கள் அவைகளை எந்த நிலையிலும் கடைப்பிடித்ததற்கும் காரணங்கள் என்று சொல்ல வேண்டும்.

## தொகுப்புரை

இங்கு நாம் ஒவ்வொன்றாகப் பார்த்து வந்த வாழ்க்கை நடைமுறைகள் உயர்ந்த வாழ்வுக்குச் சங்ககாலத் தமிழர்கள் வரையறுத்த இலக்கணங்கள். ஒரு பெரிய மரத்துக்கு எத்தனை கிளைகள் இருந்தாலும் அதன் ஆணிவேரின் மூலம் கிடைக்கின்ற ஊட்டமே அந்தக் கிளைகள் அத்தனைக்கும் ஊட்டமாக அமைகிறது. வேரின் நலனே கிளைகளின் நலனாகவும் இலை தழை பூ கனிகளின் நலனாகவும் வந்து விரிகிறது. ஒரு கிளையின் ஒரு தளிரில் வாட்டம் தென்படுகிறது என்றால் அந்த மரத்தின் வேரில் ஏதோ குறை ஏற்பட்டிருக்கிறது என்பது பொருள். "அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே" என்னும் நாலாயிரப் பாட்டடியில் வருகின்ற 'கொழுந்து' என்னும் சொல்லுக்கு ஈடு உரையாசிரியர் இந்த மரபைப் பின்பற்றியே உரை வகுக்கிறார்: கண்ணனை ஆயர்தம் கொழுந்து' என்று குறிக்கிறது இந்தப் பாட்டு. அது ஏன் என்றால், மரத்தின் தன்மை அதன் கொழுந்திலே வெளிப்பட்டுத் தெரிவது போல ஆயர்குடியின் மகிழ்ச்சியோ வாட்டமோ எல்லாமே கண்ணனின் முகத்திலேயே தெரிந்துவிடும் என்கிறார் அந்த உரையாசிரியர். இதே தோரணையில்தான் பழந்தமிழர்கள் வாழ்வுக்கு இலக்கணம் வகுத்திருக்கி

றார்கள். ஒருவனுடைய வாழ்க்கையின் எந்த ஒரு கூறு நலிவுற்றுத் தெரிந்தாலும் அவனுடைய வாழ்க்கை நடையில் மனித நேய உணர்ச்சி குன்றிப் போனதே அதற்குக் காரணம் என்று கணித்திருக்கிறார்கள். அதனாலேதான், வாழ்க்கை இலக்கியங்களுக்கெல்லாம் அடிப்படை இலக்கணமாகவும் அவைகளில் ஒவ்வொன்றுக்கும் உறுதுணை ஊட்டமாகவும் மனித நேயத்தையே எடுத்து வலியுறுத்தியிருக்கிறார்கள் சங்ககாலத் தமிழர்கள்.

பழங்கால வாழ்க்கை முறையிலிருந்து நாகரிகமான மனிதச் சமுதாய வாழ்வை நோக்கி நடை எடுக்கத் தொடங்கியதிலிருந்தே தமிழர்கள் சில அடிப்படையான தெளிவுகளைப் பெற்றிருந்தார்கள். அவைகளில் முக்கியமான ஒன்று மனிதனின் அடிப்படையான உணர்வோட்டத்தைப் பற்றிய கணிப்பு. உயிரினங்களை எல்லாம் அறிவு அடிப்படையில் பிரித்துக் கண்ட தமிழர்கள் மனிதன் மட்டுமே ஆறாவது அறிவு என்னும் மன உணர்வு உடையவன் என்று கணித்தார்கள். மன உணர்வு என்பது நல்லது இது, அல்லது இது என்று பகுத்து உணரும் அறிவு என்றும் வரையறுத்துக் கொண்டார்கள். இத்தகைய அறிவைப் பெற்ற மனிதர்கள் அந்த அறிவின் விளைவான வாழ்க்கையைச் செம்மையாக நடத்த வேண்டும் என்றால் அவர்களின் வாழ்க்கையை வழிநடத்தக் கூடிய சில மணிநெறிகளை வகுத்து வலியுறுத்த வேண்டும் என்றும் முடிவு செய்து கொண்டார்கள். அவ்வாறு அவர்கள் எடுத்து வழங்கிய மணிநெறிகளில் சிலவே மேலே நாம் வகுத்து விரித்துக் கண்டவை. அவைகளைத் தொகுத்து அடைவுபடுத்திக் கொள்ளுவது அவைகளை மீட்டு நினைவுகூரவும் அவைகளை நெஞ்சில் இருத்திக் கொள்ளவும் உதவியாக இருக்கும்.

மனிதன் எதையும் பகுத்து உணரும் ஆற்றலையே அடிப்படை ஆற்றலாகக் கொண்டிருப்பதால் அவனுடைய வாழ்க்கை நல்லதன் செழிப்புக்காகவே நடைபெற வேண்டும். நல்லதன் செழிப்புக்காக நடைபெறுவது என்றால், மனிதன்தான் ஒரு சமுதாயப் பிராணி என்பதை உணர்ந்து அதற்கு ஏற்ற வகையில் தன் வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.

மனிதவாழ்வு என்பது ஒரு தனிமனித இன்பத்தில் தொடங்கி, இரண்டு மூன்று நான்கு என்று தொடர்புடைய பலபேரின் இன்பத்துக்கு அடித்தளமாக இருப்பதால், அந்த வாழ்க்கை தனிமனித வளர்ச்சி, காதல் இணைவு, மற்றவர்களுக்கு உதவி

என்னும் தளங்களில் விரிவுபட வேண்டும். இதைத்தான் அறம் எனப்பட்டது இல்வாழ்க்கையே என்றும் இல்லறமல்லது நல்லற மன்று என்றும் தமிழ் முன்னோர் சொல்லி வைத்திருக்கிறார்கள்.

விருந்து ஓம்பி வேளாண்மை செய்வதையே முதன்மை நோக்கமாகக் கொண்ட இல்லறத்தில் பல இனிய நடைமுறை களும் இணக்க நெறிகளும் ஏற்றமிகு எண்ணங்களும் கலந்து ஊடாட வேண்டும். அவைகளுள் முக்கியமானது (செல்வம்) பெருமை என்பதைப் பற்றிய தெளிவு. ஒவ்வொருவரும் நெடிய மொழிதலையும் கடிய ஊர்தலையும் (செல்வம்) தங்களுக்குப் பெருமை என்று எண்ணிக் கொள்ளக் கூடாது. தொடர்புபட்டவர்களுக்குத் துன்பம் ஏற்பட்டு விடாதபடி பார்த்துக் கொள்ளுதலும் துன்பம் ஏற்பட்டுவிட்டால் அதை உடனேயே துடைக்க முந்துவதுமே மனித வாழ்வில் பெரிய பெருமைகள் அல்லது அரிய செல்வங்கள்.

இல்வாழ்க்கையே நல்வாழ்க்கை என்று அறுதியிட்டு உறுதி செய்து கொண்டதால் வாழ்க்கையில் பொருட் செல்வத்துக்கும் ஒரு முக்கியமான இடம் உண்டாகி விடுகிறது. தாங்கள் செய்ய வேண்டிய வேளாண்மையைத் தடையின்றிச் செய்வதற்கும் மற்றவர்களின் கையை எதிர்பாராமல் தங்கள் வாழ்வைச் செம்மாப்போடு நடத்துவதற்கும் பொருட்செல்வம் தேவை என்பதை உணரவேண்டும். கணவன்-மனைவியரின் இளமை காரணமாகவே உண்டாகும் இன்ப நுகர்வு உணர்ச்சி ஆர்வம் மிகப் பெரியதுதான் என்றாலும் அதிலேயே மூழ்கிப் பொருள் தேடும் கடமையை எந்தக் கணவனும் புறக்கணித்துவிடக் கூடாது.

நல்லது செய்தல் என்பது சமுதாய நலனுக்கு உகந்த ஒரு சிறந்த நடைமுறை. ஆயினும் செயற்கரிய செய்வர் பெரியர் என்பது நிலையான உண்மையாக இருப்பதால் எல்லோருமே நல்லது செய்பவர்களாக நடைதொடர முடிவதில்லை. ஆனாலும் அத்தகையவர்கள் நாம் ஒன்றுமே இல்லை என்று ஓய்ந்துவிட வேண்டியதில்லை. ஆக்கப்பணிகளில் அழுத்தமாக ஈடுபட முடியாவிட்டாலும் ஆக்கத்தைத் தடுக்கும் தீங்கான நடவடிக்கைகளில் ஈடுபடாமல் அவர்கள் தங்களைத் தாங்களே காத்துக் கொள்ளுவதே சிறந்த நடைமுறை.

வாழ்க்கை என்பது தொடர்ந்த செயல்களின் ஒரு தொகுதி. வாழ்க்கை நிகழ்ச்சிகள் சங்கிலித் தொடர் போல் ஒன்றை யொன்று தொடர்ந்து வரவேண்டும். அதிலே தடை ஏற்பட்டால்

வாழ்க்கைத் தொடர் அறுந்து மனிதனைத் தேக்க நிலையில் தள்ளிவிடும். ஆகையால் ஒவ்வொரு மனிதனும் செய்ய வேண்டிய செயல்களை உரிய நேரத்தில் செய்வதிலும் செய்ய வேண்டாதவைகளைத் தவிர்ப்பதிலும் எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும்.

மற்றவர்களுக்கு ஒன்றைக் கொடுத்து மகிழும் இன்பம் என்பது ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் மலர்விக்கும் ஒரு நடைமுறை. சமுதாயத்தின் ஒரு பகுதியினருக்கு வாழ்க்கை இன்பங்கள் சென்று எட்டாத விதமாகச் சமுதாய அமைப்பு தொடரும் போது இந்த இன்ப நடைமுறையே வாய்ப்பு உள்ளவர்களின் வாழ்க்கைக் கடமையாக வடிவம் கொண்டு விடுகிறது. அதுதான், அப்படிப்பட்ட சமயங்களில் எல்லோரும் கைக்கொள்ள வேண்டிய ஈகை என்னும் கடமை. ஈகை என்னும் கடமை அதனால் பயன் பெறுகிறவருக்கு ஒரு பொறுப்பை உண்டாக்கி விடுகிறது. அதுதான், அவர் பெற்ற உதவிக்கு இணையாக அல்லது அதனினும் மேலாக அவர் திருப்பிச் செலுத்த வேண்டும் என்கிற பொறுப்பு. ஆனாலும், ஈகை என்பது அதனால் பயன் பெறுகிறவரின் பெரிய தேவையை அடிப்படையாகக் கொண்டு நடைபெறும் செயலாகையால் அது எதிர்பார்த்துச் செய்யும் செயலாகவே நடைபெறக்கூடாது. இம்மையில் நாம் ஒருவருக்கு ஓர் உதவி செய்தால் மறுமையில் நமக்குப் பெரிய இன்பம் கிடைக்கும் என்கிற வணிக நோக்கு உடையதாக ஈகை நடைபெறவே கூடாது.

அறிவு என்பதே நல்லது; இது அல்லது இது என்றும் இனியது இது, இன்னாதது இது என்றும் பகுத்து உணரும் மன உணர்வாகையால்,ஓர் உயிர் துன்புறும்போது அந்தத் துன்பத்தை நீக்கிட எந்த மனிதனும் உடனேயே எழுந்து புறப்பட வேண்டும். இத்தகைய செயல் துடிப்பு இல்லாதவன் மனித வடிவத்திலே பிறந்திருந்தாலும் அவன் மனிதன் என்று கருதப் படக் கூடாது.

பொருட் செல்வத்தின் பெருமை அது எப்படிப் பயன் படுத்தப்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான் அமைகிறது. ஒருவன் சிறந்த மனிதனாக உயர்வு பெற வேண்டுமானால் அவன் தன்னிடம் உள்ள பொருளை எப்படிப் பயன்படுத்துவது என்ற தெளிவு உடையவனாக இருக்க வேண்டும். பொருள் உடையவன், அதைத்தான் மட்டுமே உண்ணாமல் மற்றவர் களுக்கும் பகிர்ந்து வழங்க வேண்டும். பொருள் (உணவு) மிகக்

குறைவாக இருக்கும் போது, பகிர்ந்து உண்டால் பசி தீரும் என்னும் உண்மையை உணர்ந்து, தானும் மற்றவர்களும் ஒன்றாக இருந்து, போதாத அந்த உணவை எல்லோருமாகப் பகிர்ந்து உண்ண வேண்டும்.

எதுவும் நிலையில்லாத இந்த உலகத்தில் நிலைபேற்றைத் தேடிக் கொள்ளுவதற்கும் வாய்ப்பு உள்ளது. தான் இறந்த பிறகும் அழியாமல் நிற்கும் பெருமையை அவன் தேடிக்கொள்ள வேண்டும். இதற்கு உரிய நேரான வழி ஒவ்வொருவரும் புகழ் பெற்றுக் கொள்ளுவதே. அறிவின் ஆற்றலாலும் செயல்களின் செழுமையாலும் ஒவ்வொரு மனிதனும் மற்றவர்கள் தன்னைப் புகழுமாறு வாழ்க்கை நடத்த வேண்டும். புகழ் பூத்த இந்த வாழ்க்கைதான் ஒவ்வொரு மனிதனுக்கும் அழியாமை என்னும் நிலைபேற்றைத் தருகிறது. பல துறைகளிலும் நிலைகளிலும் மனிதன் புகழைத் தேடிக் கொள்ள முடியுமானாலும், ஈகையினால் வரும் புகழே பெரிய புகழாக ஓங்கி மனிதனுக்கு நிலைபேற்றைத் தருகிறது.

மனித வாழ்க்கை என்பது தலைமுறைகள் ஒன்றையொன்று தொடர்ந்துவரும் ஒருநெடுங்கதை. நெடுங்கதையின் தொடக்கம் போகப் போக வளர்ந்து விரிந்து முழுமை பெறுவது போல,மனித இனத்தின் ஒவ்வொரு தலைமுறையும் முந்திய தலைமுறையை விட வளர்ச்சி பெற்றதாகவும் உயர்வு பெற்றதாகவும் விளங்க வேண்டும். வளர்ச்சியையே நோக்கமாகக் கொண்ட மனிதனின் வாழ்க்கை வரலாற்றில் தளர்ச்சிக்கோ ஏற்கனவே வளர்த்து வைக்கப்பட்டதைத் தகர்ப்பதற்கோ இடமே கிடையாது. அப்படிச் செய்கிறவர்கள் மனிதர்களாகவே கருதப்பட மாட்டார்களாகையால்,—பாட்டன், தந்தை முதலியவர்கள் தேடிவைத்த பொருள், புகழ் போன்றவைகளை அழித்துவிடாமல் அவைகளை மேன்மைப்படுத்தி மிகுதிப் படுத்துவதே சிறந்த வாழ்க்கை.

இதுபோன்ற பொறுப்புடைய வாழ்க்கையில் சில நல்ல மன ஓட்டங்களையும் மனிதர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். துன்புற்றவர்களுக்கு ஆதரவாக இருப்பது, அவர்களின் துயரம் கரையும் விதமாக இனிய மொழிகளைப் புகல்வது போன்ற எளிய நடைமுறைகள் மூலம் மனித வாழ்க்கைக்கே அழகு சேர்க்க வேண்டும். அவலமுற்றவர்களுக்கு ஆறுதலாக விளங்குவது போலவே அஞ்சி ஒடுகிறவர்களை விரட்டித் தாக்காத பெருந்தகைமையையும் எல்லோரும் பேணி வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பிறருக்கு மகிழ்ச்சி ஏற்படுத்துதல், அவர்களின் மகிழ்ச்சிக்காக அவர்கள் அறியாமல் செய்துவிடும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதல் போன்ற இயல்புகளை வளர்த்துக் கொள்ளுகிற வர்களே சிறந்த நாகரிகமுடைய பண்பாளர்களாக உயர்வடை கிறார்கள். இத்தகைய நனிநாகரிகர்கள், தங்களுக்கு இனிய வர்கள் விரும்பினால் தங்கள் இன்னுயிரையே மாய்த்துக் கொள்ளும் பெருந்தியாகப் பெருநிலையை எட்டுகிறார்கள்.

இல்லறமே நல்லறம் என்று அந்த அறத்தை வாழ்க்கையாக ஏற்றுக்கொண்ட இரண்டு பேரும் ஒருவர்பால் மற்றவர் குன்றாத அன்பும் ஈடுபாடும் உடையவர்களாக விளங்க வேண்டும். எந்த நிலையிலும் ஒருவர்க்கு ஒருவர் உறுதுணையாக நிற்க வேண்டும். சிறந்த மனைவி எந்த நிலையிலும் தன் கணவனின் பெருமைக்கு ஒவ்வாத செயல்களை நிகழ்த்தவே கூடாது. அதே போல, ஒவ்வொரு கணவனும், தன் மனைவி தன்னில் ஒரு பகுதி என்னும் காதல் உண்மையை உணர்ந்து எந்த நிலையிலும் அவளுக்குத் துணை செய்பவனாக விளங்க வேண்டும். 'ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும் ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை' என்பதே எந்தக் கணவன் மனைவியரின் குறிக் கோளாகவும் விளங்க வேண்டும்.

பொய்ம்மை என்பது வாழ்வையே சிதைத்துவிடக் கூடிய ஒரு கொடிய நோய். அது தனி வாழ்வையும் முடக்குகிறது; குடும்ப வாழ்வையும் குலைக்கிறது: சமூக வாழ்வையும் சப்பாணி யாக்கிப் போடுகிறது. இத்தகைய பொய்ம்மையின் ஒரு வடிவம் தான் பொய்ச்சாட்சி சொல்லுதல் என்னும் கெட்ட நடைமுறை யாகக் கிளைக்கிறது. ஆகையால், பொய்ச்சாட்சி சொல்லுவது என்பதை எந்த நிலையிலும் மனிதர்கள் தவிர்த்திட வேண்டும். சாட்சி சொல்லுவது பெரும்பாலும் நீதிமன்றம் என்னும் அற மன்றத்திலேயே நிகழ்கிறது. நீதிமன்றம் என்பது 'அறம் நிலை திரியா அன்பின் அவைய'மாக விளங்கி மக்களின் வாழ்விலே நீதி என்னும் நறுநிழலைப் படரச் செய்கிறது. அங்கே பொய்ச் சாட்சி சொல்லப்பட்டால் அந்தப் பெரிய அவையின் பெரிய நோக்கமே சிதைந்து போகிறது. ஆகையால், தங்களை மனிதர் கள் என்று கருதுகிறவர்களும் தங்களை மற்றவர்கள் அப்படி மதிக்க வேண்டும் என்று விரும்புகிறவர்களும் பொய்ச் சான்று புகல்வதைத் தவிர்த்திட வேண்டும்.

குடும்ப வாழ்வில் ஆணும் பெண்ணும் சமம் என்ற கருத்து அடிப்படையாக இருந்தாலும், நடைமுறையில் அவர்கள்

இருவரில் எவருடைய கையில் ஆற்றல் மிகுதியாகக் குவிந்து விடுகிறதோ அவர் மற்றவரை அடக்கி ஆளும் நிலை உருவாகி விடவே செய்கிறது. உடல்வலிமை காரணமாகவும் சொத்துரிமை காரணமாகவும் நமது சமுதாயத்தில் ஆடவனின் கையிலேயே ஆற்றல் குவிந்து விடுகிறது. குவிந்த அந்த ஆற்றலை வைத்துக் கொண்டு அவன் தாறுமாறாக நடப்பதும் ஒரு சமுதாயக் கேடாகவே நிலைத்துள்ளது. இந்தக் கேடு பேருருக் கொள்ளாமல் அவ்வப்போதாவது மட்டுப்படுத்தி வைக்கப்பட வேண்டுமானால் பெண்ணுக்கும் சில ஆற்றல்கள் தந்து வைக்கப்பட வேண்டும். இந்த அடிப்படையில் சமுதாயச் சான்றோர்கள், குடும்பத்துக்கு ஏற்ற ஒரு மணிநெறியை வகுத்துத் தந்தார்கள். அதுதான் காதல் மனைவிக்கு உரிய ஊடல் உரிமை. இந்த உரிமை, தேவை ஏற்படும் போது, கணவனைச் சாடித் திருத்தும் உரிமையாகவும் இருக்க வேண்டும் என்பது சமுதாயச் சான்றோர்கள் விதித்துள்ள கட்டளை.

உடல் வலிமையும் பொருளாதார உரிமையும் இல்லாத மனைவி, தறிகெட்டுத் திரியும் தன் கணவனைத் தடுத்துத் திருத்திவிட முடியுமா என்ற நியாயமான கேள்வி எழுந்தபோது, --மனைவிக்கு ஊடல் உரிமையும் சாடல் உரிமையும் உண்டு என்னும் மணிநெறிக்குப் பக்கத் துணையாக வேறு இரண்டு மணிநெறிகளை வகுத்து நிறுத்தினார்கள். அவைகளுள் ஒன்று, மனைவியைப் புறக்கணித்துத் திரியும் கணவனை, அவனுடைய பாங்கனே கண்டித்துத் திருத்தும் உரிமை. மற்றது, அந்தக் குடும்பத்தோடு நேரிடைத் தொடர்பு இல்லாத சமுதாயச் சான்றோர்கள் அவனை இடித்துரைத்துத் திருத்துகின்ற உரிமை. அதாவது, குடும்ப வாழ்வில் குழப்பம் ஏற்படும் போது, அந்தக் குடும்பத்தோடு தொடர்பு உடைய பாங்கன், பாங்கி முதலியவர்களும் தொடர்புபடாத பெரியவர்களும் அந்தக் குழப்பத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதை அவர்களுக்குரிய வாழ்க்கை மணிநெறியாக வகுத்துத் தந்தனர் தமிழ் முன்னோர்கள்.

சங்க காலத் தமிழர்கள் வாழ்வின் இன்பத்தையும் துன்பத்தையும் அதன் ஏற்றத்தையும் இறக்கத்தையும் நன்றாக உணர்ந்தவர்கள். பலவிதமான மன ஓட்டங்கள் கொண்ட மனிதர்களை ஒரு சமுதாயமாக இணைத்து வைக்க வேண்டும் என்றால், இல்லறமாகிய மெல்லிய கயிற்றால்தான் அத்தனை பேரையும் ஒருங்கிணைக்க முடியும் என்று அவர்கள் கண்டறிந்தார்கள்.

இல்லறம் சரியாக நடைபெற்றால் சமுதாய வாழ்வுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது என்பது அவர்களுடைய வயிரம் பாய்ந்த எண்ணம். இந்த உறுதிப்பாடு எந்த நிலையிலும் நெகிழாமல் இருக்க வேண்டுமானால் குடும்ப வாழ்விலும் அதன் விரிவாகிய சமுதாய வாழ்விலும் அவ்வப்போது ஏற்படக் கூடிய சிறிய சிதைவுகளை அவ்வப்போதே செப்பம் செய்துவிட வேண்டும் என்பதை அவர்கள் தெளிவாக உணர்ந்தார்கள். இந்தச் செப்ப நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக அவர்கள் கண்டறிந்த வைகளே மேலே நாம் வரிசைப்படுத்திக் காட்டிய அவர்களின் வாழ்க்கை மணிநெறிகள். இந்த மணிநெறிகள் மனிதநேய உணர்வின் விளைவாகையால் அவைகளின் அரவணைப்பில் சங்ககாலத் தமிழர்களின் வாழ்க்கை பெரும்பாலும் சரியாக நடந்து வந்தது என்பதே வரலாறு.

# மனிதநேய இலக்கியம்

வாழ்க்கை மணிநெறிகளை வகுத்துச் சொல்லுவது எளிது. நல்ல சிந்தனை உள்ள நாலு பெரியவர்கள் இருந்தால் அவர்களே அவ்வக்காலத்திய வாழ்வுக்குத் தேவையான நல்ல நடைமுறைகளை இனிய சொற்களால் எடுத்து இயம்பி விடுவார்கள். ஆனாலும் அவைகளை முழுக்க முழுக்க மனிதநேய அடிப்படையில் வடித்துச் சொல்லுவதும் மக்கள் அவைகளைத் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்குமாறு செய்வதும்தான் மிக மிகக் கடினம். இந்தக் கடினமான பணியைச் சங்ககாலத் தமிழர்கள் இயல்பாக நடைமுறைப்படுத்தி வந்திருக்கிறார்கள் என்பது தான் இன்றைக்கும் வியப்பை அளிக்கிறது.

நாம் முற்றிலும் வேறுபட்டதொரு சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மக்களிடையே மனிதநேய உணர்வோட்டத்தைப் பாதுகாத்து வளர்ப்பதற்கு என்றே பல அமைப்புகள் உருவாகியுள்ள காலம் இது. ஆனாலும், மதத்தின் பேராலும் சாதியின் பேராலும் மனிதநேயம் நடுத்தெருவில் கொலை செய்யப்படுவதை இக்காலத்து நம்மால் தடுத்து நிறுத்த முடியவில்லை. வாழ்வுக்கு ஒவ்வவே ஒவ்வாத வக்கிரத் தன்மைகளால் மனித மாண்பு வற்றடிக்கப்படுவதையும் நம்மால் மாற்றிவிட முடியவில்லை.

இந்தச் சூழ்நிலையில் நின்று கொண்டு, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று சங்ககாலத் தமிழர்கள் வகுத்துக் கொண்ட வாழ்க்கை நடைமுறையை நம்மால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. ஏதோ ஆகாயச் சிலம்பமாக. எட்டாத இலட்சியமாக யாரோ ஒருவர் எழுப்பி விட்டுப் போன குரல் இது என்று முடிவு செய்யவே நம் உள்ளம் தூண்டுகிறது. அதே சமயத்தில் சங்ககாலத்து வரலாற்று மனிதர்கள் இந்த நெறிமுறையைக் கடைப்பிடித்து வாழ்ந்திருக்கிறார்கள் என்னும்

பெரிய உண்மை எழுந்து நின்று நம்மை வியப்பிலும் மகிழ்விலும் ஆழ்த்துகிறது.

## கலந்து இனிது வாழ்ந்தார்கள்

பத்துப்பாட்டில் ஒன்றாகிய பட்டினப்பாலை கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழமன்னனின் பெருமைகளை விவரிக்கிறது. அதற்கு ஆதாரமாக அவனுடைய காலத்தில் அவனுடைய நாட்டில் நடைபெற்ற பல்வேறு அன்றாட நிகழ்ச்சிகளை அணி அணியாக விவரிக்கிறது. அவைகளிலே ஒன்று வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள், வாணிபம், கல்வி, தொழில் என்பவைகளுக்காக இங்கே வந்த சிறுபான்மை மக்கள், வெறுப்புகளும் வெடிப்புகளும் இல்லாமல் காவிரிப்பூம்பட்டினத்துத் தமிழ்மக்கள் மத்தியில் தனித்து மகிழ்ச்சியோடு வாழ்ந்தார்கள் என்பதைப் பற்றியது.

மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்துஇனிது உறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம் (216-219)

என்று கரிகாலனின் காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பிக்கிறது இந்தப் பாட்டு. காவிரிப்பூம்பட்டினத்தின் வற்றாத சிறப்புகளுக்கு உரிய மாண்புமிகு நடைமுறையில் ஒன்றாக இந்த நிகழ்ச்சியைச் சொல்லுகிறது பட்டினப்பாலை.

காவிரிப்பூம்பட்டினத்திலே வந்து சேர்ந்தவர்கள் தமிழகத்தின் வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அல்லர். வேறுவேறு மொழிகளைப் பேசும் வேறுவேறு நாடுகளிலிருந்து வந்து சேர்ந்தவர்கள் அவர்கள். எனவே, அவர்களின் பழக்க வழக்கங்களிலும் பண்பாடுகளிலும் பெரிய முரண்பாடுகள் இருந்திருக்கவே வேண்டும் ஆனாலும், 'ஆயிரம் பூக்கள் மலரட்டும்' என்கிற தெளிவார்ந்த சிந்தனையோடு அந்தச் சிறுபான்மையினர்களை எல்லாம் அரவணைத்துக் கொண்டு வாழ்ந்திருக்கிறார்கள் சங்க காலத் தமிழர்கள். இதற்குக் காரணமான மனிதநேய உணர்வோட்டம் வளர்ந்த வரலாற்றை நோக்கினால்தான் இந்தப் பெரிய வெற்றியின் பின்னணி நமக்குப் புரியும்.

'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்பது எப்போதோ இடைக்காலத்தில் தோன்றிய பழமொழி மட்டுமல்ல, பழங்காலத் தமிழர்களின் வாழ்க்கை நெறியாகவும் இருந்திருக்கிறது.

வீடு செழிக்கப் பொருள் தேடவும் நாடு செழிக்க வாணிபம் செய்யவும் அந்த நாட்களிலேயே தமிழர்கள் கடல்கடந்த நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். அப்படிச் சென்ற காலங்களில் அங்கங்கே இவர்கள் கண்ட வாழ்க்கை நடைமுறை வேறுபாடுகளைக் கொண்டே உலகம் பலவிதம் என்னும் உண்மையைத் தங்கள் பட்டறிவால் தமிழர்கள் உணர்ந்து தெளிந்திருக்கிறார்கள். ஓர் இனத்தவரின் பழக்கவழக்கப் பண்பாடுகளை மதித்து நடப்பதால் கிடைக்கின்ற மனிதநேயச் சீர்மையை அன்றாடம் அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அதனாலேயே தங்களிடம் வந்து சேர்ந்த அயலவர்கள் தங்களோடு 'கலந்து இனிது உறையும்' சீரிய வாழ்வுக்கு இவர்கள் தளம் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

## மனிதநேயக் குதூகலம்

விளையாட்டுக்குக் கூடப் பொய் சொல்லக்கூடாது என்று சொல்லுவார்கள். இன்றைக்கு நகைச்சுவைக்காகவே வெவ்வேறு மொழி இனத்தவர்களிடையே ஏற்றத்தாழ்வுகளைக் கற்பித்துக் கிண்டல் செய்யும் மனிதநேயமற்ற வறட்டுத்தனம் இந்தியத் திரைப்படங்களில் இருட்டுத் தனத்தைப் பரப்பி வருகிறது. இந்தித் திரைப்படங்களில் தமிழகத்தாரை அல்லது தமிழகத்துப் பார்ப்பனர்களைக் கிண்டல் பண்ணிப் புண்படுத்துவது ஒரு வகையான நகைச்சுவையாகக் கருதப்படுகிறது. அதே போல, தமிழ்த் திரைப்படங்களில் மற்ற மொழிக்காரர்கள் தமிழைச் சரிவர பேசமுடியாமல் தடுமாறுவது ஒரு நகைச்சுவையாகக் காட்டப்படுகிறது. இப்படிச் செய்வதன் மூலம் மனிதநேய உணர்வுகளையே வற்றடிக்கிறோம் என்பதை இவர்கள் உணரவில்லை. இடம் பெயர்ந்து சென்று பலரோடு பழகும் பல வாய்ப்புகளைப் பெற்றிருந்தும் திரைப்படக்காரர்கள் தங்கள் துறையில் வளர்ச்சி அடையாதது போலவே மனிதநேயத் திசையிலும் வளர்ச்சி அடையாதவர்களாகவே இருக்கிறார்கள். 'நெடிய மொழிதலும் கூடிய ஊர்தலுமே செல்வம்' என்று தவறாக நினைத்துக் கொண்டு தங்கள் மனிதநேய உணர்வோட்டத்தை இவர்கள் வற்றடித்துக் கொண்டதே இதற்குக் காரணம்.

அயலவர்களைக் காண நேர்ந்து அவர்களுக்கும் தங்களுக்கும் உள்ள பழக்கவழக்க முரண்பாடுகளைக் காண நேர்ந்தபோதெல்லாம் அந்நாளையத் தமிழர்கள் இந்தச் சிறிய முரண்பாடுகளை மீறிய மனித நல்லினிமைகளை வளர்த்துக்கொள்ள

வேண்டும் என்றே எண்ணியிருக்கிறார்கள். காரணம், சங்க காலத் தமிழர்கள் மனிதநேயக் குதூகல மகிழ்ச்சிக்கு வாழ்க்கையில் பெரிய இடம் தந்தவர்கள். கண்டகண்ட இடமெல்லாம் போர்க்களங்களாகவே காட்சி அளிக்கிற சங்கத் தமிழர்களின் வாழ்விலே மனிதநேயப் பேருணர்ச்சி இனிய ஊற்றுக்கண்ணாகப் பீறிட்டடிக்கிறது. 'என்னைப் பழித்த என் எதிரிகளை வெற்றி கண்டு மேம்படாவிட்டால் நான் இன்னின்னவாறு இழப்புகளுக்கு உரியவன் ஆவேன்' ஆக என்று வஞ்சினம் மொழிகின்ற ஒரு மன்னவன் கூட மனிதநேய நிகழ்ச்சிகளை இழப்பதையே வாழ்வின் பெரிய இழப்பாகக் கருதுகிறான். 'அடங்காத்தானை வேந்தர் உடங்கு இயைந்து என்னொடு பொருதும் என்ப, அவரை ஆரமர் அலறத் தாக்கித் தேரொடு அவர் புறம் காணேனாயின்'

வையை சூழ்ந்த வளம்கெழு வைப்பின்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனும், மன்எயில் ஆந்தையும், உரைசால்
அந்துவஞ் சாத்தனும், ஆதன் அழிசியும்
வெஞ்சின இயக்கனும் உளப்படப் பிறரும்
கண்போல் நண்பின் கேளிரொடு கலந்த
இன்களி மகிழ்நகை இழுக்கி

.......................................................
தென்புலம் காவலின் ஒரீஇ, பிறர்
வன்புலம் காவலின் மாறியான் பிறக்கே!

என்று (புறம் 71) மொழிகிறான், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன். இதற்கு முன்னால் தன் காதல் மனைவியைப் பிரிவதை இதற்கு இணையான இழப்பாகச் சொல்லுகிறான். அதைத் தொடர்ந்து, நீதிமன்றத்திலே நெறிப்பாடு இல்லாத ஒரு குறைமதியனுக்குத் தலைமை தந்து அதனால் மக்களின் வெறுப்புக்கு ஆளாகி ஒழிந்து போவதைப் பெரிய இழப்பாகக் கருதுகிறான். பூதப்பாண்டியன் அக்காலத்து மன்னர்களிலே ஒருவன். அக்காலத்துத் தமிழ்மக்களின் உணர்வோட்டங்களை அப்படியே பிரதிபலிக்கத் தக்க உரிமையும் நடைமுறையும் உடையவன். மற்றவர்களோடு கூடி இருந்து குலவி மகிழும் மனிதநேய நடைமுறையையே வாழ்க்கையின் பெரிய நிகழ்ச்சிகளுள் ஒன்றாக இவன் கருதுகிறான் என்றால் இது அக்காலத் தமிழ்

மக்களின் உணர்ச்சி என்றே கொள்ள வேண்டும். இப்படிப் பட்ட கலகலப்பான வாழ்க்கையையே நடைமுறையாகக் கொண்டிருந்த தமிழ் மக்கள் தங்களோடு வந்து இணைந்த மற்ற இனத்தவர்களையும் நாட்டவர்களையும் மகிழ்வோடு தங்கள் மகிழ்விலே இணைத்துக் கொண்டதிலும், அந்த வாழ்வு தந்த இனிய பட்டறிவைக் கொண்டு, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் வாழ்க்கை மணிநெறியை வகுத்துக் கொண்ட திலும் வியப்பு ஏதும் இல்லை. உடலின் எடையைக் குறை வாகவே வைத்துக் கொள்ளும் பறவை உயர்வானத்தில் எவ்விப் பறக்கிறது; உள்ளத்தின் கனத்தை இனிய நடைமுறை களால் குறைத்துக் கொள்ளும் மனிதன் உயர்ந்த இலக்குகளை எளிதாக எட்டிப் பிடிக்கிறான். மனிதநேய நடைமுறைகளையே அன்றாட வாழ்வாக்கிக் கொண்டதால் சங்ககாலத் தமிழன், பட்டினப்பாலை சுட்டிக் காட்டுவது போல, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் மணிநெறியை மிக இயல்பாகவே கடைப்பிடித்து வந்திருக்கிறான்.

## பகிர்ந்து கொள்ளும் நெறி

செல்வப் பொருளைச் சேர்ப்பதையும் அதைப் பயன்படுத்து வதையும் குறித்த தமிழ் மக்களின் பார்வையை ஏற்கனவே பார்த்திருக்கிறோம். செல்வத்தைத் தேடி வருவதே தாமும் தம் உற்றார் உறவினரும் தமக்கு மிக வேண்டியவர்களும் கூடிச் சேர்ந்து அனுபவித்து மகிழத்தான் என்று இலக்கணமே வகுத்துக் கொண்டவர்கள் பழந்தமிழர்கள். அவர்களுடைய வாழ்வில் இந்த நடைமுறை அன்றாட நிகழ்ச்சியாக இருந்திருக் கிறது. உழைத்துத் தேடிய செல்வம் பிறரை வென்று திரட்டிய சிறைச் செல்வம், பிறரிடம் பரிசிலாகப் பெற்றுவந்த செல்வம் என்கிற வேறுபாடு இல்லாமல், கிடைத்த செல்வத்தை ஒவ்வொருவரும் பிறரோடு பகிர்ந்து கொள்ளும் நெறி சங்கத் தமிழர்களின் வாழ்க்கை மணிநெறிகளில் முதன்மையான ஒன்றாக இருந்திருக்கிறது.

குமண வள்ளலிடம் பெரும் பொருளைப் பரிசிலாகப் பெற்று வந்தார் புலவர் பெருஞ்சித்திரனார். இந்தப் பரிசில் செல்வத் தைப் பெறுவதற்கு முன்பு அவருடைய வீட்டையே வறுமை வாட்டி எடுத்தது. அவர்களின் வாழ்க்கை வறுமைக்கோட்டின் எல்லைக்கே போய்விட்டது. புறம் 159 ஆம் பாடலில் சித்திரிக்கப்படும் அந்த வீட்டின் வறுமைக் காட்சியில் ஒரு பகுதி வருமாறு:

குப்பைக் கீரை கொய்கண் அகைத்த
முற்றா இளந்தளிர் கொய்துகொண்டு, உப்பின்று
நீர் உலையாக ஏற்றி மோரின்று
அவிழ்ப்பதம் மறைந்து பாசடகு மிசைந்து

அந்த வீட்டினர் தங்கள் உயிரையும் உடம்பையும் ஒட்டிவைத்துக் கொண்டு இருந்தார்கள். இந்த வறுமை நிலையில் அந்த வீட்டு மனையாள் என்ன பாடுபட்டாள் என்பதை இக்காலப் பாட்டு ஒன்று (காலநதி தீரத்திலே) பின்வருமாறு சொல்லுகிறது:

இவ்வீட்டில் நானாழி அரிசி, அங்கே
எதிர்வீட்டில் முந்நாழிப் பயறு, மேலும்
எவ்வீடும் ஒவ்வொன்று கடனாய்ப் பெற்றேன்
இனி வீடொன்று இல்லையே! என்றாள் பேதை.

இந்த நிலையிலே குமணனிடம் சென்ற புலவருக்குப் பெரும் பொருள் பரிசிலாகக் கிடைத்தது. அந்தப் பொருளைப் பேணிக் காத்திருந்தால் அவர்கள் தலைமுறை தலைமுறைக்கும் சுகமாக வாழ்ந்திருக்கலாம். கொஞ்சம் முறைப்படுத்தி, ''ஆகாறு அளவிட்டிதாயினும் கேடில்லை, போகாறு அகலாக்கடை'' என்னும் இலக்கணத்தைப் பின்பற்றியிருந்தால் கூட அதை யாரும் தவறு என்று சொல்ல மாட்டார்கள். ஆனால் புலவர் பெருஞ்சித்திரனார்க்குப் பொருளைப் பெற்றுக் கொண்டதும் அந்த நினைவெல்லாம் வரவில்லை. தம்மைப்போலவே தரித்திர நாராயணர்களாக மெலிந்து கிடந்த அக்கம்பக்கத்தாரையும் உற்றார் உறவினர்களையுமே அவர் நினைத்துக் கொள்ளுகிறார். யான் பெற்ற பொருளினால் எனக்கும் என் மனைவி மக்களுக்கும் இன்பம் படைப்பேன் என்கிற இருட்டு நினைப்பைப் பிளந்து கொண்டு மனிதநேயப் பெரும் புத்தொளி ஒன்று அவருடைய நெஞ்சிலே கதிர் விரிக்கிறது. மனைவியை உற்சாகமாக அழைத்து, ''கொடு, கொடு, எல்லோர்க்கும் கொடு. உற்றார் உறவினருக்கும் நம்முடைய வறுமைக்காலத்தில் நமக்குத் தந்து உதவியவர்களுக்கும் கொடு, யாருக்குக் கொடுப்பது என்று யோசிக்கவே வேண்டாம், இன்னவர்க்குக் கொடுக்கலாமா என்று என்னிடம் கேட்கவும் வேண்டாம், எல்லோருக்கும் கொடுத்து மகிழ்ச்சி கொள் என்று பொரிந்து தள்ளுகிறார் புலவர். புலவரின் ஈகைப் பேருள்ளத்தை எழுச்சியூட்டும் சொற்களால் பின்வருமாறு சித்திரிக்கிறது புறம் 163:

நின்நயந்து உறைநர்க்கும் நீ நயந்து உறைநர்க்கும்
பல்மாண் கற்பின் நின் கிளை முதலோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங் குறியெதிர்ப்பை நல்கியோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே!
பழம்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கிய வளனே.

இது, பரிசில் பெற்ற ஒருவன் இப்படி இப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தமிழர்கள் எழுதி வைத்த இலக்கணம் அல்ல. வறுமைப்பட்டு வாடி நின்று வள்ளல் ஒருவனைத் தேடிச் சென்று அவன் கொடுத்த பொருளை எல்லோருக்கும் வாரிக் கொடுத்திடத் துடித்த ஒரு புலவனின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சி இது. வறுமைச் சூழலிலும் சமுதாய இழிவுகளிலும் தள்ளப்பட்டுக் கிடந்த மக்கள் தங்கள் உழைப்பினாலோ மற்ற வர்களின் உதவியினாலோ கொஞ்சம் முன்னுக்கு வருகிறவர்கள் தங்களுக்குக் கிடைத்த செல்வத்தைப் பற்றிப் பிடித்துக் கட்டி வைத்துக் கொள்ளவே முனைகிறார்கள். இந்தப் புலவன் படிப்பாளியாகவும் அறிவாளியாகவும் இருப்பதால் மற்றவர் களின் உள்ளத்தை அடக்கி ஆளுகிற தன்னலம் அவனுடைய உள்ளத்தில் தலைநீட்டவே முடியவில்லை. எல்லோருக்கும் இன்பம் வேண்டும் என்னும் மனிதநேய உணர்வே அவனுடைய உள்ளத்தில் முழுமையாக ஆட்சி செலுத்துகிறது. இந்தப் பாடலில் தரப்பட்டுள்ள பட்டியலைப் பார்க்கிறபோது புலவனின் சுற்றுச்சூழல் முழுவதுமே வறுமைக்கு ஆட்பட்டுக் கிடந்தது என்பது தெரிகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழுகிற ஒருவன் குறுகிய உள்ளம் படைத்தவனாகவே வளருவான் என்னும் பொதுநியதி இவனுடைய வாழ்வில் தலைகீழாக மாற்றப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம், இருவேறு உலகத்து இயற்கை என்னும் கருத்துரைக்கு ஏற்ப அறிஞர்களும் புலவர் களும் செல்வப் பொருளைச் சேர்த்து வைத்து மகிழும் சிறுமை இல்லாதவர்களாக, தெள்ளிய நெஞ்சினராகவே வாழ்ந்த காலம் சங்க காலம். அவர்கள் தங்கள் எண்ணங்களும் கலைத் திறமும் எடுத்துப் போற்றப்பட வேண்டும் என்று விரும்பினார்களே தவிர, அவைகளின் பேரால் தங்களுக்குக் கிடைத்த செல்

வத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு மனம் சுருங்கி, வாழ்வு சுருங்கிப் போக விரும்பவில்லை.

பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு, கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீது அறிந்தன்றோ? இன்றே

என்று இத்தகையவர்களின் வாழ்க்கை புறநானூற்றிலேயே (47) சொல்லோவியமாகி உள்ளது. இவ்வாறு வகுத்துத் தரப்பட்ட இலக்கணத்துக்கு இலக்கியமாக அமைகிறது புலவர் பெருஞ்சித்திரனாரின் வாழ்க்கை. அதாவது, மனிதநேய மாண்பாளன் ஒருவன் மற்றவர்களுக்கு இன்பம் குவிப்பவனாக வாழ்வதற்கு அவனிடம் பெரும் பொருள் இருந்தாக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்பதை அழுத்தந் திருத்தமாக எடுத்துச் சொல்லுகிறது இந்தப் புலவரின் வாழ்க்கை. மனிதநேயம் என்பதே எந்த நிலையிலும் மற்ற உயிர்களின் துன்பத்தைப் போக்கி அவர்களின் முகத்தில் இன்ப மலர்ச்சியை ஏற்படுத்தும் வாழ்க்கை நடைமுறைதானே? இந்தப் பாடலை (163) ஒரு முறை படித்த உடனேயே, யார் எவர் என்று இல்லாமல், அவருக்கும் நமக்கும் உள்ள உறவு என்ன என்று கருதாமல், எல்லோருக்கும் இன்பம் கிடைக்கச் செய்வதே மனித வாழ்க்கை என்கிற உண்மை நம்முடைய இதயத்தை அளாவிப் படர்ந்து விடுகிறது. கொடுக்கப்படுவோர் பட்டியலில் உற்றார் உறவினரையும் தங்களுக்கு ஏற்கனவே உதவி செய்தவர்களையும் வரிசைப்படுத்திக் கொண்டு வருகிற புலவர், கடைசியில், ‘இன்னோர்க்கு என்னாது எல்லோர்க்கும் கொடு’ என்று சொல்லும்போது இந்தப் பெரிய மனிதநேயப் பெருங்கடல்தான் நம் இதயங்களில் அலைவீசிப் பொங்குகிறது.

## திட்டமிட்ட கொடை

வீரத்தில் மட்டுமல்லாமல் ஈகையிலேயும் தொகை தொகையான வகைமைப்பாடுகளை வளர்த்துச் சிறந்தவர்கள் தமிழர்கள். அந்த வகை ஒவ்வொன்றிலும், மனிதநேய மணிநெறியாக வகுத்து உரைக்கப்பட்ட ஒவ்வொரு நடைமுறை மலர் குலுங்கிச் செழிக்கிறது. அக்காலத்துப் புரவலர்கள் தங்களைப் பாடிவந்த அல்லது தேடிவந்த இரவலர்களுக்கு வாரி வழங்கினார்கள் என்கிற பொதுவான செய்திக்குள்ளே,பல புரவலர்கள் மிகவாகத்

திட்டமிட்டே தங்கள் ஈகையைச் செலுத்தினார்கள் என்னும் உண்மையும் தவறாமல் இடம் பெறுகிறது. பசி என்றும் வறுமை என்றும் தங்கள் எதிரே கேட்ட ஓலத்தை உடனேயே தடுத்து நிறுத்த வேண்டும் என்கிற உணர்ச்சி மட்டுமல்லாமல் இந்த வறுமையாளன் தொடர்ந்தும் வறுமையால் புரட்டி எடுக்கப்படக் கூடாது என்னும் சிந்தனையும் அவர்களை வழி நடத்தியிருக்கிறது.

> நிற்பாடிய வயங்கு செந்நா
> பின் பிறர் இசை நுவலாமை
> ஓம்பாது ஈயும் ஆற்றல் எங்கோ

என்று மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்னும் சேர மன்னனைக் குறுங்கோழியூர் கிழார் என்னும் புலவர் (புறம் 22) சிறப்பிக்கிறார். பிறன்கடை மறப்ப நல்குவன் செலினே (புறம் 68) என்னும் தொடரும் இதேகருத்தை வலியுறுத்துகிறது. ஈயென இரத்தல் இழிந்தன்று என்பதை உணர்ந்து தெளிந்த மனிதநேய உணர்வு உடையவர்கள், தங்களிடம் வந்து இரந்து நின்ற ஒருவன் மீண்டும் அதே இழிநிலையைத் தன் வாழ்விலே அடையவே கூடாது என்று எண்ணுகிறார்கள். அந்த எண்ணத்தின் விளைவுதான் இங்கே சுட்டப்படும் மாந்தரஞ் சேரலின் ஈகை நடவடிக்கை. 'என்னிடம் உதவிபெற்ற ஒருவன் மற்றொருவனிடம் போய் எனக்கு இது வேண்டும் என்று தாழ்ந்து நின்று கையேந்தும் இழிநிலை அவனுக்கு ஏற்படவே கூடாது' என்று நினைக்கிறான் மாந்தரஞ்சேரல்.

கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய பேகனின் கொடை வளத்தைப் பாராட்டும் பரணர், அவனுடைய கொடை திட்டமிட்டு அளந்து கொடுப்பது அல்ல என்றும் இன்னார்க்கு இன்ன அளவில் கொடுப்பது என்று அளந்து பாராமல் அனைவர்க்கும் அள்ளிக் கொட்டுவது என்றும் சொல்லுகிறார்.

> அறுகுளத்து உகுத்தும் அகல்வயல் பொழிந்தும்
> உறுமிடத்து உதவாது உவர்நிலம் ஊட்டியும்
> வரையா மரபின் மாரி போல
> கடாஅ யானை கழற்கால் பேகன்
> கொடைமடம் படுதல்......

உண்டு என்று சொல்லுகிறார் பரணர். இதைப் பார்க்கிற போது, வள்ளல்கள் எந்தத் திட்டமும் இல்லாமல், தேவை

உடையவர், தேவை இல்லாதவர் என்று கூடப் பாராமல் எல்லோருக்கும் அள்ளிப் பொழிந்தார்கள் என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆனால் மேலே எடுத்துக்காட்டிய (புறம் 22) மாந்தரஞ்சேரல் இரும்பொறையின் நடவடிக்கை இத்தகைய பெரும்போக்கான குறைகள் அங்கங்கே இருந்திருந்தாலும் துயருற்றான் ஒருவன் மீண்டும் துயருறும் நிலை ஏற்பட்டிடவே கூடாது என்கிற மனநிலையே பல வள்ளல்களை வழி நடத்தி யிருக்கிறது என்பதை வலியுறுத்துகிறது.

## தவணைமுறைக் கொடை

இத்தகைய மனிதநேய உணர்வின் விளைவான கொடைச் செயல் மற்றொரு விதமாகவும் பீறிட்டு எழுகிறது. பிட்டங் கொற்றன் என்னும் தலைவன் அக்கால வள்ளல்களுள் ஒருவன். ஊர்களைப் பரிசிலாகக் கொடுக்கும் பெரிய நாடோ, ஒட்டு மொத்தமாகக் கொடுத்து இரவலரின் வறுமையை ஒழிக்கும் பெரும் செல்வ வளமோ அவனிடம் இல்லை. ஆனாலும், தன்னிடம் வந்து இரந்து நின்ற ஒருவன் மற்றொருவனிடமும் போய்க் கை ஏந்தக் கூடாது என்று அவன் நினைக்கிறான். அதன் விளைவான அவனுடைய கொடை நடவடிக்கை புறம் 171 ஆம் பாடலில் விவரிக்கப்படுகிறது.

இன்று செலினும் தருமே; சிறுவரை
நின்று செலினும் தருமே; பின்னும்,
'முன்னே தந்தனென்' என்னாது, துன்னி
வைகலும் செலினும் பொய்யலன் ஆகி
யாம் வேண்டியாங்கு எம் வறுங்கலம் நிறைப்போன்.

தவணை முறையில் பணம் கொடுத்துப் பொருள்களை வாங்கும் வழக்கம் இப்போது பெருகியுள்ளது. ஒரே நேரத்தில் மொத்த மாகப் பணம் கொடுத்து வாங்க முடியாதவர்கள் இந்தத் திட்டத்தை உற்சாகமாக வரவேற்கிறார்கள். எந்த நிலை யிலும் மற்றவர்களுக்கு உதவ வேண்டும், அவர்கள் தங்கள் வறுமையை நினைந்து நினைந்து வாடாத வண்ணம் அவர் களுக்கு வழங்க வேண்டும் என்று நினைத்த பிட்டங்கொற்றன் தவணைமுறைக் கொடை என்னும் புதிய கொடைத் திட்டத் தையே வகுத்துவிட்டான் போலத் தெரிகிறது. அதனால்தான் வந்த இரவலர்களே மீண்டும் மீண்டும் தன்னிடமே வரும் விதமாகத் தன் இல்லத்தையும் இதயத்தையும் திறந்து வைத்திருக்கிறான்,

மனம் உண்டானால் (எதற்கும்) இடம் உண்டு என்னும் நம்பிக்கைப்பழமொழி ஒன்று நமது மக்களிடையே வழங்குகிறது. மனிதநேயப் பேருணர்வின் விளைவான உதவி செய்யும் மனப் பான்மையை வளர்த்துக் கொண்டவர்கள் தங்களிடம் பெரும் பொருள் இல்லை என்பதால் தங்களிடம் வந்து இரந்தவர்கள் மற்றவர்களிடமும் போய் வாடி நிற்பதை அவர்கள் அனுமதிப்ப தில்லை. 'ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே செல்லும் வாயெல்லாம் செயல்' என்பது பிறருக்கு உதவுதலைப் பற்றிய குறள். தொலை தூரத்திலுள்ள ஓர் ஊருக்குச் செல்லுவதற்குப் பல வழிகள் இருக்கலாம். பல போக்குவரத்துச் சாதனங்களும் இருக்கலாம். அந்த ஊருக்குச் சென்றே தீரவேண்டும் என்று முடிவு செய்து கொண்டவர்கள் ஒரு குறிப்பிட்ட வழியிலோ ஒரு குறிப்பிட்ட சாதனத்திலோ செல்லும் வசதி படைத்திரா விட்டாலும், தங்கள் பயணத்தை நிறுத்தி விடுவதில்லை. மாறாக, மாற்றுவழி ஒன்றைக் கண்டுபிடித்து அங்கே சென்று சேரத்தான் செய்கிறார்கள். இதே விதமாகத்தான் மனிதநேய உணர்வின் உந்துதலினால் மற்றவர்களுக்கு உதவப் புறப்பட்டவர்களும் எப்படியாவது ஒரு வழியைக் கண்டு பிடித்துத் தங்கள் செயலை நிறைவேற்றியே தீருகிறார்கள். பிட்டங்கொற்றனின் புதுமையான கொடை நடைமுறை இந்த உண்மையைத்தான் உணர்த்துகிறது. அதாவது, சங்ககாலத்துத் தமிழர்கள் தங்கள் இதயத்தில் இயல்பாக ஊறி உயர்ந்த மனிதநேய உணர்வு காரணமாக வறுமையில் வாடுவோர்க்கு உதவிக்கரம் நீட்ட முனைந்தார்கள். அப்படி உதவுவதற்குப் போதிய வாய்ப்புகள் இல்லாத போது கூட மாற்றுவழி ஒன்றைக் கண்டுபிடித்து எந்த நிலையிலும் மனிதநேயம் காக்கப்பட வேண்டும் என்னும் கொள்கையை நிலைநிறுத்தினார்கள்.

## அறம் திறம்பாத போர்க்களம்

வாழ்க்கையின் நெருக்கடியான கட்டங்களில் நிதானம் தவறாமல் நடந்து கொள்ளுவது ஒரு நல்ல பண்பு; அரிய பண்பும் கூட. உலகத்து அறநெறியாளர் பலரும் இந்தப் பண்பை வாழ்க்கையின் ஒரு மணிநெறியாக எடுத்து வலியுறுத்தி யுள்ளார்கள். ஆயினும் இந்த வாழ்க்கை நடையைக் கடைப் பிடித்தவர்களை விட அதை மீறியவர்களே வரலாற்றில் மிகுதி யாகக் காணப்படுகிறார்கள்: அப்படி மீறுவதற்கு நியாயம் கற்பித்துக் கொள்ளுகிறவர்களும் கூட உண்டு!

இரண்டு கூட்டத்தாரிடையே போர் மூண்டுவிட்டால் நேருக்கு நேர் மோதிக் கொள்ளும் வீரர்கள் மட்டுமன்றி அந்தப் போரில் நேரிடையாகத் தொடர்பு படாத அப்பாவி மக்களும் போர்க்களம் புக முடியாத வலுவிழந்த மக்களும் கூட அழிக்கப் பட்டு விடுவது உண்டு. இப்படிப்பட்ட அழிவுகள் நேராமல் அரசர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்னும் அறம் சார்ந்த வலியுறுத்தல் மன்னர்கள் காலத்திலும் இருந்தது; பல இடங்களில் மக்களாட்சி ஏற்பட்டுள்ள இந்த நாளிலும் மனித உரிமைக் கழகம் போன்ற அமைப்புக்களாலும் 'உலக நாடுகள் அவை'யாலும் இது ஒரு கொள்கையாகவே எடுத்து வலியுறுத்தப் படுகிறது, என்றாலும் அனைத்துலக மனித உரிமைகள் கழகத்தின் ஆண்டறிக்கைகளைப் பார்த்தால் ஆட்சியைக் காப்பாற்றுவதன் பேராலும் அநீதிகளை (வன்முறைகளை)த் தடுப்பது என்னும் பேராலும் அப்பாவி மக்கள் அன்றாடம் கொல்லப்படுவதும் அழிக்கப்படக்கூடாத பள்ளிக்கூடம், மருத்துவமனை போன்றவை அழிக்கப்படுவதும் உலகின் பல பகுதிகளில் அன்றாட நிகழ்ச்சியாக மட்டுமல்லாமல், காலை மாலை இருவேளை நிகழ்ச்சியாகப் படர்ந்து வருவதாகவே தெரிகிறது. இத்தகைய நடவடிக்கைகளைக் கவனித்த மேற்கு நாட்டவர்கள், 'போர் வெற்றி தேடிப் போகும்போதும் காதலில் வெற்றி தேடி முனையும் போதும் வாழ்க்கை மணிநெறிகளைக் கடைப்பிடிக்க முடியாது என்றும், கடைப்பிடிக்க வேண்டிய தில்லை' என்றும் கூடச் சொல்லி வந்திருக்கிறார்கள்!

இதற்கு முற்றிலும் மாறாக, பழங்காலத் தமிழர்கள் தங்கள் போர்வினையைக் கூட மணிநெறியின் தடம் மாறாமல் நடத்தி வந்திருக்கிறார்கள் என்பதை அவர்களின் வரலாறு காட்டுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக அமையும் பாடல் ஒன்று புறநானூற்றில் (9) உள்ளது. பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியின் நிதானம் தவறாத போர் நடவடிக்கையை வருணிக்கிறது அந்தப் பாட்டு.

''ஆவும் ஆன்இயற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும், பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅதீரும்
எம் அம்பு கடிவிடுதும், நும்அரண் சேர்மின்' என
அறத்து ஆறு நுவலும் பூட்கை மறம்'

இங்கே பட்டியலிட்டுக் காட்டப்படுகிறவர்கள் போர்முகத் துக்கு முற்றிலும் அயலானவர்கள். சாதாரணமான நிலைகளில் இவர்கள் போர்களில் நேரிடையாக ஈடுபடுவதில்லை. எனவே, இவர்களைத் தாக்குவதோ அழிப்பதோ முறையாகாது. இவர்கள் மீது கருணை காட்டும் மனிதநேய உணர்வு வெற்றிக் காகப் போர் தொடுப்பவர்களின் நோக்கத்தையே கூடச் சிதறடித்து விடக்கூடும். இவர்களின் அறிவிப்பைக் கேட்டு எதிரிகள் விழிப்பாகி விடுவார்களல்லவா? ஆனாலும் தங்கள் நல்லுணர்வுகளால் தங்களுக்கு ஏற்படக் கூடிய இழப்பை அந்நாள் தமிழர்கள் ஓர் இழப்பாகவே கருதவில்லை. நெருக்கடியான அந்தக் கட்டத்தில் உருப்படியான வாழ்க்கை நெறிகளைக் கலைந்துவிடாமல் காப்பதுதான் தங்களுக்குப் பெருமை என்று அவர்கள் கருதினார்கள். அதனால்தான், தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள முடியாதவர் களுக்குத் தப்பித்துச் செல்லும் வாய்ப்பைத் தமிழ் மறவர்கள் வழங்கினார்கள், அதாவது, அழிப்புகளுக்கும் இழப்புகளுக்கும் ஆயத்தமாகிற நேரத்தில்கூட மனிதநேய உணர்வைத் தமிழர்கள் மறந்திடவில்லை. இத்தகைய உயர்ந்த நடைமுறைகளைக் கொண்ட தமிழ் இனத்தை உவந்து பாராட்டுகிறது இக்காலப் பாட்டு (அன்னை நீ ஆடவேண்டும்) ஒன்று:

வீரத்தனத்துக்குப் போரெடுக்கும்—அந்த
வேகக் களத்திலும் பண்புடனே
ஈரத்தனங்கள் புரிந்தவன் நீ!

இன்றைக்கும் என்றைக்குமே மிக அரிதாக இருந்திருக்கிற இந்த நடைமுறையைக் கடைப்பிடிக்கும் நிதானமும் துணிச்சலும் தமிழர்களுக்கு எப்படிக் கைவந்தன என்பதை எண்ணிப் பார்க்கும்போது தமிழ் வரலாற்றின் வேறொரு நாகரிக நடை முறை நம் நினைவுக்கு வருகிறது. தமிழர்களின் போர்நெறி, என்றைக்குமே எதிர்பாராமல் தாக்குவதையோ எதிரியை ஏமாற்றித் திசைதிருப்பி விட்டுத் தாக்குவதையோ அனுமதிக்க வில்லை. தமிழர்களுக்குப் போர் அறம் வகுத்த முன்னோர்கள் அதை ஏழு பிரிவுகளாக வகுத்து வைத்தார்கள். அவைகளில் முதலாவது பிரிவு வெட்சித்திணை என்று குறிக்கப்படுகிறது. எதிரியின் மீது போர்தொடுக்க ஆயத்தமாகிறோம் என்பதை அந்த எதிரிக்கே தெரிவிக்கின்ற முறையில் அவனுடைய ஆடு மாடுகளைக் கவர்ந்து செல்வது இந்த நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சியை முதன்மைப்படுத்தி வலியுறுத்துவதன் மூலம்,

முன்னறிவிப்பு இல்லாமல் எதிரியின் மீது போர் எடுக்கவே கூடாது என்னும் கோட்பாட்டை வலியுறுத்துகிறது தமிழர் போர் அறம். தொடக்கமே ஒரு நாகரிக நடைமுறையின் நல்ல தொடக்கமாக அமைவதால் தொடர்ந்து வரும் நிகழ்ச்சிகளிலும் அந்த நாகரிகத்தைத் தமிழர்கள் எளிதாகவே கடைப்பிடிக்க முடிந்தது.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் 'அறத்தாறு நுவலும் பூட்கை'யைத் தமிழ் இலக்கியம் எடுத்துப் போற்றுகிறது என்றால், வரலாறாக இருந்து வந்திருக்கிற தமிழர் வாழ்க்கை முறையை அவனும் பின்பற்றினான் என்பதற்காகப் போற்றுகிறது. அது மட்டுமல்லாமல், வழிவழியாக வரும் தமிழர்களுக்கு இந்த வீரநடை ஒரு வழிகாட்டும் ஒளி விளக்காகத் திகழ்வதாலும் பாண்டியர் கடைப்பிடித்த இந்த மனிதநேய மணிக்கருத்தை இலக்கியம் விதந்து போற்றுகிறது. கடைப்பிடிக்கவே முடியாது என்றும் கடைப்பிடிக்க வேண்டியதில்லை என்றும் மற்றவர்களால் கை கழுவப்பட்ட இந்த மனிதநேய மாண்பினைத் தமிழர்கள் உறுதியாகக் கடைப்பிடித்தார்கள் என்பது. எந்த நிலையிலும் மற்றவர்களுக்குத் துன்பம் நேரக் கூடாது, தேவையில்லாதபோது அது நிகழ்ந்திடவே இடம் தந்திடக் கூடாது என்பதில் பழந்தமிழர்கள் தீர்ந்த தெளிவோடு இருந்திருக்கிறார்கள் என்பதையே அவர்களின் 'அறத்தாறு நுவலும் பூட்கை' இந்த உலகுக்கு என்றென்றும் எடுத்து உணர்த்திக் கொண்டு இருக்கிறது.

## வறுமையிலும் வற்றாத செம்மை

வயிற்றுத் தேவை, வாழ்க்கைத் தேவை என்பன மனிதனுடைய நடையையும் நடைமுறைகளையும் வெகுவாக மாற்றி நலிவித்துவிடக் கூடியவை. 'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்று ஓங்கி ஒலிக்கிறது பழமொழி. இப்படிப்பட்ட நிலையிலும் சீரானவர்களிடமே உதவி பெறவேண்டும் என்பது பழம்நாள் தமிழர்கள் வகுத்துக் கொண்ட ஒரு வாழ்க்கை நெறி.

> ஒப்புடன் முகமலர்ந்தே உபசரித்து உண்மைபேசி
> உப்பிலாக் கூழ்இட்டாலும் உண்பதே அமுதமாகும்
> முப்பழமொடு பால்அன்னம் முகம்கடுத்து இடுவராயின்
> கப்பிய பசியினோடும் கடும்பசி ஆகுந்தானே

என்னும் பிற்காலப்பாட்டு (விவேக சிந்தாமணி) இந்த

மனநிலையை ஒப்பீட்டு முறையில் உருக்கமாகச் சித்திரிக்கிறது. ஒருவருக்கு ஒன்று ஈதல், உற்ற சமயத்தில் உதவுதல் என்பன நல்ல நடைமுறைகளே. ஆனாலும், அவை, உதவி பெறுவோரின் தாழ்நிலையை எள்ளுவதாக அமைந்துவிடக் கூடாது என்று அந்நாள் தமிழர்கள் கருதினார்கள். 'நாய் விற்ற காசு குரைக்குமா?' என்பது போன்ற ஒரு போக்கை, எப்படிக் கிடைத்தால் என்ன, உதவி கிடைக்கிறதே என்னும் போக்கைச் சங்ககாலத்து அறிஞர்களும் கலைஞர்களும் ஏற்றுக் கொண்டதே இல்லை. தங்களை நயந்து நன்கு மதித்து உதவுகிறவர்கள் எளியவர்களாக இருந்தாலும் அவர்களையே நாடிச் சென்றார்கள் பெரியவர்கள். தங்கள் பணச்செருக்கு காரணமாக இவர்களிடம் அசட்டையாகவும் ஏனோதானோ என்றும் பெரும் போக்காக நடந்து வந்தவர்களை அறிஞர்களும் புலவர்களும் விரும்பி மதிக்கவும் இல்லை; போற்றிப் புகழ்ந்ததும் இல்லை.

மிகப்பேர் எவ்வம் உறினும் எனைத்தும்
உணர்ச்சி இல்லோர் உடைமை உள்ளேம்
நல்லறிவுடையோர் நல்குரவு
உள்ளுதும் பெரும யாம் உவந்து நனிபெரிதே

என்னும் (புறம் 197) பாடல் பகுதி இந்த உணர்வோட்டத்தைச் செப்பமாகச் சித்திரம் செய்கிறது. இதே பாடலில் ''மண்கெழு தானை ஒண்பூண் வேந்தர் வெண்குடைச் செல்வம் வியத்தலோ இலமே'' என்றும், ''புன்புல வரகின் சொன்றியொடு பெறுஉம் சிறூர் மன்னராயினும் எம்வயின் பாடறிந்து ஒழுகும் பண்பினாரே'' என்றும் சொல்லப்படுகின்ற செய்திகள், வறுமையிலும் செம்மை கடைப்பிடிக்கும் அவர்களின் இதயமாண்பை எடுத்து இயம்புகின்றன. இத்தகைய பண்பு மேம்பாட்டைத் தான் ''பெருக்கத்து வேண்டும் பணிவு சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வு'' என்கிறது குறள்.

ஏட்டில் எழுதிப் படிப்பதற்கு மிக இனிதாகவும் பெரியதாகவும் தோன்றுகிற இந்தப் பண்பாட்டை வாழ்க்கையில் கடைப்பிடிப்பது அவ்வளவு எளிதல்ல. இப்படிப்பட்ட நெருக்கடியான கட்டத்தில் வறுமை உற்றவன் அல்லது முக்கியமான தேவைக்கு உட்பட்டவனின் மனத்தில் நடக்கும் போராட்டத்தைத் தான் 'காரியம் பெரிதா, வீரியம் பெரிதா?' என்னும் பழமொழி நமக்குச் சொல்லுகிறது. பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் என்னும் பழமொழியும், அந்த நிலையில் பலரும்

தோற்றுத்தான் போகிறார்கள் என்பதை உறுதி செய்கிறது. ஆனாலும் சங்ககாலத்து வரலாற்று மனிதர்கள் சிலர் இத்தகைய இக்கட்டான நிலையிலும் தங்கள் செம்மையைக் கடைப்பிடித்துக் 'காரியம் பெரிதல்ல, வீரியம்தான் பெரிது' என்பதை நிலை நாட்டியுள்ளார்கள்.

## வறுமையிலும் வற்றாத வீரம்

பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் அதியமான் நெடுமான் அஞ்சியிடம் பரிசில் பெறுவதற்காகச் சென்றார். அதியமான், என்ன காரணத்தாலோ அவரை நேரில் கண்டு பேசிப் பரிசில் வழங்காமல் பொருளை மட்டும் யாரோ ஆள் மூலம் கொடுத்தனுப்பினான். அவனுடைய நடத்தையைக் கண்டு அகம் நொந்த புலவர்,

காணாது ஈத்த இப்பொருட்கு யான்ஓர்
வாணிகப் பரிசிலன் அல்லென்; பேணி
தினை அனைத்தாயினும் இனிது, அவர்
துணையளவு அறிந்து நல்கினர் எனினே

என்று சொல்லிவிட்டு அவன் அனுப்பிய பொருளைப் பெற்றுக் கொள்ளாமலே திரும்பிப் போய்விட்டார். பரிசில் வழங்கியவன் வளம் பெற்ற மன்னன் என்பதையும் அதை மறுத்துச் சென்றவர் வறுமையுற்ற புலவர் என்பதையும் நினைக்கும்போது வறுமையில் செம்மை என்னும் வாழ்க்கை நெறியின் வலிமை நமக்கு மலைப்பையும் வியப்பையும் தருகிறது.

இதே புலவர் இளவெளிமான் என்னும் மன்னனிடம் நடந்து கொண்ட முறையும் இதே திண்மையை இறுக்கமாக எடுத்து வைக்கிறது. தன்னிடம் உதவி நாடிவந்த புலவரை வரவேற்று உபசரிக்காமல், யாரோ வேலையாளிடம் கொஞ்சம் பொருளைக் கொடுத்தனுப்பிவிட்டான் இளவெளிமான். அதை மறுத்துவிட்டுக் குமணனிடம் போய்ப் பெரும் பரிசில் பெற்றார் புலவர். வரும் வழியில் இளவெளிமானின் நினைவு அவருடைய இதயத்தில் எழுந்தது. நேரே அவனிடம் போய், த்ாம் பெற்ற பெரும் பரிசிலை அவனுக்குக் காட்டி,

இரவலர் புரவலை நீயும் அல்லை
புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்

இரவலர் உண்மையும் காணினி இரவலர்க்கு
ஈவோர் உண்மையும் காணினி

என்று அவனை இடித்துரைத்துவிட்டு மேலே செல்கிறார். 'ஈயென இரத்தல் இழிந்தன்று' என்று சொன்ன சங்க இலக்கியம் 'ஈயேனென்றல் அதனினும் இழிந்தன்று' என்றும் சொல்லி வைத்துள்ளது. வறுமையாளியைக் கையேந்தி நிற்காதபடித் தடுக்கின்ற இந்த அறிவுரை. அப்படி ஒருவன் தேவை நெருக்கடியால் கையேந்தி வந்துவிட்டால் அவன் தன் நிலையை எண்ணிக் குன்றிப் போகாதபடி, அவனை முகமலர்ந்து வரவேற்று அவனுக்கு உதவிட வேண்டும் என்பதையே 'ஈயேனென்றல் இழிந்தன்று' என்று சொல்லி வைத்திருக்கிறது. இதிலே மிகப் பெரிய வியப்பு என்னவென்றால் தேவை நெருக்கடியில் சிக்கிக் கொண்டவர்களே மானம் மரியாதையை எந்த நிலையிலும் காத்துக் கொள்ளும் ஏந்தல்களாக விளங்கியிருக்கிறார்கள். இதற்குக் காரணமான ஒரு தெள்ளிய திண்ணிய மனப்பக்குவம் அறிஞர் பெருமக்களுக்கு வாய்த்திருந்தது என்பதைப் பின்வரும் (புறம் 154) பாடல் பகுதி விளக்குகிறது.

திரைபொரு முந்நீர்க் கரை நணிச்செலினும்,
அறியுநர்க் காணின்,—வேட்கை நீக்கும்
சின்னீர் வினவுவர் மாந்தர்; அதுபோல்
அரசீர் உழையராகவும், புரைதபு
வள்ளியோர்ப் படர்குவர் புலவர்.

இந்தப் பாடலில் சொல்லப்படும் மன உணர்வு, வறுமை முதலிய துன்பங்களால் ஏற்படும் மன இடிவை உதறித் தள்ளிவிட்டு உயர்ந்து நிற்கும் தன்மான உணர்ச்சியைப் பற்றியது. மனம் உள்ளவன் மனிதன் என்று இலக்கணம் வகுத்துக் கொண்ட தமிழர்கள் மானமும் உள்ளவனே மனிதன் என்று நடைமுறை வகுத்துக் கொண்டார்கள். அந்த உணர்ச்சிதான் அறிஞர் பெருமக்களையும் கலைஞர்களையும், வறுமையிலும் செம்மையாக வாழும் மாண்பு உடையவர்களாக உயர்த்தியது.

## கண்டு பாராட்டவே வந்த கவிஞர்

வாணிகப் பரிசில் கொடுத்துத் தங்கள் பண்பின்மையைக் காட்டிக் கொண்ட மன்னர்களை வெறுத்து ஒதுக்கியதில் மட்டுமல்லாமல் பரிசிலர்களை அகனமர்ந்து வரவேற்றுப் போற்றிய வள்ளல்களைப் பாராட்டுவதிலும் புலவர்கள் இந்தப் பெரிய

பண்பாட்டை நிலைநாட்டி இருக்கிறார்கள். ஆய் என்னும் குறுநில மன்னனைக் காண்பதற்காகத் தமது குடும்பத்தோடு வந்திருக்கிறார் ஏணிச்சேரி முடமோசியார் என்னும் புலவர். ஆயின் பொருள்நிலை மிகவும் குன்றியிருக்கிறது. வந்தவர்களுக் கெல்லாம் வாரிவாரிக் கொடுத்து வறுமை அடைந்துவிட்டான் ஆய். ''களிறு இலவாகிய புல்அரை நெடு வெளில், கான மஞ்ஞை கனனொடு சேப்ப, ஈகை அரிய இழையணி மகளிரொடு, சாயின்று என்ப ஆஅய் கோயில்'' என்று அவனுடைய வறிய நிலை மற்றொரு (புறம் 127) பாடலில் சொல்லப்படுகிறது. இந்த நிலையிலும் எப்போதும் போல் அவனைக் காண வந்திருக் கிறார் புலவர். அப்படி வந்தவர், வழக்கம் போல் பரிசில் வேண்டி வந்திருப்பதாகக் கருதி மன்னவன் வாட்டமடையக் கூடாதே என்று நினைத்தவர் போல,

> மலைகெழு நாடன், மாவேள் ஆஅய்:
> களிறும் அன்றே மாவும் அன்றே
> ஒளிறுபடைப் புரவிய தேரும் அன்றே;
> பாணர் பாடுநர் பரிசிலர் ஆங்கவர்
> தமது எனத் தொடுக்குவர் ஆயின், எமதெனப்
> பற்றல் தேற்றா பயங்கெழு தாயமொடு
> அன்ன ஆக நின் ஊழி; நின்னைக்
> காண்டல் வேண்டிய அளவை

என்று எடுத்த எடுப்பிலேயே தெளிவுபடுத்தி விடுகிறார். அதாவது, 'என்னுடைய வறுமைநிலை தெரியாமல் உதவி கோரி வந்திருப்பாரோ புலவர்?' என்று வாட்டமடைய வேண்டாம்; நான் அப்படி உதவி எதுவும் கோரி இப்போது வரவில்லை என்று தெளிவுபடுத்தி விடுகிறார் புலவர். அதாவது, வருகின்ற இரவலர்கள் எந்தப் பொருளை விரும்பினாலும் இந்தா என்று எடுத்துக் கொடுத்துவிடும் இனிய மனம் படைத்த வள்ளல் நீ. அந்தப் பெருமையைக் கருதி உன்னை நேரில் கண்டு பாராட்டி மகிழ்வதற்காக மட்டுமே இப்போது வந்திருக்கிறேன் என்கிறார் புலவர். வேறொரு பாடலில் (புறம் 197) சொல்லப் பட்ட, ''மிகப் பேர் எவ்வம் உறினும் எனைத்தும் உணர்ச்சி யில்லோர் உடைமை உள்ளேம்; நல்லறிவுடையோர் நல்குரவு உள்ளுதும் பெரும, யாம் உவந்து நனி பெரிதே'' என்று வகுத்துச் சொல்லப்பட்ட இலக்கணத்துக்கு இலக்கியமாக விளங்குகிறார் புலவர் முடமோசி. வளமைக் காலமோ வறுமைக் காலமோ,

ஒருவனுடைய வாழ்வின் நிலை எப்படியிருந்தாலும், அவனுடைய மனவளம் சிறந்ததாக இருந்தால் எந்த நிலையிலும் அவனைப் போற்றி மகிழ்விக்க வேண்டும் என்னும் மணிநெறி இங்கே மலர்ந்து மணம் பரப்புகிறது. "அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவை போல் உற்றுழித் தீர்வார் உறவல்லர், அக் குளத்துக் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே ஒட்டி யுறுவார் உறவு'' என்னும் உறவு இலக்கணத்துக்கும் புலவர்களின் இந்த நடைநெறியே புதிய விளக்கம் தருகிறது. அதாவது, ''சிறந்தவற்றைப் போற்ற வேண்டும். சீரிய நடைமுறைகளைக் காக்க வேண்டும்'' என்று இலக்கணம் வகுத்துத் தந்ததோடு அதற்கு இலக்கியமான நிகழ்ச்சிகளையும் ஏந்தித் தருகிறது சங்க இலக்கியம்.

## மன்னர்களையே மடக்கினார்கள்

கடமைப் பொறுப்புணர்ச்சி என்பது எடுத்துரைப்பதற்கு எளிதாகவும் கடைப்பிடிப்பதற்குக் கடினமாகவும் உள்ள ஒரு நடைமுறை. நம்முடைய நீதி நூல்களில் வெவ்வேறு தொழிலினர்க்கும் வாழ்க்கை நிலையினர்க்கும் எடுத்து ஓதப்பட்ட நீதிகள் அவரவர்களின் கடமையை நினைவூட்டி வலியுறுத்துபவைகளே. ,'மன்னர்க்கழகு செங்கோன் முறைமை, மந்திரிக்கழகு வரும் பொருளுரைத்தல், தந்திரிக்கு அழகு தறுகண் ஆண்மை'' என்பன போன்ற கருத்துரை ஒவ்வொன்றும் அவ்வத் தொழிலினர்க்கு விதிக்கப்பட்ட கடமைகளே. சங்ககாலத் தமிழர்களும் ஒவ்வொருவர்க்குரிய கடமைகளையும் எடுத்துப் பேசியிருக்கிறார்கள் என்றாலும் அரசர்களுக்குரிய கடமைகளை மிகத் தெள்ளத் தெளிவாகவே வரைந்து காட்டியுள்ளார்கள்.

> நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
> மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
> அதனால்,—
> யான்உயிர் என்பது அறிகை
> வேல்மிகு தானை வேந்தர்க்குக் கடனே

என்று புறநானூறு (186) மிகப் பெரிய மனிதநேய அடிப்படையில் மன்னர்களுக்குக் கடமை விதிக்கிறது. மன்னனுடைய பாதுகாப்பிலேதான் அவனால் ஆளப்படுகிற குடிமக்களின் வாழ்வும் வளமும் அமைகின்றன என்பது இதன் பொருள்.

எல்லா வலிமைகளையும் அவைகளைக் கொண்டு மற்றவர்களை அடக்கியாளும் அதிகாரத்தையும் தன் கைவசம் கொண்டிருக்கிற ஒருவனிடம் வாழ்க்கை மணிநெறி இன்னது என்று வரைந்து சொல்லுவது எளிது; அதை அவன் கடைப்பிடிக்குமாறு செய்வது எப்போதும் எளிதாகாது. 'ஆறு போவதே போக்கு, அரசன் சொல்வதே தீர்ப்பு', 'மன்னன் சொல்லுக்கு மறுசொல் இல்லை' என்பன போன்ற மன ஓட்டங்களால் மிக உயரமான ஒரு தளத்துக்கு உயர்த்தப்பட்ட மன்னன் அந்த நடைநெறியைக் கடைப்பிடிக்கிறானா என்று பார்ப்பதும் கடைப்பிடிக்கா விட்டால் நீ ஏன் இப்படிச் செய்யவில்லை என்று அவனை நினைவூட்டுவதும் பூனைக்கு மணிகட்டும் செயல்களே. ஆனாலும் பழங்காலத் தமிழ் அறிஞர்கள் இதை முறையாகச் செய்தார்கள் என்பதும் மன்னர்களே,—தங்களுக்கு வழிவழியாக ஊட்டப்பட்டு வந்த மனிதநேய உணர்வின் அடிப்படையில் இதிலே மிகுந்த கடமைப் பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொண்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள்.

## ஓர் எடுத்துக்காட்டு

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்னும் சோழ மன்னன் தன்னுடைய குடிமக்களான உழவர் பெருமக்களிடம் அதிகமான வரிவசூல் செய்து அவர்களைக் கொடுமைப்படுத்தத் தொடங்கிவிட்டான். 'யான்உயிர் என்பது அறிகை வேந்தர்க்குக் கடனே' என்னும் நல்லரசிலிருந்து வழுவிவிட்டான். வல்லமை பொருந்திய படை உடையவனாக,—வேல் மிகு தானை வேந்தனாக,—விளங்கியதால் உழவர் பெருமக்களை வரி போட்டு வருத்தத் தொடங்கிவிட்டான் சோழன். இதை அறிந்த வெள்ளைக்குடி நாகனார் என்னும் அறிஞர் அரசனிடம் நேரிலேயே சென்று (புறம் 35) அவனுக்குத் தெளிவு உண்டாக்கி அவனை நெறிப்படுத்தினார். உழவுத் தொழிலின் முதன்மையையும் அதன் இன்றியமையாமையையும் புறக்கணித்து முரட்டுத்தனமாக நடந்து கொண்ட அவனிடம் எழுந்து நின்று பேசினார் வெள்ளைக்குடி நாகனார்:

> கண்பொர விளங்கும்நின் விண்பொரு வியன்குடை
> வெயில்மறைக் கொண்டன்றோ, அன்றே; வருந்திய
> குடிமறைப்பதுவே கூர்வேல் வளவ

என்று நினைவூட்டி உழவுத் தொழிலை அவன் பேண வேண்டியதன் அவசியந்தையும் அழகாக எடுத்துக் காட்டினார்:

வருபடை தாங்கிப் பெயர்புறந்து ஆர்த்து
பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே

என்னும் அவருடைய விளக்கம் ஒரே ஒரு சோழனுக்கு மட்டு மல்லாமல் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் அனைவருக்கும் தேவை யான பெரிய புதிய விளக்கமாக அமைந்தது. 'உன்னுடைய வெண்கொற்றக் குடை வெயிலுக்குப் பிடித்த சாதாரணத் துணிக்குடை அல்ல, மக்களுக்கு மன்னனே உயிர்' என்னும் நெறியை உருவகப்படுத்திக் காட்டுவது அந்தக் குடை' என்று எடுத்துக்காட்டி இடித்துரைத்தன் மூலம் மன்னனுக்குரிய மனித நேயக் கடமைப் பொறுப்பையே நினைவூட்டி அவனை நெறிப் படுத்தினார் வெள்ளைக்குடி நாகனார்.

## கடமை தவறாத மன்னர்கள்

அறிஞர்கள் இருந்து, நடக்கக்கூடாதன நடக்கும்போது எடுத் துரைத்துத் திருத்தினார்கள் என்பதைவிட அக்கால மன்னர் கள் தங்கள் கடமைப் பொறுப்பின் நினைவாகவே வாழ்ந் தார்கள் என்பது மிகுந்த மகிழ்ச்சிக்கு உரியதாக உள்ளது. தங்கள் மேல் படை கொண்டு எழுந்த மாற்றாரை வெல்லுவ தாக வஞ்சினம் கூறும் அக்கால மன்னர் சிலரின் பேச்சிலே 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்பதை அவர்கள் எந்த அளவுக்கு மதித்துக் கடைப்பிடித்து வந்தார்கள் என்பது மிகத் தெளிவாகவே புலப்படுகிறது.

என்னொடு பொருதும் என்ப; அவரை
ஆறமர் அலறத் தாக்கித் தேரொடு
அவர் புறங் காணேனாயின்......
அறன்நிலை திரியா அன்பின் அவையத்து
திறனில் ஒருவனை நாட்டி, முறைதிரிந்து
மெலிகோல் செய்தேன் ஆகுக!

என்று (புறம் 71) வஞ்சினம் மொழிகிறான் ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன். அதாவது, தனக்கு ஏற்படக் கூடிய பழி களிலேயே தன் மக்களுக்கு அரணாக விளங்காத கொடுங் கோலன் என்று ஏற்படக் கூடிய பழியையே பெரிய பழியாக உணருகிறான் பூதப்பாண்டியன். அதாவது, இந்த மன்னன் வேல்மிகு தானை வேந்தனாக இருந்தாலும் மக்களுக்கு உயிராக

விளங்க வேண்டிய தன்னுடைய கடமைப் பொறுப் புணர்ச்சியை எப்போதும் நினைவிலே வைத்துக் கொண்டிருந்த ஒருவனாகக் காட்சியளிக்கிறான்.

இதே போன்றதொரு மனிதநேயக் கடமைப் பொறுப் புணர்ச்சியைத் தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் வஞ்சினத்திலும் பார்க்கிறோம்;

சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி, முரசமொடு
ஒருங்கு அகப்படேஎன் ஆயின்—பொருந்திய
என்நிழல் வாழ்நர் செல்நிழல் காணாது,
'கொடியன் எம் இறை' எனக் கண்ணீர் பரப்பி
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக!

என்று வஞ்சினம் மொழிகிறான் இந்தப் பாண்டியன். இவனும் தனக்கு ஏற்படக்கூடிய பழிகளிலேயே தன் குடிகளால் கொடியவன் என்று இகழப்படுவதையே பெரிய பழியாகக் கருதுகிறான். எந்த நிலையிலும் தங்களை நம்பி வாழும் குடிம்க்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையிலிருந்து தவறி விடவே கூடாது என்கிற இந்த மன்னர்களின் கடமைப் பொறுப்புணர்ச்சி தலைமையானவர்களுக்கும் வலிமை பெற்றிருப்பவர்களுக்கும் ஒரு சிறந்த முன்மாதிரியாக விளங்குவதோடு, சாதாரணமாக இயலாது என்று கருதப்படுகிற இந்தச் செயலை இயற்றி முடித்தவர்கள் தமிழர்கள் என்னும் செம்மாப்பையும் தமிழ் வரலாற்றிலே ஏற்றுகிறது. தட்டிக் கேட்க முடியாத உயரத்திலே ஏற்றி வைக்கப்பட்டிருந்த மன்னர்கள்கூடத் தங்களைவிட எளியவர்களுக்கு ஏற்பட்டிடக் கூடிய இன்னலைத் துடைப்பதே நங்கள் முதற்கடமை என்று கருதினார்கள் என்றால்,—பரம்பரை பரம்பரையாகவும் தங்கள் அறிவுத் தெளிவின் காரணமாகவும் அந்த மன்னர்கள் மனிதநேயப் பேருணர்ச்சியில் தோய்ந்த நெஞ்சினராக வளர்ந்திருந்ததே அதற்குக் காரணம்.

## உயிர் கொடுத்துப் புகழ் கொள்ளுதல்

'பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகல்' என்னும் மணி விளக்கத்தைத் தன்னுள் கொண்ட கலித்தொகை நெய்தல் திணைப் பாடலைப் போலவே, 'உண்டாலம்ம' எனத் தொடங்கும் புறம் 182 ஆம் பாடலும் அக்காலத் தமிழர்

களுடைய வாழ்க்கை மணிநெறிகளின் பொற்களஞ்சியமாக விளங்குகிறது. ''தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே'' இவ்வுலகம் உண்டு என்று உறுதி சொல்லுகிறது, இந்தப் பாட்டு. அத்தகைய பெரியவர்கள் எவ்வெவ்வாறு செயல்படுவார்கள் என்பதையும் இந்தப் பாட்டு அடுக்கிச் சொல்லுகிறது. சங்க காலத்து மன்னர்களிலும் மறவர் களிலும் பலபேர், இந்தப் பாட்டு வகுத்தளிக்கும் உயர் இலக்கணத்துக்கு இலக்கியமாக வாழ்ந்திருக்கிறார்கள்.

'இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத் தமியர் உண்டலும் இலர்' என்பது பிறர்க்கென வாழும் பெரியோர் களின் செயல்முறைகளில் ஒன்றாக இந்தப் பாடலில் சொல்லப் படுகிறது. இதற்கு இலக்கியமாக வாழ்ந்தவர்களில் அதியமான் நெடுமான் அஞ்சி தனித்து எடுத்துப் பேசப்பட்டிருக்கிறான். எதையும் மற்றவர்களோடு பகிர்ந்து உண்ணுகிற இந்தப் பண்பு தான் அவனுக்குப் பெரிய வலிமையைத் தந்தது என்றும் புறம் 95 ஆம் பாடல் உறுதி மொழிகிறது.

உண்டாயின் பதம் கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்

என்று அதியமானை, பகைநாட்டு மன்னனாகிய தொண்டை மானுக்கு அறிமுகம் செய்து வைக்கிறார் அவ்வையார். வேலும் வாளும் வெற்றி தருவதில்லை, ஒரு மனிதனின் நல்லுறவுப் பண்பாடுதான் அவனுக்கு வெற்றி தருகிறது என்னும் உண்மை வரலாற்று மனிதனாகிய நெடுமான் அஞ்சியின் மூலம் இங்கே உணர்த்தப்படுகிறது. இந்தச் செய்தி ஒரு வரலாற்று நிகழ்ச்சி தான் என்பதை நெடுமான் அஞ்சி இறந்தபோது அவ்வையார் பாடிய மற்றொரு பாடலும் உறுதி செய்கிறது.

சிறு சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே!
பெருஞ் சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே!

என்று இந்தப் (புறம் 235 ஆம்) பாடல் அதியமான் நெடுமான் அஞ்சியின் வாழ்வைச் சொல்லோவியம் செய்கிறது. இதே பாடல் இத்தகைய பண்பாடு உடைய ஒருவன். ''புகழெனின் உயிரும் கொடுக்குவர்' என்று மேலே (182) குறித்ததற்கு ஏற்பவே தன் வாழ்வை நடத்துவான் என்பதையும் எடுத்துச் சொல்லுகிறது. அவ்வையார், அவனுடைய இழப்புக்காகப் புலம்பிவரும்

''என்பொடு தடிபடும் வழி எல்லாம் எமக்கு ஈயும் மன்னே;
அம்பொடு வேல் நுழை வழியெல்லாம் தான் நிற்கும் மன்னே!''
என்று நெகிழ்ந்து கசிகிறார். இன்பம், மகிழ்ச்சி என்று வரும் போது மற்றவர்களோடு அதைப் பகிர்ந்து கொள்ளுவதும், துன்பம் என்று வரும்போது தானே அதைத் தாங்கிக் கொள்ளுவதும் தான் வலிமை சான்ற பெரியவர்களின் பண்பு. அதுதான் அவர்களுக்குப் புகழ். இந்த நெறியைக் கடைப்பிடித்து அந்தப் பெரிய புகழை ஈட்டினான் அதியமான் என்று இந்தப் பாட்டு நமக்குச் சொல்லுகிறது.

## வீரம் விளைக்கும் கொடை

பகிர்ந்து உண்ணும் பண்பினால் அதியமான் மக்களின் ஆதரவைப் பெற்று மாண்புமிக்க தியாகமணியாக உயர்ந்து ஓங்கினான் என்று சொல்லுகின்ற புறநானூறே, ஒரு மறவனின் ஈகைப் பேருள்ளம் அவனுடைய வீரத்துக்கே ஆதாரமாக விளங்குகிறது என்பதையும் (புறம் 203) சொல்லுகிறது. நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி பகைவர் நாட்டின் மீது போர்தொடுக்கும் முன்பே பகைவர் நாட்டுக் கோட்டைகளைப் பாணர்களுக்குப் பரிசிலாக வழங்கி விடுகிறான். இதை,

> ......................ஒன்னார்
> ஆரெயில் அவர்கட் டாகவும் நுமதுஎன
> பாண்கடன் இறுக்கும் வள்ளியோய்!

என்று சுட்டிச் சொல்லுகிறது பாட்டு. இவ்வாறு, வெற்றி பெறும் முன்பே எதிரியின் கோட்டையை இரவலர்களுக்கு அளிப்பதாக வாக்குறுதி கொடுத்து விட்டதால் இவன் எந்த விலை கொடுத்தும் அதை நிறைவேற்றித் தீரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விடுகிறது. அதாவது, அவனுடைய மனிதநேய உணர்வின் விளைவான ஈகையே அவன் வீரம் விளைப்பதற்கு ஏதுவாக நிற்கிறது. ''அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார் மறத்திற்கும் அஃதே துணை'' என்கிற குறள் இளஞ்சேட் சென்னியின் வாழ்வில் புதிய விளக்கத்தைப் பெறுகிறது. இதற்கு அடிப்படையாக இருப்பது, எந்த நிலையிலும் நான் உடைந்தவர்க்கு உதவியாக இருக்க வேண்டும் (பிறர்க்காகவே பெரிய வாழ்வு வாழ வேண்டும்) என்று இளஞ்சேட்சென்னி வகுத்துக் கொண்ட உறுதிப்பாடே.

## உண்டியிலும் ஓர் அழகு

இத்தகைய மக்கள் உறவுப் பண்பாடு சங்ககாலத்தில் ஒரு வாழ்க்கை நெறியாகவே கடைப்பிடிக்கப்பட்டு வந்தது என்று தெரிகிறது. வேள்எவ்வி என்னும் வீரர்தலைவன் இறந்தபோது வெள்ளெருக்கிலையார் என்னும் புலவர் பாடிய பாடல்களில் இந்த வாழ்க்கை முறை கண்ணீரோடு சொல்லப்படுகிறது. ''இரும்பாண் ஒக்கல் தலைவன்'' என்று (புறம் 233) குறிப்பிடப் படும் வேள்எவ்வி இறந்துவிட்ட பிறகு, ஈமச்சடங்கின் ஒரு நிகழ்ச்சியாக அவன் மனைவி அவனுக்குப் பிண்டம் வைக்கும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. இதைப் பார்த்த புலவர் வெள்ளெருக்கிலையார், 'எப்போதும் பலரோடு சேர்ந்து உண்ணும் பழக்கமுடைய இந்தத் தலைவன், இறந்துவிட்ட இப்போது மட்டும் எல்லோரையும் விலக்கித்தான் மட்டும் தனியே உண்பானோ?' என்று (புறம் 234) வேதனைக் குரல் எழுப்புகிறார்:

நோகோ யானே, தேய்கமா காலை
பிடிஅடி அன்ன சிறுவழி மெழுகி
தன்அமர் காதலி புல்மேல் வைத்த
இன்சிறு பிண்டம் யாங்கு உண்டனன்கொல்
உலகு புகத் திறந்த வாயில்
பலரோடு உண்டல் மரீஇ யோனே?

பிற்காலத்து வள்ளல் சடையப்பரை, அடையா நெடுங்கதவும் அஞ்சல் என்ற சொல்லும் உடையான் சடையப்பன் என்று பாராட்டுகிறது ஒரு பாட்டு. இந்தப் பாட்டிலே சடையப்பரின் வள்ளல்தன்மையும் நலிந்தவர்களுக்கு அபயம் கொடுக்கும் அவருடைய நல்லியல்பும் சொல்லப்படுகின்றன. ஆயினும் மேலே குறித்த புறநானூற்றுப் பாடல் இதை விட ஒரு படி மேலே சென்று, இன்னார் இனியார் என்று பாராமல் எவ்வி கடைப்பிடித்த பல்லர்ரோடு உண்ணும் பழக்கத்தை எடுத்துரைக் கிறது. அதாவது, மற்றவர்களுக்கு உதவுதல் என்னும் நல்ல இயல்புக்கு ஆதாரமாக, உண்பது என்றால் நாலு பேரோடு சேர்ந்து உண்ணுதல்தான் என்னும் வழக்க நடைமுறையையும் சங்ககாலத்தார் கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள். பல அழகு களை வரிசைப்படுத்திச் சொல்விவரும் பிற்கால நீதிப்பாட்டு, ''உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்'' என்று சொல்லி

யிருப்பதும் அந்தப் பழைய பண்பாட்டின் மிச்சசொச்சமான சிந்தனை என்றே தோன்றுகிறது.

## வழிவழி வள்ளன்மை

தமிழ் வரலாற்றில் இடம் பெற்றுள்ள கடையெழு வள்ளல் களைப் பற்றிய செய்தி, மனிதன் என்பவன் மனநெகிழ்ச்சி உள்ளவனாகவும் மாண்பாளனாகவும் விளங்க வேண்டும் என்னும் மணிநெறியை அழுத்தமாக வலியுறுத்துகிறது. கடையெழு வள்ளல்கள் என்னும் சொல்லாட்சி நிலைபெற்றிருப் பதால், தமிழக வரலாற்றில் தலையெழு வள்ளல்கள், இடையெழு வள்ளல்கள் என்று, இவர்களுக்கு முன்பே 14 பேர் தனித்து எடுத்துப் போற்றப்பட்டிருக்க வேண்டும் என்று ஊகிக்க முடிகிறது. பத்துப்பாட்டுள் ஒன்றாகிய சிறுபாணாற்றுப் படையில் விவரிக்கப்படும் கடையேழு வள்ளல்களைப் பற்றிய செய்திகளைப் பார்க்கின்ற போது, வள்ளல்கள் என்பவர்கள் தமக்கென முயலாத பிறர்நலம் பேணியே வாழ்ந்த பெரியோர் களாக வாழ்ந்திருந்தார்கள் என்பதை உறுதியாகவே ஊகிக்க முடிகிறது.

கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய ஆவியர் பெருமகன் என்று பேகனும், சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய பறம்பின் கோமான் என்று பாரியும், வாலுளைப் புரவியோடு வையகம் மருள ஈர நன்மொழி இரவலர்க்கு ஈந்தவன் என்று காரியும் நீலநாகம் நல்கிய கலிங்கம் ஆலமர் செல்வர்க்கு அமர்ந்தனன் கொடுத்தவன் என்று ஆயும் கமழ்பூஞ்சாரல் கவினிய நெல்லி அமிழ்து விளை தீங்கனி அவ்வைக்கு ஈந்தவன் என்று அதியமானும் நட்டோர் உவப்ப நடைப் பரிகாரம் முட்டாது கொடுத்தவன் என்று நள்ளியும் குறும்பொறை நன்னாடு கோடியர்க்கு ஈந்தவன் என்று காரியும் அவனோடு போட்டி போட்டுக்கொண்டு உயர்வள்ளலாகவும் வீரனாகவும் விளங்கியவன் என்று ஓரியும் சிறுபாணாற்றுப்படையில் (84-113) பாராட்டப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் சிலபேர் ஈரநன் மொழி உடையவர்கள் என்றும் ஆர்வ நன்மொழி உடைய வர்கள் என்றும் எடுத்துப் பாராட்டப்பட்டிருப்பதைப் பார்க்கிற போது, வறியவர்களுக்கு அன்பும் ஆதரவும் நல்கும் தருண நெகிழ்ச்சி உடைய சான்றோர்களாக விளங்கியதாலேயே இவர்கள் போற்றப்பட்டார்கள் என்றும் தெரிகிறது. அதாவது, 'எனைத்தானும் நல்லவை கேட்க'. என்னும் வள்ளுவக் கட்டளையையும், ''யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு

கைப்பிடி, யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே' என்னும் திருமூலத்தையும் இந்த வள்ளல்கள் வாழ்க்கை மணிநெறிகளாகக் கொண்டு கடைப்பிடித்து வந்தார்கள் என்பது புலப்படுகிறது.

இந்த வள்ளல்களின் மனிதநேய உணர்வு காண மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய செயலாகவும் சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய செயலாகவும் வெளிப்பட்டிருப்பது சிறிதே விந்தையாகவும் அளவு மீறிய கொடைமடமாகவும் கூடத் தோன்றுகிறது. ஆனாலும், நெஞ்சக் கனிவின் வளர்ச்சி, பயித்தியக்காரத்தனமாகத் தோன்றுகிற இந்த அளவுக்கு நீண்டுவிடக் கூடியதே என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எந்தப் பெருஞ் செயலும், ஒருவகையில் மனிதனின் அன்றாடச் செயல்முறைகளிலிருந்து பெரிதும் வேறுபட்டதாகத்தான் இருக்கிறது என்பதையும் நாம் நினைவிலே கொள்ள வேண்டும். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் (திருவருட்பா) என்று இதயம் நெகிழ்கின்றவர் இத்தகைய மிகையன்பின் ஒரு வடிவமே என்பதையும் இங்கே நினைவில் கொள்ள வேண்டும்.

## புரட்சிகரமான வள்ளன்மை

வள்ளல்களின் வாழ்க்கைக் கடைப்பிடியாக இ[illegible] இதய நெகிழ்ச்சி இவைகளையும் மிஞ்சியதாக இருந்த[illegible]தைப் பதிற்றுப் பத்து (ஆறாம் பத்து) நமக்கு எடுத்துச் சொல்லுகிறது. ஆறாம் பத்தின் தலைவனாகிய ஆடு கோட்பாட்டுச் சேரலாதனின் பல நிலைச் சிறப்புகளைப் பாடிவரும் காக்கைபாடினியார் நச்செள்ளையார்,

> வாரா ராயினும் இரவலர் வேண்டி
> தேரின் தந்து அவர்க்கு ஆர்பதம் நல்கும்
> நசைசால் வாய்மொழி இசைசால் தோன்றல்

என்று அவனுடைய வாழ்க்கை நிகழ்ச்சி ஒன்றைச் சார்த்திப் பாராட்டுகிறார். தன்னுடைய நாட்டில் இரந்து உயிர்வாழும் கொடுமையை ஒழித்த இந்த மன்னன் அண்டை நாடுகளில் வாழும் இரவலர்களின் துன்பத்தைப் போக்கவும் தன்னுடைய வள்ளல் கையை நீட்டியிருக்கிறான் என்பது இந்த நிகழ்ச்சியிலிருந்து புலப்படுகிறது. வாழ்வில் மெலிவுற்ற இரவலர்கள் தன்னை அணுக முடியாமல் நடை மெலிந்து தள்ளாடக் கூடாது என்று கருதியவன்போல அவர்களுக்குப் போக்குவரத்து வசதியும் செய்து கொடுத்திருக்கிறான். இந்தச் செயலையும் ஒரு சடங்

காகச் செய்யாமல் இதயக் கனிவோடேயே அவன் செய்தான் என்பதை அவன் மேல் ஏற்றிச் சொல்லப்படும் 'நசை சால் வாய் மொழி' என்னும் அடைமொழி உணர்த்துகிறது. மன்னர்கள்' தங்களை நாடிவரும் வறியவர்களைத் தாங்களே நேரில் நின்று உபசரிப்பார்கள் (''ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டி'') என்று பாராட்டுகிறது சிறுபாணாற்றுப்படை. இதே போன்ற தொரு இனிய பண்புடனேயே ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் அயல் நாட்டில் திண்டாடும் வறியவர்களை அழைத்து வந்து உபசரித்தான் என்பதே இந்தப் பதிற்றுப்பத்துப் பகுதியின் கருத்து.

## 'பகுத்தூண் தொகுத்த ஆண்மை'

'நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற் போல்' ஒரு நல்லியல்பை (மணிநெறிகளுள் ஒன்றை) வாழ்க்கை நடையாக்கிக் கொள்ளுகிற ஒருவனிடம் மற்றைய நல்லியல்புகளும் வளமாக வந்து சேருவதே வழக்கம். 'உண்டாலம்ம இவ்வுலகம்' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலில் வரும் சான்றோர் களிடம் அனைத்துப் பெரும் பண்புகளும் இருந்தன என்று குறிப்பிடப்படுவது கவனிக்கத் தக்கது. அக்காலத்து நற்குண வள்ளல் மறவர்கள் இத்தகைய பெரும் பண்புகளின் ஒரு கூட்டு வடிவமாகவே விளங்கினார்கள். பதிற்றுப்பத்து எட்டாம்பத்தின் தலைவனாகிய பெருஞ்சேரல் இரும்பொறை இத்தகைய நன்னடைகள் பல கொண்டவனாகவே சித்திரிக்கப்பட்டிருக்கிறான்:

> உயிர் போற்றலையே, செருவத்தானே!
> கொடை போற்றலையே, இரவலர் நடுவண்;
> பெரியோர்ப் பேணி, சிறியோரை அளித்தி

உயிரைப் பெரிதாக மதியாமல் போர் முகத்திலே நிற்கிறான் இந்த மானமறவன். அந்தப் பெரிய தியாக உணர்வே மற்றுள்ள அரிய செயல்களை அவனுடைய வாழ்வில் மிகமிக எளிதாக நடப்பித்து விடுகிறது. வீரனாக,—தியாக மாவீரனாக விளங்கிய பெருஞ்சேரல் இரும்பொறை வள்ளல் தனத்திலும் மாபெரியனாகவே விளங்குகிறான். இந்த இயல்புகள் வளரப் பெற்ற அவனிடம் சாதாரணமாக மிக அரியது என்று கருதப்படும் பெரியோர்ப் பேணுதல் என்னும் இயல்பும் இயல்பாகவே அமைந்து விடுகிறது. ''அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்'' என்று அருமைப்பாடு

உடையதாகக் குறிக்கப்படும் செயல்முறை பெருஞ்சேரல் இரும்பொறையிடம் இயல்பாகவே அமைந்துவிட்டது என்றால், பெரியோரை மதித்துப் போற்றக் கற்றுக் கொள்ளுவதற்கு முன்பே வாடும் முகங்களை மலர்ந்த முகங்களாக்கிக் காணும் மனிதநேயத் தெளிவு அவனிடம் போதிய அளவு வளர்ந்திருந்ததே அதற்குக் காரணம். இதனாலேதான் பிறரின் வாட்டம் தீர்க்கும் இந்த நல்ல நடைமுறை 'பகுத்தூண் தொகுத்த ஆண்மை' (பதிற்றுப்பத்து 4:8) என்று விதந்து ஓதப்படுகிறது. இத்தகைய ஈகைப் பேராண்மை உடையவர்கள் அதிலே பல சமயங்களில் மிகையாகச் செயல்பட்டதிலே வியப்பு இல்லை யல்லவா?

## எல்லையைத் தொட்ட ஈகை

பாராட்டு என்பது செயல் சிறந்தவர்களை மகிழ்விக்கிறது; சீரிய பெருஞ்செயல்களை மேலும் மேலும் செய்திடவும், அவர்களை ஊக்குவிக்கிறது. இந்த உண்மையை அறிந்து பழம் நாள் புலவர்களும் புரவலர்களுமான தலைவர்களும், இந்தச் செய்கையிலும் தங்கள் மனிதநேய நல்லுணர்வைக் காட்டியிருக் கிறார்கள். வீரம் விளைவிப்பவனையும் இன்னல் சூழ்ந்த நிலையில் அதை எதிர்த்து மேற்செல்பவனையும் மன்னர்கள், சீர்களும் சிறப்புகளும் வழங்கிப் பாராட்டியிருக்கிறார்கள். வாழ்க்கை இலக்கணம் சொல்லும் பொன்முடியார் (புறம் 312) பாடல்,- 'களிறு எறிந்து பெயரும் காளைக்குத் தண்ணடை நல்கல் வேந்தர்க்குக் கடனே' என்று விதிக்கிறது. இந்த இலக்கணம் நடைமுறைப்படுத்தப்பட்ட முறை ஒரு வகையான வியப்பை நமக்கு ஊட்டுகிறது.

சிறுகுடி கிழான் பண்ணன் என்பவன் போர்முனையிலே வீரம் விளைத்தவன் அல்லன்; ஏர்முனையில் விளைத்த செல் வத்தை எடுத்து வழங்கி,-நாட்டில் பரவிய பஞ்சத்தையே தடுத்து நிறுத்திய பெருமைக்கு உரியவன் இந்தப் பண்ணன்.

வெள்ளி தென்புலத்து உறைய விளைவயல்
பள்ளம் வாடிய பயனில் காலை......
....... :...............
தன்நிலை அறியுனனாக அந்நிலை
இடுக்கண் இரியல் போக
உடைய கொடுத்தோன் எந்தை

என்று இவனுடைய வாழ்க்கைப் பெருஞ்செயலை வருணிக்கிறது 388 ஆம் புறப்பாட்டு. மேற்கண்டவாறு பண்ணனின் பஞ்ச ஒழிப்புச் செயலை எடுத்துரைக்கும் மள்ளனார் என்னும் புலவர், 'இவனுடைய அரிய செயற்சாதனையை நாள்தோறும் பாடிப் பாடி மகிழ மாட்டேனா?' என்று மகிழ்ச்சி தெரிவிக்கிறார். அந்த அளவுக்குப் பண்ணனின் பசி ஒழிப்புச் செயல் அரியதொரு சாதனையாக நாட்டு மக்களாலே எடுத்துப் பேசப் பட்டது. இந்தச் செய்தியைக் கேள்வியுற்ற நாட்டு மன்னனாகிய குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பண்ணனைப் பாராட்டி மகிழ்வதற்காக 'தான் ஒரு மன்னன். பண்ணன் தன் குடிமக்களிலே ஒருவன்' என்கிற உண்மையைக்கூட மறந்து,—இவனே பண்ணனைத் தேடிச் செல்கிறான். செல்லும் வழியெல்லாம் பண்ணனின் ஈர நெஞ்சம் ஈகை நிகழ்ச்சிகளாகத் தொடர்ந்து வருகிறது. இதனை, அரசனே நமக்குச் சொல்லுகிறான்:

யாணர்ப் பழுமரம் புள்இமிழ்ந் தன்ன
ஊண்ஒலி அரவம் தானும் கேட்கும்,
பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி,
முட்டை கொண்டு வன்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்லொழுக்கு ஏய்ப்ப
சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்
இருங்கிளைச் சிறார் காண்டும்

என்று, பஞ்சத்தால் ஏற்பட்ட பசியை மாய்த்திட்ட பண்ணனின் செயலால் விளைந்த எழுச்சிக் காட்சிகளை இதயத்தில் தேக்கிக் கொண்டே பண்ணனின் ஊரை நோக்கி விரைகிறான் கிள்ளி வளவன். நாட்டு மக்களை வாட்டி எடுத்த பஞ்சத்தைத் தன்னுடைய சோற்றுச் செருக்கால் வீழ்த்திக் காட்டிய பண்ணனைப் பார்த்ததும், ''இவனல்லவோ வாழ வேண்டும்: இத்தகைய உத்தமர்களால் அல்லவோ இந்த உலகம் தொடர்ந்து உயர்தடத்தில் நடக்கிறது'' என்று நன்றிப் பெருக்கோடும் நயன்மை நினைவோடும் நெஞ்சம் நெகிழுகிறான் சோழ மன்னன். அவன் வழங்க விரும்பிய பாராட்டும் அந்த உணர்ச்சிகளையே அள்ளிக்கொண்டு வெளிப்படுகிறது. 'பண்ணன் வாழ வேண்டும், அவனுக்கு வகுத்த வாழ்நாள் மட்டுமல்ல,—அந்த வாழ்நாளின் எல்லையையும் மீறி, தொடர்ந்து இத்தகைய நன்மைகளைச் செய்வதற்காகப் பண்ணன் நீண்டகாலம் வாழ

வேண்டும், அப்படி வாழுவதற்கு என்னுடைய வாழ்நாளையும் தன்னுடைய வாழ்நாளோடு இணைத்து, பண்ணன் அதை நீட்டிக் கொள்ள வேண்டும் (யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய,—புறம் 173) என்று பாராட்டி வாழ்த்துகிறான். இப்படி ஒரு வாழ்த்தைப் பொழிந்ததன் மூலம் இந்த மன்னவன் மனித நேயத்தின் வான எல்லையையே எட்டித் தொட்டு விடுகிறான்: மனிதநேயப் பேருணர்ச்சி எத்தகைய பெரிய தியாகங்களுக்கும் மனிதனை வழிநடத்திவிடும் என்னும் இனிய உண்மைக்கும் இவன் அரிய சான்றாக விளங்குகிறான். பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்திப் பாராட்டுவதுதான் மரபு. எப்படி வாழ வேண்டும், எத்தனை நாள் வாழ வேண்டும் என்று வாழ்த்திப் பாராட்டுவோர் தங்கள் விழைவுகளை வெளிப் படுத்தும் ஆர்வப் பெருக்கும் அதிலே உண்டு. பதிற்றுப்பத்தின் ஒரு பாட்டில் (6:4), ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பாராட்டிப் போற்றும் காக்கைபாடினியார், "உன்னுடைய ஈகை வரலாறு இடைவற்றாது தொடர வேண்டும்: அதற்காக நீ,

> உயர்நிலை உலகத்துச் செல்லாது இவண்நின்று
> இருநிலை மருங்கின் நெடிது மன்னியரோ

என்னும் புதுமையான வேண்டுகோள் ஒன்றைக் கூட விடுக் கிறார். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் வழங்கி யுள்ள (புறம் 173) பாராட்டு வடிவத்திலே ஒரு சிறிய சுயநலத் தின் சாயல் கூட இல்லை. பொதுநலன் சிறப்பதற்காகத் தன்னையே ஈந்துவிடத் தயாராக இருக்கிறான் அந்த மன்னன். இந்தப் பெரிய சான்றாண்மையை உள்நின்று ஊக்குவதுடன் துன்பமுற்ற மக்களுக்கு யார் மூலமாக இன்பம் கிடைக்கிறதோ அவர்களே வாழத் தகுந்தவர்கள் என்னும் ஒரு புதிய வாழ்க்கை மணிநெறியையே அவனுடைய மனிதநேயம் மனிதகுல வரலாற்றுக்கு வரைந்து தந்துள்ளது. புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் (அரிய பெரிய செயல்கள் நடைபெறுவதற்குத் தங்கள் உயிரே தேவைப்படுகிறது என்றாலும், மனிதநேயச் சான்றோர்கள் அதையும் எடுத்து வழங்கிவிடத் தயங்க மாட் டார்கள்) என்னும் உண்மைக்கும் கிள்ளிவளவனின் புரட்சிகர மான பாராட்டு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

## மனிதநேயப் பெருவீரம்

''ஒப்புரவினால் வரும் கேடு எனின் அஃது ஒருவன் விற்றுக் கோள் தக்கது உடைத்து' என்றது வள்ளுவம். தனக்கு முற்

பட்ட காலத்துச் சான்றோர்களுடைய வாழ்க்கை மணிநெறிகளின் பிழிவாக வள்ளுவம் இதை வகுத்துச் சொல்லியுள்ளது. நல்லவன் ஒருவன் நெடிது வாழவேண்டும் என்று விரும்பிய கிள்ளிவளவன் (புறம் 173) தன் வாழ்வையே கொடுத்து அவனுடைய வாழ்வை நீட்டிக்கத் துணிந்தது போல, ஒருவனுடைய அல்லது சிலருடைய துன்பத்தைப் போக்குவதற்கு, அவர்களுடைய எதிர்பார்ப்பை எந்த நிலையிலும் காப்பாற்றுவதற்குத் தன்னுடைய உயிர்தான் தேவை என்னும் நிலை ஏற்படுமானால் அதைக் கொடுத்திடவும் மனிதநேயர்கள் தயங்க மாட்டார்கள் என்று வரலாறு படைக்கிறது பழைய தமிழ்ச் சமுதாயம்.

தம் தம்பியிடமே ஆட்சி உரிமையைப் பறிகொடுத்துவிட்டுக் காட்டிலே வாழ்ந்து வருகிறான் குமண வள்ளல். நாட்டைப் பறித்துக் கொண்டு அண்ணனைக் காட்டுக்கு விரட்டிய தம்பி அந்த அண்ணனின் தலைக்கும் விலை வைக்கிறான். அந்த நிலையில் குமணனைக் காட்டிலே சந்தித்து, இளங்குமணன் வழங்காத கையனாக இருப்பதால் தம்முடைய வாழ்வில் வறுமை சூழ்ந்துவிட்டது என்று வந்து நிற்கிறார் புலவர் பெருந்தலைச் சாத்தனார். நாடு இழந்து காடு பற்றியிருந்த குமணனையே தேடிக்கொண்டு அவர் வந்திருக்கிறார் என்றால் அவருடைய வறுமை நிலையைத் தனியே விவரித்துக் கூற வேண்டியதில்லை. ஆனாலும் ஆற்றாமை காரணமாகவும் வறுமைப் புயல் அவருடைய வாழ்வையே முறித்துத் தள்ளிவிட்ட அவலநிலை காரணமாகவும் குமணனிடம் தன் நிலையை வாடிய சொற்களால் வருணிக்கிறார் புலவர் (புறம் 164):

> ஆடுநனி மறந்த கோடுஉயர் அடுப்பின்
> ஆம்பி பூப்ப, தேம்பு பசி உழவா
> பாஅல் இன்மையின் தோலொடு திரங்கி
> இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
> சுவைத்தொறு அழூஉம் தன்மகத்து முகம் நோக்கி
> நீரொடு நிறைந்த ஈர்இதழ் மழைக்கண் என்
> மனையோள் எவ்வம் நோக்கி, நினைஇ
> நிற்படர்ந்திசினே—நல்போர்க் குமண!

குமண வள்ளல் பொருளுடையவனாக இருந்த நிலை போய்விட்டது; இப்போது தன்னுடைய உயிரையே காப்பாற்றிக்

கொள்ள வேண்டிய நிலையில் அவன் இருக்கிறான். அத்தகைய ஒருவனை நாடிச் சென்று தன்னுடைய கவலையை அவனிடம் சொல்லியாவது ஆற்றிக் கொள்ளலாம் என்று போயிருக்கிறார் புலவர். குமணனோ, வழிவழியாக 'வயிரியர் இன்மை தீர்க்கும் குடிப்பிறந்தோன்'. 'இல்ன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல் குலனுடையான் கண்ணே உள' என்னும் பெரிய உள்ளத்தை வழிவழிச் செல்வமாகப் பெற்றிருப்பவன் குமணன். குறிப் பறிந்தே கொடுத்துவிடும் அந்தக் குணக்குன்றின் முன்னே தம்முடைய வீடு படுகின்ற வேதனையை விரித்தே சொல்லி விட்டார் புலவர். உடனேயே குமணவள்ளலின் மனிதநேயப் பேருள்ளம் வரிந்து கட்டிக்கொண்டு எழுந்து கொள்கிறது: 'நாட்டை இழந்த என்னுடைய துன்பம் பெரியதுதான், அதை விட வீட்டு உயிர்களின் வாட்டம் தீர்க்க முடியாமல் மறுகும் இந்தப் புலவனின் துன்பம் மிகவும் பெரியது,—அது உடனேயே தீர்க்கப்பட வேண்டும் என்று துடிக்கிறது அந்தப் பெரிய உள்ளம். ''பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல் என் நாடிழந்ததனினும் நனி இன்னாதது'' என்று அவனுக்கு நினை வூட்டுகிறது அவன் நெஞ்சம். கொடுத்துக்கொடுத்துக் கொடைத் தழும்பேறிய அவன் இதயம். 'மடுத்த வாயெல்லாம் பகடு அன்னான் உற்ற இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து' என்ற நெறியிலே தனக்கு ஏற்பட்ட நெருக்கடியை இடித்துத் தள்ளி விட்டு மேலே செல்கிறது. இல்லாமை சூழ்ந்துள்ள இந்த நிலை யிலும் இந்தப் புலவனின் இன்மையைத் தீர்க்கும் செல்வம் ஒன்று தன்னிடம் இருப்பதை உணர்கிறான் குமணன். உடனேயே தன் உடைவாளை உருவி அதைப் புலவன் கையிலே கொடுத்து, 'என் தலையைக் கொய்து கொண்டுபோய் என் தம்பியிடம் காட்டி அவன் தரும் பொருளைக் கொண்டு உன் வறுமையைப் போக்கிக் கொள்' என்று சொல்லுகிறான். இந்த நிகழ்ச்சியை,

> பாடுபெறு பரிசிலன் வாடினென் பெயர்தல்என்
> நாடு இழந்ததனினும் நனி இன்னாது என
> வாள் தந்தனனே தலை எனக்கு ஈய
> தன்னின் சிறந்தது பிறிது ஒன்று இன்மையின்

என்று ஓங்கிய உவகையுடன் சித்திரிக்கிறார் பெருந்தலைச் சாத்தனார்.

வள்ளுவரின் குறள் வேடிக்கையானதொரு வீரக் காட்சியைச் சித்திரிக்கிறது. வீரதீரம் மிக்க ஒரு படைவீரனைப் பற்றிய செய்தி அது. கை வேலோடு போர்க்களத்திலே புகுந்த அந்த

வீரன் அந்த வேலை எதிரியின் யானை மீது வீசி எறிந்து விட்டான். கைவேல் இழந்து நிற்கும் அந்த நிலையில் அவனை நோக்கி ஓடி வருகிறது மற்றொரு யானை. கையில் வேல் இல்லையே என்று ஒரு கணம் திகைத்த அந்த மறவன் மாற்றான் எறிந்த வேல் ஒன்று தன் மார்பிலே தைத்துக் கிடப்பதைக் காண்கிறான். உடனே உவகையோடு அதைப் பறித்து எடுத்துக் கொண்டு எதிர்வந்த யானையை நோக்கி முன்னேறு கிறான். இந்தக் காட்சியைக் ''கைவேல் களிற்றொடு போக்கி வருபவன் மெய்வேல் பறியா நகும்'' என்று சொல்லோவியம் செய்கிறது குறள். இதே நிலையிலேதான், இதை விடவும் உயர்வு கொண்ட நிலையிலேதான் குமணனை நாம் இங்கே சந்திக்கிறோம். வருந்தி வந்தவனுக்கு வாரி வழங்கிட எதுவும் இல்லையே என்று ஏங்கிய குமணனுக்குத் தன்னிடம் உயிர் ஒன்று இருக்கிறது என்கிற உண்மை கைவேல் இழந்த மறவ னுக்கு மெய்வேல் உதவியது போல உடன்வந்து உதவுகிறது. யாரும் இழக்கத் துணியாத உயிரையே இழக்கத் துணிந்து யாரும் அடைய முடியாத பெரும் புகழை அடைந்து விடுகிறான் குமணன். இந்த நிகழ்ச்சியைச் சித்திரிக்கின்ற புறநானூற்றுப் பாடல் (165) ''மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே'' என்னும் மணித்தொடரோடு தொடங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது, தன் உயிரையே நல்கிப் புலவனின் வறுமையைத் தீர்க்க முனைந்த குமணனின் மனிதநேயப் பெருவீரம் தமிழ் வரலாற்றுக்கே மணிச் சிகரமாக விளங்கும் உயிர்கொடுத்துப் புகழ்கொள்ளுதல் என்னும் உயிர்நெறியையும் வழங்கியுள்ளது.

## காவல் இருக்கும் உழவர் பெருமக்கள்

பழந்தமிழ்ச் சான்றோர்கள் சிறந்த வாழ்வியல் மேதை களாக விளங்கினார்கள். வாழ்வியலுக்குத் தேவையான மணி நெறிகளை வகுத்துக் கொடுத்ததோடும் அவைகள் கடைப் பிடிக்கப்படுவது கண்டு மகிழ்ந்து பாராட்டியதோடும் அவர்கள் அமையவில்லை. அந்த மணிநெறிகள் சிதைக்கப்பட்டு விடாதபடி அவைகளுக்கு ஏற்ற பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அமைத்து வைத்திருக்கிறார்கள்.

ஏரினும் நன்றால் எருவிடுதல், கட்டபின்
நீரினும் நன்று அதன் காப்பு

என்கிறது பயிர்த்தொழில் வள்ளுவம். நிலத்தை உழுது பண்

படுத்தாமல் பயிர்த் தொழில் செய்ய முடியாது. ஆனாலும் உழுது பண்படுத்துவதைப் போலவே, உரம் இடுதலும் பயிர்த் தொழிலில் ஒரு முக்கியமான நிகழ்ச்சி. அதைப் போன்ற மற்றொரு நிகழ்ச்சி களைஎடுப்பு. இந்த மூன்று நிகழ்ச்சிகளோடு நாலாவதும் முதன்மையானதுமான பாதுகாப்புப் பணியும் நடைபெற வேண்டும் என்று வற்புறுத்துகிறது இந்த வள்ளுவம். காப்புப் பணியின் முதன்மையை வலியுறுத்த விரும்பிய இந்த வள்ளுவப் பாட்டு, நீர் பாய்ச்சுதலை விடவும் கூடப் பயிர்க் காப்புப் பணி இன்றியமையாதது என்று கூறுகிறது.

பயிர்த் தொழிலைப் போன்றதொரு வளர்ச்சிப் பணியைத் தான் சான்றோர் செய்கிறார்கள். மனிதப் பண்ணையில் வளர வேண்டிய மனிதநேய வாழ்வியல் நெறிகளை இடைவிடாது விதைத்துக் கொண்டிருப்பவர்கள் அவர்கள். வாழையடி வாழையாக வரும் சான்றோர்களின் மரபு, மனிதநேய வளர்ச்சியில் அந்த வளர்ச்சிக்குத் தேவையான மணிநெறிகளின் பாதுகாப்பும் இன்றியமையாதது என்பதை நன்கு உணர்ந்திருந்தது. அதன் விளைவாக, இலக்கணங்களிலும் இலக்கியங்களிலும் மணிநெறிகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான வழிமுறைகளையும் தெள்ளத் தெளிவாக வகுத்துக் கொடுத்தது.

## ஓம்படைக் கிளவி

இலக்கண நூலாகிய தொல்காப்பியம் ஒரு சிறந்த வாழ்க்கை நூலாகவும் விளங்குகிறது என்பது தமிழர்கள் நிருமித்த தனிப் பெருமை. அதன் செய்யுளியலிலும் மெய்ப்பாட்டியலிலும் வரும் சில செய்திகள் வாழ்க்கை மணிநெறிகளுக்கு அரண் செய்து காக்கும் அரிய செய்திகளாக உள்ளன. வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ என்னும் இரண்டு புறத் துறைகளுக்கும் தொல்காப்பியச் செய்யுளியல் (424, 426) ,தனித்த சிறப்பளித்து விளக்கம் தருகிறது

வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குதலின்றி வழி நனி பயக்கும் என்று
ஓம்படைக் கிளவியின் வாயுறுத்தற்றே

என்பது தொல்காப்பியம். இதற்கு விளக்கம் சொல்லும் பேராசிரியர், ''முற்பருவத்துக் கைத்தும், பிற்பருவத்து உறுதி பயக்கும் வேம்பும் கடுவும்போல, வெய்யவாய சொல்லினை,

தடையின்றிப் பிறபயக்கும் எனக் கருதிப் பாதுகாத்துக் கிளக்கும் கிளப்பினான் மெய்யாக அறிவுறுத்துவது வாயுறை வாழ்த்து', என்கிறார்.

செவியுறை தானே
பொங்குதலின்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத் தன்றே

என்று செவியுறைக்கு விளக்கம் தருகிறது தொல்காப்பியம். ''பெரியோர் நடுவண் அடங்கி வாழ்தல் கடப்பாடு எனச் சொல்லிச் செவிக்கண் அறிவுறுத்துவது செவியறிவுறூஉ'' என்று இதற்கு விளக்கம் தரப்படுகிறது.

இந்த இரண்டு துறைகளாலும் மிகுதிக்கண் மேற்சென்று இடித்து நெறிப்படுத்தும் கடமை மனிதநேய மணிநெறிகளின் காவலர்களான சான்றோருக்குக் கடமையாக வலியுறுத்தப்பட்டுள்ளது. வாயுறை வாழ்த்து வேம்பும் கடுவும் போன்ற மருந்துச் சொற்களால் வழங்கப்படும் என்பதால் அது கடுமையான இடித்துரையாக அமையும் என்பது பெறப்படுகிறது. அதே போலச் செவியறிவுறூஉ என்பதும் 'பொங்குதல் இன்றி அவிதல் கடன் எனச் செவியுறுத்தன்றே' என்று பேசப்படுவதால், அடிப்படையான மனிதநேய நெறி சிதையும் அளவுக்கு ஆத்திரம் கொள்பவர்களை அடங்கி நடக்குமாறு நெறிகாட்டுதல் என்னும் பொருளைத் தருகிறது.

### வெகுளிக் காவல்

அமைதி நிலையில் மணிநெறிகளுக்கு இந்தப் பாதுகாப்பு அமைப்புகளைச் செய்துவைத்த சான்றோர்கள் உணர்ச்சி நிலையிலும் இத்தகையதொரு பாதுகாப்பைச் செய்து வைத்திருக்கிறார்கள். அது மெய்ப்பாட்டியலுள் சொல்லப்படும் எட்டுச் சுவைகளுள் ஒன்றாகிய வெகுளி என்னும் வாழ்க்கைச் சுவையாக வடிவம் கொண்டுள்ளது. ''நகையே அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப'' என்பது தொல்காப்பிய மெய்ப்பாட்டியல். இவைகளுள் ஒன்றாகச் சுட்டப்பட்டுள்ள வெகுளி (கடுங்கோபம்) உண்டாவதற்கான காரணங்களைப் பின்வருமாறு வரிசைப் படுத்துகிறது தொல்காப்பியம்:

உறுப்பறை, குடிகோள், அலை, கொலை என்ற
வெறுப்பின் வந்த வெகுளி நான்கே

என்பது மெய்ப்பாட்டியல் பத்தாவது நூற்பா. இவற்றுள் 'உறுப்பறை என்பது கை குறைத்தலும் கண் குறைத்தலும் முதலாயின; 'குடிகோள்' என்பது தாரமும் சுற்றமும் குடிப் பிறப்பும் முதலாயவற்றுக்கண் கேடு சூழ்தல்; 'அலை' என்பது கோல்கொண்டு அலைத்தல் முதலாயின; 'கொலை' என்பது அறிவும் புகழும் முதலாயினவற்றைக் கொன்று உரைத்தல் (தொல். மெய். 10 பேராசிரியம்). இந்த நான்கு காரணங் களால் ஒருவனுக்கு வெகுளி உண்டாக வேண்டும். உண்டாகும் என்று விதிக்கிறது தொல்காப்பியம்.

வெகுளி தோன்றுவதற்குக் காரணமான நான்கு பின்னணி களும் மனிதநேய உணர்வை அழிக்கின்ற நிகழ்ச்சிகளாக அமைந் திருப்பதால், மற்ற உயிர்களுக்கு இல்லாத மனஉணர்வாகிய மனிதநேய உணர்வைப் பெற்றிருக்கின்ற மனிதன் இவைகளுக்கு எதிராக எழுந்து போங்கி இவைகள் எல்லை மீறாதபடித் தடுத்து நிறுத்த வேண்டும் என்று சங்கச் சான்றோர் விதித்துள் ளார்கள்.

புறத்திணையில் சொல்லப்படும் வஞ்சினக்காஞ்சி (புறத் திணையியல் 77) வெகுளியின் விளைவான மனிதநேயப் பாது காப்பு நடவடிக்கையைச் சுட்டுகிறது. அதாவது, தனக்கும் தன் குடிக்கும் ஊறுநேரக் காரணமான நிகழ்ச்சிகள் நடைபெறும் போது அவைகளைத் தடுத்து நிறுத்தும் வீரச் செயல்களில் ஈடு படுமாறு அவனுடைய நியாயச் சீற்றம் அவனைத் தூண்ட வேண்டும் என்பது இதன் பொருள்.

மேலே சொன்ன வாயுறை வாழ்த்து,செவியறிவுறூஉ என்னும் துறைகளையும், எண்வகைச் சுவைகளுள் ஒன்றாகிய வெகுளி என்னும் மெய்ப்பாட்டையும் காஞ்சித் திணைத் துறைகளுள் ஒன்றாகிய வஞ்சினக் காஞ்சியையும் ஒன்றாக வைத்துப் பார்க் கும்போது, மனிதநேய மணிநெறிகளைக் காத்து நிலைநாட்டு வதில் சங்க காலத்தார் கொண்டிருந்த ஆழ்ந்த அக்கறை மிகத் தெளிவாகவே புலப்படுகிறது. வலிய நிலையில் உள்ளவர்கள் வாழ்க்கை வரம்புகளை மீறிச் செல்லும்போது அவர்களோடு வாழும் அறிஞர்கள் அவர்களைத் தட்டிக்கேட்டு நெறிப்படுத்த வேண்டும்; கடுமையான சொற்களைச் சொல்ல நேர்ந்தாலும் அந்தத் திருத்தல் பணியை அவர்கள் கட்டாயம் செய்ய வேண்டும். அறிவாலும் உடல் வலிமையாலும் செல்வ வளத்தா லும் சிறப்புற்றவர்கள், அங்குசத்துக்குக் கட்டுப்படும் யானை போல அறிவுடையவர்களின் நெறிமுறைச் சொற்களுக்குத்

தங்கள் நெஞ்சிலே இடம் கொடுக்க வேண்டும். தங்களுக்கும் தங்களைச் சார்ந்தவர்களுக்கும் எதிரான நடவடிக்கைகள் மனித நேய நெறிமுறைகளைச் சாய்க்கும் அளவுக்கு வளர்ந்திடும்போது இவர்கள் சினந்து எழுந்து எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு மனித நேயத்தைப் பாதுகாக்க வேண்டும். இந்த நடவடிக்கைக்கு எழுந்து கொள்ளும் விதமாக அவர்களின் வீர உணர்ச்சி வஞ்சினம் மொழிதலாகவும் அதை நிறைவேற்றிக் காண்பதாக வும் வடிவம் கொள்ளுதல் வேண்டும்.

## தடுத்து நெறிப்படுத்தினார்கள்

மனிதநேய வாழ்க்கை முறைக்குப் பாதுகாப்பான வழிமுறை களை இலக்கணங்களாக்கி வகுத்தார்கள் என்பதை விட அக் காலச் சான்றோர்கள் அவைகளைத் தங்கள் வாழ்விலேயும் கடைப்பிடித்து மனித நேயத்தைக் கட்டிக்காத்தார்கள் என்பதே சங்கத் தமிழர்களின் தனிச் சிறப்பாக உள்ளது. குறிப்பாக, வீரர்களும் வேந்தர்களும் செருக்குற்று நின்று இழுக்குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதெல்லாம் அவர்களின் காலத்துச் சான்றோர்கள் மனித நேயத்தின் மாண்பை எடுத்து விளக்கி அவர்களைத் தடுத்து நெறிப்படுத்தியுள்ளார்கள்.

பாண்டியன் அறிவுடைநம்பி சங்ககாலத்து முடிமன்னர்களுள் ஒருவன். 'படைப்புப் பல படைத்து' எனத் தொடங்கும் குழந்தைச் செல்வத்தின் மேன்மையைப் பற்றிய (புறம். 188) பாடலைப் பாடிய சிறப்புக்கு உரியவன். பின்நாளில், 'வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும்' (புறம் 191) என்று மேதைப் புலவரான பிசிராந்தையாரால் பாராட்டப்பட்டவன். இவ்வளவு சிறப்புக்கு உரியவனாக வளர்ந்த பாண்டியனும் இளமைமிடுக் கிலே சற்றே இடறி விழுந்து விட்டான். வரிவிதிப்பு நடவடிக்கை யில் அளவு மீறிய கடுமை காட்டித் தன் குடிகளையே வருத்தி வந்தான் பாண்டியன். மன்னனின் மாண்பு மட்டுமல்லாமல் அவனுடைய செங்கோலுக்கு இன்றியமையாததாகிய மனித நேயமும் சிதைவதைக் கண்ட பிசிராந்தையார் நேரே மன்ன னிடம் சென்றார். அவன் மனங்கொள்ளும் விதமாக, அவன் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை அவன்முன் எடுத்து வைத்தார். அந்த அறிவுரைதான் புறநானூறு 184ஆம் பாட் டாக இடம்பெற்று, ஆட்சி நிருவாகப் பொறுப்புடைய எல்லோ ருக்கும் மனிதநேய மணிப்பாதையை வகுத்துக் கொடுப்பதாக விளங்கி வருகிறது.

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே,
மாநிறைவு இல்லதும் பலநாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப் புக்கு உணினே
வாய் புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே
கோடி யாத்து, நாடு பெரிது நந்தும்
மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போல
தானும் உண்ணான், உலகமும் கெடுமே.

அறிவுரைப் பாட்டுகளுக்குள்ளேயே ஓர் அமுதான பாட்டு இது. இந்த நிகழ்ச்சிக்குக் காரணமான மனிதநேய மறுப்பு நடவடிக்கையே மிக வலிமையாகப் பாட்டிலே சொல்லோவியமாகியுள்ளது. யானையைக் கட்டிப்போட்டு நெல்கவளம் கொடுக்காமல் அதையே வயலில் இறங்கி மேயவிட்டதுபோல வரிசை அறியாத ஆர்ப்பாட்ட அதிகாரிகளை, வரிவசூலிப்பு என்னும் பெயரில் தன் குடிமக்கள் மீது ஏவி விட்டு விட்டான் பாண்டியன். இதன் கொடுமையை உணர்ந்த பிசிராந்தையார் உடனேயே அவன்முன் எழுந்து நின்றார். உவமை வாயிலாக நிலைமையை விளக்கியதோடு, 'வரிசையறியாக் கல்லென் சுற்றமொடு பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின், யானை புக்க புலம்போல, தானும் உண்ணான், உலகமும் கெடுமே'' என்று வேம்பும் கடுவும் போன்ற சொற்களால் நேரிடையாகவும் அவனை எச்சரித்தார். சரியான சமயத்தில் பிசிராந்தையார் எடுத்துரைத்த இடித்துரை பாண்டியனை அல்லவை செய்யாது காக்கும் பண்புடையவனாக உயர்த்தியதோடு சரிந்து விழுந்து போக இருந்த மனிதநேயத்தையும் சாயாமல் காத்தது.

இதே போன்றதொரு செவியுறை புறநானூற்று ஐந்தாம் பாடலிலும் வருகிறது. சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறையைக் கண்டு நரிவெரூஉத்தலையார் வழங்கிய அறிவுரை இந்தப் பாட்டு. பாட்டின் எடுப்பும் அது நடக்கும் மிடுக்கும் சேரமான் செய்துவிட்ட தவற்றினைக் குறிப்பாகவும் அழுத்தமாகவும் எடுத்துக் காட்டுகின்றன.

............நின்னொன்று மொழிவல்:
அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயம் கொள்பவரோடு ஒன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி

என்று மன்னனுக்கு அறிவுரை கூறுகிறார் புலவர். சொன்னது கொண்டு (அதனோடு தொடர்புடைய) சொல்லாததை ஊகித்து உணர்தல் என்னும் உத்தியின்படி, இவனும் பாண்டியன் அறிவுடை நம்பியைப் போலவே தன் குடிமக்கள் வேதனைப் படும் விதமாகச் செயல்புரிந்தான் என்பது தெளிவாகவே தெரிகிறது. 'நின்ஒன்று மொழிவல்' என்ற தொடக்கம் மட்டுமல்லாமல், தொடர்ந்து வரும் 'காவல் குழவி கொள்பவரின் ஓம்புமதி' என்னும் கருத்துரையும் இந்த ஊகத்துக்கே இடமளிக்கிறது. தன் குடிமக்கள் வேதனை அடையும்படியான மனித நேயச் சரிவு ஒன்றைச் சேரமான் செய்திராவிட்டால், நரகத்துக்குப் போவாரோடு சேராதே என்றும் குழந்தையைப் பாதுகாப்பதுபோல இந்நாட்டு மக்களை அன்போடு காக்க வேண்டும் என்றும் சொல்ல வேண்டியதில்லை அல்லவா?

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய (கிள்ளிவளவன்) அந்நாள் மன்னர்களில் வீரம்மிக்க ஒருவனாக விளங்கியவன்; அதனால் பல வெற்றிகளைக் குவித்தவன். 'கரப்பில் உள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி, அமலை கொழுஞ்சோறு ஆர்ந்த பாணர்க்கு அகலாச் செல்வம் முழுவதும் செய்தோன்' (புறம் 34 என்று அவனுடைய வள்ளல் தன்மையும் பாராட்டப்பட்டுள்ளது. ஆனாலும் வெற்றி மேல் வெற்றியாகக் குவித்த அவனுடைய வீரம் அவனைத் தலை தடுமாறச் செய்துவிட்டது. தனக்கும் நாட்டுக்கும் வெற்றி தேடிய படைவீரர்களுக்கு வளம் செய்வதற்காக உழவர்களுக்கு மிகுதியான வரிகளை விதிக்கத் தொடங்கினான். பாண்டியன் அறிவுடைநம்பி செய்தது போல முரட்டுத்தனமான வரிவசூல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு விட்டான். எல்லை மீறிய இந்தச் செயலால் மனிதநேய நடைமுறைக்கே உடைவு செய்துவிட்டான் கிள்ளிவளவன்.

இதை அறிந்த வெள்ளைக்குடி நாகனார் என்னும் அறிஞர் நேரே வளவனிடம் சென்றார்; நேருக்கு நேரேயே, 'நினவ கூறுவல், எனவ கேண்மதி' என்ற எடுப்பான முன்னுரையோடு அவனை இடித்துரைக்கத் தொடங்கி விட்டார்;

கண்பொர விளங்கு நின் விண்பொரு வியன்குடை
வெயில்மறைக் கொண்டன்றோ? அன்றே; வருந்திய
குடிமறைப்பதுவே கூர்வேல் வளவ!
வெளிற்றுப் பனந்துணியின் வீற்றுவீற்றுக் கிடப்ப
களிற்றுக்கணம் பொருத கண்அகன் பறந்தலை
வருபடை தாங்கி பெயர்புறத்து ஆர்த்து
பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே
..................................
அது நன்கு அறிந்தனை ஆயின், நீயும்
நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது,
பகடு புறந்தருநர் பாரம் ஓம்பி,
குடி புறந் தருகுவை ஆயின் நின்
அடி புறந்தருகுவர், அடங்காதோரே.

இந்தப் பாட்டின் தொடக்கமான 'கண்பொர விளங்கும் விண்பொரும் வியன்குடை வெயில் மறைக் கொண்டன்றோ? அன்றே; வருந்திய குடிமறைப்பதுவே, கூர்வேல் வளவ!' என்னும் அடிகள் வேம்பும் கடுவும் போன்றவை பட்டுமல்ல; அவைகளையும் மீறிய வேக வீச்சு உடையவை. மனிதநேயத்துக்குப் புறம்பான செயல்கள் நடக்கும்போது, மனித நேயத்தின் பாதுகாவலர்களான நல்லறிஞர்கள் எத்தனை வேகமும் கோபமும் கொள்ளுவார்கள் என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுபவை இந்த அடிகள். புலவரால் எதிர்நோக்கப்பட்டவனோ முடியுடை வேந்தர் மூவரில் ஒருவன், 'முரசு முழங்கு தானை மூவருள்ளும் அரசு எனப்படுவது நினதே பெரும!' என்று பாராட்டப்பட்ட வெற்றிச் சிறப்புக்கு உரியவன். அவன் எதிரே தம்முடைய எளிமையைப் பொருட்படுத்தாமல், ஏறிய சீற்றத்தோடு புலவர் பேசினார் என்றால், அவன் தன் குடிமக்களை மட்டுமல்ல, அவர்களை வருத்தியதன் மூலம் என்றும் நின்று நிலைபெற வேண்டிய மனிதநேயத்தையே வருத்தி விட்டான் என்பதே காரணம்.

இன்றைக்கு மட்டுமல்ல, மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அன்றைக்கும் உழவுத் தொழில்தான் தமிழகத்தின் பெரிய தொழிலாகவும் வாழ்க்கையின் மற்ற துறைகளுக்கு அடிப்படையானதாகவும் அமைந்திருந்தது. இதை நன்றாக உணர்ந்து

கொண்டுதான், அரசர்கள் முதல் அனைவரும் செயல்பட்டார் கள். ஆனாலும், கிள்ளிவளவன் யாரோ வெறும் பேச்சாளர் களின் சொல்லைக் கேட்டு அந்த நற்போக்கிலிருந்து நடை பிறழ்ந்துவிட்டான். அரசனுடைய வெற்றியையும் கொடை நடவடிக்கைகளையும் நன்கு அறிந்திருந்த புலவர் வெள்ளைக்குடி நாகனார்,அவன் யாரோ பொறுப்பில்லாதவர்களின் சொல்லைக் கேட்கும் எடுப்பார் கைப்பிள்ளை ஆகிவிட்டான் என்பதை நன்றாக உணர்ந்தார். அதனாலேதான், ''நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது, பகடு புறந்தருநர் பாரம் ஓம்பி குடிபுறந்தருகுவை ஆயின் நின் அடிபுறந் தருகுவர் அடங்காதோர்'' என்று அறிவுரைத்தார். அவனுடைய நடவடிக்கை மனிதநேய மாண்பைச் சிதைப்பது என்று தெரிந்து சினம் கொண்டாராயினும், அதன் விளைவாக வேம்பும் கடுவும் போன்ற கசப்புச் சொற்களோடு அவனிடம் பேசத் தொடங் கினார் என்றாலும் அவருடைய சினம் 'விற்பிடித்து நீர்கிழிய எய்த வடுப்போல' விரைவிலேயே மாறிவிட்டது. அவருடைய கண்டனக் குரலும் அன்போடு விளக்கம் சொல்லும் அருளின் குரலாக நெகிழ்ந்து விட்டது.

களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
வருபடை தாங்கி பெயர்புறத்து ஆர்த்து
பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே

என்று புலவர் விளக்கம் அளிக்கும்போது அவருடைய தொடக்க நிலைக் கோபம் வடுத் தெரியாமல் மாறிவிட்டது என்பது தெளிவாகவே தெரிகிறது. மனிதநேயம் சிதைக்கப்படும்போது மாண்பாளர்களாகிய அறிஞர்கள் சீற்றம் அடைகிறார்கள். அதன் கூடவே நடைபிறழ்ந்தவனை நன்னெறிப்படுத்த வேண்டிய தங்கள் கடமையையும் உணர்கிறார்கள். அதனாலேதான் இங்கே, எல்லோருக்கும் நன்கு தெரிந்த உழவுத் தொழிலின் பெருமையை ஒரு குழந்தைக்குச் சொல்வது போன்ற கனிவுடன் அரசனுக்கு மீண்டும் எடுத்துச் சொல்லுகிறார் புலவர். செவியறிவுறூஉ என்னும் துறை வெறும் கோபக் கொதிப்போ வேகத்தால் ஏற்பட்ட திட்டலோ அல்ல என்பது நாகனாரின் இந்த நளினநய மாற்றத்தால் மிகத் தெளிவாகப் புலப்படுகிறது.

### போர்வெறி—புகழ்வெறி

'மூத்தது மோழை, இளையது காளை' என்பது இன்றைக்கு மட்டுமன்றி என்றைக்குமே உண்மையாகத்தான் இருந்து

வருகிறது. அதாவது, பொறுப்புள்ள பயன்மிக்க நற்பணிகளைச் செய்கிறவர்கள் ஒருவகையான பண்புடைமை காரணமாக, தங்களுக்கு இன்னல் விளைப்பவர்களின் மீது ஏறிச் சாடாத இயல்பினராகவே இருக்கிறார்கள்; போர்த்தொழில் போன்ற ஆர்ப்பாட்டமான பணிகளில் ஈடுபடுகிறவர்கள், தங்கள் பெருமையை மிகைப்படுத்திக் கொள்ளுகிறவர்களாகவும் மற்றுள்ளவர்களைப் புறக்கணிப்பவர்களாகவுமே இருந்து வருகிறார்கள். 'உலக நாடுகள் அவை' போன்ற கூட்டு அமைப்புகள் உருவாகி உலக அமைதிக்கு வழிவகைகள் காணுகின்ற இந்த நாளிலும், ஒவ்வொரு நாடும் தன்னுடைய போர்ப்படைச் செலவை ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டுதான் வருகிறது; அதாவது, மனிதநேயத் தடத்தை இடித்துப் போடும் வேலை இடையறாமல் நடந்து கொண்டுதான் இருக்கிறது. போர் வெறியும் புகழ் வெறியும் இருக்கும் வரை மனிதர்கள் இந்த இடிப்பு வேலையைத் தொடரத்தான் செய்வார்கள் என்பதை நமது தமிழ் முன்னோர்கள் நன்றாகவே அறிந்திருந்தார்கள். அதனால்தான் மனிதநேயத்துக்கு எதிரான செயல்களை வேரோடும் வேரடி மண்ணோடும் பிடுங்கி எறிய முடியாவிட்டாலும் அவைகளின் வளர்ச்சியையாவது தடுத்து வைக்க வேண்டும் என்று கருதினார்கள். அத்தகைய நோய்த் தடுப்புப் நற்பணிக்கே வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ என்னும் நிகழ்ச்சிகளைப் பயன்படுத்தினார்கள்.

வெள்ளைக்குடி நாகனாரால் கண்டித்துத் திருத்தப்பட்ட சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், அந்த நிகழ்ச்சிக்கு முன்போ, பின்போ ஒரு கட்டத்தில் கோவூர்கிழாராலும் கண்டிக்கப்பட்டிருக்கிறான். அங்கே, உழவுத் தொழிலாளர்களிடம் காட்ட வேண்டிய அன்பை ஒட்டு மொத்தமாகக் கைவிட்டு விட்ட கிள்ளிவளவன், இங்கே தன் எதிரியின் மக்களான இரண்டு சிறுவர்களிடம் மனிதநேய உணர்வே இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறான்.

தன் எதிரியாகிய மலையமானை வென்று அவனுடைய மக்கள் இருவரையும் சிறைப்பிடித்தான் கிள்ளிவளவன். இன்று ஒழிந்த பகை எதிர்காலத்தில் வளர்ந்து தலையெடுத்துவிடக் கூடாது என்ற நினைப்பில் அரசர்கள் தங்கள் எதிரிகளின் வழிக் கன்றுகளை மடக்கி வைப்பது அந்தக் காலத்திலும் ஒரு வழக்கமாகவே இருந்தது. ஆனால், கிள்ளிவளவனின் செயல் அந்தப் போர் அறத்தின் எல்லையை மீறி விட்டது. தன்னைப் போன்ற ஓர் அரசனின் அந்த இளம் மக்களை யானையைக் கொண்டு

இடறச் செய்வது என்று, மனித நேயமே வற்றிப்போன ஒரு கொடிய முடிவுக்கு வந்து விட்டான் சோழ மன்னன். இதைக் கேள்விப்பட்ட புலவர் கோவர்கிழார், சற்றும் தயங்காமல் அவன் எதிரேபோய் நின்றார். அவருடைய மனிதநேயப் பெரு நெஞ்சம், பதற்றத்தோடு ஆனால் உறுதியோடு குரல் கொடுத்தது:

*நீயே, புறவின் அல்லல் அன்றியும், பிறவும்*
*இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை;*
*இவரே, புலன்உழுது உண்மார் புன்கண் அஞ்சி,*
*தமது பகுத்து உண்ணும் தண்நிழல் வாழ்நர்,*
*களிறு கண்டு அழூஉம் அழாஅல் மறந்த*
*புன்தலைச் சிறாஅர்; மன்று மருண்டு நோக்கி*
*விருந்தின் புன்கணோ உடையர்;*
*கேட்டனை ஆயின், நீ வேட்டது செய்ம்மே!*

இதுதான் (புறம் 46) கிள்ளிவளவனை நோக்கிக் கோவூர்கிழார் நிகழ்த்திய பேச்சு. மூன்று நிலைகளில் அந்த மனிதநேயமற்ற செயலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார் புலவர். முதலாவது நிலை அந்த மன்னவனுடைய மனிதநேயம் மிக்க செயல்களைச் சுட்டுகிறது. இரண்டாவது நிலை, பாதிக்கப்பட்டு நிற்கும் சிறுவர்களின் குடும்பத்தாருடைய மனிதநேயச் செயல்முறைகளைச் சுட்டுகிறது; மூன்றாவது நிலை, எந்தக் காரணத்தையிட்டும் தண்டனை வழங்கப்படக் கூடாத அந்தச் சிறுவர்களின் இளமைப் பருவத்தைச் சுட்டுகிறது. ஒட்டுமொத்தமாக, மனித நேயம் மிக்க பரம்பரையில் வந்த ஒருவன் அதே போன்ற மனிதநேயம் மிக்க குடும்பத்தின் இளம் நாற்றுகளான சின்னஞ் சிறுவர்களை அழித்து ஒழிக்கக் கருதுவதா என்று வியப்பு வேதனை தெரிவிக்கிறார் புலவர். ஒரு பெரிய அறம் என்பது தன்னோடு தொடர்புடைய வேறு பல பெரிய உணர்வுகளை எழுப்பக்கூடியது என்பது இந்த வேதனைக் குரலின் மூலம் முழுமையாக வெளிப்படுத்தப்படுகிறது. நமது கோவூர்கிழார் அங்கே நடைபெற இருக்கிற ஒரே ஒரு மனிதநேயமற்ற வன் செயலைத்தான் தடுக்க விரும்புகிறார். அதே சமயம், இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்துவிட்டால் சோழர்குடிக்கே இழுக்கு நேர்ந்து விடுமே, நல்லோர்க்கு அரணான ஒருவனின் குழந்தைகளுக்குக் கூடத் தீங்குச்சூழலாம் என்று உலகம் துணிந்துவிடுமே, குழந்தைகளுக்குக் கூட கொடுமை செய்யும் நடிமனம் தட்டிக் கேட்பா

ரின்றிப் போய்விடுமே என்றெல்லாம் கருதி ஏங்குகிறது புலவரின் உள்ளம்.

குழந்தைகளுக்குக் கொடுமை நடக்கிறது என்று கேள்விப் பட்டு அதைத் தடுத்திட முயன்ற கோவூர்கிழார் பால்மணம் மாறாத பச்சிளம் குழந்தைகளுக்கு இன்னல் செய்யலாமா என்னும் ஒரே கருத்தை மட்டும் வலியுறுத்தியிருக்கலாம்; அல்லது பிற உயிரின் இன்னல் கண்டுத் தன்னையே வழங்க முன்வந்த ஒருவனின் வழியில் வந்தவனாகிய நீ இந்தக் கொடுஞ்செயலைச் செய்யலாமா என்று மட்டும் எடுத்துக் காட்டியிருக்கலாம்; அல்லது, உன்னைப் போலவே ஈகையால் புகழ் ஓங்கிய ஒருவன் போர் முனையில் தோற்றுவிட்டான் என்பதால் அவனுடைய பரம்பரையையே கிள்ளி எறிய முனைவது வள்ளல்தனத்தையே அவமதிப்பது போல இல்லையா என்ற கேள்வியை எழுப்பி யிருக்கலாம். அவர் புகழ் வாய்ந்த புலவர் என்பதாலும் அவன் செய்யத் துணிந்த காரியம் செய்யத் தகாதது என்ப தாலும் இந்த மூன்றில் ஒரு செய்தியைச் சொல்லியே அவனைத் திருத்திட வாய்ப்பு உள்ளது. ஆயினும், மூன்று செய்திகளைப் புலவர் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிச் சொல்லுவது. மனித நேயப் பேருணர்வு காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் புலவருக்கு இருந்த அக்கறை மிக்க ஆர்வத்தையே காட்டுகிறது.

## மனிதநேயக் கோவூர்கிழார்

கோவூர்கிழார் மேற்கொண்ட மனிதநேயப் பாதுகாப்பு முயற்சிகள் மிகப் பல. அவற்றுள் ஒன்றிரண்டையாவது இங்கே எடுத்துக்காட்ட வேண்டும்.

சோழன் நலங்கிள்ளியும் அவனுடைய உறவினனான நெடுங்கிள்ளியும் சோழ நாட்டின் இருவேறு பகுதிகளை ஆட்சி புரிந்து வந்தார்கள். இருவரும் ஒரே அரச மரபைச் சேர்ந்தவர் களாக இருந்தாலும் அவர்களிடையே கடுமையான பகைமை நிலவியது. ஒரு சமயம் இளந்தத்தன் என்னும் ஒரு புலவன் நலங்கிள்ளி ஆட்சி புரிந்த பகுதியிலிருந்து புறப்பட்டு நெடுங் கிள்ளியின் ஆட்சித் தலைநகராகிய உறையூருக்குச் சென்றான். பகை மண்ணிலிருந்து வந்தவனாதலால் நெடுங்கிள்ளியின் காவலர்கள் இளந்தத்தனை ஒற்றன் என்று பிடித்துக் கொண்டு போய் நெடுங்கிள்ளியின் முன்னே நிறுத்திவிட்டார்கள். நலங்கிள்ளியின் மீதிருந்த பகைமை காரணமாக, நெடுங்கிள்ளியும் இளந்தத்தனை ஒற்றன் என்றே முடிவு செய்து அவனைக்

கொன்றுவிடுமாறு பணித்தான். இதை அறிந்த கோவூர்கிழார் உடனேயே மன்னனிடம் ஓடிச் சென்றார். அரசியல் பகைமை காரணமாக எந்தத் தவறும் செய்யாத ஒருவனுக்கு இன்னல் ஏற்பட்டுவிடக் கூடாதே என்று பதைத்தது அவருடைய மனித நேய உள்ளம்.

வள்ளியோர்ப் படர்ந்து, புள்ளின் போகி
'நெடிய' என்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடி
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி,
ஓம்பாது உண்டு, கூம்பாது வீசி,
வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீது அறிந்தன்றோ? இன்றே.

கிள்ளிவளவனிடமிருந்து மலையமானின் மக்களைக் காப்பாற்று வதற்காக வாதாடிய கோவூர்கிழார்தான் இங்கேயும்பேசுகிறார். ஆனாலும், ஏற்றம் மிக்க பாரம்பரியப் பெருமைகளையோ இரக்கப்படத்தக்க செய்திகளையோ இங்கே அவர் பேசவில்லை. புலவனின் வாழ்க்கைச் செம்மாப்பை அறியாதவன் போலச் செயல்படும் மன்னனுக்கு அதை நினைவூட்டுவதே போதும் என்று அவர் கருதிவிட்டதாகவே தோன்றுகிறது. புலவனைப் பற்றிக் கோவூர்கிழார் கொடுக்கின்ற சித்திரம், இப்படிப்பட்ட பெரிய வாழ்க்கை உடையவன் மேல் இழிந்த குற்றச்சாட்டு களைச் சுமத்துவது தகாது என்ற மாபெரும் கருத்தை எடுத்து நிறுத்துவதாக உள்ளது. அதாவது, இளந்தத்தனுக்கு ஆதர வாகக் கோவூர்கிழார் எடுத்து வைக்கும் கருத்து இளந்தத்தனை மட்டும் காப்பாற்றுவதாக அமையாமல், இனிமேல் இந்த அரசனோ அவன் போன்ற மற்றவனோ ஒரு புலவனைப் பற்றிய தவறான கணிப்புகளுக்கு வரவே கூடாது என்று வேலியிட்டுக் காப்பது போல விளங்குகிறது. முன்பே சுட்டிக் காட்டியது போல, பெரிய வாழ்க்கை உடைய ஒருவன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியாக இருப்பதால், கோவூர்கிழார் மேற்கொண்ட மனித நேயப் பாதுகாப்புப் பணி, அத்தகைய பெரிய வாழ்வு உடைய அனைவரையும் பாதுகாக்கும் சொல் அரணாக எழுந்து நிற்கிறது.

சோழன் நலங்கிள்ளி நெடுங்கிள்ளியின் ஆவூர்க்கோட்டையை முற்றுகை இட்டிருந்தான். முற்றுகை பலநாள் நீடித்தது.

கோட்டை வாசலை அடைத்துக் கொண்டு உள்ளே இருந்த நெடுங்கிள்ளி வீரத்தோடு வெளியே வந்து தன் எதிரியைச் சந்திக்கவும் இல்லை; தன் இயலாமையை ஒப்புக் கொண்டு கோட்டையை அவனிடம் ஒப்படைக்கவும் இல்லை. முற்றுகை பலநாள் நீடித்ததால் வெளியேயிருந்து உணவுப் பண்டங்கள் உள்ளே செல்ல முடியவில்லை. அரசனின் போர்ப்படையைச் சேர்ந்த யானை, குதிரைகளுக்கு மட்டுமல்லாமல் சாதாரணப் பொது மக்களுக்கும் போதிய உணவு கிடைக்கவில்லை. மக்கள் பட்டினி தாங்காமல் அழுது புலம்பினார்கள்.

மன்னன் நெடுங்கிள்ளி இவைகளைப் பற்றியெல்லாம் கவலை கொள்ளாமல், தனக்கு வேண்டிய பொருள்களை ஒதுக்கிப் பதுக்கிக் கொண்டு கோட்டைக்குள் ஒரு பக்கத்தில் மகிழ்ச்சியாக இருந்துவந்தான். ஒரே ஒரு அரசனின் சுகத்துக்காக அவனுடைய குடிமக்கள் அனைவரின் நலனும் சிதைக்கப்படுகிற கல்நெஞ்சக் கொடுமையைக் கண்டுச் சீறி எழுந்தார் கோவூர்கிழார். ''நிலைமை கட்டுக்கு மீறிப் போகிறது; உன் குடிமக்கள் கண்ணீரும் கம்பலையுமாகக் கதறித் துடிக்கிறார்கள். அரசன் என்ற பொறுப்பை மறந்தாலும் ஒரு மனிதன் என்ற கடமை உணர்வை நீ மறந்திருக்கக் கூடாது'' என்று நேருக்கு நேரேயே இடித்துரைத்தார்.

இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ
திருந்துஅரை நோன்வெளில் வருந்த ஒற்றி
நிலமிசை புரளும் கைய, வெய்த உயிர்த்து
அலமரல் யானை உரும் என முழங்கவும்
பால்இல் குழவி அலறவும், மகளிர்
பூஇல் வறுந்தலை முடிப்பவும், நீர்இல்
வினைபுனை நல்இல் இனைசஉக் கேட்பவும்
இன்னாது அம்ம, ஈக்கு இனிது இருத்தல்

ரோமாபுரி எரிந்து கொண்டு இருந்தபோது அந்நாட்டு மன்னனாகிய நீரோ என்பவன் பிடில் வாசித்துக் கொண்டு இருந்தான் என்பார்களே அதுபோல, தன்னுடைய இயலாமையாலும் தவறான செய்கையாலும் தன் குடிமக்களும் வாயில்லா சீவன்களான யானை, குதிரை, குழந்தை முதலியனவும் வேதனையில் வெந்துகொண்டு இருந்தபோது கோட்டைக்குள்ளேயே ஒரு

பக்கத்தில் மகிழ்ச்சியாக இருந்தான் நெடுங்கிள்ளி. மனித நேயத்தின் சாயலே தென்படாத இந்த மடமைச் செயலைக் கண்டுப் புலவர் கோவூர்கிழாரின் நெஞ்சம் நெருப்பாக கொதித்தது:

*அறவை ஆயின் 'நிலாது' எனத் திறத்தல்.*
*மறவை ஆயின், போரொடு திறத்தல்;*
*அறவையும் மறவையும் அல்லையாக,*
*திறவாது அடைத்த திண்நிலைக் கதவின்*
*நீள்மதில் ஒருசிறை ஒடுங்குதல்*
*நாணுத்தகவு உடைத்து, இது காணுங்காலே.*

என்று பொரிந்து தள்ளினார். இந்தக் கண்டனத்தின் ஒவ்வொரு சொல்லும் ஒரு ஈட்டியாக, எறிகுண்டாக ஏறிப் பாய்வதைக் கவனிக்க வேண்டும். மன்னனையே தங்களுக்குரிய எல்லாப் பாதுகாப்புமாகக் கொண்டவர்கள் அந்தக் காலத்து மக்கள். அவன் இருக்கும்போது தங்களுக்கு எந்தத் துன்பமும் இராது என்று நம்பியவர்கள் அவர்கள். நெடுங்கிள்ளியோ அவர்களுடைய நம்பிக்கையைச் சிதைத்துவிட்டான். அவர்களின் அழுகுரலுக்கு அவன் செவிகள் திறக்கவே இல்லை. இப்படி ஒருவன் மன்னன் என்று பெயர் வைத்துக் கொண்டிருப்பதால் யாருக்கு என்ன பயன், யாருக்கு என்ன பெருமை? கண்ணோட்டமே இல்லாதவன், கடமைப் பொறுப்புணர்ச்சியே இல்லாதவன் அவைகள் இல்லாததால் ஒரு மன்னன் என்ற தகுதியையே இழந்துவிட்டவன், அவன் இருந்தென்ன, போய் என்ன?

நியாய உள்ளம் இருந்திருந்தால் நெடுங்கிள்ளி தன்னுடைய இயலாமையை ஒப்புக்கொண்டுக் கோட்டையை நலங்கிள்ளியிடம் ஒப்படைத்திருப்பான் வீரம் உடையவனாக இருந்திருந்தால் இரண்டில் ஒன்று பார்த்துவிடுவது என்று தன் எதிரியைப் போர்க்களத்திலே சந்தித்திருப்பான். இந்த இரண்டும் இல்லாவிட்டாலும், தன்னுடைய இயலாமையால் தன் மக்கள் துயருறுவதைக் கண்டாவது மனிதமன உணர்வும் மூல உணர்வாகிய மனிதநேய உணர்வும் காரணமாகத் தன் தோல்வியை ஒப்புக் கொண்டுத் தன் மக்களின் துயரத்தைத் துடைத்திருப்பான். இவைகளில் எது ஒன்றையும் செய்யாமல் தன்னலமே குறியாகக் கோட்டைக்குள் ஒதுங்கிக் கிடந்த அவனுடைய செய்கை மனித நேயத்தையே மண்ணில் இழுத்துத் தள்ளிவிட்டது. அதனாலே

தான் 'உன்னுடைய செய்கை வெட்கப்படத்தக்கது' என்று சாடுகிறார் கோவூர்கிழார்.

இந்த நிகழ்ச்சி நடக்கின்ற சூழ்நிலையை ஊன்றி உணர வேண்டும்; நெடுங்கிள்ளி வீரம் இல்லாதவன்; அதனால், ஒவ்வொரு கணமும் தோல்வியை நோக்கி நடந்துகொண்டு இருந்தான். தோல்வியைப் பற்றிய நினைவுகளால் அவனுடைய உள்ளமே குழம்பிக் கிடந்தது. அதனாலேதான் தன் குடிமக்களைப் பற்றிய நினைவே அவன் நெஞ்சில் இல்லாமல் போய்விட்டது. தோல்வியால் துவண்டு சுயநலத்தால் நெஞ்சம் வறண்டு போனவன் அடிபட்ட புலி போன்றவன். அந்த நிலையில் எந்த அறிவுரையும் அவனிடம் எடுபடாது. ''வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடகாரி ஆங்கு அதனுக்கு ஆகாரம் ஆனாற் போல்'' அத்தகையவனுக்கு அறிவு கொளுத்தப்படுகிற வர்கள் தங்கள் உயிருக்கே ஆபத்தைச் சந்திக்க நேரும். அல்லது அவனால் அவமதிக்கப்படவும் வாய்ப்பு உண்டு. இவைகளை நன்கு தெரிந்திருந்தும் நேருக்கு நேரேயே அவனைக் கடிந்துரைக் கப் புறப்பட்டார் என்றால் அவனால் அடியோடு புறக்கணிக்கப் பட்ட மனிதநேய உணர்வை அந்த நிலையிலாவது தட்டி எழுப்பி விட வேண்டும் என்று கோவூர்கிழார் கொண்ட பேரார்வமே காரணம். தம்முடைய உயிரையும் மானமரியாதையையும் பொருட்படுத்தாமல் கோவூர்கிழார் போன்றவர்கள் மனித நேயப் பாதுகாப்பு முயற்சிகளில் ஈடுபட்டதால்தான் மனிதநேய உணர்வு இடைவற்றாமல் மனிதச் சமுதாயத்தில் ஊடாடிக் கொண்டு இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

## ஆனைக்கும் அடி சறுக்கும்

கோப்பெருஞ்சோழன் சங்ககாலத்துச் சோழ மன்னர்களிலே ஒருவன். வீரத்திலும் கொடையிலும் சிறந்து விளங்கிய பெருமைக்கு உரியவன் அவன். ஆயினும், 'ஆனைக்கும் அடி சறுக்கும்' என்பது போல அவன் வாழ்வில் மனிதநேயமும் உறவு உணர்ச்சியும் இல்லாத செயல் ஒன்று ஏற்பட்டு விட்டது. தன் மக்களுக்கு எதிராகவே போர்க்கோலம் பூண்டு புறப்பட்டு விட்டான் கோப்பெருஞ்சோழன்.

சங்க இலக்கியத்திலேயே அரிய பெரிய நட்புக்கு இலக்கிய மாகத் திகழ்பவன் கோப்பெருஞ்சோழன். இவனுக்கும் பாண்டி நாட்டுப் பிசிராந்தையார் என்னும் புலவருக்கும் இடையே

நிலவிய நட்பு அக்காலத்து அறிஞர் பெருமக்களால் வியந்து நயந்து பாராட்டப்பட்டது.

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய ஆயினும், தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை,
ஒருவழித் தோன்றியாங்கு—என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப;
சாலார் சாலார் பாலர் ஆகுபவே

என்பது அந்த நாட்டைப் போற்றி எழுந்த புறநானூறு 218ஆம் பாடல். இத்தனைப் பெரிய நட்புணர்வு உடைய கோப்பெருஞ் சோழனால் தன் மக்கள் இருவரின் அன்பைப் பெற முடியவில்லை. அவர்களே இவன் மீது பகைமை கொண்டு இவன் மேல் போரெடுத்துப் புறப்பட்டுவிட்டார்கள். கோப்பெருஞ்சோழனும் தன் மேல் வந்தவர்கள் தன்னுடைய மக்கள் என்று கருதாமல் அவர்களை எதிர்த்துக் கிளம்பிவிட்டான். பொதுவான மனித நேய உணர்வையும் பெற்றோர்–பிள்ளைகள் என்ற பாச உணர்வையும் வற்றடித்து விடக்கூடிய இந்த நிகழ்ச்சியைக் கண்டு, புல்லாற்றூர் எயிற்றியனார் என்னும் புலவர் பெரிதும் வாட்டமடைந்தார். காணாமலே நட்புப் பூண்ட ஒரு கனிவான மனிதனின் வாழ்வில் இத்தகைய இரக்கமும் தெளிவும் இல்லாத ஒரு நிகழ்ச்சிக்கு இடம் ஏற்பட்டு விட்டதே என்று சாம்பியது புலவரின் உள்ளம். அவர்கள் தன்னுடைய மக்கள் என்பது சோழனுக்குத் தெரியாதது அல்ல; அவன் தங்கள் தந்தை என்பது அவன் மக்களுக்கும் தெரியாத செய்தி அல்ல. ஆனாலும் இடை எழுந்த ஏதோ வெறுப்புக் காரணமாக இருவரும் தங்கள் உறவை மறந்து உதிரம் சிந்தக் கிளம்பி விட்டார்கள். இந்த நிலைமை நீடித்தால், அப்பனும் பிள்ளை களும் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு செத்தார்கள் என்னும் களங்கம் தமிழ் இனத்தின் வரலாற்றிலேயே பெரிய களங்கமாக நிலைத்து விடும். இதை நினைத்ததும் விரைவாக எழுந்து கனிவாக அவனிடம் சென்றார் புலவர். ''புகழுக்கு உரிய பெருவேந்தே, உன் மேல் படையெடுத்து வந்தவர்கள் உன் பகைவர்கள் அல்லவே, நீயும் அவர்களுக்குப் பகைவன் அல்லவே! இந்தப் போரில் நீ தோற்றாலும் உன் மக்கள் தோற்றாலும் இரண்டு பேருக்கும் வெற்றி கிடைக்கப் போவதில்லை. உங்கள் குடும்பத்துக்கும் பெருமை ஏற்படப் போவதில்லை. போர்

எடுத்துப் புறப்பட்ட நீ இந்தப் போரின் விளைவைப் பற்றிச் சிந்தித்தாயா? உன் மக்கள் தோற்றார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம், உனக்குப் பிறகு இந்த அரசுரிமையை நீ யாரிடம் கொடுப்பாய்? நீ தோற்க நேர்ந்தால் நீ தேடிய புகழ் எல்லாம் அழிந்து உனக்குப் பழிதானே மிஞ்சும்?'' என்று உருக்கமாக எடுத்துரைத்தார் எயிற்றியனார்.

> நின்ற துப்பொடு நிற்குறித்து எழுந்த
> எண்இல் காட்சி இளையோர் தோற்பின்
> நின்பெருஞ் செல்வம் யார்க்கு எஞ்சுவையே?
> அமர்வெஞ் செல்வ! நீ அவர்க்கு உலையின்
> இகழுநர் உவப்ப பழி எஞ்சுவையே,
> அதனால் ஒழிகதில் அத்தை, நின் மறனே!

என்னும் அவருடைய கனிவான அறிவுரை கோப்பெருஞ் சோழனின் மயக்கத்தை ஒழித்துப் போரைக் கைவிடச் செய்தது என்பது வரலாறு.

## இழிவை ஊக்காத ஏந்தல்கள்

போர்வெற்றி புகழுக்கு உரிய ஒரு பெரிய நிகழ்ச்சியாகக் கருதப்பட்ட காலம் அது. புலவர்களும் ஒருவனின் வீரத்தினால் விளைந்த வெற்றியை உவந்து பாராட்டியிருக்கிறார்கள். போர் நிகழ்ச்சியை அணுஅணுவாகச் சித்திரிக்கும் ஏழு திணைகளைக் கொண்ட புறத்திணை இயல் என்னும் போர்க்கள இலக்கணமே தமிழில் உண்டு. ஆனாலும், புகழ் தரக்கூடிய போரை வரவேற்ற அறிஞர்கள். உற்றார் உறவினர்களுக்கிடையே போர்பூண்டு உறவுப் பாசத்தையும் மனிதநேயத்தையும் அது வீழ்த்திடும் போது அத்தகைய போர்களை எந்த நிலையிலும் தடுத்திடவே முயன்றார்கள். இது எங்கோ அத்திபூத்தாற் போல நிகழ்ந்துவிட்ட ஓர் அரிய நிகழ்ச்சி அல்ல என்பதும் கவனிக்கத் தக்கது. இங்கே தந்தைக்கும் மக்களுக்கும் இடையே மூண்ட போரை ஒரு புலவர் தடுத்து நிறுத்தியது போலவே ஒரே அரச குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பேரிடையே வெடித்த போரைக் கோவூர்கிழார் தடுத்து நிறுத்திய செய்தி புறநானூறு 45 ஆம் பாடலில் சொல்லப்பட்டுள்ளது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் எண்ணத்தை வளர்த்து மனிதநேயப் பேருணர்வை அதன் உச்சிக்கே கொண்டு

சென்றவர்கள் தமிழர்கள். எத்தனையோ சிறுமைப் புயல்கள் வீசிய பிறகும் 2000 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து வளர்ந்து வருவது தமிழர்களின் மனிதநேயம். இந்த நூற்றாண்டின் புரட்சிக் கவிஞர் கூட, ''தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்'' என்று அந்த நெறியையே அரண்செய்து பாடுகிறார். அவருக்குப் பின்வந்த சாலையார்.

உலகமெலாம் ஒரு குடும்பம் என உணர வேண்டும்
உணர மறுப்போர்க்கெல்லாம் அறைகொடுக்க வேண்டும்
கலகமிடும் உறுப்பினரைக் கண்டிக்க வேண்டும்
கண்மூடி மவுனிகளை எழுப்பிவிட வேண்டும்
நலமெதுவோ அதை மட்டும் நிலைநாட்ட வேண்டும்
நலந்தாராச் செயற்கெல்லாம் தடைவிதிக்க வேண்டும்

என்று ஆணித்தரமாக அடித்துப் பேசுகிறார். மனிதநேயத்துக்குச் சிதைவு ஏற்பட்டுவிடக் கூடாது என்கிற இந்த நினைவோட்டம் தமிழர்களின் வாழ்வில் காலங்காலமாக வளர்ந்து கொண்டே வருகிறது. இந்தத் தமிழ்மரபில் மனித நேயத்துக்கு மாறான நிகழ்ச்சிகளும் செய்கைகளும் எந்த வடிவத்திலே தலையெடுத்தாலும் அதை உடனேயே எதிர்த்து மடக்கப் புறப்படுகிறார்கள் அறிஞர்கள். உடன்பிறப்புத் துரோகம், குடித் துரோகம் போன்றவை மனிதநேயத்துக்கு மாசு ஏற்படுத்தும் இழிவான போக்குகள். அவைகளைத் தமிழ்ச் சான்றோர்கள் ஊக்கப்படுத்தியதில்லை என்பது மட்டுமல்ல,—அவர்கள் அதைப் பொறுத்துக் கொண்டதே இல்லை.

சோழன் நலங்கிள்ளியும் சோழன் நெடுங்கிள்ளியும் ஒரே சோழ மரபின் இரண்டு வேறு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்: அதாவது, அண்ணன்—தம்பி என்ற உறவுமுறை உடையவர்கள். சோழ நாட்டின் இரண்டு பகுதிகளைத் தனித் தனியே ஆண்டு வந்த இந்தக் கிள்ளிகள் ஒருவரோடு ஒருவர் பகைத்து மோதிக் கொண்டார்கள். நெடுங்கிள்ளி உறையூர்க் கோட்டைக்கு உள்ளே இருக்கிறான்; நலங்கிள்ளி கோட்டையை முற்றுகையிட்டிருக்கிறான். தேவையே இல்லாததும் செழுமையான உறவு உணர்வையும் மனிதநேய உணர்வையும் சிதைக்கக் கூடியதும் ஆகிய இந்த 'அண்ணன்—தம்பி சண்டை'யைப் பற்றிய செய்தி அக்காலத்து அறிஞர் பெருமகனாகிய கோவூர்கிழாருக்கு

எட்டுகிறது. உடனேயே, போர்க்களத்தில் நிற்கும் அந்த உடன் பிறப்புக்களைத் தேடி ஓடி வருகிறார் புலவர்.

## அண்ணன் தம்பி சென்மப் பகையா?

"என்ன காரியமப்பா செய்யத் துணிந்தீர்கள்? தெருச் சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி என்பார்கள். அண்ணன், தம்பி சண்டை என்றாலே சிலபேர் சப்புக் கொட்டிச் சுவைப்பார்கள். குறிப்பாக உங்கள் பகைவர்களுக்கு என்று மில்லாத குதூகலத்தை அளிக்கக் கூடியது இந்தச் செய்தி. ஏதோ வீரம் காட்டப் போவதாகவும் வெற்றி நாட்டப் போவ தாகவும் நினைத்துக் கொண்டு போர்க் களத்திலே இறங்கி விட்டீர்கள். போரிலே உங்கள் இருவரில் யார் தோற்றாலும் சோழக் குடும்பம்தான் தோற்றது. போர் என்று வந்துவிட் டால் இரண்டு பேரும் வெற்றி பெறுவது என்பது இயலாது. எப்படியும் ஒருவர் தோற்றுத்தான் ஆக வேண்டும். உங்கள் வெற்றியும் தோல்வியும் உங்கள் சோழர் குலத்தை உங்கள் பகைவர்கள் ஏளனம் செய்யத்தான் பயன்படுமே தவிர உங்கள் குடியின் பெருமையை எந்த அளவும் உயர்த்த மாட்டா!'' இப்படி எடுத்துரைத்தார் கோவூர்கிழார். இந்த நிகழ்ச்சி புறநானூற்று 45 ஆம் பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்;
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்;
நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே; நின்னோடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே;
ஒருவீர் தோற்பினும் தோற்பது நும் குடியே;
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே; அதனால்
குடிப்பொருள் அன்று, நும் செய்தி; கொடித்தேர்
நும்ஓர் அன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யும் இவ் இகலே.

ஒரு தந்தையும் அவனுடைய மக்களும் மோதிக் கொண்டதை அறிஞர் ஒருவர் தடுத்து நிறுத்திய நிகழ்ச்சி ஒன்றை முன்பே பார்த்தோம். இங்கே ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது ஒரே அரச மரபைச் சேர்ந்தவர்கள் மோதிக் கொண் டதைக் கண்டு வேதனை அடைகிறார் கோவூர்கிழார். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், அக்காலத்தார் அனை வரும் ஒருங்கே பாராட்டிய வீரத்துக்காகவும் போர் வெற்றிக்

காகவும்கூட மனிதநேயத்தைச் சிதைக்கும் எந்த நிகழ்ச்சியும் நடந்திடவே கூடாது என்று தமிழ்ச்சான்றோர்கள் உறுதி பூண்டிருந்தார்கள். மனிதநேயம் போன்ற பெரிய உணர்வுகளை எதன் பேரால் சிதைய விட்டுவிட்டாலும், அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது என்பது போல, அதன் பிறகு அதை முழுமையாகவும் வலிமையாகவும் எடுத்துக் கட்ட முடியாது என்கிற நடைமுறை உண்மையைத் தமிழ் அறிஞர் பெருமக்கள் நன்றாகவே உணர்ந்திருந்தார்கள். ஈன்றாள் பசி காண்பானாயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை'' என்று கட்டுரைத்து, உயர்வுகளைப் பேணுதற்கு இடையூறாக எந்த உறவு உணர்ச்சியையும் எழுப்பக் கூடாது என்று தடுத்து வைத்தவர்கள் அல்லவா அந்த அறிஞர் பெருமக்கள்.

## ஒற்றுமை கண்டு உவக்கும் நெஞ்சம்

உற்றார் உறவினரிடையேயும் ஒரே குடியை (அரச மரபை)ச் சேர்ந்தவர்களிடையேயும் பகைமை படர்வது அவர்களிடையே நிலவ வேண்டிய மனிதநேய உணர்வை மாய்த்துவிடும் என்று கருதி அத்தகைய சூழ்நிலை உருவாகாமல் விரைந்து தடுத்த தமிழ் அறிஞர்கள், இணக்கமும் நெருக்கமும் கொண்ட இரு வேறு குடியினர் கிடைத்தால் அவர்களின் நல்லுறவைக் கண்டு மிகவும் மகிழ்ந்து அந்த உறவு செழிப்பதற்கான ஊக்க மொழிகளையும் உதவியிருக்கிறார்கள். நல்லது இதுவென்றும் அல்லது இதுவென்றும் சொல்லத் தெரிந்த சுறுசுறுப்பு உடையவர்களாக மட்டுமல்லாமல், 'நல்லவற்றைப் பாராட்டி வளர்ச்சி காண்போம்.—நானிலத்தை உயர்வாக்கி மகிழ்ச்சி பூண்போம்!'' என்ற தடத்தில் நடை எடுப்பதிலும் தமிழ் அறிஞர்கள் வெகு விரைவு காட்டினார்கள்.

தமிழகத்தில் முடியுடை மூவேந்தர் என்ற மரபு வலுப்பெற்றதிலிருந்தே அந்த மூன்று குடியினரும் ஒருவரை மீறிய உயர்வை மற்றவர் படைப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். இந்த ஏற்றத்தைப் படைப்பதற்கு அப்போது அவர்களுக்குத் தெரிந்திருந்த ஒரே வழி போர் வெற்றியும் அதனால் கிடைத்த புகழும் மட்டுமே. இதனால் ஒரே தமிழினத்தைச் சேர்ந்த அந்த மறக் குடியினருள்ளும் பகைமை உணர்ச்சி படர்ந்து கிடப்பது வழக்கமாகப் போய்விட்டது. இதற்கு மாறாக, அவர்களில் இருவரோ அல்லது மூவருமோ ஒன்று சேர்ந்து இருந்தார்கள் என்பது அறிந்தால் அந்த

இணைவைக் குறித்து அவர்களின் காலத்து அறிஞர் பெருமக்கள் மிகமிக மகிழ்ந்து போனார்கள்; அந்த ஒற்றுமை நிலைத்து நீடிக்க வேண்டும் என்பதற்கான வழிவகைகளை எடுத்துக் கூறி அவர்களை வாழ்த்தவும் வாழ்த்தினார்கள்.

சோழ நாட்டை ஆண்டு வந்த திருமாவளவனும் பாண்டி நாட்டை ஆண்டு வந்த பெருவழுதியும் ஒன்றுபட்டு இருந்ததைக் கண்டார் புலவர் காரிக்கண்ணனார். அவருடைய உள்ளம் அடுக்கடுக்கான மகிழ்ச்சியில் ஏறிக் களித்தது. இரண்டு மன்னர்களையும் தம்முடைய இதயத் தளத்திலே ஏற்றிவைத்துப் பார்த்தார். இருவரும் தங்கள் தங்கள் அளவில் அரிய சாதனை களைப் புரிந்தவர்கள்; அதனாலேயே நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல் ஒற்றுமை என்னும் தெண்ணீர்ப் பொய்கையில் இணைந்து மனிதநேயம் என்னும் அழகு மலர் களாக மலர்ந்திருந்தார்கள் அந்த மன்னர்கள். அதைக் கண்டு உவகை பொங்கிய காரிக்கண்ணனார் (புறம் 58) ''நீங்கள் இரு வரும் இப்படி ஒன்றாக இருப்பதைக் காண்பதை விடப் பெரிய மகிழ்ச்சியும் உள்ளதோ? ('இன்னீர் ஆகலின் இனியவும் உளவோ?) என்று வியப்பு மகிழ்ச்சி தெரிவித்தார். அந்த மகிழ்ச்சிக்குப் பின்னணியாக உள்ள புலவரின் (இருவரைப் பற்றிய) மதிப்புக் கணிப்பு பின்வருமாறு அமைகிறது:

நீயே, தண்புனற் காவிரிக் கிழவனை; இவனே,
முழுமுதல் தொலைந்த கோளி ஆலத்துக்
கொழுநிழல் நெடுஞ்சினை வீழ் பொறுத்தாங்கு,
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது,
நல்இசை முதுகுடி நடுக்குஅறத் தழீஇ,
இளையது ஆயினும் கிளைஅரா எறியும்
அருநரை உருமின், பொருநரைப் பொறாஅச்
செருமாண் பஞ்சவர் ஏறே; நீயே,
அறம் துஞ்சு உறந்தைப் பொருநனை; இவனே
நெல்லும் நீரும் எல்லார்க்கும் எளிய என,
வரைய சாந்தமும் திரைய முத்தமும்
இமிழ்குரல் முரசம் மூன்றுடன் ஆளும்
தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே.

திருமாவளவன் சோழவளநாடு சோறுடைத்து என்று பாராட்டப் பெற்ற வளநாட்டுக்கு உரிமை படைத்தவன்;

பாண்டியன் பெருவழுதியோ தன் குடியே அழிந்து வீழ்ந்த காலத்திலும் அடிமரத்தையும் ஏந்தித் தாங்கும் விழுதுவேர் போல, தம்குடிக்கு மறுவாழ்வு கொடுத்தவன். திருமாவளவன் அறமே நடைமுறையாக உள்ள உறந்தைப் பெருநகரின் தலைவன்; பாண்டியனோ நாட்டில் கிடைத்த வளத்தை எல்லாம் நாட்டுமக்கள் அனைவருக்கும் கிடைக்கச் செய்து தமிழ் கெழு கூடலாம் மதுரை மாநகரின் உரிமைக் காவலன். மண் வளத்திலும் மன எழுச்சியிலும் இரண்டு பேருமே ஏற்றம் மிக்கவர்கள். இவர்கள் தங்கள் பெருமையை நிலைநாட்டிக் கொள்ள ஒருவர் மற்றவர் மேல் பாய்வது அக்காலத்தில் நடைமுறையாகவே இருந்தது. அதற்கு மாறாக, இந்த இரண்டு சாதனையாளர்களும் ஒன்றியைந்து வாழ்ந்தார்கள் என்றால் அவர்கள் இருவரின் இதயத்திலும் ஊறி உயர்ந்த மனிதநேய நல்லுணர்வே காரணம். அதனாலேதான், ''நீங்கள் இன்னீர் ஆகலின் இனியவும் உளவோ?'' என்றும் மகிழ்ச்சி பொங்குகிறார் புலவர். ஆயினும் இந்த ஒற்றுமை மந்த மதியினரின் சூழ்ச்சிகளுக்குத் தப்பி நிலைத்திருக்க வேண்டுமே என்று ஏங்குகிறார் புலவர். அதன் விளைவாக அன்பில் குளித்த அறிவுரை ஒன்று அவர் சொற்களில் படர்கிறது:

....நல்ல போலவும் நயவ போலவும்
தொல்லோர் சென்ற நெறிய போலவும்,
காதல் நெஞ்சின் நும் இடை புகற்கு அலமரும்
ஏதில் மாக்கள் பொதுமொழி கொள்ளாது,
இன்றே போல்க நும்புணர்ச்சி

நல்லவர்கள் ஒன்றுபட்டு இருப்பதையும் அதனால் மனிதநேயம் செழிப்பதையும் பொறாத சின்னவர்கள் எந்தெந்த வகையிலெல்லாம் அவைகளை அழிக்க முனைவார்கள் என்பது புலவரின் கருத்துரையில் வெகு தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. அத்தகையவர்கள், போர்வீரம் புரிவதே புகழ்ச்சிக்கு உரியது என்பார்கள்; உங்கள் முன்னோர்களான சோழ, பாண்டியர்கள் அதைத்தான் செய்தார்கள் என்பார்கள்; முன்னோர்கள் செய்தது என்பதால் நீங்களும் அதையே செய்வதுதான் சிறப்பு என்றும் உபதேசம் செய்வார்கள். ஆனால் இவர்கள் 'ஏதில் மாக்கள்' என்பதையும், பொருளற்ற பொதுமொழி பேசித் திரிபவர்கள் என்பதையும் உங்களை உடைத்து உலகத்தில் நிலவ வேண்டிய பெரிய பொது உணர்வுகளைச் சரித்திடவே அவர்கள் அப்படி எல்லாம் பேசுகிறார்கள் என்பதையும் உணர்ந்து

கொண்டு நீங்கள் எப்போதும் இப்படியே ஒன்றுபட்டு இருக்க வேண்டும் இந்த நல்லிணக்கம் உங்களிடையே எப்போதும்ஓங்கிப் பொலியவேண்டும் என்று நெகிழ்ந்த நெஞ்சோடு வாழ்த்து கிறார், காரிக்கண்ணனார். 'இன்றே போல்க நும் புணர்ச்சி' என்னும் புலவரின் ஆர்வ நன்மொழி நெஞ்சுகளின் நேய நெருக் கத்தில், மற்றுள்ள தமிழறிஞர்களைப் போலவே, காரிக்கண்ண னார் கொண்டிருந்த பேரார்வத்தைச் சிந்தாமல் சிதறாமல் முழு மையாகச் சொல்லோவியம் செய்கிறது.

ஒன்று சேர்ந்து உறவு பூண்டு இருந்த இரண்டு தமிழ் மன்னர்களைக் குறித்து இந்தத் தமிழறிஞர் கொண்ட பெரிய உவகை, ஏதோ அவருக்கே, அவருடைய வீட்டுக்கே பெரிய இன்பம் ஒன்று கிடைத்து விட்டதைக் குறித்து அவர் கொண்ட தைப் போன்ற அத்தனை பெரிய உவகையாக உள்ளது. 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்பது தமிழ் நெறி. உயர்ந்த வர்கள் என்பவர்கள் உலகப் பெரிய நிகழ்வுகளைத் தங்களுக்கே கிடைத்த உவகைகளாகக் கருதுகிறார்கள்; அந்த நிகழ்வுகள் நின்று செழித்து நீடிய பெருவாழ்வை மனிதச் சமுதாயத்துக்கு வழங்க வேண்டும் என்றும் விரும்புகிறார்கள். அந்த விருப்பத்தின் ஒரே ஒரு விளைவுதான் அந்த நிகழ்ச்சிக்கு ஊட்டமும் பாது காப்பும் தந்திட அவர்கள் மேற்கொள்ளும் பாதுகாப்பு நடவடிக்கை. காரிக்கண்ணனாரின் செயலையும் அதிலே பொங்கித் ததும்பும் ஆர்வ வேகத்தையும் பார்க்கும் போது, அக்கால அறிஞர்கள் மற்ற வெற்றிகளைப் போலவே போர் வெற்றியையும் புகழ்ந்து பாடிக்கொண்டு இருந்தாலும் அவர் களின் உள்ளார்ந்த இதயம், ''இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல் என்னும் துன்பத்துள் துன்பம் கெடின்'' என்று நினைத்து நினைத்து ஏங்கிக் கொண்டு இருந்திருக்கிறது என்றே நினைக்கத் தோன்றுகிறது. மனித நேயத்தை ஊட்டி வளர்ப்பதிலும் போற்றிக் காப்பதிலும் அத்தனை ஆர்வம் காட்டியிருக்கிறார் கள் இந்தப் புலவர் பெருமக்கள்

## கண்ணீர் சிந்தினார்கள்

சங்க காலத்தில் புலவர்களுக்கும் அறிஞர்களுக்கும் சிறப் பான மதிப்பு இருந்து வந்தது என்றாலும், எல்லாக் காலத்தி லும் எல்லாப் புலவர்களுக்கும் அத்தகைய செல்வாக்கு இருந்தி ருக்கும் என்று கருத முடியாது. அத்தகையவர்கள் மனித நேயத் தைச் சரித்தவர்களின் எதிரே சென்று கண்டித்திருக்கவும் முடி யாது. ஆனாலும், புலவர்கள் எந்த நிலையிலும் மனித நேயத்

துக்கு மாறான செயல்களுக்கு எதிர்க்குரல் எழுப்பியே வந்துள்ளார்கள்என்பதைப் புறநானூறு புலப்படுத்துகிறது. கண்ணின்று கண்ணறச் சொல்லும் கடினமான பணியைச் செய்ய முடியாத போது, கன்னெஞ்சர்களின் மனிதநேயச் சிதைப்புக்கு எதிராகக் கழிவிரக்கம் கொண்டு கண்ணீராவது சிந்தியிருக்கிறார்கள்.

அன்பின் ஐந்திணை என்று சிறப்பிக்கப்பட்ட காதல் வாழ்வு சிறந்த தமிழகத்திலே ஏற்பாட்டுத்திருமணமும் ஓரளவில் இருந்துதான் வந்தது. அப்படிப் பெண் கேட்டுச் சென்றவர்கள், பெண் வீட்டார் பெண் கொடுக்க மறுத்தபோது அவர்கள் மீது படையெடுத்து அவர்களின் ஊரையே நாசம் செய்துவிடும் தீயநடையும் இருந்துதான் இருக்கிறது. இப்படிப்பட்ட சமயங்களில், இந்தப் பகுதியில் வாழ்ந்த புலவர்கள் நேர்சென்று அறிவு சொல்லி அந்தப் படையெடுப்பை நிறுத்த முடியா விட்டாலும் மக்களின் உணர்ச்சியை அந்த வன்கொடுமைக்கு எதிராக எழுப்பும் விதமாக நொந்து பேசியிருக்கிறார்கள்.

ஒரு மன்னவன் மற்றவனிடம் அவன் மகளைப் பெண் பேச ஆள் அனுப்பினான். பெண்ணின் தகப்பன், என்ன காரணத்தினாலோ தன் மகளை அவனுக்கு மணம் செய்து கொடுக்க விரும்பவில்லை. அந்தப் பேச்சை அத்துடன் விட்டுவிடாமல், பெண் கேட்டுச் சென்றவன், ''அவளுக்காக அவள் தந்தை மீது போரெடுப்பேன், கிடைத்தால் அவள், இல்லாவிட்டால் மரணம்' என்று வஞ்சினம் புகன்று போர்மேல் புறப்பட்டு விட்டான். இதை அறிந்த புலவர் பரணர் அந்தப் பெண் பிறந்த ஊருக்கு நிகழப் போகும் அழிவைக் குறித்து மிகமிக வாடுகிறார்.

வேந்து குறையுறவும் கொடாஅன், ஏந்துகோட்டு
அம்பூந் தொடலை அணித் தழை அல்குல்,
செம்பொறிச் சிலம்பின் இளையோள் தந்தை
..............................................................
விளங்குஇழைப் பொலிந்த வேளா மெல்இயல்,
சுணங்கு அணி வனமுலை, அவளொடு நாளை
மணம்புகு வைகல் ஆகுதல் ஒன்றோ
ஆர் அமர் உழக்கிய மறம்கிளர் முன்பின்,
நீள்இலை எஃகம் மறுத்த உடம்பொடு
வாரா உலகம் புகுதல் ஒன்று—எனப்
படை தொட்டனனே, குருசில்; ஆயிடைக்

களிறுபொரக் கலங்கிய தண்கயம் போல,
பெருங்கவின் இழப்பது கொல்லோ,
மென்புனல் வைப்பின் இத் தண்பணை ஊரே!

இது புறநானூற்றின் 341 ஆம் பாடல். இதே போன்ற செய்தி புறநானூற்றின் 336 முதல் 356 வரையிலான 21 பாடல்களில் கிட்டத்தட்ட இதே விதமான வேதனை உணர்வோடு பாடப் பட்டுள்ளது. 11 புலவர்கள் இந்தப் பாடல்களைப் பாடி யுள்ளார்கள்.

இந்தப் பாடல்கள் அனைத்தும் மகட்பால் காஞ்சி என்னும் மகள்மறுத்தல் நிகழ்ச்சி தொடர்பானவை. ஒரு வீட்டில் அழகான பெண் ஒருத்தி இருந்தால் இளையவர்கள் அவர்களை விரும்புவது இயல்பு. ஆனாலும் இத்தகைய ஏற்பாட்டுத் திருமணம் இரண்டு வீட்டாரின் சம்மதத்தோடும் நடைபெற வேண்டும். பெண் வீட்டார் இசைவு தெரிவிக்காத போது, மணம் பேச ஆள் அனுப்பியவன் அந்தத் தொடர்பு நினைவை அத்துடன் விட்டுவிடுவதே நாகரிகம். ஒரு பக்கத்து இசைவு இல்லாத அந்தத் திருமணம் நடைபெற்றாலும் அவர்களின் வாழ்வு சிறக்காது. இந்த உண்மையை நினையாமல், உடல் வலியும் படைவலியும் இருக்கின்றன என்ற காரணத்தால் படையெடுத்துச் சென்று அந்தப் பெண் பிறந்த ஊரையே அழிக்க முற்படுவது மனிதனுக்கு இருக்க வேண்டிய மனிதநேய உணர்வுக்கு முற்றிலும் புறம்பானது. ஒருத்தியின் மேல் உள்ள ஆசையால் அவளுடைய உற்றார் உறவினரையே அழிக்கப் புறப்படுகிறோமே என்ற தெளிவு இல்லாதவன் மனிதநேயத் தையே மதியாத மடவோன். அவனைத் தட்டிக் கேட்க முடியாத ஒரு சூழ்நிலையில், ''ஊர் அழியப் போகிறதே (இதைத் தடுப்பார் இல்லையே)'' என்று ஏங்கித் தவிக்கிறார்கள் இந்தப் புலவர்கள். அதாவது மனித நேயத்தைப் பேணிக் காக்க முடியவில்லையே என்று தங்களைத் தாங்களே நொந்து கொள்ளுகிறார்கள் இவர்கள்.

## உயிர் கொடுத்துத் தடுத்தார்கள்

இப்படிப்பட்ட இயலாமைச் சூழ்நிலை ஏற்படும்போது இத்தகைய நிகழ்ச்சிகளில் தொடர்புபட்டவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளுவதன் மூலம் மனிதநேய ஒழிப்புக்கு எதிரான தங்கள் உணர்ச்சியை வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதையும் புறநானூறே தெரிவிக்கிறது.

பாரி அந்நாள் சிற்றரசர்களில் சிறப்போங்கிய ஒருவன். அவனுடைய புகழ் ஓங்கிப் பரவுவதைப் பொறாத மூவேந்தர்கள் அவன் மீது படையெடுத்துச் சென்று அவனைக் கொன்று விட்டார்கள். பாரியின் இரண்டு பெண்களும் ஆதரவு இழந்து நின்றனர். பாரியின் தோழரான கபிலர் அம்மகளிரை மணந்து கொள்ளுமாறு அந்நாள் சிற்றரசர்களாகிய விச்சிக்கோனையும் இருங்கோவேளையும் கேட்டுக் கொண்டார். முடிமன்னர் மூவரையும் பகைத்துக் கொள்ளத் துணியாத அவர்கள் பாரி மகளிரை மணந்து கொள்ள மறுத்து விட்டார்கள். தன் நண்பனின் பெண் மக்களுக்கு வாழ்வு தரமுடியாத தம்முடைய இயலாமையையும் தகப்பன் மேல் உள்ள பகையை அவனுடைய பெண் மக்கள் மீது தீர்த்துக் கொண்ட அந்நாள் மன்னர்களின் மனிதநேயமற்ற வன்கொடுமையையும் தாங்கிக் கொள்ள முடியாத கபிலர், அந்தப் பெண்களைப் பார்ப்பனர்களிடம் ஒப்படைத்து விட்டுப் பட்டினி கிடந்து உயிரைப் போக்கிக் கொண்டார். அதாவது, மன்னர்களின் மனித நேயமற்ற செய்கைக்குத் தம்முடைய மரணத்தின் மூலம் எதிர்ப்புத் தெரிவித்தார் கபிலர். இந்த நிகழ்ச்சித் தொடர் புறநானூற்றின் 200, 201, 202, 236 ஆகிய பாடல்களில் சொல்லப்பட்டுள்ளது.

இதே போல் மனிதநேயமற்ற முறையில் கொடூரமாக நடத்தப்பட்ட ஒருவன் அந்த வேதனையை வெளிப்படுத்தி விட்டுத் தன் உயிரையே விட்டு விட்ட செய்தி புறம் 74 இல் சொல்லப்படுகிறது. சேரமான் கணைக்காலிரும்பொறையைப் போரில் தோற்கடித்த சோழன் செங்கணான் அவனைச் சிறைப் படுத்தி வைத்திருந்தான். ஒரு மன்னன் என்ற தகுதியை மட்டு மல்ல, ஒரு மனிதன் என்ற தகுதியைக் கூடச் சேரமானுக்கு வழங்கவில்லை செங்கணான். தனக்கு நிகழ்ந்த மனித நேயமற்ற கொடுமைகளைப் பின்வரும் இறப்புக் குறிப்பில் வெளிப்படுத்திக் கண்ணீர் விட்டிருக்கிறான் சேரமான்:

குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்
'ஆள் அன்று' என்று வாளின் தப்பார்;
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேள் அல் கேளிர் வேளாண் சிறுபதம்,
மதுகை இன்றி வயிற்றுத் தீத்தணிய,
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்மரோ இவ் உலகத்தானே?

இந்தக் குறிப்பில் காணப்படும் சேரமானின் வேதனை உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்ட இழிவைக் குறிப்பது மட்டுமன்று. தன்னுடைய இனத்துக்கும் தமிழரின் பெரிய பண்பாட்டுக்கும் ஒவ்வாத மனிதநேயம் அற்ற செயல் நடைபெற்றும் அதைப் பார்த்துக் கொண்டு உயிரோடு இருப்பதா என்றே அவன் ஏங்கியிருக்கிறான். 'குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும் ஆள் அன்று என்று வாளின் தப்பார்' என்பது சேரர் குடியின் சிறப்பு மட்டுமன்று. தமிழினத்தார் அத்தனை பேரும் அத்தகைய வீரத்தைப் போற்றியவர்களே. அந்த வீரமும் அதற்கு அடிப் படையான மான உணர்வும் கொஞ்சமும் மதிக்கப்படாத கொடுமையே சேரமானின் சிந்தையை வாட்டுகிறது. உண்ணும் நீரும் உணவும் கூட மறுக்கப்பட்டு ஒரு வீரன் இழிவுபடுத்தப் படுவது மனித நேயத்துக்குக் கொஞ்சமும் ஒவ்வாத கொடுஞ் செய்கை. இந்தக் கொடுஞ்செய்கைக்கு எதிரேதான் தன் உயிரை விலையாகத் தந்து அதற்குத் தன் எதிர்ப்பைத் தெரிவிக் கிறான் சேரமான்.

## சினம் கொண்டு தடுத்தார்கள்

தமிழ் முன்னோர்கள் மனித நேயத்தை மாண்புற மதித்தவர் கள்; அது சிதைக்கப்படும்போது சீறி எழுந்தவர்கள். அப்படி எழுந்துகொள்ள முடியாத போதும், மற்றவர்களின் இரக்க உணர்வைத் திரட்டியும் தங்கள் உயிரையே அள்ளிக் கொடுத்தும் மனித நேயத்துக்கு வாழ்வு கொடுக்க அவர்கள் முன்நின்றார் கள். இத்தனைக்கும் அடிப்படையான ஒரு நடைமுறையையும் அவர்கள் தங்கள் இலக்கண இலக்கியங்களில் வகுத்து வழங்கி யுள்ளார்கள். அதைத்தான் வெகுளி என்னும் மெய்ப்பாடாக வும் வஞ்சினம் மொழிந்து நிறைவேற்றுதல் என்னும் செயற் பாடாகவும் அவர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள்.

வெகுளி என்பது வாழ்வில் ஒரு நிகழ்ச்சியாக மலர்ந்து இலக்கண இலக்கியங்களில் ஒரு மெய்ப்பாடாக எடுத்துப் பேசப் படுகிறது. வெகுளி எந்தெந்தச் சூழ்நிலைகளில் உண்டாகும், எவ்வெப்போது உண்டாக வேண்டும் என்பதைப் பின்வரும் தொல்காப்பியச் சூத்திரத்தின் மூலம் விளக்கியுள்ளார்கள் நம்முடைய அறிஞர்கள்.

உறுப்பறை குடிகோள், அலைகொலை என்ற
வெறுப்பின் வந்த வெகுளி நான்கே

உறுப்பறை, குடிகோள், அலை, கொலை என்னும் நான்கின் காரணமாகவும் ஒருவனுக்கு வெகுளி தோன்றுகிறது (தோன்ற வேண்டும்) என்று வகுத்துரைக்கிறது இந்தத் தொல்காப்பியம். இந்த நூற்பாவுக்குப் பின்வருமாறு உரை விளக்கம் தருகிறார் பேராசிரியர்:

''உறுப்பறை என்பது கண் குறைத்தலும் கை குறைத்தலும் முதலாயின; குடிகோள் என்பது தாரமும் சுற்றமும் குடிப்பிறப்பும் முதலாயவற்றுக்கண் கேடு சூழ்தல்; அலை என்பது கோல் கொண்டு அலைத்தல் முதலாயின; கொலை என்பது அறிவும் புகழும் முதலாயினவற்றைக் கொன்றுரைத்தல். இவை நான்கும் பொருளாக வெகுளி பிறக்கும் என்றவாறு.''

இந்த நான்கு காரணங்களால் மனிதர்களுக்குச் சினம் உண்டாவது சங்க இலக்கியத்தில் அங்கங்கே சொல்லப்படுகிறது. 'உன் மகன் போரில் புறங்கொடுத்தான்' என்று மற்றவர்கள் சொல்லக் கேட்ட மறக்குலப் பெண்ணொருத்தி,

நின்மகன்
படையழிந்து மாறினன் என்றுபலர் கூற,
மண்டமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்டஎன்
முலை அறுத்திடுவான் யான்எனச் சினைஇ

வாளொடு போர்க்களத்தை நோக்கிப் பாய்ந்தாள் என்கிறது புறம் 278ஆம் பாட்டு. தன்னுடைய மறக்குலத்தின் வீர மரபுக்குத் தன் மகன் இழிவு சேர்த்து விட்டான் என்று கேள்விப்பட்ட அவள் சினம் பொங்கிச் சீறுகிறாள்.

அதியமான் நெடுமான் அஞ்சியை மாற்றார் பழித்துப் பேசி விட்டார்கள். அதைப் பொறாமல் வெகுண்டு எழுந்து அவர்களைத் தாக்கி அழித்தான் அதியமான். அந்த நிகழ்ச்சியில் அவன் ஈடுபட்டிருந்த போதே தனக்கு ஒரு மகன் பிறந்துள்ளான் என்ற மகிழ்ச்சியான செய்தி அவனுக்கு எட்டுகிறது. பகைவர்களை அழித்த கோப வேகத்தோடேயே மகனைப் பார்க்க ஓடிவருகிறான் அவன். அப்போதும் அவனுடைய கோபக்கனல் தணியவில்லை:

வரிவயம் பொருத வயக்களிறு போல
இன்னும் மாறாது சினனே, அன்னோ!
உய்ந்தனர் அல்லர் இவன் உடற்றியோரே;

செறுவர் நோக்கிய கண், தன்
சிறுவனை நோக்கியும் சிவப்பு ஆனாவே!

என்று (புறம் 100) அந்தக் காட்சியை விவரிக்கிறார் அவ்வையார். தன்னுடைய குடியின் மீதும் வீரத்தின் மீதும் வீசப்பட்ட பழிச் சொல்லைக் கேட்டு மன்னன் அதியமான் ஆறாத நெருப்பு வடிவம் எடுத்தான் என்பது இதன் கருத்து. தன் மீதும் தன்னுடைய குடிப்பெருமையின் மீதும் வீசப்பட்ட இழிவுகளைப் பொறுக்காமல் சினம் கொள்ளுகிறவன் உடனேயே புறப்பட்டுச் சென்று அந்த இழிவைச் செய்தவர்களை அழித்து ஒழிக்கிறான். இச் சமயங்களில் அவன் கனன்று உரைக்கிற வெஞ்சினச் சொல் ஒவ்வொன்றும் வஞ்சினச் சொல்லாக வடிவம் கொள்ளுகிறது. அந்த வஞ்சினத்துக்கு, மனிதநேய மாண்பைப் புறக்கணித்து மற்றவர்கள் அவனுடைய வீரத்தையும் பெருமையையும் புண்படுத்துவதே காரணமாகிறது. வஞ்சின மொழிகளில் காணப்படும் தன்ஒறுப்புக் குரல், அதாவது இவ்வாறு பேசியவனை எதிர்த்து வெல்லா விட்டால் நான் இன்னின்ன இழிவுகளை அடையக் கடவேன் என்று சூளுரைக்கும் குரல் அவனுக்குக் கோபமூட்டிய மனிதநேயமற்ற செயலைக் குறித்து அவன் எத்தனை வேகமும் வேதனையும் அடைந்தான் என்பதைத் தெற்றெனக் காட்டுகிறது.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் அந்நாள் பாண்டிய மன்னர்களில் ஒருவன். வீரத்தாலும் வெற்றிகளாலும் ஓங்கிய புகழ் பெற்றவன். அதைப் பொறாத மற்ற மன்னர்கள், அவனை இழிவாகப் பேசி அவன் மேல் படையெடுக்கப் போவதாக மிரட்டினார்கள். அதைப் பொறாத பூதப்பாண்டியன், ''அவர்களை எதிர்த்துத் தாக்கிப் புறம் காண்பேன்; அவ்வாறு செய்யவில்லையானால் என் காதல் மனைவியை நான் பிரிவேனாக, அறமன்றத்தில் தகுதியில்லாத ஒருவனை நீதிபதியாக நியமித்த கொடுங்கோலன் ஆவேன் ஆக'' என்றெல்லாம் மொழிகிறான் பூதப்பாண்டியன். அதைப்போலவே, 'உறுதுப்பு அஞ்சாது உடல்சினம் செருக்கிச் சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை' வென்று ஒழிக்கா விட்டால், 'குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக! அறிஞர் பெருமக்களெல்லாம் என் நாட்டைப் பாடாது ஒழிவாராக, இரப்போர்க்கு வழங்கி அவர் துன்பம் துடைக்க முடியாத வறுமை அடைவேனாக' என்றெல்லாம் வஞ்சினம் மொழிகிறான் பாண்டியன் நெடுஞ்செழியன். சோழன் நலங்கிள்ளியும் (புறம் 73) என்னையும் என் குடியை

யும் இழித்துரைத்த மடவோன் 'துஞ்சுபுலி இடறிய சிதடன் போல உய்ந்தனன் பெயர்தலோ அரிதே'' என்று அறைந்து சொல்லி, அப்படிச் செய்யேனாயின் பரத்தையரோடு உறவு கொண்ட பழியை நான் அடைவேனாக என்று வஞ்சினம் மொழிகிறான்.

## எளிமையின் வஞ்சினம்

சிறுமை கண்டு பொங்கி சினம் மிகக் கொண்டு இவ்வாறு வஞ்சினம் மொழிந்தவர்கள் அனைவரும் குடிப்புகழும் வீரப் பெருமையும் உடைய மன்னர்கள். மனிதநேயத்துக்கு ஒவ்வாத கொடுமைக்கு எதிரேறி வஞ்சினம் மொழிந்து அதை நிறைவேற்றிய தமிழர்களின் வரலாற்றில் தனித்து உயர்ந்த இடம் பெறுவது அன்னிமிஞிலி என்னும் ஒரு சாதாரண இடைக்குலப் பெண்ணின் புகழ் வரலாறு.

கோசர் என்னும் ஓர் இனத்தினர் தமிழகத்திலே புகுந்து சிலகாலம் அதன் சில பகுதிகளை ஆட்சி புரிந்தனர்: 'ஒன்று மொழி கோசர்' 'வாய்மொழிக் கோசர்' என்றெல்லாம் பாராட்டப்பட்ட அவர்கள் நீதி வழங்குவதில் மிகவும் இறுக்கமாக நடந்து கொண்டார்கள். ஒரு சமயம் அன்னிமிஞிலியின் தந்தை மேய்த்துவந்த மாடுகள் ஒருவரின் வயலில் புகுந்து பயிரை அழித்துவிட்டன. செய்தி கோசர்களின் அறமன்றத்துக்கு எட்டியது. வழக்கை விசாரித்த நடுவர்கள், ''மாடு வயலில் புகுந்ததைப் பாராமல் பயிரின் அழிவுக்குக் காரணமாக இருந்த இவனுடைய கண்களைப் பிடுங்கிவிட வேண்டும்'' என்ற தீர்ப்பு வழங்கினார்கள். தீர்ப்பைக் கேட்டு அந்த எளிய தந்தையும் அவருடைய இளைய மகள் அன்னிமிஞிலியும் துடித்துப் போனார்கள். அறமன்றத் தலைவர்களின் காலில் விழுந்து கெஞ்சி, தண்டனையை மாற்றும்படியும் குறைக்கும்படியும் மன்றாடினார்கள். கொடூரமான அந்தத் தண்டனையை விதித்த கோசர்கள் கொஞ்சமும் கருணை காட்டவில்லை. தண்டனையை நிறைவேற்றித் தீர்த்து விட்டார்கள்.

மனித நேயத்தையே மண்மூடிப் புதைக்கும் அந்த வன்செயலைக் கண்டுப் பொங்கி எழுந்தாள் அன்னிமிஞிலி ''என் தந்தையின் கண்ணைப் பிடுங்கியவர்களைப் பூண்டோடு ஒழித்துக் கட்டாமல் நான் நல்உணவு உண்ணமாட்டேன், நல்லாடை உடுத்தவும் மாட்டேன்!'' என்று வஞ்சினம் மொழிந்தாள்.

......................தந்தை
கண்கவின் அழித்ததன் தப்பல், தெறுவர,
ஒன்றுமொழிக் கோசர்க் கொன்று, முரண்போகிய
கடுந்தேர்த் திதியன் அழுந்தை, கொடுங்குழை
அன்னிமிஞிலி

என்று அவளை அறிமுகம் செய்கிறது அகநானூறு 196 ஆம் பாட்டு. இந்த நிகழ்ச்சியை இன்னும் விவரமாக விரித்துரைக்கிறது அகம் 262 ஆம் பாட்டு.

பாசிலை அமன்ற பயறு ஆ புக்கென,
வாய்மொழித் தந்தையைக் கண்களைந்து அருளாது,
ஊர்முதுகோசர் நவைத்த சிறுமையின்
கலத்தும் உண்ணாள், வாலிதும் உடாஅள்
சினத்தின் கொண்ட படிவம் மாறாள்
மறம்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்,
செருஇயல் நல்மான் திதியற்கு உரைத்து, அவர்
இன்உயிர் செகுப்பக் கண்டு சினம் மாறிய
அன்னிமிஞிலி

என்னும் பாடல் பகுதியில் உறுதிவாய்ந்த ஒரு பெண்ணையும் அவள் நடத்திய ஒப்பற்ற செயலையும் காண முடிகிறது. அன்னிமிஞிலியைப் பற்றிய இந்தச் செய்திதான், மனித நேயத்துக்கு மாறான வன்கொடுமைகளைத் தமிழர்கள் பொறுத்துக் கொள்ளவே மாட்டார்கள் என்னும் உண்மையைப் பெரிய எழுத்துக்களில் பொறித்துக் காட்டுகிறது. மன்னர்களும் மறவர்களும் கோபம் கொள்ளும் தகுதி உடையவர்கள். காரணம், தங்களுக்குச் சினம் மூட்டிய பகைவர்களைத் தாக்கி அழிக்கும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு. அப்படிப்பட்ட ஆற்றலோ தகுதியோ எதுவும் இல்லாத சாதாரணப் பெண்ணான அன்னிமிஞிலியின் கோபம் ஓர் இனத்தையே அழித்துத் துடைத்து விட்டது என்றால் பொதுவாகவே தமிழர்கள் மனிதநேய ஒழிப்புச் செயல்களை மாபெரும் அழிவுச் செயல்களாகக் கருதியிருந்தார்கள் என்பதே காரணம். மேற்கு உலகின் பிற்காலத்து ஜோன் ஆப் ஆர்க் போலத் தமிழ்மகள் அன்னிமிஞிலி மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே செயல் நடத்தியிருக்கிறாள் என்பது தமிழ் வரலாற்றுக்கே தனித்த புகழ் முத்திரையைத்

தருகிறது. அத்துடன் தமிழர்கள் எந்த நிலையிலும், ஒரு குடிக்கோ ஒரு தனிமனிதனுக்கோ எதிராக இழைக்கப்படும் மனித நேயத்துக்கு எதிரான கொடுமைகளைப் பொறுக்கவே மாட்டார்கள் என்னும் உண்மையையும் உறுதிப்படுத்துகிறது. மனித நேயத்தை மறந்தும் மீறியும் வன்கொடுமைகளில் ஈடுபட்டு விடுகிற மடவோர்களை, முள்ளை முள்ளால் எடுப்பது போல வன்முறையினால்தான் செப்பம் செய்ய வேண்டியுள்ளது என்று தமிழர்கள் நடைநெறி வகுத்திருந்தார்கள் என்பதும் இத்தகைய நிகழ்ச்சிகளால் தெற்றெனப் புலப்படுகிறது. மனித நேயத்தைப் பாதுகாப்பதற்கு வன்முறைகளையும் கையாளலாம் என்ற அளவுக்குத் தமிழர்கள் சென்றிருக்கிறார்கள் என்றால், எந்த விலை கொடுத்தும், தனிமனிதர்களும் மனிதத் தொகுதி களும் மனிதநேயப் பெரும் பண்பாட்டைக் கட்டிக் காத்தே தீரவேண்டும் என்பதில் அவர்கள் அசைக்க முடியாத ஈடுபாடு கொண்டிருந்தார்கள் என்பதைத் தவிர அதற்கு வேறு காரணம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. செயற்கரிய செய்வர் பெரியர் (சிறியர் செயற்கரிய செய்கலாதார்) என்பது இந்தக் கோட்பாட்டைத் தழுவி எழுந்த வள்ளுவப் பாட்டு.

## முடிப்புரை

உலக மக்கள் தொகுதியில் மூத்த ஒரு தொகுதியைச் சேர்ந்த வர்கள் தமிழ் மக்கள். வரலாற்றுக்கு எட்டுகிற சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்வின் பல துறை நடவடிக்கைகளையும் செப்பமும் சீர்மையும் மேன்மையும் உடையவைகளாக அவர்கள் ஆக்கி வைத்திருந்தார்கள் என்பதை அவர்களின் சங்ககால வரலாறும் அக்காலத்து இலக்கியங்களும் தெளிவாகக் காட்டுகின்றன. தமிழர்களின் இலக்கணமாகிய தொல்காப்பியம் உயிர்களை அறிவின் அடிப்படையில் பகுத்து வரிசைப்படுத்துகிறது. தொட்டு உணர்தல், கண்டு கேட்டு அறிதல் முதலான ஐந்து உணர்வுகளோடு ஆறாவதாகிய மன உணர்வையும் பெற்றிருப்பவனே மனிதன் என்று வரையறுக் கிறது தொல்காப்பியம். மன உணர்வுக்கு விளக்கம் சொல்லும் போது, 'தக்கது இன்னது தகாதது இன்னது' என்று பகுத்து உணர்ந்து கடைப்பிடிக்கும் ஆற்றலே மன உணர்வாகிய பகுத்தறிவு என்று சொல்லப்படுகிறது. உண்டல், உறங்கல், உடலின்பத்தை அனுபவித்து இனப்பெருக்கத்தை உண்டாக்கு தல் ஆகிய பொதுவான நடைமுறைகளுக்கு மேலே, நம்மைச் சுற்றி உள்ள உலகத்தையும் அதில் உள்ள மற்ற மனிதர்களையும்

அளாவியதாக நமது நடைமுறை அமைய வேண்டும் என்று அவர்கள் முடிவு செய்திருந்தார்கள் என்பதையே மன உணர்வுக்கு அவர்கள் தந்துள்ள விளக்கம் தெளியக் காட்டுகிறது. அதாவது, நல்லியல்புகளின் அடிப்படையில் எல்லோருக்கும் ஏற்றம் தருவதாக அமைவதே வாழ்க்கை என்றும் அதைச் சிதைக்கின்ற நடவடிக்கை எதையும் வளர விடக்கூடாது என்றும் அக்காலத் தமிழர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். இந்த இணக்கநெறி நடைமுறைக்குத்தான் இப்போது மனிதநேய நடைமுறை என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. மனிதன் ஒரு சமுதாயப் பிராணி என்று சொல்லப்படுவதன் கருத்தும் அவன் மனிதநேய உணர்வுடையவனாக வாழ வேண்டும் என்பதே.

வாழ்வுக்கு அடிப்படையாக மனிதநேயத்தை வரைந்து கொண்ட பழந்தமிழர்கள் அது வலுப்பெறவும் வளர்ந்து செழிக்கவும் ஆன நடைமுறைகளை ஒவ்வொரு துறையிலும் வகுத்து வைத்தார்கள். அவைகள்தான் வாழ்க்கை மணிநெறிகள் என்று சொல்லப்படுகின்றன. மனிதன் ஆறுஅறிவு உடையவனாகையால் மற்ற உயிர்கள் நடத்த முடியாத ஓர் உயர்நிலை வாழ்வை அவன் நடத்த வேண்டும். அந்த வாழ்வுக்கு வீரம், மானம், ஈகை, பிறர் பெருமை காத்தல் முதலான இயல்புகள் மிகமிகத் தேவை. இந்தத் தேவையை நன்கு உணர்ந்தே பழங்காலத் தமிழர்கள் இவைகளை மக்கள் ஏற்றுக் கடைப் பிடிக்கும் விதமாக நடைமுறைத் தெளிவுகளையும் சொல்லி வைத்தார்கள்.

வாழ்க்கை மணிநெறிகள் வெறும் ஏட்டுச் சுரைக்காய்கள் அல்ல என்பதைச் சங்ககாலத்து மக்களின் வாழ்க்கை மிகத் தெளிவாக உணர்த்துகிறது. மன்னர்களும் மறவர்களும் மட்டுமல்லாமல் செல்வர்களும் கலைஞர்களும் கூட மணிநெறிகளின் மீதே தங்கள் வாழ்க்கையை அமைத்திருக்கிறார்கள். தங்கள் உடைமைகளையும் உயிரையும் இழக்க நேர்ந்தாலும் வாழ்க்கை மணிநெறிகளை ஏந்திக் காத்திருக்கிறார்கள். அறிஞர்களை மதிப்பது, வீரர்களைப் போற்றுவது, கலைஞர்களைப் பாராட்டி அவர்களோடு உடனிருந்து மகிழ்வது போன்ற நடவடிக்கைகளால் வாழ்க்கை மணிநெறிகளுக்கே பழந்தமிழர்கள் புதிய ஊட்டம் கொடுத்திருக்கிறார்கள். மணிநெறிகள் மனிதநேயத்தை வளர்த்து யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்னும் எண்ண ஓட்டத்தைச் செழுமைப்படுத்துபவை ஆகையால் அவை

களைக் கடைப்பிடிப்பதில் சங்கத் தமிழர்கள் தனித்த பெருமையை அடைந்திருக்கிறார்கள்.

வாழ்க்கையின் இலட்சியத் தடங்களான மனிதநேய மணி நெறிகளை வலுப்படுத்துவதோடு மட்டும் சங்கத் தமிழர்கள் நின்றுவிடவில்லை. ஊனும் உதிரமும் எடுத்த மனிதன் இயல்பி லேயே பலவீனமானவன் என்பதை உணர்ந்து மனிதநேய வாழ்க்கை நெறிகளுக்குச் சரிவு ஏற்படும் இடங்களில் அவை களைப் பாதுகாத்து நிலை நிறுத்தவும் வழிவகைகளை வகுத்துச் சொல்லியுள்ளார்கள். சமுதாயப் பொறுப்பு வாய்ந்த இந்த அறிஞர்கள் வகுத்துரைத்த மணிநெறிப் பாதுகாப்பு நடவடிக் கைகளை, அறிஞர்கள் மட்டுமல்லாமல் சாதாரணப் பொது மக்களும் தக்க தருணத்தில் உறுதியாகச் செயல்படுத்தியிருக் கிறார்கள். செவியறிவுறூஉ, வாயுறை வாழ்த்து, துணைவஞ்சி, வஞ்சினம் மொழிதல் முதலான குறிக்கோள் குறிப்புகள் பல ராலும் செயல்படுத்தப்பட்டிருப்பது இந்த உண்மையை உறுதி செய்கிறது.

மணிநெறிகள் யாரோ சிலரால் மீறப்படும்போது எதிர் சென்று அதைத் தடுக்க முடியாதவர்கள் கூட, மணிநெறிப் பாதுகாப்புக்கான உணர்ச்சியை மக்களிடையே உண்டாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். உருக்கமான சொற் களால் இந்தச் செயலை நடத்தி வைக்க முடியாதபோது தங்கள் உயிரையே கொடுத்து மக்களை மனித நேயப் பாதுகாப்புப் பணிக்குத் திரட்டும் செயலை அவர்கள் தயங்காமல் நடத்தியிருக் கிறார்கள். கோபம், அதன் விளைவான பகைமை முதலியவை களை உற்சாகப்படுத்தவே கூடாது என்று கருதயிருந்த அறிஞர்கள், மனிதநேய உணர்வைப் பாதிக்கக் கூடிய செயல் சரிவுகள் ஏற்படும்போது வெகுண்டு எழுந்து விவேகமற்ற செயல்காரர்களை வீழ்த்தி மனிதநேயத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லும் அளவுக்கு அதன்பால் ஈடுபாடு கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். தொல்காப்பிய மெய்ப்பாட்டியலில் எடுத்து ஓதப்படும் எட்டுச்சுவைகளுள் ஒன்றாகிய வெகுளி என்பது அறிஞர்களின் இந்த மனஓட்டத்தை உறுதி செய்கிறது. அதன் வெளிப்பாடாகிய வஞ்சினம் மொழி தல், வஞ்சின நிறைவேற்றம் என்னும் வரலாற்று நிகழ்ச்சிகளும் அதையே உறுதி செய்கின்றன. ஆகவே, வாழ்க்கைக்குச் சில அடிப்படையான இலட்சிய நடைமுறைகள் தேவை என்பதையும் அவை அனைத்தும் மனித நேயத்திலிருந்து முகிழ்த்திட

வேண்டும் என்பதையும் அவற்றுக்கு மாறான செயல்கள் நடைபெற்றிடும்போது ஒவ்வொருவரும் தங்கள் உயிரைக் கொடுத்தாவது அதைத் தடுத்திட வேண்டும் என்பதையும் சங்க காலத் தமிழர்கள் உறுதிக் கடைப்பிடிகளாகக் கொண்டிருந்தார்கள் என்பது தேற்றம்.

சங்ககாலத் தமிழர்கள் வாழ்வில் எட்டுச்சுவையும் மிளிர்ந்து இலங்குமாறு தங்கள் வாழ்க்கையை நடத்தியவர்கள்; அவைகளுள் பெருமிதம், வெகுளி, உவகை போன்ற சில சுவைகளுக்குத் தனித்த தலைமை இடம் கொடுத்தவர்கள். எனவே, அவர்களுடைய வாழ்க்கை.

காவிய நாயகர் மட்டும் வந்து
காதல் அறங்கள் வளர்க்கும்
தீவிய நன்னகர் ஈதோ இதைச்
செய்திட்ட சிற்பிகள் யாரோ?

என்று (நேயப்பாட்டு) வியக்கும் வண்ணமாக நடைபெற்றது. அது அப்படியே நடைபெற வேண்டும் என்பதிலும் எந்த நிலையிலும் அதற்கு எந்த இடையூறும் ஏற்பட்டிடக் கூடாது என்பதிலும் அவர்கள் முழுமையான, தொடர்ச்சியான அக்கறை கொண்டிருந்தார்கள். இந்த ஆர்வ அக்கறையும் இதன் விளைவான செயல்முறைகளும் ஒன்றிணைந்ததுதான் சங்ககாலத் தமிழர்களின் தரமிக்க பெருவாழ்வாக மலர்ந்து இன்றைக்கும் மனிதநேய மணம் பரப்பிக் கொண்டு இருக்கிறது. வீரம் என்றால் அப்படி—மாவீரம், மானம் என்றால் அப்படி—உயர் மானம், ஈகை என்றால் அப்படி—கைம்மாறு கருதாத பேரீகை. மகிழ்ச்சி என்றால் அப்படி—இன்களி மகிழ்நகை பொங்கும் ஈடில்லா மகிழ்ச்சி என்ற விதமாகச் சங்ககாலத் தமிழர்களின் வாழ்க்கை நடந்திருக்கிறது. அதற்கு அடிப்படைக் காரணம்,—பலபோது அவர்களில் அறிஞர்களும் பெரியவர்களும் சில போது மிகத் தாழ்ந்த நிலையில் இருந்த பொதுமக்களும் மனிதநேய

உணர்வோட்டத்தை மனமார விரும்பிச் செயல்படுத்தியிருக்கிறார்கள்.

## உயர்வுகளுக்கே வாழ வேண்டும்

சங்க காலத்திலும் அதற்கு முன்பும் தமிழர்கள் கடைப்பிடித்த வாழ்க்கை நடைமுறைகளைச் சங்க இலக்கியம் அப்படி அப்படியே பதிவு செய்து வைத்திருக்கிறது. அதன் ஒளிமிக்க நிகழ்ச்சிகள் மட்டுமல்லாமல் இருண்ட நிகழ்ச்சிகள்கூட அந்த வாழ்வின் ஏற்றத்தையே புலப்படுத்துகின்றன. ஒளிமிக்க பெருநிகழ்ச்சிகளை உவகையோடு சித்திரிக்கும் அறிஞர்கள், இருள் சூழ்ந்த நிகழ்ச்சிகளை வாட்டத்தோடேயே வருணிக்கிறார்கள். இப்படிச் செய்வதன் மூலம் உயர்வுகளுக்கே வாழ வேண்டும் என்பதை,—மனிதநேயப் பெரும் பண்புக்கே வாழ்க்கையில் தனிச் சிறந்த இடம் வேண்டும் என்பதையே அவர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்கள். அவர்கள் அத்தனை அழுத்தம் திருத்தமாக மனிதநேயத்தை ஏந்திப் பிடித்ததாலேதான், நல்லியல்புகள் எல்லாம் நசிந்து போய் விட்டன' என்று நல்லவர்கள் எல்லாம் கசிந்து நிற்கும் இன்றைய நிலையிலே கூட மனிதநேய நடவடிக்கைகளுக்கு அங்கங்கே இடம் இருந்து வருகிறது. அந்தப் பழைய மனிதநேயப் பேரார்வத்தை மீட்டெடுத்துச் சொல்லித் தமிழ் மக்களிடையே மனிதநேயப் பேருணர்வுக்கு மறுவாழ்வும் புதுவாழ்வும் ஏற்படுத்திட வேண்டும் என்பதையும் அதுவே உண்டாக்கிக் கொண்டு இருக்கிறது.

சங்ககாலச் சமுதாயம் பலவகையிலும் வளர்ச்சி பெற்ற ஒரு சமுதாயம். மனிதநேயம் என்ற நிலையிலோ அது தனித்த வளர்ச்சியைப் பெற்றிருந்தது. மனிதநேய மணிநெறிகள் வகுத்து வலியுறுத்தப்பட்ட போது அவை நடைமுறையிலிருந்த நன்னிலையும் இந்தப் பெருமைக்குச் சான்றுகள். பயிர்த்தொழில் செய்பவன் களை எடுப்பையும் பயிர்ப் பாதுகாப்பையும் முதன்மைப்படுத்துவது போல மனிதநேயப் பேருணர்வு சாய்ந்திடாதபடிப் பாதுகாப்பதற்கும் சரியான வழிமுறைகள் வகுத்

திருந்தார்கள் என்பது சங்ககாலத் தமிழர்களின் செயல்திறனை மட்டுமல்லாமல் மனிதநேயம் அவர்களின் வாழ்வோடு வாழ்வாகப் பின்னிக் கிடந்தது என்ற உண்மையையும் உறுதி செய்கிறது. ஆகவே, சங்கத் தமிழ் இலக்கியம் சிலபல சீரிய வரலாறுகளைப் பதிவு செய்து வைத்திருக்கிறது என்பதுடன் மனித்நேய உணர்வு என்னும் பெரிய பண்பாட்டுக்கு நங்கூரமாகவும் நிலை பெற்றிருக்கிறது என்பதை எல்லோரும் உவகைப் பெருக்கோடு நினைவிலே கொள்ள வேண்டும்.

# துணை நூற்பட்டியல்


அகநானூறு, கழகம், சென்னை, 1962.

இராமலிங்க அடிகளார், திருஅருட்பா, இராமலிங்கர் பணி மன்றம், சென்னை, 1981.

இறையனார் களவியலுரை

குறுந்தொகை, உ.வே.சா. (ப.ஆ.), நான்காம் பதிப்பு, சென்னை, 1962.

சிலப்பதிகாரம், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1985.

சிறுபாணாற்றுப் படை, உ.வே.சா. பதிப்பு, கபீர் அச்சுக்கூடம், 1950.

தமிழ்ப் பழமொழி அகராதி

தனிப்பாடற்றிரட்டு, கழக வெளியீடு, சென்னை, 1964.

திருவள்ளுவர், திருக்குறள் (பரி) கழகம், சென்னை, 1965.

தொல்காப்பியம், இளம்பூரணம், ஏழாம் பதிப்பு, கழகம், சென்னை, 1977.

தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, மறுபதிப்பு, கழகம், சென்னை, 1983.

தொல்காப்பியம்-பொருளதிகாரம், பேராசிரியம், லாங்மென்ஸ் க்ரீன் அண்ட் கம்பெனியார், சென்னை, 1917.

நல்வழி, நீதிநூற் கொத்து (முதல் பாகம்), கழக வெளியீடு; திருநெல்வேலி, 1973.

நற்றிணை, கழகம், திருநெல்வேலி, மு. ப. 1952.

நறுந்தொகை-நீதிநூற்கொத்து, கழக வெளியீடு,திருநெல்வேலி, 1973.

புறத்திரட்டு, கழக வெளியீடு, சென்னை, 1972.

புறநானூறு, ஜோதி அச்சுக் கூடம், சென்னை, 4-ம்பதிப்பு, 1950.

பட்டினப்பாலை, உ வே.சா. பதிப்பு, கபீர் அச்சுக்கூடம், 1950.

பதிற்றுப்பத்து, கழகம், திருநெல்வேலி.

மணிமேகலை, உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, 1981.

விவிலிய நூல்

விவேக சிந்தாமணி, கழக வெளியீடு, திருநெல்வேலி, 1977.

# சிறப்புச் சொல்லகராதி
## (எண்-பக்க எண்)


அகநானூறு 18, 19, 129
அடிப்படை இலக்கணம் 10
அதியமான் 26, 87, 90, 126
அரிசில் கிழார் 56
அவ்வையார் 26, 87, 90
அறநிலைத்திரியா அவையம் 46, 47
அறம் திறம் பாத போர்க்களம் 75
அன்னி மிஞிலி 129
ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் 92
ஆவூர்க் கோட்டை 110
ஆனைக்கும் அடி சருக்கும் 113
இயலாதார்க்கும் மனித நேயம் 19
இல்லாதபோதும் ஈகை 24
இலக்கணத்துக்கு விளக்கம் 11
இழிவை ஊக்காத ஏந்தல்கள் 115
இளஞ்சேட் சென்னி 88
இளந்தத்தன் 109
இளந்திரையன் கவிதைகள் 21
இறையனார் களவியல் உரை 31
உண்டியிலும் ஓர் அழகு 89
உயர்வுகளுக்கே வாழ வேண்டும் 134.
உயிர் கொடுத்துத்தடுத்தார்கள் 123.
உயிர் கொடுத்துப் புகழ் கொள்ளுதல் 86.
உறையூர் கோட்டை 111
எல்லை தொட்ட ஈகை 93
எளிமையில் வறுமை 128
என். எஸ். கிருஷ்ணன் 53
ஐங்குறுநூறு 55
ஒரு கரும்புள்ளி 50
ஒல்லையூர் தந்த பூத பாண்டியன் 85
ஒற்றுமை கண்டு உவக்கும் நெஞ்சம் 118
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை 43
ஓம்படைக்கிளவி 99
கடமை தவறாத மன்னர்கள் 85
கண்டு பாராட்டவே வந்த கவிஞர் 81
கண்ணகி 55
கண்ணீர் சிந்தினார்கள் 121
கலந்து இனிது வாழ்ந்தார்கள் 66
கலித்தொகை 34, 35
காரிக்கண்ணனார் 119, 121
காவல் இருக்கும் உழவர் பெருமக்கள் 98
காவிரிப் பூம்பட்டினம் 48, 66
கிள்ளிவளவன் 104, 107
குமணன் 4, 69, 70, 80, 96, 97, 98
குறுந்தொகை 18, 30, 31, 45
கோப்பெருஞ்சோழன் 114, 115, 116.
கோவவன் 49
கோவூர்க்கிழார் 111, 112, 113 115, 116, 117, 128

சதுக்க பூதம் 48
சாலையார் 116
சான்றோர் எழுச்சி 55
சிலப்பதிகாரம் 48
சிறுபாணாற்றுப் படை 90
செக்குலர் லிட்டரேச்சர் 1
சோழன் நலங்கிள்ளி 127
தடுத்து நெறிப்படுத்தினார்கள் 102.
தமிழரின் தனி நாகரிகம் 40
தலையாய அறம் 28
தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டிய நெடுஞ்செழியன் 86
தவணை முறைக் கொடை 75
தழிஞ்சி நல்கும் சொல்லின்பம் 36
திட்டமிட்ட கொடை 72
திருஅருட்பா 29
திருக்குறள் 42
திருத்தும் மணிநெறி 52
திருமாவளவன் 119
திருவருட்பா 91
தொல்காப்பியம் 7,8,9,13,15, 16, 31, 36, 37, 51, 99, 100, 120, 126, 130
நச்சினார்க்கினியர் 37
நம்பிக்கைத் தரும் நடைநெறி 54
நரிஇவெரூஉதலையார் 21, 102
நல்வழி 29
நலங்கிள்ளி 101, 116
நற்குண நன்னடைகளின் பட்டியல் 33
நற்றிணை 18, 40, 41, 42, 45
நறுந்தொகை 16
நெடுங்கிள்ளி 109, 111, 116
நெறிப்படுத்த விழைந்தோர் 5
பகிர்ந்து கொள்ளும் இன்பம் 25
பகிர்ந்துகொள்ளும் நெறி 69
பகுத்து உணரும் மாண்பு 14
பதிற்றுப் பத்து 91, 93, 95
பரணர் 23, 122
பாண்டியன் நெடுஞ்செழியன் 127
பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமி பெருவழுதி 76, 78
பிசிராந்தையார் 103, 113
பிட்டங் கொற்றன் 74
பிற்கால நீதிப்பாட்டு 89
புரட்சிக் கவிஞர் 30
புரட்சிகரமான வள்ளன்மை 91
புல்லாற்றூர் எயிற்றியனார் 115
புறத்திரட்டு 38
புறநானூறு 14, 15, 22, 23, 25,39,47,68,70,73,74,76, 79,82,102,111,115,123
பூதப்பாண்டியன் 47, 127
பெருங்குன்றூர் கிழார் 56
பெருஞ்சித்திரனார் 69
பெருஞ்சேறலிரும் பொறை 99
பெருவழுதி 119
பேகன் 23,53,56,73,90
பேராசிரியர் 99,101
பொய்ச்சான்று ஒழிக 48
பொருளின் முதன்மை 17
பொழிவுகளின் தடம் 7
போர்வெறி புகழ்வெறி 106
மணிமேகலை 29
மலையமான் 110
மன்னர்களையே மடக்கினார்கள் 83
மன உணர்ச்சி உடையவனே மனிதன் 12
மனிதநேய எழுச்சி 4

மனிதநேயக் குதூகலம் 67
மனிதநேயச் செம்மாப்பு 30
மனிதநேயப் பெருங்குரல் 21
மனிதநேயப் பெருவீரம் 95
மாசற்ற மனிதநேயம் 22
முடமோசியார் 82
யாதும் ஊரே யாவரும் கேளிர் 69
வழி வழி வள்ளன்மை
வள்ளல் சடையப்பர்
வளரும் மனிதநேயம் 8
வறுமை 73,74,79,80,81
வறுமையின் வற்றாத செம்மை 78
வறுமையிலும் வற்றாத வீரம் 80
வாழையடி வாழை 32
விவேக சிந்தாமணி 78
வீரம் விளைக்கும் கொடை 88
வெகுளிக் காவல் 100
வெள்ளைக்குடி நாகனார் 85, 106
வேல்யூஸ் ஆப் லைப் 1
ஜோன் ஆப் ஆர்க் 129

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| பாரதியின் சமுதாயச் சிந்தனைகள் | 25.00 |
| இஸ்லாமியத் தமிழ்ப் புதினங்கள் சித்திரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும் | 40.00 |
| பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும் | 80.00 |
| சங்கத் தமிழர் வாழ்வியல் | 100.00 |
| தமிமெனப்படுவது | 115.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - இலக்கணம் & மொழியியல் | 105.00 |
| வலங்கைமாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும் | 70.00 |
| சங்கரநமச்சிவாயர் | 60.00 |
| Agreement in Dravidian Languages | 100.00 |
| சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும் | 30.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - இலக்கியம் | 100.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| கருவூரார் பல திரட்டு | 70.00 |
| தமிழ் மொழியின் வரலாறு | 30.00 |
| சங்ககாலக் காசு இயல் | 30.00 |
| பாரதி இந்தியா | 40.00 |
| தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |
| மபொசியின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு | 30.00 |
| தணிகைமணி வ.சு. செங்கல்வராய பிள்ளை | 50.00 |
| அருந்தமிழ் நூற் காவலர் அடிகளார் | 50.00 |
| விவிலியத் தமிழ் | 40.00 |
| ஆராய்ச்சிப் பேரறிஞர் திவை. சதாசிவ பண்டாரத்தார் | 45.00 |
| பாரத வெண்பா | 80.00 |
| நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் | 50.00 |
| அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா | 50.00 |
| தட்சிணாமூர்த்தி குருமுகம் 100 | 50.00 |
| Studies in Manimekalai | 70.00 |
| தமிழெழுத்தின் வரிவடிவம் | 30.00 |
| திராவிடமொழி இலக்கியங்கள் | 180.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 40.00 |
| நாவல் கலையியல் | 50.00 |
| நாடகவியல் | 70.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் - 3 தொகுதிகள் | 260.00 |
| குமரமலைப் பிள்ளைத் தமிழ் | 75.00 |
| தென்னிந்திய மருத்துவ வரலாறு | 115.00 |

**524. சங்கத்தமிழரின் மனிதநேய மணிநெறிகள் 45.00**